
# நல்லைக்குமரன் மலர்



## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

### இதழ் 15

2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 15

# 2007

பதிப்பாசிரியர் :
நல்லையா விஜயசுந்தரம்

## சைவசமய விவகாரக் குழு
## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

18 SEP 20

4524 IP CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக்குழு

## உறுப்பினர்கள் - 2007

| | | |
|---|---|---|
| **தலைவர்** | - | ***திரு. மு. செ. சரவணபவ***<br>மாநகர ஆணையாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **கௌரவ செயலாளர்** | - | ***திரு. இ. இரத்தினசிங்கம்***<br>செயலாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **கௌரவ பொருளாளர்** | - | ***திரு. து. சோமசுந்தரம்***<br>சனசமூகநிலைய மேற்பார்வையாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **நிர்வாகசபை உறுப்பினர்கள்** | - | ***திரு. நா. இரகுமார்***<br>பொது சுகாதாரப் பரிசோதகர்<br>***செல்வி கு. சிவநந்தினி***<br>நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>***திரு. து. இராஜன்***<br>பொறுப்பதிகாரி, மோட்டார் வாகனப்பிரிவு<br>***திரு. ஞா. மோகனசுந்தரம்***<br>வேலை மேற்பார்வையாளர்<br>***செல்வி த. தாரணி***<br>முகாமைத்துவ உதவியாளர்<br>***திரு. சோ. கணேசநாதன்***<br>வேலை மேற்பார்வையாளர்<br>***திரு. பு. ஆறுமுகதாசன்***<br>பொது சுகாதாரப் பரிசோதகர்,<br>***திரு. ச. லோகசிவம்***<br>சனசமூகநிலைய மேற்பார்வையாளர்<br>***திரு. கு. விஜயகுமார்***<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>***திரு. ப. சிவஞானவேல்***<br>முகாமைத்துவ உதவியாளர்<br>***திரு. சி. சிவராஜேஸ்வரன்***<br>சுகாதார மேற்பார்வையாளர்<br>***திரு. சி. கிருஷ்ணமூர்த்தி***<br>புத்தகம் கட்டுபவர் |
| **கௌரவ பதிப்பாசிரியர்** | - | ***திரு. க. விஜயசுந்தரம்***<br>ஆசிரியர்<br>யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| **விளம்பர அனுசரணையாளர்** | - | ***திரு. த. கனகசபை***<br>இளைப்பாறிய பிரதம காசாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# சமர்ப்பணம்

நல்லூர்க் கந்தப்பெருமானின் பேரருளால் 'நல்லைக்குமரன்' பதினைந்தாவது மலராக இவ்வாண்டு வெளி வருகின்றது. கடந்த 2006ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போதும் 'நல்லைக்குமரன்' பதின்னான்காவது மலர் முருகனின் தீர்த்தோற்சவத்தன்று நல்லை ஆதீனத்தில் வெளியிடப்பட்டது.

மலரை வெளியிடமுடியாமல் போய்விடுமோ என்ற சூழ்நிலையிலும் பதின்னான்காவது மலர் வெளிவந்தமை அதிசயமான உண்மை. இதற்கெல்லாம் கந்தப்பெருமானின் கருணைத்திறமே காரணமெனலாம். 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை இன்னமும் கலையவில்லை.

எனினும் 'நல்லைக்குமரன்' 15வது மலர் வெளியிடுகின்றமை குறித்து நாம் பெருமையடையமுடியும். அதேவேளை யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவின் சமயப் பணிக்கு நல்லூர் வேலவனின் துணை என்றும் உண்டென்ற உண்மையையும் உணர்தல்வேண்டும்.

எமது இந்து மதம் தொன்மையும் பெருமையும் மிக்கது. அதன் தத்துவக்கருத்துக்கள் விஞ்ஞான உலகின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகளில் இருந்து இந்து மதத்தின் கருத்துக்கள் விஞ்ஞானம், மருத்துவம், உளவியல், ஆன்மீகம் சார்ந்த மெய்ப்பொருள் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குப் பல சான்றாதாரங்களை முன்வைக்க முடியும். விண்வெளிப்பயணத்தை கடந்த ஆறு மாதங்களாக மேற்கொண்ட இந்திய வம்சாவழியைச் சார்ந்த அமெரிக்க பெண் விஞ்ஞானி திருமதி சுனித்தா வில்லியம் விண்வெளிப் பயணத்தை நிறைவு செய்த பின்னர் வழங்கிய செவ்வி ஒன்றில் 'எனது விண்வெளிப்பயணத்தின் போது இரண்டு பொருட்களை என்னுடன் எடுத்துச் சென்றேன். அதில் ஒன்று சிறிய பிள்ளையார் சிலை. மற்றையது பகவத்கீதை' எனக் கூறியுள்ளார். பிள்ளையாரின் தோற்றம் அறிவின் வடிவம், வெற்றியின் சின்னம் என்றும் தனது பேட்டியில் சுனித்தா வில்லியம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கும் மேலாக இந்திய ஜனாதிபதியாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் தனது பதவிக் காலத்தின் நிறைவாக ஆற்றிய உரையில் 'எனது பதவிக்காலத்தில் எவரிடம் இருந்தும் எந்த அன்பளிப்புகளையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் என் மீது அன்பு கொண்டவர்கள் என்னில் கோபமுற்றிருக்கலாம். ஆனால் இந்து மதத்தில் உள்ள 'மனுஸ்மிருதி' என்ற வேதம் அன்பளிப்புகளை வேண்டுவதால் ஒருவரின் தெய்வீகத்தன்மை குறைந்து விடுகிறது எனக் கூறுகிறது. அதனால் நான் எவரிடம் இருந்தும் அன்பளிப்புகளை பெற்றுக் கொள்ளவில்லை எனக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி -அணு விஞ்ஞானி -முஸ்லிம் மதம் சார்ந்தவர் இந்து தர்மத்தில் உள்ள மனுஸ்மிருதி வேதம் பற்றி கூறியுள்ளார் எனில், இந்து சமயத்தின் பெருமை எத்துணை என்பதை உணர முடியும். எனினும் இந்து சமயம் சார்ந்தவர்கள் அதன் பெருமையை உணராதவர்களாக இருப்பது வேதனைக் குரியது.

அதிலும் குறிப்பாக சிவபூமி எனப் போற்றப்படும் ஈழத்தில், இந்து சமயத்தின்- சைவத்தின் சமகால, எதிர்கால ஆரோக்கியத்தன்மை திருப்தியாக இல்லை என்று எண்ணுமளவிற்கு நிலைமையுள்ளது.

இவற்றை சீர்படுத்தவேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான 'இந்துமதபீடம்' உருவாக்கப்படவேண்டும். குறித்த இந்துமதபீடமே ஆலயப் பிணக்குகளை தீர்த்து வைப்பதுடன் ஆலய அறங்காவலர்களை மதகுருமார்களை நெறிப்படுத்தும் பணியையும் மேற்கொள்ள வேண்டும்.

ஈழத்து இந்து மதத்திற்கான தலைமைத்துவத்தின் தேவைப்பாடுகள் உணரப் படுகின்ற இவ்வேளையில் அந்தணச் சிவாச்சாரியர்கள், சமயப் பெரியார்கள், புத்தி ஜீவிகள், ஆலய அறங்காவலர்கள், சமய அமைப்புகள் யாவும் இணைந்து இந்துமத பீடத்தை உருவாக்கவேண்டும். இதுவே இந்துமதத்தின் தலைமைப்பீடமாக செயற்பட வேண்டும் என்ற உயரிய கருத்தை நல்லைக்குமரனின் 15வது மலரின் கருப்பொருளாகத் தந்து நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட நல்லூர்க் கந்தனை வேண்டி அவன் பாதங்களில் இம் மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

பதிப்பாசிரியர்
நல்லைக்குமரன் மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


சமர்ப்பணம்

ஆசிச்செய்திகள்

வாழ்த்துச்செய்திகள்

நல்லூரெம் பெருமானை நான்கண்டவாறு — 1-2
ச.தங்கமாமயிலோன்

உலகிற்கு ஓர் செய்தி — 3
விகடகவி மு.திருநாவுக்கரசு

முறையீடு — 4
த.ஜெயசீலன்

காதலியுங்கள் 'நல்லைக்குமரனை' காலமெல்லாம் காத்தே அருளுவான் — 5-6
கவிஞர் வ.யோகானந்தசிவம்

பரமபதம் அருளிடுவாய்! — 7
இராசையா ஸ்ரீதரன்

நல்லைக்குமரன் கும்மி — 8
பண்டிதர் க.முத்துவேலு

நல்லைப் பதியான் — 9-10
சி.சிவநேசன்

உமைஅரனின் பாலகனே — 11
கலாபூஷணம் அ.கி.ஏரம்பமூர்த்தி

காலம் வந்துவிட்டது! — 12
ஐ.சண்முகலிங்கம்

நல்லூரான் நல்வழி காட்டிடுவார் — 13
க.அருமைநாயகம்

ஏழை எனக்கருள்வாய்! — 14
திருமதி சு.வள்ளியம்மை

சைவம் ஒரு வாழ்வியல் — 15-24
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

திருச்செந்தூர் முருகன் தோத்திரம் — 25-30
பேராசிரியர் வி. சிவசாமி

கந்தர் அலங்காரம் — 31-36
சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்

ஈழத்தில் செல்வாக்குற்ற மயூரகிரிப்புராணம் — 37-40
ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

விழுமியப் பண்புகளை வளர்த்தெடுப்பதில் இந்து ஆலயங்களின் பங்களிப்பு — 41-44
திரு ஞா.மு.யோகநாதன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற இந்து சமய நிறுவனங்கள் — 45-50
திருமதி சாந்தினி அருளானந்தம்

தனிப்பாடல் காட்டும் முருகன் — 51-56
செல்வி செல்வஅம்பிகை நடராஜா

பாரதியின் முருகன் பாடல்கள் — 57-60
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

நல்லூரான் திருவடியே தஞ்சம் — 61-64
திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்

கந்தபுராணம் காட்டும் முருகன் — 65-67
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களும் மகோற்சவங்களும் 68-69
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா
உலக நாடுகளில் பாம்பு வழிபாடு 70-74
ப. கணேசலிங்கம்
இந்தும் அரனும் 75-77
வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா
முத்திக்கு வழிகாட்டும் முத்துக்குமரன் 78-80
மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
பெரிய(வன்) புராணம் 81-84
வ. கோவிந்தபிள்ளை
தமிழ் கடவுள் முருகனும் தெய்வத் தமிழும் 85-88
சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம்
நவக்கிரக வழிபாடு 89-92
சைவப்புலவர் முருகேசு முரளிதரன்
"சரவணபவ என்னுந் திருமந்திரந்தனை சதா ஜெபியென் நாவே" 93-99
வாகீசகலாநிதி நயினை கனகசபாபதி நாகேஸ்வரன்
மனமே என்னை மீட்டுவிடு! 100-103
மலர் சின்னையா
அருள்சுரக்கும் நல்லைத் திருவூர் 104-106
மு. சிவலிங்கம்
அபரக்கிரியை சில சிந்தனைகள் 107-109
ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா
பிரார்த்தனை செய்வோம் 110-112
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் ஒன்றே! 113-115
யோகேஸ்வரன் அஜித்
கோயிலும் இசைக்கலையும் 116-119
செல்வி தயாளினி நவநீதகிருஷ்ணன்
சமகால செல்நெறியில் அருகிவரும் மனித விழுமியங்கள் 120-123
திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
நடனம் ஆடினார் 124-131
பொ. சிவப்பிரகாசம்
சமய வாழ்விற்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பு விருத்தி பற்றிய ஒரு சிந்தனை 132-134
கலாநிதி கலைவாணி இராமநாதன்
சிவயோக சுவாமிகளின் நம்பிக்கை நட்சத்திரம் 135-136
த. ந. பஞ்சாட்சரம்
பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க 137-138
செ. ந்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
திருமுருகப் பெருமானின் திரு அவதாரத் தோற்றங்கள் 139-149
சிவம்சக்தி திரு. கணேசன் சைவசிகாமணி
2007 இல் யாழ் விருது பெறும் உயர்திரு. வே.பொ.பாலசிங்கம் அவர்கள் 150-151
இ. இரத்தினசிங்கம
2006 முடிவுற்றவேளை ...? 152-153
இ. இரத்தினசிங்கம்
நன்றியுரை
விளம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன முதல்வரின்

## அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு இவ்வருடம் நல்லைக்குமரன் மலரை வெளியிட இருப்பதையிட்டு பெருமன மகிழ்ச்சியடைகின்றோம். நல்லூர் முருகனுக்கு நடைபெறும் திருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் நல்லைக்குமரன் மலர் சைவமக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை உண்டு பண்ணியுள்ளது. சமயக் கருத்துக்களையும், தத்துவ உண்மைகளையும் விளக்கும் கட்டுரைகளைத் தாங்கி இம் மலர் வெளிவருவது மன நிறைவைத் தருவதாகும்.

அலங்காரக் கந்தனாகவும் எழுந்தருளியிருந்து யாழ்ப்பாண மக்களை மட்டுமன்றி உலகம்வாழ் மக்கள் அனைவரையும் தன் அருட்கண் பார்வையினால் ரட்சித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானை அலங்கரிக்கும் முகமாக யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு முருகனை அலங்கரிப்பது சைவமக்கள் செய்த பெரும் பேறாகும். ஒவ்வொரு ஆண்டும் இம்மலரை வெளியிட்டு வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கும் ஆசிரியருக்கும் சைவமக்களுக்கும் இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு".

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

நல்லை ஆதீனம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின்

## ஆசிச் செய்தி

ஈழத்திருநாடு, தமிழ்க் கலாசாரத்திற்கு அரணாக விளங்கும் தேசம். இஃது தமிழகத்துடனும், தமிழ்ப் பண்பாட்டுடனும் காலங்கடந்த தொடர்பும் இறைநேயமும் கொண்டு விளங்குவது. இத்திருநாட்டின் யாழ்ப்பாணத்தை நினைத்தாலே சைவப்பெருமகனார் ஆறுமுகநாவலரும், நல்லூர்க் கந்தக் கடவுளும் நம் கண்முன் தோன்றுவர். தன் பாலபாட நூல்களாலும் பிற படைப்புக்களாலும் இளைஞர்களிடத்திலும் சைவர்களிடத்திலும் சைவசமய எழுச்சியையும் வளர்ச்சியையும் கண்டவர் நாவலர். சமயக்கல்வி இன்னும் இந்நாட்டின் கல்வித்திட்டத்தில் முக்கிய இடம் பெற்றிருப்பதற்கு இவரே மூலகாரணமாவார்.

அவ்வாறே, வழிபடும் மக்கட்கு அருள் நலம் தரும் அற்புதத் தெய்வம் நல்லூர்க் கந்தக் கடவுளாவார். யாழ்ப்பாண மக்கள் 'நல்லைக் குமரனின்' வருஷாந்திர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இவ்வாண்டும் விழாவை நடத்துவதோடு அதன் தொடர்பாக யாழ் மாநகர மன்றச் சைவசமய விவகாரக்குழு 15ஆவது விழா மலரை வெளியிடுவதறிந்து மகிழ்கிறோம். சமயக் கருத்துக்களும் இறையருட் செய்திகளும் பொலிந்து அருட்பெட்டகமாக "நல்லைக்குமரன்" மலர் வெளிவரவும், இக்குழுவினரின் தெய்வப் பணிகள் வளரவும், பரிபூரணமாக வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்ம்ருதி

1. சாலைத்தெரு,
காஞ்சிபுரம், 631502,
போன் : (STD 04112) - 22115.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவமசய விவகாரக் குழுவினால் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் கடந்த பதினான்கு ஆண்டுகளாக "நல்லைக்குமரன் மலர்" வெளியிட்டு வருவதை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இறையுணர்வை வளர்க்கவே கோயில்களும், திருவிழாக்களும், ஏனைய சமய அநுட்டானங்களும் நமது முன்னோர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இக் காரணத்தினாலேயே "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர் பெரியோர்கள். இன்றைய விஞ்ஞான பொருளாதாரத்தில் உலகம் முன்னேற்றமடைந்துள்ளது போன்று, ஆன்மீகத்திலும், நல்லெண்ணங்களிலும் முன்னேறினால்தான் மனித சமுதாயம் அமைதியுடனும், மனமகிழ்ச்சியுடனும் வாழமுடியும். பாமர மனிதனை பண்புள்ளவனாக்குவதும், பண்புள்ளவனைத் தெய்மாக்குவதும்தான் சமயம் என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். அந்த சமயப் பணியில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவும் தன்பங்கையும் சேவையையும் செய்து வருவது போற்றுதற்குரியது.

மென்மேலும் அந்த சமயப்பணி விரிவடைந்து ஆல்போல் வளரவும், பதினைந்தாம் "நல்லைக் குமரன் மலர்" சிறப்பாக வெளிவரவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதோடு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என்றும் இறைபணியில்
**சுவாமி சர்வரூபானந்தா.**

இராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகளின்

## ஆசிச் செய்தி

நல்லைக் குமரன் மலர் 15ஆவது வெளியீடாக தொடர்ந்து வெளிவருவது முருகன் திருவருளே முதன்மையான காரணம். இம்மலர் வாடா மலராகத் திகழ்கிறது. மக்கள் பலர் இதனைப் படித்து தமது அன்றாட வாழ்வை செம்மைப்படுத்தவேண்டிய கடமைப்பாடு அவரவர்களுக்கு உண்டு.

"மதிகெட்டு அறவாடி மயங்கி அறக் கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்"

(கந்தர் அநுபூதி)

நல்லைக்கந்தன் நம் அனைவருக்கும் இவ்வருடத்தில் வினைகளைக் களைந்து மேலான வாழ்வைத் தர மனதார இறைஞ்சி ஏத்துகின்றோம். யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் நல்லைக்கந்தனின் மகோற்சவ காலத்தில் நல்லைக்குமரன் மலரை வெளியிட்டு வருவது பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இச் சமயப் பணியை மேற்கொண்டுவரும் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் இறைபணி தொடர ஆசீர்வதிக்கின்றேன்.

இறைபணியில்
அன்னையின் அடியவன்
**சித்ரூபானந்தா**

சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ் அன்னையின்
## வாழ்த்துச் செய்தி

**"வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை".**

இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்பச் சொல்லி ஆறுதல் அடைபவர்கள் முருக பக்தர்கள். யாழ்ப்பாண மக்களுக்கு நல்லைக் கந்தனுடைய மகோற்சவ காலம் பக்திப் பரவசத்தை ஏற்படுத்துகின்ற காலமாகும். திரள் திரளாகக் கூடிநின்று முருக பஜனை செய்பவர்களும் அந்த நாமத்தைச் சொல்லிக் கொண்டு அடி அழித்தல், அங்கப் பிரதட்டணை செய்பவர்களும் பல்லாயிரக் கணக்கில் காட்சி தரும் காலம் மகோற்சவ காலம் ஆகும்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தில் இடம் பெற்றிருக்கும் சைவசமய விவகாரக்குழு ஆற்றுகின்ற பணி மிகவும் போற்றுதற்குரியது. அவற்றில் ஒன்றாக ஆண்டுதோறும் வெளிவருவது நல்லைக்குமரன் மலர் ஆகும். கந்தப் பெருமானின் அற்புதங்களை ஆண்டுதோறும் இம்மலர் தாங்கி வருகிறது. ஓதி ஓதி முருகப் பெருமானை உள்ளத்தில் இருத்துவதற்கு இம்மலர் ஒரு வாடா மலராக அமைகிறது. எனவே மாநகராட்சி மன்றத்தையும் சைவசமய விவகாரக்குழுவையும் வாழ்த்தி மேலும் மேலும் இந்தத் தெய்வீகப் பணி தொடர வேண்டுமென்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்கண்ட ஆதீன சுவாமிகளின்

## ஆசிச் செய்தி

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!

இலங்கை யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு வெளியிடும் 15(கரு) ஆவது வருஷ "நல்லைக் குமரன் மலர் 2007" சிவஞான ஒளிபரப்பி, பேரொளி வீசி எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேத, சிவாகம, சாத்திர, தோத்திர, புராண, வாக்கிய (வாச்சிய) பஞ்சாங்க உண்மைகளை வெளிக்கொணர்ந்து சிவ சமய ஞான உபதேசங்களைப் பெற்று, பூர்வ, அபரக்கிரியைகளை, விரதங்களை, குருபூசைகளை, மாதா, பிதா, குரு, சிவனடியாரைப் பூசிக்கத் திருவருள் பெருகட்டும்.

அஞ்ஞானம் நீக்கவல்ல பேரொளியாகிய சிவஞானம் நல்கும், இயம, நியம, சிவாசாரம் பெருகி, உயர்வடைய, விரதம், தானம், தவம், ஜெபம், செய்வதற்கு முன், ஏழுவகைத் தீக்ஷைகளில் பொருத்தமானவற்றை, சிவஞானகுருமூலம், பெற்று குருவாக்கிய பரிபாலனத்துடன் நித்திய அநுட்டானம் புரிந்து ஒவ்வொருவரும் சிவமயமாகுதல் வேண்டும். இன்று குருவழிபாடற்றவர்கள் மீகாமனற்ற படகுபோல் அல்லலுற்று வேதனையடைகின்றனர்.

சமய, விஷேச, நிர்வாண தீக்ஷைகளை 7 வயதிலிருந்து பெற, இம்மலர் ஊக்குவிக்கட்டும். பசு, பாச, ஞானம் நீங்கி, உயிர்கள் 84 லட்சம் யோனி பேதங்கள் ஊடாகப் பிறவி எடுப்பது, ஆண், பெண் உட்பட ஏழு வகைப்பிறவிகள் கிடைப்பது சிவன் திருவருளில் தங்கியுள்ளமையை உணர்த்துங்கள். சிவஞானம் பெறும்வரை உயிர்கள் பிறப்பெடுப்பது உறுதி.

சிவத்திருவாளர்கள் மு.செ.சரவணபவ, இ.இரத்தினசிங்கம், து.சோமசுந்தரம் மற்றும் மலர்வெளிவர உதவியவர்கள் சகலரும் புரியும் பணி சிவப்பணியாகி மேன்மேலும் விரிவடைந்து எல்லோரும் இன்புற்று வாழ ஞானமஹா நடராசரின் அருள்செறிவுற பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**சித்தாந்த சிவவித்தகர் இராசமணி சிவதேசிகர்**
மேலாளர்
மெய்கண்டார் ஆதீனம் வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் இவ்வருடமும் வெளியிடப்பட இருக்கும் 15 ஆவது வெளியீடான நல்லைக் குமரன் மலரிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நெருக்கடியான பல காலகட்டங்களிலும் சற்றும் தளர்வின்றி மேற்படி மலர் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். சமயம் சார்ந்த பல பணிகளை ஆற்றிவரும் இக்குழுவினர் என்றென்றும் பாராட்டிற்குரியவர்கள். இவர்களது பணி தடையின்றி என்றென்றும் தொடரவேண்டும் என்றும், இம்மலர் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் என்றும் மனதார வாழ்த்துகின்றேன்.

**மு.செ.சரவணபவ**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்

## வாழ்த்துச் செய்தி

இலங்கையின் தெற்கே கதிர்காமம், வடக்கே நல்லூர் கந்தசாமி கோவில், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்களும், கிழக்கே உகந்தை என, முருகன் கோவில்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும்.

மக்கள் எந்த துயர் வந்திடினும், பாலகன் முருகனிடம் சரணடைவது வியப்பில்லை. தேவர்களின் துயர் துடைத்த குமரன், எங்களது எந்த வினைகளையும் அறுப்பதில் என்ன சந்தேகம்?

வடபகுதியில் மிகக் கூடிய பக்தர்கள் நல்லூர்க் கந்தனிடம் வந்து குவிவது மக்களின் பக்தியின் ஸ்திரத்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தற்போதைய காலங்களில் யாழ்ப்பாணத்தில் பல தொண்டு நிறுவனங்கள் அடியார்களுக்கான வசதிகளை அளிப்பது வரவேற்பிற்குரியதாகும். யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினரின் பணியினை நாம் இது விடயத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது.

1993ஆம் ஆண்டு முதல் நல்லைக் கந்தனின் மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வரும் “நல்லைக்குமரன் மலர்” இம்முறையும் மலரவுள்ளமை, மனநிறைவுடன் பாராட்டப்பட வேண்டியதுமான விடயமேயாகும். தொடர்ச்சியாக வெளிவரும் இம் மலர்களில் பல தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுவது சாதாரணமான காரியமல்ல. எமது சைவசமயம் பற்றிய அரிய தகவல்களைச் சாதாரண மக்களும் புரிந்து தெளிவடைந்து கொள்ள கட்டுரைகள், குறிப்புகளைத் தாங்கி வரும் “நல்லைக்குமரன்” மலர் தொடர்ந்து பல்லாண்டுகள் முருகன் புகழ்பாடி பக்தி மணம் பரப்ப எல்லாம்வல்ல நல்லைக்குமரன் அருள்பாலிப்பாராக!.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாம்பழம் வேண்டி நிற்கும் ஞானப்பழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரெம் பெருமானை நான்கண்டவாறு

ச. தங்கமாமயிலோன்

வண்ணமயில் வாகனத்தில் வருதல் கண்டேன்
வாகூரும் லாவண்ய வடிவங் கண்டேன்
பண்ணிறையும் பாடலவை பயிலக் கண்டேன்
பாராளும் வேந்தரெலாம் பணியக் கண்டேன்
விண்ணமுத மாங்கருணை வெள்ளங் கண்டேன்
விளங்குமருட் பூரணமாய் மிளிர்தல் கண்டேன்
நண்ணலரும் பேறளிக்கும் நாதன் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 1

வானவர்க்குங் காண்பரிய மருந்தைக் கண்டேன்
வருவினைகள் மாயமாய் மறைதல் கண்டேன்
ஏனக்கொம் பணிந்தசிவன் ஏந்தல் கண்டேன்
ஏழிசையுந் தளைத்தோங்கு மினிமை கண்டேன்
தேனமுதச் சுவையூறுந் தெளிவைக் கண்டேன்
தெளிந்ததமிழ்த் தூமணியாய்த் திகழ்தல் கண்டேன்
ஞானமுக மாறிலருள் நயனங் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 2

சொல்லாகிப் பொருளாகித் தோன்றல் கண்டேன்
சோர்வேது மில்லாத தோள்கள் கண்டேன்
பொல்லாநோய் தீர்த்தருளும் பொருளைக் கண்டேன்
போதாந்த மெய்காட்டும் புனிதன் கண்டேன்
வெல்லாப்புல னைந்தின்வழி வெல்லல் கண்டேன்
வேட்டருளி வள்ளியொடும் மேவக் கண்டேன்
நல்லார்வத் தொடுமடியார் நாடக் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 3

சிந்தனைக்கு மெட்டாத சிவத்தைக் கண்டேன்
சிவனார்க்குப தேசித்தருள் சிறுவன் கண்டேன்
வந்தித்த வர்க்கருளும் வண்மை கண்டேன்
வளர்கங்கா நதிபால வதனங் கண்டேன்
செந்துவர்வாய்த் தெய்வானை சேர்தல் கண்டேன்
செங்கதிரும் வெண்கதிருந் திகழக் கண்டேன்
நந்தாத பேரின்ப நலத்தைக் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 4

ஆலயமாஞ் சூழலதன் அழகைக் கண்டேன்
அணிமதில்கள் சூழவுயர் அரணுங் கண்டேன்
வாலயமாய் அந்தணர்கள் வருதல் கண்டேன்
வந்துசண் முகன்நாமம் வளர்த்தல் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமயில் மீதிலமர் நிமலன் கண்டேன்
நித்தியமாய்த் தீவளர்க்கும் நியமங் கண்டேன்
ஞாலமெலாங் கேட்குமணி நாதங் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 5

தங்கத்திற் கலசங்கள் சார்தல் கண்டேன்
தண்கமல முகமாறின் தளிர்ப்புங் கண்டேன்
கங்கடகன் பெற்றுவந்த கனியைக் கண்டேன்
காணாப்பே ரின்பமது கனியக் கண்டேன்
சங்கத்தமிழ் மூன்றும்வளர் தகவைக் கண்டேன்
சார்வார்க்கின் னமுதாகுஞ் சால்பைக் கண்டேன்
நங்குலத்தைக் காக்கவந்த நாதன் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 6

பொன்னின்செய் மண்டபங்கள் பொலியக் கண்டேன்
பூஞ்சுனையில் நீராடிப் போற்றல் கண்டேன்
தொன்மையறம் பேணுநலத் தொனிப்புக் கண்டேன்
தூயதமிழ் ஞானியர்கள் தோன்றக் கண்டேன்
சென்மவிடாய் தீர்த்தருளுந் தேஜஸ் கண்டேன்
செம்மைநல மறியவைக்குஞ் சேயைக் கண்டேன்
நன்னயமாய் மாதுவள்ளி நணுகக் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 7

தேவரெ லாம்பணியுந் தேவைக் கண்டேன்
தென்பொதிய மலையிலுறை தெய்வங் கண்டேன்
மூவர்க்கும் முதலாய மூர்த்தி கண்டேன்
முண்டகம் மலர்ந்ததன்ன முகங்கள் கண்டேன்
மாவடியைச் சுற்றிவந்து வணங்கக் கண்டேன்
மங்கையுமை கண்குளிரும் மதலை கண்டேன்
நாவற்ப ழங்கொடுத்து நடித்தல் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 8

சேரவருந் திருவடிகள் சேரக் கண்டேன்
செங்கட்கி டாயதனைச் செயிக்கக் கண்டேன்
வாரணங்க ளெட்டுமடி வணங்கக் கண்டேன்
மாறுபடு சூர்தடிந்த மரபைக் கண்டேன்
தாரகா சூரன்கோட்டை தகர்க்கக் கண்டேன்
தங்கரதம் மீதிவர்ந்து தளிர்த்தல் கண்டேன்
நாரணனும் நான்முகனும் நாடக் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 9

ஆறுகாலப் பூசைகள் அனைத்துங் கண்டேன்
அரியதிருத் தேர்கண்டேன் தீர்த்தங் கண்டேன்
பேறுதருந் திருவிழாவின் பெருக்கங் கண்டேன்
பேரின்ப மாய்விளங்கும் பிரபைக் கண்டேன்
தேறுநலத் திருத்தொண்டர் தேக்கங் கண்டேன்
திருநீற்றுப் பூச்சினொடுந் திகழக் கண்டேன்
நாறுமாலை அக்குமாலை நன்றாய்க் கண்டேன்
நல்லூரெம் பெருமானை நான்கண்ட வாறே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிற்கு ஓர் செய்தி

விகடகவி மு. திருநாவுக்கரசு
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி

மணி அடித்து பூசை செய்து
மந்திரங்கள் ஓதியே
புனித நல்ல பூசையென்று
புகழ்வதென்ன புண்ணியம்
குனிந்தெழுந்து குட்டிக் கொண்டால்
குறையுமோ நின் பாவங்கள்
கனிவு கொண்டு ஈசனாரும்
கருணை காட்டி நிற்பரோ?

அன்பு கொண்டு பிற உயிரை நீயும்
அரவணைக்கக் கற்றுக் கொள்
இன்பமாக முகம் மலர்ந்து நாளும்
இனிக்கப் பேசிப் பழகிடு
வன்சொல்லை நாளும் பேசுகின்ற
வழக்கமதைக் கைவிடு
கண்கள் இரண்டும் கருணை பொங்க
கருணையோடு வாழ்ந்திடு

அன்பு பண்பு அடக்கம் இவை
அருங் குணங்களென அறிந்திடு
மண்ணில் வாழும் உயிரையெல்லாம்
மதித்துப் போற்றப் பழகிடு
வன்சொல் கோப தாபமிவை
வருத்தும் உந்தன் உயிரினை
இன்பமாக பேசி வாழ்ந்தால்
இனிக்குமிந்த உலகிது

இன்பமான இறைவனார்க்கு
இனிய பூசை இதயம் தான்
கண் கசிய கருணை பொங்க
கடமை தன்னைச் செய்திடு
மண்ணில் உன்னை மக்கள் என்றும்
மதித்து ஏற்றிப் போற்றுவர்
உன்னைத் தேடி ஓடி வந்து
உடனிருப்பார் ஈசனார்

அண்ணல் காந்தி புத்தர் யேசு
அரிய சைவ ஞானிகள்
மண்ணில் வாழ்ந்து சொன்னவற்றை
மறப்பதென்ன நீதியோ?
எண்ணில் இறைவன் ஒன்று என்றே
இயம்பும் வேத சாஸ்திரம்
உண்மை இதை உணர்ந்து கொண்டால்
உலகில் ஓங்கும் அமைதியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையீடு

த. ஜெயசீலன்

உன்னையன்றி நம்புதற்கு எவரும் இல்லை
உன்துணையே எனைத்தொடர்ந்து காக்கும் சேனை
உன்கரமே எனைச்சூழும் தடைவிலத்தி
உண்மைவழி நடத்தும் என் காலை! வானில்
என்விழிகள் நிலாத்தேடும் - முகில்கள் சூழ்ந்து
எனைக்குருடு ஆக்க ஏங்கும் வேளை ..... காற்றாய்
உன்னருளே முகில்கலைக்கும்; தொடரும் நாளை ....
உன்மனமே காக்கவேண்டும்; மறவேன் வேலை!

அரசியலின் பின்புலமோ, பணமோ இன்றி
அற்பனாய் மெய்த் தருமவழி நகர்ந்து போவேன்
தெருநாய்கள் எனைத்துரத்தும்; திட்டித் தீர்க்கும்
தினவெடுத்துப் போட்டியிடும்; அடக்கப் பார்க்கும்!
கருமம் நான் தொடர அதைத் தடுக்கும்; நெஞ்சில்
கவலைப்பயிர் வளரவைக்கும்! நல்லை வேலே ....
வருந்துயரை நான்நினையாத் திசைக்கு ஓட்டும்;
வரம் நல்கும்; இதுவே வரலாறுமாகும்.

இன்றுமனம் சஞ்சலத்தில் மிதக்குதையா!
எனைச் சூழ்ந்து இடர்இடிகள் முழங்குதையா!
நன்றுஇதா சொல்முருகா? நடத்திடைய்யா!
நாளைநல்ல தீர்ப்புரைத்து நகர்த்திடைய்யா!
துன்பமனம் மாற்றிடைய்யா! மேலும் சோகம்
சூழாத எதிர்காலம் காட்டுமைய்யா!
உன்னிடந்தான் முறையிடுவேன்; துணைக்கு வேறார்?
உதவிசெய்து உடைந்தமனம் தேற்றுமைய்யா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலியுங்கள் 'நல்லைக்குமரனை' காலமெல்லாம் காத்தே அருளுவான்

கவிஞர் வ. யோகானந்தசிவம்

நல்லை நகரில் வீற்றிருக்கும்
நாதன் திருமுகம் கண்டேனே
எல்லை இல்லா அன்புடனே
என்னை அவனிடம் கொடுத்தேனே
நல்ல அழகிய தோற்றமவன்
நாயகன் எனக்கு அவன்தானே
சொல்ல வெட்கம் ஆனாலும்
சொல்லி இன்பம் அடைவேனே.

கந்தன் என்பது பெயராகும்
கருணை அவனது உருவாகும்
தந்தை சிவனார் தானாகும்
தாயார் உமையவள் ஆவாரே
சிந்தை அவன்பால் அல்லாமல்
சிறிதும் விலக மாட்டேனே
எந்த நிலைமை உற்றாலும்
இனிமேல் எனக்கு அவன்தானே.

குன்று தோறும் ஆடிடுவான்
குமரன் என்றும் சொல்வார்கள்
என்றும் இளமை கொஞ்சிடுமே
எழிலே அவனது உருவாகும்
அன்று தொட்டு இன்றுவரை
அழகன் என்றே அழைப்பார்கள்
நன்றாய் அறிந்து கொண்டேனே
நாதன் ஊரும் பேரையுமே.

தேவர் தம்மைக் காத்திடவே
சூரன் தன்னை வதைத்திட்டான்
சேவல் கொடியும் மயிலுமதைத்
தேடிக் கொண்டான் தனக்காக
நாவல் பழத்தை ஔவைக்குமே
ஞானப் பழமாய்க் கொடுத்திட்டான்
ஆவ லுடனே அவள்பாட்டை
அழகு தமிழில் கேட்டிட்டான்.

பிரணவப் பொருளை மறந்ததனால்
பிரமனைச் சிறையில் அடைத்தானே
பரமன் தனக்கு உபதேசம்
பண்ணிச் சிவகுரு ஆனானே
கரங்கள் ஈரா றுடையவனே
கந்தன் என்னும் பெயரவனே
இரவு பகலாய் அவன்தனையே
இதயத் திருத்தி வாழ்வேனே.

அருண கிரியார் அவன்புகழை
அருமைத் திருப்புகழ் ஆக்கிவைத்தார்
பெருமை பெற்றார் அதனாலே
பெரிதே முருகன் பெருங்கீர்த்தி
திருமுரு காற்றுப் படையாலே
தேடிச் சென்று முருகனிடம்
அருளமு துண்டார் நக்கீரர்
ஆனார் முருகன் அடியாராய்.

வள்ளி தெய்வா னையுடனாய்
வள்ளல் இருந்தால் எனக்கென்ன
அள்ளி அவனை அணைக்காமல்
அடுத்த வேலை வேறென்ன
கள்வன் மீது காதலினால்
கால மெல்லாம் அவனுருவம்
உள்ளத் திருத்திப் பார்த்திருப்பேன்
உவகை யோடு வாழ்ந்திடுவேன்.

உற்றார் என்னைத் திட்டிடுவர்
ஊரார் என்னைத் தூற்றிடுவர்
பெற்றோர் என்னை ஏசிடுவர்
பேரின் பத்தில் மறந்திடுவேன்
கற்றோர் தமிழை மறப்பாரோ
களிப்பில் மயங்கி இருப்பாரே
நற்பே றெல்லாம் அவனாலே
நாளும் நானே அனுபவிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை பேர்கள் அவன்மீது
 ஏங்கி ஏங்கி வாழுகிறார்
அத்தனை சிறப்பு அவனுக்கு
 அதிலும் பெருமை எனக்குண்டு
சத்திய மாக நல்லூரான்
 சகலதும் தருவான் வாழ்வினிலே
நித்தமும் வந்து போவார்க்கு
 நிம்மதி தந்து நிற்கின்றான்.

மாங்கனி ஒன்று பெற்றிடவே
 மயில்மீ தேறி உலகளந்தான்
பூங்கனி கிடைக்கா ததனாலே
 பூண்டான் ஆண்டிக் கோலமது
வாங்கிய சக்தி வேலுடனே
 வருவான் குமரன் என்னிடமே
ஏங்கிய உள்ளம் அவனாலே
 இன்பம் அடையும் தன்னாலே.

கற்பனை அல்ல இதுவுண்மை
 கந்தன் காதல் நிஜமேதான்
சொர்ப்பன வாழ்வு எனக்கில்லை
 சொன்னால் எவர்க்கும் புரியாது
நற்பயன் நீங்களும் பெறவேண்டில்
 நல்லூர் வந்து பாருங்கள்
பெற்றபின் உணர்வீர் அவன்பெருமை
 பேசுதல் அரிதே அவன்திறமை.

# ஆறுமுகசுவாமி அருளிட வா!

ஜய ஜய முருகா ஜய ஜய முருகா
ஜய ஜய முருகா ஜய ஜய முருகா

கந்தா முருகா கதிர் வேலா
கலியுக வரதா காத்திட வா
துன்பங்கள் துயர்களில் வள்ளி மணாளா
துவண்டு நிற்போரைத் தேற்றிட வா
தேவ மகள் வரித்த வடிவேலா
தேடியுனைப் பாடுகிறோம் மயில்மீதில் வா
கருணையின் உருவே கார்த்திகைக் குமரா
இருள்தனைப் போக்கிட எழுந்தே வா
தேவர்கள் துயரினைத் தீர்த்திட்ட நாதா
தாள்கள் பணிகின்றோம் நமக்காய் வா
அப்பா முருகா ஆறுமுக சுவாமி!
அழைத்து நிற்போர்க்கு அருளிட வா.

*மீசாலையூர் கமலா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபதம் அருளிடுவாய்!

நாச்சிமார் கோயிலடி சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

தொல்லை வினை தீர்க்கும் தூயவனே முருகா
முத்துக்குமரனே முழுமுதலே சரணம் சரணம்
கல்லை யொத்த மனமும் கசிந்துருகச் செய்யும்
காட்சி தருபவனே கந்தவேளே குகனே முருகா
இல்லை யென்னாது வரமீந்தருளும் வள்ளி மணாளனே
ஈசன் திருமகனே மாலோன் மருகனே
நல்லை யிலே எழுந்தருளி நமக்கருளும் வேலவனே
நாமுன்னைத் தொழுகின்றோம் காத்தருள்வாய் முருகா!

கந்தனென்றும் கடம்பனென்றும் கார்மயில்வாகன னென்றும்
கணப்பொழுதும் மறவாது கைதொழுது நின்றோம்
உந்தனது மலர்ப்பாதம் உள்ளத்திலே உறைந்திருக்க
உன்னாமம் உச்சரித்தோம் ஓடிநீ வருவாயே!
சிந்தனையி லெந்நாளும் சிங்காரவேலன் திருவுருவம்
சிறப்புடனே நிறைந்திருக்கக் குறையேதுமில்லை
வந்தனையே செய்து வாழ்த்தி நிதம் துதிக்கின்றோம்
வளமான வாழ்வருள்வாய் நல்லூரின் நாயகனே.

கண்ணியமாய் நாம் வாழக் கருணை செய்யும் கந்தனே
கார்த்திகேயனே குகனே கார்மயில் வாகனனே
புண்ணியமே புரிந்ததனால் நற்புகழ்பெற்ற நல்லூரினிலே
புகழுடனே வாழ்கின்றோம் திருமாலின் மருகனே
எண்ணியதை முடித்துவைக்கும் ஏந்திழையாள் வள்ளியுடன்
எழிற்காட்சி தருகின்றாய் ஏத்தியே துதித்திடுவோம்
மண்ணிலே நல்ல மாண்புடனே நாம் வாழ்ந்திடவே
திருவீதி வலம் வந்தே அருட்காட்சி தாராயோ!

நல்லூரின் நாயகனே குகனே ஞானவடிவேலவனே
நமக்கருள் புரிந்திட ஏன் இன்னுந் தாமதம்
பொல்லா வினையறுத்துப் புகழ்ச்சேவடி என் தலைமேல்
புனைந்தே அருள்தர நீ ஓடோடி வாராய்!
எல்லா வழியாலும் எத்தனை துன்பங்கள் வருகிறதே
ஏன்தான் மௌனம் சாதிக்கின்றாய் முருகா?
பல்லாண்டு பாடியே பரவசமாயுனைப் பணிந்தோம்
பாலஷண்முகனே பரமபதம் அருளிடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் கும்மி

பண்டிதர் க. முத்துவேலு
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

1. தேரடி தன்னில் நிஷ்டை கூடிய
செல்லப்பா சுவாமிக் கருளியவன்
பேரது சொன்னாற் பேரா னந்தமாம்
பேசிக் கும்மி அடியுங்களே!

2. சும்மா இருஎன்ற வாக்கொன் றருளி
துரியம் அருண கிரிக்கானான்
பெம்மான் நல்லைக் குமாரனைப் போற்றிப்
பெரிது கும்மி அடியுங்களே!

3. உமையம்மை தந்த வேற்படை தன்னால்
உறுசூர் அசுரரை வதைத்தவர்தாம்
எமையிங்கு காத்தற்கு வீதி வருகிறார்
என்றே கும்மி அடியுங்களே!

4. ஆற்றுப் படைசொன்ன நக்கீரற் காத்தற்காய்
ஆங்கே கற்கியை வதைத்தவர்தாம்
ஆற்றொணா தேங்கும் அடியரைக் காக்க
ஆவான் கும்மி அடியுங்களே!

5. சுட்ட பழமா, சுடாப்பழம் வேண்டுமா?
சொல்லென அவ்வை துலங்கவைத்தான்
சிட்டர்கள் வாழும் நல்லை உலாவரும்
திருவுன்னிக் கும்மி அடியுங்களே!

6. அகவை ஐந்து ஆம்வரை வாய்மலர்ந்
தம்மா எனஒரு சொல்லாகா
மகவாம் குமர குருபரற் கருளினான்
வழுத்திக் கும்மி அடியுங்களே!

7. சரவண பவஎனும் சடாட்சர மந்திரம்
தன்னை நித்தம் ஜெபிப்பவர்க்கு
வரமெலாம் அருளும் நல்லைக் குமாரனை
வாழ்த்திக் கும்மி அடியுங்களே!

8. உருத்திர சன்மப்பேர் மூங்கைப் பிள்ளையாய்
உயரிய களவியற் காமுரையுள்
அருமை நக்கீரர் உரையென உணர்த்தினான்
ஆர்ந்து கும்மி அடியுங்களே!

9. செந்தமிழ்த் தெய்வமாய் ஏத்தப் பெறுபவன்
சிவனார் தமக்கும் குருவானான்
வந்த வினையற வருவினை போக்குவான்
வாழ்த்திக் கும்மி அடியுங்களே!

10. நால்வர் குரவர்மேல் ஐந்தாம் குரவராய்
நாவலர் தம்மை உதிக்க வைத்தான்
வேல்கொண்டு விளையாடும் நல்லைக் குமாரனை
வேண்டிக் கும்மி அடியுங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைப் பதியான்

அல்வாயூர் சி. சிவநேசன்

01. கூவிடும் சேவல் கொடிஉடைச் செவ்வேளே
நாவினால் உன்னை நயந்துபாடி நாளுமுன்திருக்
கோவில் வலம் வந்துன் கோலவடிவினை
பாவிநான் பார்க்கும் கடாட்சம்தா நல்லைப்பதியானே.

02. மூலவெழுத்தின் பயனறியாப் பிரமனை சிறைகொண்டு
ஆலமுதனுக்கு மூலத்தின் உரைசொல்லி குருவானவனை
பாலமுருகனை பொங்குதமிழ் காவலனை கந்தனை
கோலமிகும் நல்லைநகர் கோமகனை நாளுந்துதி.

03. கண்ணாயிரம் கொண்ட தோகை மயில்வாகனனை
எண்ணாதிருப் பேனோ உன்னை ஒருகணமேனும்
விண்ணவரை பகைகொள் சூரனை வதஞ்செய்த
திண்ணவனே திருக்கை வேல்கொள் நல்லைப்பதியானே.

04. குஞ்சரியை இடமாக வள்ளி வலம்வைத்து
கஞ்சிகையில் வலம் வந்து அடியவரின்
துஞ்சிடும் துயர் போக்கி காத்திடுவாய்
மஞ்ஞையில் ஏறும் வேலவனே நல்லைப்பதியானே.

05. உழலுற்றேன் முன்செய் ஊழ்வினை யாலன்றோ
விழலுற்றநீர் போல்வழி நிலைமாறி வாழ்வழிந்து
அழலுற்றேன் நாதியற்று நிற்குமெனை முருகனேயுன்
கழலுற்றேன் கதியற்றவனை காத்திடு நல்லைப்பதியானே.

06. மலர்முகத்தான் கனிஉளத்தான் அருளகத்தான்
நலந் தருவான் வளந் தருவான் நயந்து பார்ப்பான்
குலங் காப்பான் குலவிளக்காவன் கை அணைப்பான்
கலங்கவிடான் நலங்கவிடான் நல்லைப் பதியானே.

07. கள்ளிலும் கணிகையிலும் காதலாகிக் கடையவனாகி
உள்ளத்தில் அறத்தின்வழி கொள்ளாது அறிவிலியானேன்
மெள்ளவென் உடல்புகுந்த பெருநோயால் வலிபட்டுன்னை
வள்ளலே என்று நாடிவந்தேன் காத்திடு நல்லைப்பதியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. அருமணியே அழகுத் திருமேனியே அரன்மகனே
கருவினில் பிறவாக் கனலில் உருவானகுகனே
குருமணியாய் மூவாமுதல்வனுக் குபதேசம் சொன்னவனே
வருமணியே பெருவரம் தருவாய் நல்லைப் பதிமணியே.

09. கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடரியென
இறுமாப்பு உற்ற அவ்வைக்கு ஒரு பழத்தில்
இருசுவை சொல்லி நாணிடச் செய்தமுருகா
உறுங்கயமை காமகுரோத மில்லா மனந்தா.

10. வேறுமுகம் பாராது நல்லைப் பதியேகி
ஆறுமுகனைக் கண்டு ஆறுதல் பெற்றே
தேறுமுகம் கொள்வோம் தேற்றந் தருவான்
மாறுமுகன் தம்பி நல்லைப் பதியானே.

# இரதமூர்ந்து வருக!

**பல்லவி**

தேரேறி வருவாயோ தேவாதி தேவா!
திருமேவும் நல்லூரின் நெடுவீதி தனிலே
(தேரேறி)

**சரணம்**

ஓராறு முகமும் இன்னருளொடு துலங்க
சீராக இருபாகம் தேவியர் இலங்க
நீராழி அலைபோலும் அடியார் நெருங்க
அரஹரா முருகா! வென்றன் பொலிமுழங்க
(தேரேறி)

ஆராதித் திடுமடியார் அல்லல் வினை அகல
அருந்தமிழில் மாலை தொடுத்தோர் அகமும் மலர
சீரோடு நாத ஒலி கீதஒலி பரவ
செந்தமிழின் அதிபதியே ரதமூர்ந்து வருக.
(தேரேறி)

**திருமதி கு. கமலாம்பிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமைஅரனின் பாலகனே

கலாபூஷணம் அ.கி. ஏரம்பமூர்த்தி

**விருத்தம்**

அழகுமிகு தலமான நல்லைதனி லமர்குமரா
அனுதினமு மருள்புரிவாய் அகமுருகி யேதொழுதோம்
ஐங்கரனின் சோதரனே அன்பரிடர் தீர்ப்பவனே
அரியினது திருமருகா அரனுமையின் பாலகனே
தொழுமடியார் தீவினையை நீக்கியென்றும் காப்பவனே
தோகைமயில் வாகனனே தேவரிடர் தீர்த்தவனே
துணையாக வேநின்று திருவருளைத் தருபவனே
தெய்வயானை வள்ளியம்மை தனைப்பாகம் கொண்டவனே.

ஒளியோடு அரனாரின் நுதல்விழியி லுதிபொறிகள்
ஆறுமே அதிவிரைவாய்ச் சரவணப் பொய்கையிலே
இதழ்கள்விரி வசைமலர் தனிலாறு பாலர்களாய்
எழிலோங்கு முருவோடு தவழ்ந்து விளையாடினாய்
உளமகிழ்ந்து கார்த்திகைப் பெண்கள்தரு பால்பருகி
உயர்கார்த்தி கேயனென்றும் போற்ற நின்றாய்
அன்புடனே உமையம்மை சேர்த்தணைத் தேமகிழ
ஆறுமுகம் கொண்டவனாய் அற்புதனாய் நின்றாய்.

அழிவுசெய் சூரனைநீ போர்க்களம் தன்னிலே
வேல்கொண்டு இருகூறாய் வீழ்ந்திடச் செய்தாய்
எழில்தங்கு மயிலாயும் சேவலுமா யும்வரவே
ஏற்றாய் மயில்வாகனனாய் சேவற்கொடி யோனாய்
இழிவான அழிசெயல்கள் பெருகுவதை நீகண்டாய்
இன்னல்களால் மாந்தர்கள் ஏங்குவதை நீஅறிவாய்
ஒளியான அருளாலே கோள்கள் நலம்செய்ய வைப்பாய்
உமைஅரனின் பாலகனே உறுதுணையாய்க் காப்பவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வந்துவிட்டது!

ஐ. சண்முகலிங்கம் (கற்பகன்)
கரணவாய் தெற்கு.

கந்தவேளைப் பாடுகின்ற காலம் வந்து விட்டது
கலியுகத்தைப் போக்குகின்ற காலம் வந்து விட்டது
பந்தவினை யறுகின்ற காலம் வந்து விட்டது
பாடியாடிப் பரவுகின்ற காலம் வந்து விட்டது.

எங்குமீசன் என்றுசொல்லும் காலம் வந்து விட்டது
எல்லாமவன் தானேயென்ற காலம் வந்து விட்டது
பொங்குகின்ற பக்தரோசை பொலியும் காலம் வந்தது
பொற்பாய் வாழும் கந்தவேளைப் போற்றும் காலம் வந்தது.

அற்புதங்கள் காணுகின்ற காலம் வந்து விட்டது
அன்பு வெள்ள மோடுகின்ற காலம் வந்து விட்டது
கற்பூரத்தீ காணுகின்ற காலம் வந்து விட்டது
கரங்கள் கூப்பி ஓம்புகின்ற காலம் வந்து விட்டது.

கங்கை வெள்ளம் ஓடுகின்ற காலம் வந்து விட்டது
கந்தனருள் மேவுகின்ற காலம் வந்து விட்டது
மங்கை வள்ளி லோலன் மீது காதல் வந்து விட்டது
மக்கள் மனதை யுருக்கு மந்தக் காலம் வந்து விட்டது.

முதிருமன்பில் இனிமையாகும் காலம் வந்து விட்டது
மூர்க்ககுணம் ஒழியுமந்தக் காலம் வந்து விட்டது
கதிர் வண்ணக் கந்தவேளின் காலம் வந்து விட்டது
கண்ணைப் பெற்ற பயனைப் பெறும் காலம் வந்து விட்டது.

பல்லோரும் பக்தி செய்து பாடுங்காலம் வந்தது
பரமசிவன் புத்திரனைப் பரவும் காலம் வந்தது
நல்லூரை நாடுகின்ற நல்ல காலம் வந்தது
நான்கு வேதப் பொருளோனைப் போற்றுங் காலம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் நல்லவழி காட்டிடுவார்

குளப்பிட்டி க. அருமைநாயகம்

நல்லூர் வல்லானை நாளும் துதிப்பவர்க்கு
தொல்லைமிகு இவ்வுலக துயரில் துவள்வதற்கு
இல்லை, இடமில்லை, இன்னலில்லை நல்லூரான்
நல்லவழி காட்டிடுவார் நானிலத்தில் வாழ்வதற்கு!

சரித்திரங் குறிப்பிடும் நல்லூரா னாலயத்தை
சரித்தன ரழித்தன ராணவத்தா லிருப்பினும்
தெரியாதோர் புரியாதோர் புரிந்ததைப் பொறுத்து
உரியத னிடத்தி லுறைகின்றார் முருகன்.

வெள்ளைய ராட்சியில் வாடிய தமிழை சைவத்தை
நல்லபடி வளரவைக்க நாவலரை நமக்களித்தார்
நல்லைநகர் நாவலனார் நற்பணிகள் பலசெய்து
நல்லவழி வளர்த்தார் நற்றமிழை சைவத்தை!

ஆடி அமாவாசை அடுத்து ஆறாம்நாள்
தேடியே நாமிருப்போம் திருவிழா காண்பதற்கு
பாடியு மாடியும் பக்தியுடன் முருகனை
நாடித் துதித்திடுவோம் நற்பே றடைவதற்கு!

கொடியேற்றம் காணஅலை யலையா யடியார்கள்
விடியற் காலைமுதல் விருப்புடனே வருவார்கள்
முடியாது தொடரும் கொடிய யுத்தமதை
அடியோடு மடியவைக்க வேலவனை வேண்டிடுவர்.

நஞ்சாகி நமையழிக்கும் வஞ்சப் பயிர்வகையை
மிஞ்சாது களைந்துவிட கெஞ்சிடுவோம் முருகனிடம்
அஞ்சிய தேவர்க்கு அருளிய ஆறுமுகன்
தஞ்சமடைந் தனமைக் காத்திடுவார் காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை எனக்கருள்வாய்!

திருமதி சு.வள்ளியம்மை
நுணாவில் கிழக்கு

அ. அன்பெனும் பொருள் கொண்ட திருமுருகா - உனை
அனுதினமும் தாள் பணிந்தோம் வரம் அருள்வாய்.

ஆ. ஆடி அசைந்து வரும் ஆறுமுகா - நீ
ஆறுதலைத் தருவாய் வேல்முருகா

இ. இன்னிசைப் பொருளான இளையோனே
இன்னல்களைப் போக்கும் அருளோனே

ஈ. ஈடிணை இல்லாத வேல் முருகா - எங்கள்
ஈசன் திருமகனே நல்லூரா

உ. உமையம்மை பாலகனே பால முருகா
உந்தன் இன்னிசை கேட்டிவே நான் வரவா

ஊ. ஊருலகம் எல்லாம் உன் நாமம்
ஊமைஎந்தன் நினைவில் உன்திரு உருவம்

எ. எங்கும் எதிரொலிக்கும் ஓம்காரம்
எந்தன் நினைவில் என்றும் - உன் கோலம்

ஏ. ஏழுலைகையாளும் வேல்முருகா
ஏழை எந்தன் குரல் கேட்கலையா

ஐ. ஐயமெல்லாம் தீர்க்கும் குருபரனே
ஐங்கரன் சோதரனே குமரேசா

ஒ. ஒருநாளும் உனை மறவேன் உமைபாலா
ஒற்றுமையைத் தந்தருள்வாய் ஒளிவேலா

ஓ. ஓம் என்னும் பிரணவத்தின் பொருள் உரைத்தாய்
ஓங்காரமாய் நின்று வடிவெடுத்தாய்

ஔ. ஔவைக்கு உபதேசம் செய்தவனே - முருகா
ஔடதமான பொருள் ஆனவனே முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேரேறி வீதியுலா வந்து பச்சை சார்த்தி பக்தர்களுக்கு
காட்சிதரும் ஆறுமுகத்தானின் கண்கொள்ளாக் காட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் ஒரு வாழ்வியல்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

உலகத்துத் தோன்றிய வழிபாட்டு நடைமுறைகளில் மிகத் தொன்மையானது சைவசமய வழிபாடெனக் கருதப்படுகிறது. மனிதன் காட்டு வாழ்வு நடத்திய காலத்தில் தனது உடல் ஆற்றலுக்கு விஞ்சிய இயற்கையின் பேராற்றலைக் கண்டு அதனைப் பணிந்து வாழமுற்பட்டான். காலை, மதியம், இரவு என்ற ஒரு நாளின் கடப்பில் இயற்கைச் சக்திகளின் தொழிற்பாட்டை உன்னிப் பாகக் கவனித்தான். அதன் ஒழுங்கு நிலை கண்டு வியந்தான். இயற்கைச் சூழலில் தன் வாழ்வியல் நடைமுறைகளையும் ஒழுங்குடன் அமைத்துக் கொண்டான்.

விண், நிலம், நீர், காற்று, தீ என்னும் ஐம்பெரும் இயற்கைகளைத் தன் வாழ்வியலோடு இணைத்து வழிபடும் நடைமுறையை மனிதன் வகுத்துக் கொண்ட போது அது 'சமயம்' எனப் பெயர்பெற்றது. இன்று வரலாற்றுப் பதிவுகளும் தொல்லியல் ஆய்வுகளும் இதனைச் சான்று காட்டி விளக்கியுள்ளன. எனினும் நமது வழிபாடு பற்றிய நமது முன்னோர்களின் கருத்துக்களைத் தெளிவு படுத்த இன்று ஓர் ஆற்றுகை தேவைப்படுகிறது.

விஞ்ஞானத்தின் விந்தைகளும் தகவல் தொழில்நுட்பங்களும் கருவிக்கையாட்சிகளும் மனிதனை இயற்கைச் சூழலிலிருந்து வேறுபடுத்தியுள்ளன. ஒரு செயற்கையான வாழ்வியலில் ஈடுபடுத்தியுள்ளன. குறிப்பாக இந்த நூற்றாண்டில் இளந்தலைமுறையினர் வழிபாட்டு நடைமுறைகளை விட்டு விலகி நிற்கின்றனர். அவர்களை வழிநடத்த வேண்டிய முதுமைச் சான்றோரும் முறைமாறி நிற்கின்றனர். இந்நிலையால் மனித வாழ்வு வேகநடை போட்டாலும் மன அழுத்தங்களோடு நோயுற்று நடக்கிறது. இதனை மேலும் நீடிக்க விடாமல் ஒரு விரைவான செயற்பாடு தேவைப்படுகிறது. அதனை எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்ற சிந்தனையில் தோன்றிய கருக்களே இங்கே எழுத்துருப் பெற்றுள்ளன.

பழந்தமிழர் வாழ்வியலைப் பற்றியறிவதற்குப் பல இலக்கியப் பதிவுகள் எமக்குக் கிடைத்துள்ளன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வாய்மொழி இலக்கியங்கள் ஏட்டு வடிவில் பேணப்பட்டுப் பின்னர் நூல் வடிவாக அமைந்து இன்றெமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் தமிழரின் வழிபாட்டு . வாழ்வியலின் வரலாற்றை அறிய உதவுகின்றன. இத்தகவல்களில் பல, வரலாற்று ஆய்வாளர் மூலம் கால அடிப்படையில் வகுத்து விளக்கப்பட்டுள்ளன. எனவே இந்த இலக்கிய பதிவுகள் கூறும் செய்திகளினூடாக வகுக்கப் பட்டிருந்த வாழ்வியலை எமது தலைமுறைக்கு எடுத்துரைப்பது பயனுடைத்தாகும்.

## இயற்கை வழிபாடும் மனித வாழ்வும்

இன்று எமக்குக் கிடைக்கும் பழந்தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்களே மிகப் பழமையானவை. அவை குறிப்பிடும் இயற்கை வழிபாடு பற்றிய செய்திகள் அக்கால மனிதனின் வழிபாட்டு முறைமையினை உணர்த்துகின்றன. தாம் வாழுகின்ற பிரதேசத்தின் நிலத்தியல்புக்கு ஏற்ப வழிபாட்டு நடைமுறைகளையும் ஏற்படுத்தியிருந்ததைப் பலபாடல்கள் பதிவு செய்துள்ளன. 'ஐங்குறுநூறு' என்னும் தொகுப்பில் உள்ள பாடல் ஒன்று இக்கருத்தைத் தெளிவுறுத்தும்.

**"குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்**
**தேம்பலிச் செய்த வீரநறுங் கையள்**
**மலர்ந்த காந்தள் நாறிக்**
**கவிழ்ந்த கண்ணளெம் அணங்கியோளே"** (ஐங்குறு:259)

குன்றத்திலே தங்கி வாழ்வு நடத்துகின்ற குறவனுடைய முழுமையான அன்பிற்குரிய மடமகள் செய்யும் வழிபாட்டு நடைமுறையை இப்பாடல் உணர்த்துகிறது. பொதுவிடத்திலே மலர்ந்து நின்ற வேங்கை மரத்தின் மலர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு சென்று மலையிலே உறைகின்ற கடவுளும் தங்கள் குலமுதலுமாகிய முருகனை வழிபடுகின் றாள். இனிமையான பலிகளைத் தூவியதால் ஈரம் புலராத கைகளோடிருக்கிறாள். மலர்ந்த காந்தள் போன்ற நறுமணங் கொண்டவளாகவும் கலங்கி யழும் கண்களையுடையவளாகவும் இருக்கிறாள். அவளுடைய பக்திப் பரவசமான தோற்றம் புலவருடைய சொற்களால் சித்திரமாக்கப்பட்டுள்ளது. இப் பாடலில் 'குலமுதல் வழுத்தி' என்ற தொடர் தங்கள் முன்னோர்களை நினைந்து வேண்டி வழிபடுவதைக் குறிப்பதாகவும் பொருள் தரும். ஆனால் 'மலையுறை கடவுள்' என்ற தொடர் மலையிலே உறைகின்ற கடவுளையே குறிக்கின்றது. இயற்கையின் தோற்றப்பாட்டு நிலையிலே மனிதனின் ஆற்றலுக்கு விஞ்சிய பெருமலையில் கடவுள் உறைவதாக நம்பப்பட்டது.

இக்கருத்துப் பற்றிப் பேராசிரியர் சு.வித்தி யானந்தன் தமது 'தமிழர் சால்பு' என்னும் நூலில் வருமாறு கூறியுள்ளமை இங்கு கவனத்திற்கு உரியது.

மலையிலும் நீரிலும், மரங்களிலும் கடவுள் உறைவதாக மக்கள் நம்பினர். மலையைச் சிறப்பிக்குமிடத்து 'அணங்குடை நெடுங்கோடு' 'அணங்கு சால் அடுக்கம்', அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமையம்' என்றிவ்வாறு புலவர் கூறுவர்.

தெய்வங்கள் உறைந்த ஓர் ஆலமரம் 'கடவுள் ஆலம்' என வழங்கிற்று. கள்ளி நிழலிலுள்ள தெய்வங்களைப் பாணர்தொழுவர், காட்டுக்குரிய ஒரு கடவுளை காடுறை கடவுள் எனக் குறிக் கின்றது. பொருநராற்றுப்படை. இக் கடவுளின் சிறப்புப் பண்புகளை நன்கு அறிய முடியவில்லை.

சங்க இலக்கியப் பதிவுகளை நோக்கும் போது இயற்கைத் தோற்றங்களையே இறைவன் தோற்றமாக மதித்து வணங்கி வழிபடும் மரபு இருந்ததை அறியமுடிகின்றது.

சங்கமருவிய கால இறுதிப்பகுதியில் வாழந்த காரைக் காலம்மையார் இறைவனுடைய தோற்றத்தை இயற்கைக் காட்சிகளிலே கண்டு வழிபட்டதை அவருடைய பக்திப் பாடல்களால் அறிய முடிகிறது. காரைக்காலம்மையாருடைய உள்ளத்தில் இறைவழிபாடு ஊன்றியிருந்த மையால் இயற்கையின் கோல அழகிலே அவரால் இறைவனைக் காணமுடிந்தது. காலமாற்றங்களில் இறைவன் கோலங்கண்டு மகிழ்ந்து கவிதை பாடிய காரைக்காலம்மையார் இயற்கை வழிபாட்டையும் உருவ வழிபாட்டையும் ஒருங்கிணைத்தவராக விளங்குகிறார்.

**"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்**
**வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்**
**தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு**
**வீங்கிருளே போலும் மிடறு."** (அற்புதத்திருவந்தாதி:15)

வழிபாட்டை வாழ்வியலாக்கி இறைவன் அருகில் இருக்கும் பேறு பெற்ற அம்மையார் வணிககுலத்து வாழ்வியலோடு ஒன்றியிருந்தவர். வழிபாட்டு நடை முறைகளைச் செயற்படுத்தி வாழ்ந்தவர். பெற்றோர் பயிற்றிய சமய வாழ்வே நிலையானது என்பதை உணர்த்தியவர். சிறுவயது முதல் அவர் வழிபாடு பற்றி அறிந்த செய்திகளை வாழ்வியலாக்கி ஒரு புதிய மரபைத் தோற்றுவித்தவர். தான் வழிபடும் இறைவன் உருவத்தைக் காணாமலே அவனுக்கு ஆட்பட்டவர். இயற்கையான இல்லற வாழ்வியலில் இடர் ஏற்பட்ட போது மனந்தளராமல் இறைவழி பாட்டில் உறுதியாய் நின்றவர். இளமை அழகை வெறுத்துப் பேய் வடிவை வேண்டிப் பெற்றவர். இறைவனைப் பாமாலை கொண்டு வழிபட்டவர். அவருடைய வாழ்வியலில் சைவம் ஒரு வழிபாட்டு நடைமுறையாக இறுதிவரை தொடர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையாரின் வரலாற்றைப் பாடிய சேக்கிழார் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். திருத்தொண்டர் வரிசையில் அம்மையாரும் சிறப்புப் பெற அவர் சைவவழிபாட்டு நிலையே காரணமாக இருந்தது. இல்லறந்துறந்த முதற் பெண் துறவி யாகத் தன்னை அவர் மாற்றிக் கொண்டது சைவப் பக்தி மரபில் புதியதொரு செயற்பாடாக விளங்கியது.

**"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்**
**மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க..."**

என இறைவனிடம் அவர் கேட்டது அவருடைய சைவ வாழ்வியலின் முழுமையான அநுபவமாக அமைந்துள்ளது. இந்த புதிய வாழ்வியல் மரபு பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மாரால் தொடர்ந்தது.

### கோவில் வழிபாடும் மனித வாழ்வியலும்

சைவ இலக்கியங்கள் எனப் போற்றப் படும் சைவத்திருமுறைகள் சைவ வாழ்வியலின் வளர்ச்சியையும் நிலைபேற்றையும் தெளிவாகப் பதிவு செய்து வைத்துள்ளன. பல்லவ பாண்டியர் காலத்தில் தென்னாட்டில் நிலவிய சைவசமயம் மக்கள் வாழ்வியலோடு ஒன்றுபட்டிருந்தது. நாட்டின் பொருளாதாரம், அரசியல், நீதி போன்ற துறைகட்குச் சைவக்கோயில்களே பெருநிலையங் களாக அமைந்து விளங்கின. கோயில்களில் வழிபாட்டு நடைமுறைகளுடன் ஏனைய கலை களும் பேணப்பட்டன. சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவர் பாடிய பாடல்கள் மூலம் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 530 கோவில்கள் இருந்ததை அறிய முடிகிறது. சைவக் கோவில்கள் மக்கள் வாழ்வைத் தம்மோடு பிணித்து நின்றன.

சைவ வாழ்வியலை மக்கள் மனதிலே நிலைக்க வைப்பதற்குச் சம்பந்தர் ஆற்றிய பணியே தனித்துவமானது. அவருடைய பிறப்பும் வளர்ப்புச் சூழலும் சைவம் ஒரு வாழ்வியல் என்பதை நன் குணர்த்தியிருந்தன. நாள்தோறும் இறைவழிபாடு செய்யும் பெற்றோரின் வடிவம், குழந்தையான சம்பந்தரின் பிஞ்சு உள்ளத்திலே ஆழப்பதிந்தது. அவர்கள் வணங்கும் தெய்வமே வாழ்வை வளமாக்கும் என்ற உணர்வை ஊட்டியிருந்தது. மூன்று வயதில் அவர் பெற்ற தெய்வீக அனுபவம் அதை உறுதிபெறச் செய்தது. அதனால் அவர் சைவசமயம் பற்றிய உணர்வை ஊட்டுவதே தமது பணியெனத் தெளிந்து கொண்டார். இறைவழிபாடு செய்யவென அமைக்கப்பட்ட திருக்கோயில்களை யெல்லாம் சென்று வணங்கி மக்களையும் வழிபாட்டில் இணைத்துக் கொண்டார். ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று அவர் நற்றமிழால் இசையோடு இறைவனைப் பற்றிப் பாடியபோது மக்களை அது கவர்ந்தது. சம்பந்தரின் முதிராத இளமையும் அழகுத்தோற்றமும் இசையின் இனிமையும் கோவிலை வலம் வந்தபோது, ஏனைய ஆடற் கலைஞரும் இசைக்கருவியாளரும் அவரைப் பின் தொடர்ந்த போது, பத்தியின் பரவசத்தை மக்கள் உணர்ந்தனர்.

திருஞான சம்பந்தருடைய வரலாற்றைப் பாடிய சேக்கிழார் அவர் சீர்காழியிலிருந்து ஆறு முறை திருக்கோயில் வழிபாட்டிற்காக யாத்திரை செய்ததாகக் குறிப்பிட்டு உள்ளார். அப்போது அவர் வழிபட்ட கோயில்களை ஔவை துரைச் சாமிப்பிள்ளை வருமாறு வகுத்துக் காட்டுகின்றார்.

**"முதல் யாத்திரை திருப்பிரமபுரம் முதல் மூன்று. இரண்டாவது யாத்திரை திருநனிபள்ளி முதல் ஏழு. மூன்றாவது யாத்திரை திருமயேந்திரப்பள்ளி முதல் நான்கு. நான்காவது யாத்திரை சிதம்பரம் முதல் இருபத்திரண்டு. ஐந்தாவது யாத்திரை திருக்கண்ணார் கோயில்முதல் நூற்று எழுபத்தெட்டு. ஆறாவது யாத்திரை சிதம்பரம் முதல் நாற்பத்தேழு. இறுதியாகிய ஏழாவது யாத்திரை திருநல்லூர்ப் பெருமணத்தோடு முற்றுப்பெற்றது."**

(சைவ இலக்கிய வரலாறு:ப.65)

இவ்வாறு கோயில்களுக்குச் சென்று வழிபட்ட சம்பந்தர் தமது பதிகங்களிலே வழிபாடு எவ்வாறு மக்கள் வாழ்வியலோடு இணைந்திருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை நன்கு சுட்டிக்காட்டியுள்ளார். இறைவனை மக்கள் உணர அவரது பதிகங்கள் ஆற்றுப்படுத்தின. உலகிலே வாழும் மக்கள் பல்வேறு நினைவுகளால் வருந்துவர். அந்த நினைவுகளை வழிபாட்டிலே நிறுத்தி வாழ்வதே நல்லதெனச் சம்பந்தர் அறிவுறுத்தினார். துறவு நெறியே துன்பத்தைத் துடைக்க வல்லது என்னும் கொள்கை சமண பௌத்த மதங்களால் வலியுறுத்தப்பட்ட வேளையில் நலம் தரும் நல்வழியைச் சம்பந்தர் காட்டினார். இறைவனை நாளும் இடையறாது வழிபடும் வாழ்வியலை ஒரு புதிய நெறியாக வரையறை செய்தார். மனித வாழ்வின் பயனே இறைவன் திருவடியை வழிபட்டு வாழ்வதே எனவும் அதனைக் காலையும் மாலையும் செய்வது மக்கள் கடன் என வற்புறுத்தினார்.

வயதில் இளையவரான சம்பந்தர் வழிபாட்டைப் பற்றிய எண்ணத்தை மக்களிடையே பரப்ப தமிழ்மொழியையும் இசையையும் துணையாகக் கொண்டார். வடமொழியிலே கூறப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளை மக்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வண்ணம் தமிழிலே பாடினார். அவர் பாடல்களில் பயன்படுத்திய சொற்களும் பழமொழிகளும் மக்கள் மனதை ஈர்த்தன. கோயிலை வலம் செய்து வழிபடும் போது சம்பந்தர் கோயில் பற்றிப் பாடிய இசைப் பாடல்கள் உள்ளத்தைக் கவர மக்கள் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. தமது வாழ்வில் இறைவன் வழிபடுவது பயன்தரும் என்ற நம்பிக்கையைப் பெற்றது. பிறமதக் கருத்துக்களின் வரவால் குழப்பம் நீங்கி தெளிவான தொரு பக்திநிலையிலே மக்கள் வாழ்வியல் தொடரலாயிற்று. சம்பந்தருடைய பாடல்கள் மக்களிடையே பரவச் சைவம் பற்றிய தெளிவும் ஏற்படலாயிற்று.

கோயில் வழிபாடு மனித வாழ்வியலில் ஒரு நிறைவை ஏற்படுத்தும் என்ற சிந்தனையை திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் போன்றோரும் மக்களிடையே பரப்பினர். திருநாவுக்கரசர் இளவயதில் எதிர்கொண்ட துன்பங்களால் சைவ வாழ்வை விட்டு சமண வாழ்வுக்குச் சென்றார். சமணசமயக் கருத்துக்களையும் நூல்களையும் கற்றுத் 'தருமசேனர்' எனப் பட்டமும் பெற்று வாழ்ந்தார். சம்பந்தரைப் போலவே சைவச் சூழலிலே பிறந்து வளர்ந்தபோதும் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை சைவவாழ்வியலால் வெல்ல முடியாது என்ற முடிவோடு சமண சமயத்தைத் தழுவினார். தனது வாழ்வுச் சூழலையும் மாற்றிப் 'பாடலிபுத்திரம்' என்னும் பதியிலே சென்று வாழ்வு நடத்தினார். அப்போது சூலைநோயால் பீடிக்கப்பட்டார். சமணசமய வைத்திய முறைகள் பலன் தரவில்லை. அவரோடு இணைந்து நின்ற சமணரும் அவரைக் கைவிட்ட போது மீண்டும் சைவ வாழ்வியல் அவர் நினைவிற்கு வந்தது. தன் உடன் பிறப்பை எண்ணி பிறப்புச் சூழலுக்கு வந்தார். சிறுவயதிலிருந்து வழிபாடு செய்த திருவதிகை வீரட்டானத்துக் கோயில் வழிபாடு செய்ய அவருடைய சூலைநோய் மாறியது. கோயிலில் அவர் பாடிய "கூற்றாயினவாறு..." என்ற பதிகம் அவர் புதிய வழிபாட்டு நெறியில் சென்றதை உணர்த்துகிறது.

மனத்திலே இருந்த மாற்றுச் சமயப்பற்றை வேரறுக்க அவர் கோயில் தொண்டிலே ஈடுபட்டார். இல்லற வாழ்வை ஏற்காமல் துறவு வாழ்வை ஏற்றுத் தொண்டு வாழ்வைத் தொடர்ந்தார். அவர் வாய்மையொடு செய்த திருப்பணி 'உழவாரப் படையாளி' என்ற சிறப்புப் பெயரைப் பெற வைத்தது. கோவில் மனித வாழ்வியலோடு தொடர்புற்றிருப்பதால் ஏற்பட்ட மாற்றத்தைச் சம்பந்தரின் பணியால் உணர்ந்த அப்பர் அவரோடு இணைந்து பணி செய்தார். சமணர்கள் சைவவழிபாட்டிற்கு செய்த எதிர்ப்புகளை எல்லாம் வெல்லும் மனவுரம் பெற்றார். மன்னனையே எதிர்த்து நின்று சைவ வாழ்வியலை நிலைநிறுத்தப் பணிசெய்தார். 'வீரட்டர் தம் அடியேம் நாம்' என்ற நினைப்போடு பல கோயில்களுக்குச் சென்று பதிகங்கள் பாடி சமயம் மாறி நின்ற மக்களை சைவ வாழ்வியலுக்கு மீட்டு வந்தார். அப்பருடைய பக்திக்கோலம் மக்கள் மனதில் ஒரு புதிய பரவசத்தை ஏற்படுத்தியது. சம்பந்தருடைய இளமைத் தோற்றத்திற்கு மாறாக அப்பர் பூண்டிருந்த கோலம் வேறுபட்டிருந்தது. அதனைச் சேக்கிழார் வருமாறு சொற்சித்திரமாக வடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும்**
**தாழ்வடமும்**
**நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்**
**பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும் பதிகஞ்**
**செஞ்சொல்**
**மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"**

சைவக் கோலத்தை மீண்டும் புனைந்து கோவில் வழிபாட்டைத் தொடர்ந்த அப்பர் மக்கள் மனதில் மதிப்புப் பெற்றார். வயதின் மூப்புநிலையும் கோயில் தொண்டில் அவர் கடைப்பிடித்த ஒழுங்கும் மக்களை அவர் பால் ஈடுபடுத்தின.

குடும்ப வாழ்வியலில் நாம் அநுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள், இடர்கள், அல்லல்கள், நோய்கள், பிணிகள் என்பவற்றை எதிர்கொள்ளும் மனவுறுதி கோயில் வழிபாட்டின் மூலம் கிடைக்கின்றது. மனத்துச் சுமையை இறக்கிவைத்து இளைப்பாறும் இடமாக கோயில் விளங்கியது. தனிமையால் ஏற்படும் தவிப்பை அடியார்கள் கூடி வழிபடும் போது மறக்க முடிந்தது. பலரோடு உணர்வையும் செயற்பாட்டையும் பகிரும் இடமாகக் கோவில் அமைந்தது. கோயிலின் அமைப்பு முறையும் வழிபாட்டு நடைமுறைகளும் மக்களை ஒருங்கிணைத்தன. பலர் கூடிய ஒரு இலக்கோடு செயற்படும் பயிற்சி மனித விழுமியங்களை அறியும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தியது. நாயன்மாரின் வழிகாட்டல் அதற்குத் துணை நின்றது.

மனித வாழ்வுக்குத் தேவையான எல்லாவற்றைப் பற்றி எண்ணவும் செயற்படுத்தவும் கோயில் நிலைக்களமாகிற்று. தூய்மையும் அழகும் கோவிலோடு இணைந்திருந்தது. பருவ மாற்றங்களுக்கு ஏற்ப அழகுபடுத்தும் நிலையிலும் இயற்கையான வேறுபாடுகள் புலப்படுத்தப்பட்டன. குடமுழுக்கு மலர் அணிகள், மடைப் பண்டங்கள், ஒளி என்ற நிலையிலும் இயற்கையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. குளம், கேணி, ஆறு, கடல், சுனை என நீராடுமிடங்கள் வேறுபட்டாலும் கோயிலைத் தூய்மைப்படுத்தல் என்ற அடிப்படையான செயற்பாட்டில் மாற்றமில்லை. கோயிலைச் சூழ மலர்ப்பூங்காக்கள் அமைக்கப்பட்டன. இதனால் மலர்ப்பண்பாடு ஒன்று தோன்றி வளர்ந்திருந்தது. நாயன்மார்களின் பதிகங்களில் இதனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக உள்ளன. திருநாவுக்கரசருடைய திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் சிறப்பாக ஒரு பதிகம் மலரிட்டு வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிட்டுள்ளது.

**"எட்டு நாண் மலர் கொண்டவன் சேவடி**
**மட்டலரிடுவார் வினை மாயுமால்"**

**"நீளமா நினைந்து எண் மலரிட்டவர்**
**கோளவல் வினையுங் குறைவிப்பரால்"**

**"கள்ளினான் மலரோரி நான்கு கொண்டு**
**உள்குவாரவர் வல்வினையோட்டுவார்."**

**"பூங்கொத்தாயின மூன்றோ ரைந்திட்டு**
**வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்"**

**"தேனப்போது கண் மூன்றொடொரைந்துடன்**
**தானப் போதிடுவார் வினை தீர்ப்பவர்"**

**"ஏழித்தொன் மலர்கொண்டு பணிந்தவர்**
**ஊழித் தொல்வினையோடவ கற்றுவார்"**

**"உரை செய் நூல்வழி யொண் மலரெட்டிடத்**
**திரைகள் போல் வருவல் வினை தீர்ப்பரால்"**

**"ஒலிவண்டறை யொண் மலரெட்டினால்**
**காலையேத்த வினையைக் கழிப்பரால்"**

**"தாரித் துள்ளித் தடமலரெட்டினால்**
**பாரித்தேத்த வல்லார் வினையாற்றுவார்."**

எண் மலர் கொண்டு வழிபடும் முறைமையை மக்கள் மத்தியிலே நிலைபெறச் செய்ய நாவுக்கரசர் இவ்வாறு பதிகம் ஒன்றைப் பாடியிருக்க வேண்டும். இறைவனுக்கு மலர் மாலை சாத்தி வழிபடல் வேண்டும் என்பதையும் திருவாரூர் தலத்தைப் பாடிய பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார். கோயில் வழிபாடு நாள்தோறும் செய்யப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என அவர் கூறுகிறார். உழவாரத் தொண்டின் மூலம் கோயிற் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென எண்ணினார். இறைவனை நீராட்டிப் பூசனை செய்யும் பணியை அவரால் செய்ய முடியாத போது இறைவன் உறையும் திருக்கோவிலையும் சூழலையும் தூய் மைப்படுத்துவதையும் ஒரு வழிபாட்டு நடைமுறை யாக்கினார். அதனை அவரே செய்தது மக்களை வியப்படைய வைத்தது. சம்பந்தருடைய இசைப் பாடல்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்தது போல திருநாவுக்கரசருடைய சரீரத் தொண்டு மக்களின் மனத்தில் இடம்பெற்றது.

சைவ வாழ்வியலிலிருந்து விடுபட்டிருந்த போது தான் வீணாகக் காலத்தைக் கழித்ததாக திருநாவுக்கரசர் மனம் வருந்துகின்றார்.

> **"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்**
> **தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்**
> **சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
> **வீழ்த்தவா வினையே நெடுங்காலமே."**

மனிதனுடைய உறுப்புக்கள் இறைவன் வழிபடு வதற்கே அமைந்துள்ளன எனத் திருநாவுக்கரசர் நம்பிக்கை கொண்டிருந்தார். இறைவனுடைய அழகிய கோலத்தைக் காண்பதற்கு மனிதப்பிறவி வேண்டும் எனப்பாடியுள்ளார். சைவ வாழ்வியலில் மக்களை இணைக்கும் பணியில் சம்பந்தரோடு திருநாவுக்கரசரும் இணைந்து நின்றமை இளமை யும் முதுமையும் முரண்படாத வாழ்வியலை நன்கு உணர்த்தி நின்றது. பிற சமயங்களின் செல்வாக் கால் நாட்டுமக்கள் மனம் திரிபு அடைந்த போது அம்மக்களை மீண்டும் சைவ வாழ்க்கைக்குத் திருப்புவதற்கு ஏற்ற பயிற்சிக் களமாகக் கோயிலை நாயன்மார் பயன்படுத்தினர்.

## அடியார்கள் வாழ்வியல் காட்டும் சைவம்

இறைவனை வழிபாடு செய்யும் அடியவர் களின் வரலாற்றைப் பெரிய புராணமாகப் பாடிய சேக்கிழார் சைவ வாழ்வியலை விளக்க முற் பட்டுள்ளார். பல்வேறு பிறப்புச் சூழலிலும் வாழ்வுச் சூழலிலும் தோன்றிய அடியார்கள் வழிபாட்டு மரபி னால் ஒன்றிணைந்தனர். இறைவனை வழிபடும் வாழ்வியல் மூலம் வரலாற்றில் புகழ் பெற்றனர். சேக்கிழார் பாடிய 'திருத்தொண்டர் புராணம்' 63 அடியார்களுடைய வாழ்வியலைப் பாடல்களிலே பதிவு செய்துள்ளது. இறைவனை வழிபட்டால் வாழ்வில் நலம் பெருகும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வு நடத்திய அடியார்களை இனங்காட்டும் சேக்கிழார் அவர்களுடைய வாழ்வியலையே சைவ வாழ்வியலாக வரையறை செய்துள்ளார்.

சைவ அடியார்களின் வாழ்வியல் பொது மக்களின் வாழ்வியலில் பெரும் மாற்றத்தைக் கொணர்ந்தது. சமயவாழ்வில் தோன்றும் இடர்களைக் களைய அடியார்கள் செய்த பணி சிறப்பானதாகும். சமணம், பௌத்தம் போன்ற பிறமதங்களின் பிரசாரம் மக்கள் மனதை மட்டுமன்றி செயற்பாடு களையும் மாற்றியது. இவ்வேளையில் மக்களை மனந்திருப்ப ஒரு இயக்கபூர்வமான அமைப்புத் தேவைப்பட்டது. வழிபாட்டு நடைமுறைகளை நன்கு விளக்கவல்ல பயிற்சியாளர் தேவைப்பட்டனர். அத்தகைய பயிற்சியை வழங்கவல்லவராகவும் அடியார்கள் இருந்தமையால் கோயிலோடு இணைந்த பக்தி இயக்கம் ஒன்று தோன்றலாயிற்று. இவ்வாறு தோன்றிய இயக்கத்தின் செயற்பாடுகளை நெறிப் படுத்தும் தலைவர்களாகத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் செயற்பட்டனர். கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்ட கோயிற் பண்பாட்டை மீண்டும் கட்டியெழுப்பினர். மக்கள் நலம் பேணும் அமைப்பாகக் கோயிற் பணிகளை வளர்த்தனர். நோய்தீர்த்தல், பசிப்பிணி போக்கல், அன்னக் கொடை, கலைப்பயிற்சி, கருத்துரை வழங்கல், முரண்பாடுகளைத் தீர்த்தல் போன்ற பல செயற் பாடுகளைக் கோவிலை மையமாக்கிச் செய்தனர். இவை அற்புதச் செயல்களாக மக்களால் புகழப் பட்டன. கோவிலில் ஆண்டு முழுவதும் நடைபெற்ற விழாக்கள் மக்கள் மனதில் மகிழ்வை ஏற்படுத்தின.

திருஞானசம்பந்தருடைய வரலாற்றில் நடைபெற்ற ஒரு நிகழ்வு கோவில் விழாக்களைக் குறிப்பிடும் பதிகமாக அமைந்துள்ளது. திருமயி லாப்பூரிலே வைசியர் குலத்தில் சிவபக்தரான சிவநேசர் என ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசம்பந்தரின் வழிபாட்டு அறத்தைப் பற்றிக் கேள்வியுற்று தன்மகளான பூம்பாவையை அவருக் குக் கொடுக்க விரும்பினார். ஒருநாள் பூக்கொய்யச் சென்ற பூம்பாவை பாம்பு தீண்ட இறந்தாள். சிவநேசரோ இவளைப் பிள்ளையாருக்கு என்று வளர்த்தமையால் உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைப்பேன் எனக் கூறி எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தி லிட்டுக் கன்னி மாடத்திலே வைத்திருந்தார்.

ஞானசம்பந்தர் காளத்தி முதலிய திருத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவொற்றி யூரை அடைந்தபோது சிவநேசர் அவர் வரவை அறிந்து அங்கு சென்று வணங்கினார். சிவநேசர் செய்கையை அடியார் சொல்லக் கேட்டு அறிந்த சம்பந்தர் திருமயிலாப்பூருக்குச் சென்று கபாலீஸ் வரர் ஆலயத்தை அடைந்தார். சிவநேசர் சேமித்து வைத்த எலும்புக் குடத்தையும் கொணரச் செய்தார். இறைவனை மனதில் நினைந்து வணங்கிப் பூம்பாவாய்! என விளித்து 'மட்டிட்டபுன்னை' என்ற திருப்பதிகத்தைப் பாடினார். பூம்பாவை முதற் பாட்டிலே வடிவு பெற்று மற்ற எட்டுப் பாட்டிலே பன்னிரண்டு ஆண்டு நிரம்பப் பெற்றாள். பத்தாவது பாடல் பாடிய போது தன் கை வெளியே தோன்றக் குடம் உடைந்து எழுந்தனள். அக்காட்சியைக் கண்டவர் அனைவரும் பெருவியப்படைந்தனர். இப் பதிகத்திலே சம்பந்தர் அக்கோயிலில் நடைபெறும் விழாக்களை எடுத்துக் கூறியுள்ளார்.

உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிடுதல், ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்தர நாள், அட்டமி நாள், பொற்றாப்பு, பெருஞ் சாந்தி என ஓராண்டில் நடைபெறும் கோயில் விழாக் களைச் சம்பந்தர் வரிசைப்படுத்திப் பாடலிலே கூறியுள்ளார். இவ்விழாக்காலங்களில் ஊரே கோயிலில் ஒன்று திரண்டது. காலமாற்றத்தையும் பருவமாற்றத்தையும் மக்கள் வாழ்வியலோடு இணைப்பதற்கு இவ்விழாக்கள் பெரிதும் உதவின. கோயிற் கலைகளின் அரங்கேற்றமும் நடை பெற்றன. பயிற்சிகளின் தொடக்கமும் பயிற்சியும் கோயில் மண்டபங்களிலே நடந்தன. அதனைப் பொதுமக்கள் அனைவரும் கண்டு களித்தனர். விழாக்காலங்களிலே கோவில்களுக்குப் புதுப் பொலிவூட்டப்பட்டது. இதனால் கோவில் வழிபாடு என்பது கூட்டுமுயற்சியாகப் பலரையும் ஒருங்கு இணைக்கும் செயற்பாடாக விளங்கியது.

கோயிலோடு இணைந்த மலர்ப்பண்பாடு பற்றி அடியவர்கள் தமது பதிகங்களிலே குறிப் பிட்டுள்ளனர். கோயிலைச் சூழச் சோலைகள் அமைக்கப்பட்டன. திருஞானசம்பந்தருடைய பாடல் ஒன்று இதனைத் தெளிவாய்க் காட்டுகிறது.

**"கொங்கிள வேங்கையுங் கொழுமலர்ப் புன்னையுந்**
**தாங்குதேன் கொன்றையுந் தகுமலர்க் குரவமு**
**மாங்கரும்பும் வயன்மேந்திரப் பள்ளியுள்**
**ஆங்கிருந்தவன் கழலடியிணை பணிமினே"**

கோயிற் சூழல் அழகொடு பொலிய அருகமைந்த மலர்ச்சோலைகள் உதவின. நாள்தோறும் வழிபாட் டிற்குத் தேவையான மலர்களைப் பெறுவதற் காகவும் மலர்த் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. இயற்கையின் பல்வேறு அழகுக் கோலங்களை இம்மலர்த்தோட்டத்திலே மக்கள் கண்டு மகிழவும் இது வாய்ப்பாக இருந்தது. மலர்த்தோட்டங்களில் வண்டுகளும், புட்களும் தங்கியிருப்பது ஆரவாரத்தை ஏற்படுத்தியது. திருநாவுக்கரசர் இதனை இறைவன் இணையடி நீழலின் சிறப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். 'மூசுவண்டறை பொய்கை' என மலர்த்தோட்டத் தோடு பொய்கையையும் இணைத்துக் கூறியுள்ளார்.

இம்மலர்ப்பண்பாடு அடியார்களுடைய வீட்டுச் சூழலிலும் பேணப்பட்டது. வீட்டிலே சிறிய மலர்த்தோட்டங்களை அமைத்து மணமுள்ள மலர் களால் மாலைகளைக்கட்டி கோவிலுக்கு எடுத்துச் செல்லும் நடைமுறை தோன்றியது. கோயில் மண்டபங்களிலே மலர்க்கோலம் போடுதல், மலர்ச் சரங்களைத் தொங்க விடுதல் போன்ற அழகு படுத்தும் செயற்பாடுகளும் தோன்றின.

கோயில் வழிபாட்டில் இணைந்த திருநீறு பூசும் செயற்பாடு அடியாரை இனங்காட்டும் குறியீடாக இன்றுவரை நிலவுகிறது. சமண சமயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தழுவிய பாண்டியமன்னன் வெப்புநோயைத் தீர்க்கத் திருஞானசம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகம் இதனை நன்குணர்த்துகிறது. நீறுதான் எல்லாவற்றையும் தரவல்லது என அவர் விளக்கி யுள்ளார். எமக்கு மந்திரமாகவும், தந்திரமாகவும், சுந்தரமாகவும் விளங்குவது. சத்தியமாகவும் வேதமாகவும் சித்தியாகவும் இருப்பது. எமது துயரைத் தீர்ப்பது, புன்மை தவிர்ப்பது, பரவ இனியது, காண இனியது, கவினைத் தருவது., பூச இனியது, வருத்தந்தணிப்பது, மதியைத் தருவது, பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது, தேசம் புகழ்வது எனப் பலவாறு அவர் விளக்கி யுள்ளார்.

சைவ வாழ்வியல் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியிருந்தது. வீடு, குடும்பம், ஊர், நாடு என்ற நிலையில் வாழ்வியல் அமைதியாகச் செல்வதற் கும் கோயில் வழிபாடு உதவியது. கணவனும் மனைவியும் இணைந்தே கோவில் வழிபாடு செய்தனர். குழந்தை பிறந்த போது வீட்டிற்கு வெளியே குழந்தையைக் கூட்டிச் செல்லும் போது முதலில் கோயிலுக்கே கூட்டிச் சென்றனர். குழந்தையின் ஏட்டுக் கல்வியும் கோயிலில் தான் தொடங்கும் மரபு பேணப்பட்டது. ஊர் மக்கள் அனைவரும் விழாக்காலங்களில் கோயிலில் ஒன்று கூடி வழிபட்டனர். தேர்த் திருவிழாவிலே இதனை நேரடியாகக் காண முடியும். எல்லோரும் கூடி வடம் பிடித்துத் தேரை இழுக்கும் போது மக்கள் பக்தியால் ஒன்றிணை வதைக் காணலாம். ஊர் மக்கள் வணங்கக் கோயிலில் உறையும் தெய்வம் தேரேறி உலா வரும் போது மக்கள் மனதில் ஏற்படும் உணர்வு அவர்கள் மனக்குறைகளைத் தீர்த்தது. திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று வழிபடுவதால் மக்களின் செயற்பாட்டில் தூய்மையும் அழகும் சேர்ந்தது. கோயில் ஏனைய மக்கள் கூடும் பொது இடங்களை விட வேறுபட்டது என்பதை உணர்த்துவதற்குச் சில நடைமுறை களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தூய்மையாக நீராடிச் செல்லல், காலணிகளைக் கழற்றி விட்டுச் செல்லல், மரபான ஆடையணிந்து செல்லல், தூய்மையான ஆடை அணிந்து செல்லல் என்பன இன்று வரை மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இது கோயில் வழிபாடு மனித வாழ்வியலை நெறிப்படுத்தியதை நன்கு விளக்குகிறது.

இத்தகைய வழிபாடு அடியார்களுடைய உள்ளத்திலே உறுதியை ஏற்படுத்தியது. திருநாவுக் கரசர் இதனை ஒரு பாடலில் விளக்கியுள்ளார்.

**"அல்லலென் செயுமரு வினையென் செயுந்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயுந்**
**தில்லை மா நகர்ச் சிற்றம் பலவனார்க்**
**கெல்லை யில்ல தோரடிமை பூண்டேனுக்கே"**

சிற்றம்பலத்து இறைவனை வழிபடுவதால் தனக்கு ஏற்பட்ட நன்மைகளையும் உள்ளத்து உரத்தையும் திருநாவுக்கரசர் சுட்டிக்காட்டுகிறார். அடியவனாக வாழ்கின்ற வாழ்க்கையை அவர் சிறப்பித்துக் கூறுகின்றார். தனது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை வெல்லுவதற்கு வழிபாடே துணை நின்றதை நன்குணர்ந்தமையால் அதனைப் பிறருக்கும் கூற விழைகிறார். சைவ அடியவர்களின் வாழ்வியல் மக்கள் உணரவேண்டியதொன்று என எண்ணியே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். திருஞான்சம்பந்தரும் திருநாவுக்கரசரும் கோயில் வழிபாடு செய்யும் கோலத்தைச் சேக்கிழார் வருமாறு பாடியுள்ளார்.

**"அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம் அன்புசெறி**
**கடலுமாம் எனவும் ஓங்கும்**
**பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்**
**கண்ணிரண்டெனவும் புவனம் உய்ய**
**இருட்கடுவுண்டவர் அருளும் உலகம் எல்லாம் ஈன்றான்தன்**
**திருவருளும் எனவுங் கூடித்**
**தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று செஞ்சடைவானவர்**
**கோயில் சேர்ந்தார் அன்றே"**

இவ்விரு அடியார்களும் இரண்டு கடல்கள் என சேக்கிழார் போற்றுகிறார். ஒன்று அருட்பெரும் தனிக் கடல் மற்றது அன்புசெறி கடல். அன்பும் அறனும் ஒருங்கிணைந்திருப்பின் அது வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும் என வள்ளுவர் விளக்கி யுள்ளார். சைவவாழ்வியலில் அன்பும் அருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இருவர் செய்த தொண்டைச் சேக்கிழார் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். சைவநெறி பெற்ற புண்ணியக்கண்களாக இவ்வடியார்கள் விளங்கு கின்றனர். இருவரிடமும் இறைவன் அருளும் இறைவியின் அருளும் ஒன்றாகக் கூடியிருந்தமையால் அவர் பணிகள் சிறப்பாக நடந்தன. இளமையும் முதுமையுமாக ஞானக்கன்றும் அரசுமாக இருவரும் கோயில்கள் தோறும் சென்று செய்த பணிதான் மேன்மை கொள் சைவநீதியை உலகறிய வைத்தது.

**மேன்மைகொள் சைவநீதி**

சைவம் ஒரு வாழ்வியலாக நிறைவான வாழ்வாகக் கருதப்பட்டமைக்கு அது ஒரு நீதி முறைமையைக் கொண்டிருப்பது ஒரு காரணமாகும். இறைவன் நீதி வடிவானவன் என்ற எண்ணத்தை நாயன்மார்கள் கொண்டிருந்தனர். அதனைத் தமது பாடல்களிலும் எடுத்துக் காட்டியுள்ளனர். அதற்குப் பின்வரும் எடுத்துக் காட்டுக்களை நோக்கலாம்.

**"நீதியானினை நினைவார் நெடுவானுல காள்வாரே"** - *சம்பந்தர்*

**"நீதி நின்னையல்லா நெறியாது நினைந்தறியேன்"** - *சம்பந்தர்*

**"நீதி பேணுவீர்"** - *சம்பந்தர்*

**"நீதியர் நெடுந்தகையர்"** - *சம்பந்தர்*

**"நீதியறியாதரமண் கையரொடு"** - *சம்பந்தர்*

**"நீதியார் நினைந்தாய நான்மறை"** - *சம்பந்தர்*

**"நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயேனல்லேன்"** - *திருநாவுக்கரசர்*

**"நீதியால் வாழ்கிலை"** - *திருஞானசம்பந்தர்*

**"நீதியால் தொழுவார்"** - *திருநாவுக்கரசர்*

**"நீதியானினை செய் நெஞ்சே"** - *திருநாவுக்கரசர்*

**"நீதியானினைப்புளானை"** - *திருநாவுக்கரசர்*

**"நீதியிலொன்றும் வழுவேன்"** - *சுந்தரமூர்த்தி*

ஒழுங்கான ஒரு ஒழுகலாற்றைச் சைவம் பேணி வந்துள்ளது. சிவனையே நீதியின் வடிவாகக் கொண்டு அடியவர் வழிபட்டனர். ஒழுங்கான வாழ்வியலை மறந்து போன திருநாவுக்கரசர் தான் நீதியான வாழ்வை நினைக்கவில்லையே என வருந்துகிறார். சைவம் மனித வாழ்வில் செயற்பட வேண்டிய முறைகளைக் கொண்டு விளங்கியதைப் பிற மதத்திற்கு சென்று திரும்பி வந்த பின்னரே நாவுக்கரசர் உணருகின்றார். சிறுவயதில் சைவ வாழ்வியலில் கடைப்பிடித்த நீதிமுறைமைகளைச் சமணசமயந் தழுவியபோது கைவிட்டதை எண்ணிக் கலங்குகிறார். சைவநீதி இல்லறத்தையே சிறந்த தெனக் கூறுகிறது. துறவறம் தன்னை ஈடேற்று வதற்காக மேற்கொள்ளப்படுவது. ஆனால் இல்லறமோ தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் ஈடேற்றும் இலக்குடையது. இல்லறம் செய்பவன் துறந்தவர் களுக்கும் வறியவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் துணையாக இருக்கின்றான். சைவம் இல்லறத்தை ஓம்புவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கற்றுக் கொடுக்கின்றது.

சமண பௌத்த மதங்கள் துறவையே சிறப்பித்துப் பேசுகின்றன. இல் வாழ்க்கையைத் துன்பக்கேணி எனத் தூற்றின. திருநாவுக்கரசர் தன் வாழ்வில் ஏற்பட்ட துன்பநிலையால் சைவ நீதியைக் கைவிட்டு சமணசமயத்தைத் தழுவி வாழ்ந்தார். பின்னர் அந்த நீதியான வாழ்வியலுக்குத் திரும்பிய போது அதன் பயனை உணர்ந்து பணி செய்தார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற் குரிய வழியைச் சைவநீதியே காட்டியுள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் இதனை நன்குணர்த்தியுள்ளது. "பெண் துணையாக ஓர் பெருந்தகையிருந்ததென இறைவன் தேவியோடு இருக்கும் கோலத்தை அவர் பாடும் போது இல்லறத்தின் உயர்ந்த நிலையைச் சுட்டிக் காட்டு கிறார். சுந்தரர் 'பாதியோர் பெண்ணை வைத்தாய்" என்று குறிப்பிடுவதன் மூலம் இறைவனின் அர்த்தநாரீஸ்வர வடிவைக் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசரும் "பாதிப்பெண் ஒரு பாகத்தன்" எனக் குறிப்பட்டுள்ளார். இதனால் ஏனைய சமயங் களை விடச் சைவம் பெண்ணுக்கு மதிப்பளிக்கும் நீதிமுறையைக் கொண்டுள்ளது. பெண்மையை வழிபடும் சிறப்புடையது. இறைவனின் தாய்மைக் குணங்களைப் பெற்றுள்ள தாயைப் போற்றித் தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை எனக் கொண்டாடுகிறது. இத்தகையதொரு அறநெறி ஏனைய சமயங்களில் போற்றப்படவில்லை. பெண் என்றாலே துன்பம் தரும் ஒரு போதை வடிவம் என ஒதுக்கும் நிலையை ஏனைய மதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுத்த, சைவம் பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் நீதி முறையைக் கொண்டு விளங்குகின்றது.

சைவநீதி காட்டும் பிறிதொரு பண்பு மக்களிடையே ஏற்றத்தாழ்வு பாராட்டாமையாகும். குலத்தினால் குறைவுபட்டவரென எவரையும் சைவம் ஒதுக்கவில்லை. இப்பண்பை மெய்யடியார் களின் வரலாறு மூலம் சேக்கிழார் விளக்கியுள்ளார். 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்ற வள்ளு வரது வரையறையையே சைவநீதியும் பேணியது. ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு பாராட்டாத ஓர் உயர்ந்த வாழ்வியலைப் பேணச் சைவநீதி அரணாக நின்றது. அன்பு, அருள் என்னும் இரு பண்பு நலன்களையும் கொண்ட மக்கட் சமூகத்தை உருவாக்கவே சைவநீதி போற்றப் பட்டது. சமயப்பொதுமை நிலையையும் சைவநீதி எடுத்துரைத்தது. சைவ வைணவ மதங்களிடையே இருந்த முரண்பாடுகளை அகற்றி மக்களை மனித நேயம் மிக்கவராக மாற்றப் பணியாற்றியது. அன்பும் அருளும் கொண்ட திண்ணனார் வேட்டுவ குலத்தில் பிறந்தாலும் தமது பொருவில் அன்பினால் 'கண்ணப்பநாயனார்' எனப் பெருமை பெற்றார். நாள்தோறும் கிரியை முறைப்படி வழிபாடு செய்த சிவகோசரியாரின் பக்தி அன்போடு இயைபுபடாத வெறும் கோலநிலையான பக்தியே. இதனைச் சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணத்திலே இவருடைய உணர்வுநிலைகளையும் அருகருகே வைத்துக்காட்டுகின்றார். காட்டு வாழ்வியலை மேற்கொண்டிருந்த திண்ணனார் சைவவாழ்வியலை மேற்கொள்வதற்கு இறைவன் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்தமையே காரணம். சைவவாழ் வியல் என்பது கிரியைகளை மேற்கொண்டு ஒழுகுதலன்று. அன்பு நெறியிலே மாறாமல் நிற்பதுவே.

இத்தகைய சைவநீதி உலகெல்லாம் பரவவேண்டும் இதனைக் கந்தபுராணத்தின் காப்புச் செய்யுள் நன்கு எடுத்துக் கூறியுள்ளது.

**"வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலா(து) உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

பல்வேறு நிலைகளிலும் உயர்ந்து நிற்கும் சைவநீதியை உலகமெல்லாம் பரப்பும் பணியை நமது இளையதலைமுறை பொறுப்பேற்க வேண்டும். முதியவர்கள் கிரியா பூர்வமான செயற்பாடே சைவம் என எண்ணி வாழ்கின்றனர். அதனை இளைய தலைமுறை பின்தொடராது. எனவே புதிய வழியில் அவர்களை ஆற்றுப்படுத்திச் சைவத்தை நன்குணரச் செய்ய வேண்டும். சைவநீதியை அவர்கள் வாழ்வில் இணைத்துக் கொள்ளப் பெரியோர் உதவ வேண்டும். கோயில்களிலே சைவவாழ்வியல் பற்றிய தேடலை முன்னெடுக்க வேண்டும். வெறுமனே பதாகையில் சைவநீதியை நிறுத்தாமல் பக்திபூர்வமாக வழிபாட்டில் ஈடுபடுவதே சைவவாழ்வியலாகும்.

## தங்கக் கலசம் பிரதிஷ்டை

நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலய கோபுரங்களில் தங்கக் கலசம் 'சர்வசித்து' புதுவருடத்தன்று (14.04.2007) பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. சண்முகப்பெருமான் எழுந்தருளினார்.

(ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செந்தூர் முருகன் தோத்திரம்

பேராசிரியர் வி. சிவசாமி

இறைவனை வழிபட்டு உய்வதற்கான வழிகளிலே பக்திமார்க்கம் நன்கு குறிப்பிடற்பாலது. இறைவனிடத்து அன்பு கொண்டால் போதுமானது. இதனை எவரும் எளிதில் பின்பற்றலாம். இறைவன் அன்பு மயமானவன். 'அன்பே சிவம்' எனத் திருமூலர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, இறைவனை வழிபடுவதற்கு அன்பு வழி - பக்தி வழியே, மிக உகந்ததாகும். 'பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்' என மாணிக்கவாசகரும், 'நற்றவம் புரியும் நம்மிட திருநாளைப் போவார் பக்தியிற் கரை கண்டவன்' எனக் கோபால கிருஷ்ணபாரதியாரும் கூறியிருப்பன கவனித்தற் பாலன. பக்தி எனும் வடமொழிச் சொல் 'பஜ்' எனும் வினையடியிலிருந்து தோன்றியதாகும். இவ்வினையடி பகிர்தல், பங்கு கொள்ளுதல், வணங்குதல், புகலிடமாகக் கொள்ளுதல், அநுபவித்தல், காத்திருத்தல், சேவித்தல், காதலித்தல், வைத்திருத்தல், ஈடுபடல் எனப் பல பொருட்படும். இக் கருத்துக்களின் அடிப்படையிலே நோக்கும் போது இறைவனிடத்து ஒருவர் கொண்டுள்ள இயல்பான அன்பினையும் ஈடுபாட்டினையும் இது குறிக்கும் எனலாம். இதுபோலவே இறைவனும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அன்பு மயமானவன் மட்டுமன்றி ஆன்மாக்களிடத்து இயல்பான அன்புடையவன். எனவே இவ் அன்பு இருதலைச் சார்பானதாகும். இறைவனை ஆன்மா நாட இறைவனும் ஆன்மாவை நாடுகிறான். எனவே இருசாராரும் ஒருவர் அன்பிலே மற்றவர் பங்காளியாகின்றனர் எனலாம்.

பல துன்பங்கள் நிறைந்த இக்கலியுகத்திலே பக்தி நெறி சிறந்ததெனக் கூறப்படுகின்றது. பக்திச் சுவை ததும்பும் பாடல்கள் / ஸ்தோத்திரங்கள் இவ்வகையிலே குறிப்பிடற்பாலன. கலியுக வரதனாகிய முருகப்பெருமானைப் பற்றிய சிறந்த பக்திப் பாடல்கள் பல தமிழில் உள்ளன. இது போலவே வடமொழியிலும் பல ஸ்தோத்திரங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று ஆதிசங்கரர் இயற்றியதாகக் கூறப்படும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரமாகும்

தீராத நோயொன்றினாலே பீடிக்கப்பட்ட சங்கரச்சாரியார் ஆறுபடை வீடுகளிலே முதன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் திருச்செந்தூருக்கு வந்து முருகப் பெருமானை வணங்கி இத் தோத்திரத்தைப் பாடி நோய் தீர்ந்ததாகக் கூறப்படுகின்றது. மரபுவழிக் கதையொன்றின்படி ஆதிசங்கரர் அங்கு சென்ற போது ஆதிசேடன் அப்பெருமானை மிகுந்த பக்தி பூர்வமாக வழிபட்டுக் கொண்டிருந்தான். அக்காட்சி சங்கரரை நன்கு கவர்ந்தது. எனவே தான், குறிப்பிட்ட புஜங்க (பாம்பு) அசைதல் போன்ற யாப்பில் இதனைப் பாடியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. திருச்செந்தூர் திருச்சீரலைவாய், ஜெயந்திரபுரம் (வெற்றிநகர்) எனவும் அழைக்கப்படும்.

இத்தோத்திரம் 33 செய்யுட்களைக் கொண்ட அழகிய வாடாத சொல்மாலை போன்றிலங்குகின்றது. முருகப் பெருமானின் தனிச் சிறப்புக்களைக் குறிப்பிடும் போது, ஆசிரியர் அலைமோதும் கடற்கரையிலமைந்துள்ள திருச்செந்தூர் தலத்தின் தனிச்சிறப்புக்களையும் கூறத் தவறிலர். இத் தோத்திரம் முதலாவது செய்யுள் இடையூறுகளை நீக்கும் வண்ணம் விநாயக துதியாகவும் இறுதியாகவுள்ள 33வது செய்யுள் இதனைப் பாராயணம் செய்வோர் இகபர இன்பங்களைப் பெறுவர் எனும் வாழ்த்துடனும் அமைந்துள்ளது.

முருகப் பெருமானைப் போலவே அவரின் அண்ணாவான விநாயகரும் என்றும் குழந்தை வடிவமுடையவர்; (ஸதாபாலரூபாபி); இடையூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் களைபவர்; யானைமுகத்தை உடையவர்; சிவபெருமானால் மதிக்கப்படுபவர்; இந்திரன் முதலிய தேவர்களாலே தேடத்தக்கவர்; கணேச எனும் பெயருடையவர்.

ஒப்பற்ற இளம் மங்களமூர்த்தியாக மிளிரும் அப்பெருமான் தனக்குத் திருவருள் செல்வத்தை வழங்குமாறு ஆசிரியர் அவரை இறைஞ்சுகிறார். இங்கு இத்தோத்திரம் இனிது முற்றுப் பெற வணங்குகின்றார்.

இதைத் தொடர்ந்து வரும் செய்யுட்கள் ஒரு குறிப்பிட்ட கருத்தோட்டத்தில் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்படும்.

இரண்டாவது செய்யுளிலே ஆசிரியர் 'செய்யுளை அறியேன், வசனத்தையும் அறியேன், சொல்லை அறியேன், பொருளையும் அறியேன், ஆனால் எனது உள்ளத்தில் ஆறுமுகங்களையுடைய ஒரு சித்தானது (ஞானஸ்வரூபம்) பிரகாசிக்கின்றது. வாயிலிருந்து சொற்களும் (செய்யுட்களும்) வெளிப் படுகின்றன', என்னே வியப்பு! என்ற கருத்துப்பட,

**ந ஜாநாமிபத்யம் ந ஜாநாமிகத்யம்**
**ந ஜாநாமிசப்தம் ந ஜாதாமி சார்த்தம்!**
***சி தேகா ஷடாஸ்யா ஹிருதித்யோததேமே***
**முகாந்நி: ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம்!!**

எனக் கூறியுள்ளமை குறிப்பிடற்பாலது. தமது ஆக்கம் ஆறுமுகப் பெருமானின் திருவருட்பயன் என்பது ஆசிரியரின் உறுதியான நம்பிக்கை. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' அவர் போற்றுகின்றார். பொதுவாகக் கவிதை கவிஞனின் உள்ளத்திலே திடீரென முகிழ்ந்து மலரும். இங்கு இறைவனின் திருவருளால் உள்ளொளியால் கவிதை ஊற்றெடுத்துப்பாய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே ஆச்சரியமானதே! இச் செய்யுள் மிக எளிமையான நடையில் யதார்த்த மாக அமைந்துள்ளது. தம்முடைய ஆக்கத்திற்கு உந்துசக்தியாக விளங்கும் ஆறுமுகப் பெருமானுடைய திருவருட் பேரொளி பற்றிக் கூறிய பின் ஆசிரியர் அவருடைய திருவுருவத்தின் தனிச் சிறப்பு பற்றிச் சிறிது தொட்டுக் காட்டுகிறார்.

அதாவது முருகப் பெருமான் மயிலை வாகன மாகக் கொண்டவர். 'தத்துவமஸி' முதலிய மகா வாக்கியங்களின் உட்பொருளாக விளங்குபவர்; மிக அழகிய திருவுருவத்தை உடையவர்; பெரியோர் களின் உள்ளத்தைக் கோயிலாகக் கண்டவர்; பெருந் தெய்வமாக விளங்குபவரும், தந்தையு மாகிய சிவபிரானுக்குப் பிரணவத்தை உபதேசித்த வரும், வேதங்களின் உட்பொருளாக விளங்கு பவரும் சிவபிரானின் திருக்குமாரரும், உலகத்தைப் பாதுகாப்பவருமாவார். இப் பெயர்ப்பட்ட பரப்பிரம மான பெருமானைத் தாம் வணங்குவதாக ஆசிரியர் மூன்றாவது செய்யுளிலே குறிப்பிடுகிறார்.

4ம், 5ம் செய்யுட்களிலே முருகப் பெருமான் ஆழ்கடற்கரையிலுள்ள திருச்செந்தூரிலே பிரசன்ன மாயிருப்பதன் சிறப்புக் கூறப்படுகின்றது. 'மனிதர்கள் எப்பொழுது தன்னுடைய இச் சந்நிதானத்தை அடைகிறார்களோ அப்போது அவர்கள் பிறவிக் கடலின் மறுகரையை (முத்தியை) அடைகிறார்கள் என்பதைக் குறிப்பாக உணர்த்தும் பாங்கிலே பரிசுத்தமான பார்வதியின் மகனான கந்தன் இங்கு சமுத்திரக் கரையில் எழுந்தருளியுள்ளார் எனவும் "எவ்வாறு சமுத்திரத்திலே பேரலைகள் மோதி அழிகின்றனவோ, அவ்வாறே அன்பர்களின் ஆபத்துக்கள் அப்பெருமானின் சந்நிதானத்தை அடைந்தவுடன் அழிகின்றன என்பதையும் மக்களுக்கு அலைகளின் கூட்டங்கள் மூலம் அப்பெருமான் காட்டுகிறார்" எனவும் கூறி ஆசிரியர் அவரை மனதார வழிபடுகிறார்.

அடுத்த இரு செய்யுட்களிலும் (6, 7) திருச் செந்தூரிலுள்ள கந்தமாதனமலையின் சிறப்புக் கூறப்படுகின்றது. திருச்செந்தூரின் சூழலிலே கந்தமாதனம் எனும் பெயர் பெற்ற பெரிய மணற்பாறைக் குன்று ஒன்று இருந்ததாகவும் அஃது இப்பொழுது இல்லையெனவும் பி.ஸ்ரீ எனும் அறிஞர் **திருச்செந்தூர்** எனும் நூலிலே குறிப்பிட்டுள்ளார். இக் கந்தமாதனத்தின் சிறப்புப் பற்றிக் கந்த புராணமும், வேறு சில நூல்களும் எடுத்துக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எந்த மனிதர்கள் முருப்பெருமானுடைய கந்தமாதனம் மலைமேல் எப்போது ஏறுகிறார்களோ அப்போதே அவர்கள் கைலாய மலையை ஏறி விடுகிறார்கள் என்பதை உணர்த்தும் வகையிலே தான் ஆறுமுகப் பெருமான் அங்கு எழுந்தருளி யுள்ளார்'. எனவும், இப்பெயர்ப்பட்ட பெருமானைத் தாம் எப்பொழுதும் வணங்குவதாக ஆசிரியர் ஆறாம் செய்யுளிலே குறிப்பிடுகிறார்.

பெரிய பாவங்களை நீக்குகின்ற பெரிய கடற் கரையிலே சிறந்த முனிவர்களுக்கு அநுகூலமான அழகிய கந்தமாதன மலையிலுள்ள குகையிலே தெய்வீக ஒளியுடன் விளங்குபவரும் அன்பர்களின் துன்பத்தை முற்றாக நீக்குபவருமாகிய குகப் பெருமானை யாவரும் வழிபட்டு உய்யுமாறு அவர் வேண்டுகிறார் (7).

"யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம்" எனும் மிக்ப் பரந்த மனப்பான்மை இங்கு காணப் படுகின்றது. அதேவேளை சமுத்திரக் கரையின் புனிதத்தன்மையும் குறிப்பிடப்படுகின்றது.

முருகனாகிய இறைவன் அடியவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுபவன். அப் பெருமான் பொன் மயமான ஒளிமயமான திருக்கோவிலில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தின் மீது ஒரே நேரத்தில்ஆயிரக்கணக்கான சூரியன்களின் பேரொளி போன்று, விளங்குகின்றார். அவர் ஏனைய தெய்வங்களுக்கும் மேலான தெய்வம். கார்த்திகைப் பெண்களின் மகன். இவ்வாறு ஆசிரியர் அப் பெருமானை உருவகித்து வணங்குகின்றார். (8)

இவ்வாறு இறைவனை வீற்றிருக்கச் செய்து அவரின் சில முக்கியமான திருவுறுப்புக்களுக்கு திருவடிகள் தொடக்கம் சிரசு வரையுள்ளவற்றின் சிறப்புக்களைக் குறிப்பிட்டு வணக்கம் செலுத்து கிறார் (9-16 வரை) வழக்கமாக இறைவனின் திருவுருவச்சிறப்பு பாதாதிகேசமாக (பாதம் முதல் தலை வரை) வருணிக்கப்படுவதையொட்டியே 9வது செய்யுளிலே திருவடிகளும், 10வதிலே திரு இடையும் 11வதிலே திருமார்பும், 12வதிலே திருக்கரங்களும் 13, 14வது செய்யுட்களிலே திருமுகங்களும் 15வதிலே திருக்கண்களும், 16 வதிலே திருச்சிரசு (தலை)களும் மிக நேர்த்தியாக அவ்வவற்றிக்குரிய திருவருட் சிறப்புக்கள், மகிமைகளுடன் நன்கு வர்ணிக்கப்படு கின்றன.

இவைகளைத் தாம் தியானிப்பதாக, வணங்கு வதாகக் கூறி மற்றவர்களும் இவ்வாறு செய்து உய்யுமாறு குறிப்பாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வருணித்தபின் அடுத்த செய்யுளிலே (17) (பலவிதமான அணிகலன்கள், மாலைகள் அணிந்து, இடுப்பிலே பீதாம்பரம் தரித்துப் பிரகாசமுள்ள கன்னங்களையுடையவரும், அழகிய வேலினைத் திருக்கரத்திலே தாங்கியுவரும், சிவபிரான் திருக்குமாரனுமாகிய முருகப் பெருமான் தனக்குமுன்னே பிரதியக்ஷமாக கண்களாலே பார்க்கக் கூடியவராக எழுந்தருளி அருள்பாலிக்கு மாறு ஆசிரியர் அவரிடம் இரந்து வேண்டுகிறார்.

அடுத்த செய்யுளிலே (18) முருகனைக் குழந்தைத் தெய்வமாகப் பாவனை செய்து தாயாகிய பார்வதியின் மடியிலிருந்தவர் தந்தை யாகிய பரமசிவன் 'குழந்தாய் இங்கு வா' என அன்புடன் தட்டி அழைக்க அவர் தந்தையிடம் சென்று அவரினால் அணைக்கப்படுகின்றார்' எனக் குறிப்பிட்டு அத்தகைய குழந்தைத் தெய்வத்தைத் தாம் வழிபடுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு குழந்தையாகப் பாவனை செய்து வணங்கியப்பெருமானை 'குழந்தைக் கடவுளே! பரமசிவன் மகனே! கந்தனே! வள்ளி மணாளனே! அன்பர்களின் துன்பத்தைப் போக்குபவனே! தாரா காசுரனை அழித்தவனே!' எனப் பலவாறு துதித்துத் தன்னை என்றும் காப்பாற்றுமாறு அவர் வேண்டு கிறார். (19)

அடுத்த மூன்று செய்யுட்களிலும் (20, 21, 22) ஆசிரியர் தாம் முதுமையடைந்த போதும், யமதூதர் கோபத்துடன் தன்னிடம் வரும்போதும், மரணம் ஏற்படும் போதும் கருணைக்கடலாகிய அப்பெருமான் எழுந்தருளி வந்து 'பயப்படாதே' எனத் தவறாது அபயமளிக்க வேண்டுமென மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்து அப் பெருமானை வேண்டுகின்றார். அடுத்த இரண்டு செய்யுட்களிலும் அவர் தன்னுடைய மனக்கிலேசத்தை (மனக் கவலையை) நீக்குமாறு அப்பெருமானை வழிபடுகிறார். சூரன், சிங்கன், தாரகாசுரன் ஆகிய பெரிய அசுரர்களைக் கொன்ற பெருமான் ஏன் சிறியவனாகிய தன்னுடைய மனக்கி லேசத்தைக் கொல்லாமல் (நீக்காமல்) இருக்கிறார் எனவும் தான் 'என்ன செய்வேன் எங்கு போவேன்' எனவும் 23ம் செய்யுளிலே மிக வருந்திக் கூறுகிறார்.

அடுத்த செய்யுளிலே (24) 'உமாதேவியின் மகனே' தீனர்களின் (ஏழைகளின்) சுற்றத்தவனே! துக்கமாகிய பாரத்தினால் தளர்ந்திருக்கும் 'எனது மனக்கவலை' யை விரைவில் அழித்துத் திருவருள் பாலிக்குமாறு அப்பெருமானை அவர் வேண்டுகிறார். மனக்கிலேசம் இறைவனிடத்து முருகனிடத்துள்ள பக்தியைக் கெடுப்பதாகவும் என்றும் துன்பம் செய்வதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அடுத்த செய்யுளிலே பல்வேறு நோய்கள், பேய், பிசாசுகளின் தொல்லைகளை உடனடியாக நீக்கவல்ல பன்னீர்மர இலையில் வைக்கப்பட்டுள்ள திருச்செந்தூர் முருகனின் விபூதிப் பிரசாதத்தின் மகிமை கூறப்படுகின்றது (25)

அடுத்த செய்யுளிலே (26) தன்னுடைய கண், காது, வாய், கைகள், உடம்பு அனைத்தும் முருகனில் ஒன்றித்து லயித்திருக்கவேண்டுமென ஆசிரியர் விரும்புகிறார்; எல்லாவற்றையும் முருகனுக்கே அர்ப்பணம் செய்கிறார்.

அப்பெருமான் அனைவருக்கும் சமூகத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களும் உட்பட யாவருக்கும் வேறுபாடின்றித் திருவருள் பாலிப்பவன் எனவும் இத்தகைய தனிச்சிறப்புடைய பிறிதொரு தெய்வம் இலர் என 27வது செய்யுளிலே கூறப்படுகின்றது. இறைவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளுக்கப்பாற்பட்டவராக அனைவருக்கும் திருவருள் பாலிப்பவர். இராமலிங்க சுவாமிகள் கூறுவது போல இறைவன் 'மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியாக விளங்குகின்றார்'.

28வது செய்யுளிலே தமது வீட்டிலுள்ள சுற்றத்தவர்கள், ஏனையோர், பிற உயிர்கள் பால் வேறுபாடின்றி முருகப் பெருமானை வணங்குவோராகவும், துதிப்போராகவும் விளங்குவார்களாக என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி உயிர்கள் அனைத்தும் அப்பெருமானின் அருள் பெற்று உய்யும் வண்ணம் அவரை வேண்டுகின்றார்.

அடுத்த செய்யுளில் (29) யாதொரு விலங்குகள், பறவைகள், கொடிய ஈசல்கள், பாம்புகள் மற்றும் உடலை வருத்தும் நோய்கள் அனைத்தும் தன்னை வருத்து முன்பே தூரத்திலே அப்பெருமானின் வேலாயுதத்தின் கூர்முனையால் அழியும் வண்ணம் திருவருள் பாலிக்குமாறு அவர் பெருமானை வேண்டுகிறார். வேல் உண்டு பயம் இல்லைத் தானே!

அடுத்த செய்யுள் ஒருவகையில் உணர்ச்சி பூர்வமானது. தாய் தந்தையர் தம் பிள்ளையின் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுவது இயல்பே. தேவசேனாபதியும், மகேசனுமாகிய முருகன் உலகின் தந்தையே எனவும் தான் ஒரு சிறு குழந்தையெனவும், எனவே தனது குற்றங்களை மன்னிக்குமாறு ஆசிரியர்

**'ஜனித்ரீபிதாஸ்வபுத்ராபராதம் ஸஹே நகிம்?**
**தேவஸேனாபதி நாத!**
**அஹம்சாதிபாலோபவான் லோக தாதஹ**
**க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மகேச** எனக் கூறியுள்ளார். அவ்வாறாகில் உலகத்தின் தந்தையாகவும் பெரிய கருணைக்கடலாகவும் விளங்கும் இறைவனின் பெருந்தன்மையும் இயல்பானதே! அதை வருணிக்க முடியுமா?

இவ்வாறு கூறித் தொடர்ந்து ஆசிரியர் திருச்செந்தூரிலிருந்து திருவருள் பாலிக்கும் முருகனின் வாகனங்களாகிய மயில், ஆட்டுக்கடா ஆகியன வற்றிற்கும், அவரின் வேலாயுதத்திற்கும், சேவல் கொடிக்கும், இத்தலத்திற்கு அருகிலுள்ள சமுத்திரத்திற்கும், சமுத்திரக்கரைக்கும், இத் தலத்திலே சாந்நித்தியமாக விளங்கும் முருகப் பெருமானுக்கும் மீண்டும் மீண்டும் வணக்கம் செலுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வணக்கம் செலுத்தி அப் பெருமானை மீண்டும் துதித்து முத்தியின்பத்தை வழங்குமாறும், அப்பெருமான் என்றும் வெற்றியுடன் விளங்க வேண்டுமென வாழ்த்துகிறார்.

அவரைப் பின்வருமாறு போற்றுகிறார் 'இன்பத்திற்கு பேரின்பத்திற்கு இருப்பிடமானவரே தேவரீருக்கு என்றும் வெற்றி' அளவற்ற சாந்தி அல்லது ஆலயங்களை உடையவரே தேவரீருக்கு என்றும் வெற்றி! அழியாத புகழையுடையவரே வெற்றி! அளவற்ற திருவடிவத்தையுடைவரே வெற்றி! பேரின்பக் கடலே வெற்றி! முத்தியின் பத்தை அளிப்பவரே! சிவபிரானின் திருக்குமாரனே! தேவரீருக்கு எக்காலமும் வெற்றி! இறைவனை இவ்வாறு வாழ்த்துதல் மரபாகும். இறைவன் எல்லா வித ஆற்றலும், மகத்துவமும் வாய்ந்தவனாயினும் அன்பர்கள் அவரை அன்பினால் வாழ்த்துவர்.

முடிவிலே முத்தியின்பம் கூறப்பட்டிருப்பது கவனித்தற்பாலது. வாழ்வின் பிரதான இலக்கு இதுவே.

கடைசியாக (33) இத் தோத்திரத்தைப் பாடுவ தாலேற்படும் பலன் சுருக்கமாகக் கூறப்படுகின்றது. அதாவது பக்தியோடு கந்தனை வழிபட்டு இதனை ஓதுகின்றவன் இவ்வுலக இன்பங்களை நீண்டகாலம் அநுபவித்து முடிவிலே முருகப் பெருமானுடைய மிகமேலான முத்தியின்பத்தை அடைவான் என இவ்வுலக மறுவுலக இன்பங்கள் கூறப்படுகின்றன.

இத்தோத்திரத்திலே முருகப் பெருமான் குமார, சிவபெருமானின் மகன் (ஈசசுத) உமாசுத, ஷண்முக, கார்த்திகேய, ஸ்கந்த (கந்தன்), தேவசேனாபதி, மயூராபதிருட (மயில்வாகனன்), வள்ளி நாயகன் (புலிந்தாத்மஜாகாந்த), சூரன் தாரகன் சிங்கமுகன் ஆகியோரை அழித்தவன் எனப் பல பதங்களால் போற்றப்படுகின்றார்.

அப்பெருமானைப் பற்றிய சில சிறப்பான அமிசங்கள் குறிப்பிடலாம். எடுத்துக் காட்டுகளாக அவர் மக்களின் துன்பத்தை நீக்குபவர் (ஜநார்த்திம் ஹரந்தம் 5)

அன்பர்களின் அபிலாஷைகளை நிறைவேற்று பவரே (ந்ருணாம் காம தோஹே) தயாஸ்யந்தி (கருணையுள்ள) க்ருபாபதே (கருணைக்கடலே) பக்தாதத்திஹாரின் (அன்பர்களின் துன்பத்தை நீக்குபவரே), தயாளோ (கருணை மிகுந்தவரே) தீனபந்து (ஏழைகளின் சுற்றத்தவன்) போன்ற வற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இத்தோத்திரத்திலுள்ள சொல்நயம், பொருள் நயமுள்ள மூன்று செய்யுட்கள் ஏற்கனவே குறிப்பி டப்பட்டுள்ளன. மேலும் சில உதாரணங்களைக் குறிப்பிடலாம். 'இரக்கமுள்ளவரே! கொடிய யமதூதர் கள் கோபத்துடன் கொளுத்து, வெட்டு, குத்து என என்னை அச்சுறுத்தும் போது மயிலின் மீது ஏறி பயப்படாதே என வேலுடன் வந்து எனக்கு அபயம் அளிக்குமுகமாக என்முன் விரைவில் எழுந்தருளுக என்ற கருத்துப்படும்.

**'க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்**
**தஹச்சிந்தி பிந்த்தீதி மாம்தர் ஜயத்ஸு'!**
**ம்ரமாருஹ்ய மாபைரித்துவம்**
**புரஹ சக்தி பாணீர் மமாயாஹி சீக்கிரம்!**

(21) செய்யுளைக் குறிப்பிடலாம். இங்கேயுள்ள ஓசை நயமும், கூறவந்த பொருள் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதும் கவனித்தற்பாலது. இதே செய்யுள் "சூலம் பிடித் தெமபாசம் சுழற்றித் தொடர்ந்தும் வரும் காலன் தனக்கொருநாளும் அஞ்சேன் கடன் மீதெழுந்த ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன் வேலுந்திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த் துணையே" எனும் கந்தரலங்காரம் செய்யுளுடன் ஒப்பிடற்பாலது.

"கண்களில் இறைவனுடைய திருவுருவமும், காதுகளில் அவரின் புகழ்மாலை ஒலியும், வாயில் என்றும் அவரின் தூய மந்திரமும், கைகள் அவருக் கான பூசையிலும், உடம்பு அவரது திருப்பணி யிலும் ஈடுபட்டனவான அவரிலே லயித்திருப் பதாக" என்ற பொருள்படும்

(26) செய்யுளைக் குறிப்பிடலாம். அதாவது **"த்ருசி ஸ்ந்த மூர்த்தி ஹரிச்ருதௌ ஸ்ந்த மூர்த்திர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகம் மே பவித்ரம் ஸதா தச்சரித்திரம்!**
**கரே தஸ்யக்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்**
**குஹேஸந்து லீலா மமாசேஷ பாவாஹ!"**
என்பதாகும். இச்செய்யுள்
**"சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்றன்**
**கண்ணிணை நின் திருப்பாதபோதுக் காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்**
**மணிவார்த்தைக் காக்கி**
எனவரும் திருவாசகத்துடன் ஒப்பிடற்பாலது.

இவ்வாறு பல சிறப்புகள் வாய்ந்து விளங்கும் தோத்திரம் ஸுப்ரஹ்மண்யப் பெருமானுக்கு (மேலான பரம்பொருளாக விளங்குபவருக்கு) வாடாத சொல்மாலையாகத் திகழ்கின்றது. தமிழிலுள்ள கந்தபுராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருச்செந்தூர் புராணம் முதலியவற்றி லுள்ள சில கருத்துகளுமிதில் இடம் பெற்றுள்ளன. இதனைப் பாராயணம் செய்து முருகப் பெருமானின் திருவருளை அனைவரும் பெறுவார்களாக!

# கார்த்திகை நாதா! வா முருகா

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா (முருகா)

வேல் முருகா வேல் முருகா
வேல் முருகா வேல் முருகா
வா முருகா வா முருகா
வா முருகா வா முருகா (முருகா)

சங்கரன் புதல்வா வா முருகா
ஐங்கரன் தம்பியே வா முருகா
பார்வதி பாலகா வா முருகா
பரந்தாமன் மருகா வா முருகா (முருகா)

கலியுகத்து தெய்வமே! வா முருகா
வலிகளை நீக்குதற்காய் வா முருகா
கண்ணீரைத் துடைப்பதற்கே வா முருகா
மண்ணிலே வாழ்வதற்காய் வா முருகா (முருகா)

வள்ளி மணவாளா வா முருகா
புள்ளி மயிலேறியே வா முருகா
வெற்றி வேலவனே வா முருகா
அற்புதங்கள் புரிதற்காய் வா முருகா (முருகா)

கார்த்திகை நாதா வா முருகா
ஊர்கள் சிறப்பதற்கு வா முருகா
வரங்கள் தருவதற்கு வா முருகா
கரங்கள் கூப்புகிறோம் வா முருகா. (முருகா)

***மீசாலையூர் கமலா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அலங்காரம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்

தமிழர் தெய்வமாகிய கலியுக வரதனைத் தமிழ் மக்கள் அனைவரும் முருகா என்று அன்புடன் அழைப்பார்கள். வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் பொதுவாக முருகனைக் குறிப்பிடும் நாமம் ஸ்கந்தன் அல்லது கந்தன் என்பதே ஆகும். முருகன் என்ற பெயரை இசைக்கும் போது ஒருவகை இன்பம் அகத்திலே ஊற்றெடுக்கிறது. வேல் பிடித்த திருக்கரத்துடன் நித்யயௌவன சுந்தரமூர்த்தியாகத் திகழும் கந்தவேட்பெருமான் அடியார்களின் அகக்கண் முன்னும் புறக்கண் முன்னும் நின்று நர்த்தனமிடுகிறான். "யாமிருக்கப் பயம் ஏன்" என்று அடியார்களுக்கு அபயகரம் காட்டிக் காத்தருளுகின்றான். வீரர்களுக்குள் வீரனாகவும், பிரபுக்களுக்கெல்லாம் பிரபு ஆகவும், படைகளுள் சிறந்த வேலாயுதம் படைத்த சேனாதி பதியாகவும், அறியாமை இருளைப் போக்கி அக வொளி வீசும் ஞானபண்டிதனாகவும், குருவாகவும் பல்வேறு வடிவங்களில் காட்சி தந்து அடியார் களுக்கு அருள்புரிகின்றான். அந்தப் பன்னிரு கோலப்பனை நோக்கி "ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத் தேடுவதும் நின் அடியார் செய்கை" என அருளாளர்கள் பலர் பல்வேறு தமிழில் போற்றிப் பாடியுள்ளார்கள். சங்கத் தமிழில் முருகனைப் பாடினார் நக்கீரர்; புராணத்தமிழில் முருகனைப் பாடினார் கச்சியப்பர்; பிள்ளைத் தமிழில் முருகனைப் பாடினார் பகழிக் கூத்தர்; சந்தத் தமிழில் முருகனைப் பாடினார் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் முருகனுடைய திருவருளால் புலமை பெற்றவர், கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர், அவன் திருவருளால் பிரபஞ்சச் சேற்றைக் கழுவித் தூய ஆனந்தவாரியில் ஆழும் பேறுபெற்றவர். தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெற வேண்டும் என்ற கருணை உடையவர். அந்தக் கருணையினால் பாடிய பாடல்களே கந்தர் அலங்காரம் ஆகும். அருணகிரிநாதர் தமக்குப் புலமை முருகன் திருவருளால் வந்தது எனப்பல இடங்களில் கூறுகிறார். அவருடைய உள்ளத்தில் இறைவன் திருவடி பட்டது. அதன் விளைவாக அவர் நாவின் வழியே பாக்கள் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. முருகன் திருவருளால் பெற்ற புலமையை அவனுக்கே அர்ப்பணம் ஆக்கினார்.

ஆறுமுகப் பெருமானுக்கு ஆறு நூல்கள் அருளிய அருணகிரிநாதர் கந்தன் என்ற பெயரோடு இணைத்துக் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தரந்தாதி ஆகிய மூன்று நூல்களை அருளி யுள்ளார். கந்தருக்குரிய அலங்காரம் என்பது கந்தரலங்காரம் என்பதன் பொருள் ஆகும். முருக பக்தர்கள் பற்றிப் பிடிப்பதற்கு துணையாக இருப்பதனால் கந்தன் என்ற பெயரைப் பெற்றுள்ள ஞான பண்டிதனை அலங்காரம் செய்து அருண கிரியார் பாடிய பாடல்களே கந்தர் அலங்காரம் ஆகும். இறைவனை அழகுபடுத்தி அலங்காரம் செய்து பார்க்க வேண்டும் என்ற விருப்பம் அடியார் களிடையே ஏற்படுவதுண்டு. நாம் அனைவரும் நம்மை நாள்தோறும் அலங்காரம் செய்து கொள்ளுகிறோம். நாம் பார்த்து மகிழ்வதற்காக நம்மை நாம் அலங்காரம் செய்வதில்லை. பிறர் கண்களில் நாம் நன்றாகப் படவேண்டும் என்பதற் காகத்தான் நம்மை நாம் அலங்காரம் செய்கின் றோம். மேலான பரம்பொருளைச் சிங்காரித்து அந்த அழகைப் பாராமல் இந்தப் பாழும் உடம்பைச் சிங்காரித்து வாழ்வை வீணாக்கி விட்டேன் என்பதை

**"உன்னைச் சிங்காரித்து உன் அழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித்திருந்தேன் பராபரமே"**

எனத் தாயுமான சுவாமிகள் கழிவிரக்கம் கொண்டு பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதப் பெருமான் தம்மிடம் உள்ள சிறந்த மலர் போன்ற தமிழ்ச்சொற்களால் கந்தப் பெருமானை அலங்காரம் செய்து பாடிய பாடல்களே கந்தர் அலங்காரமாகத் திகழ்கிறது. இறைவனுடைய குணநலன்களைக் கூறுகின்ற பாடல்களுக்கு இடையே குணநலன்கள் அற்ற மக்கள் புரிகின்ற குற்றங்களையும் எடுத்துக் கூறுகின்றார். துன்பப்படுகின்றவர்களைக் காப்பாற்றுபவன் இறைவன் என்பதை இதனூடாக விளக்குகின்றார். கந்தவேளுடைய பாதாதிகேச வழவ நலன்களையும், அவர் ஊர்தி, படை, கொடி, நாம விசேடம் முதலியவைகளின் பெருமைகளையும் கந்தர் அலங்காரம் விளக்கிக் கூறுகிறது. முருகவேளுக்கு மிக உகந்த பாமாலையாகக் கந்தர் அலங்காரம் மிளிர்கிறது. அறம் செய்தலின் அவசியத்தையும், யமபயத்தையும், யாக்கை நிலையாமையையும் செல்வ நிலையாமையையும் சிவயோகத்தையும் விளக்கும் கருவூலமாக அலங்காரம் காணப்படுகிறது. கந்தர் அலங்காரப் பாடல்களை உணர்ந்து கற்றவர்கள் வேந்தர் தமக்கும் அஞ்சார், நரகத்திற்புகார், நோய் வாய்ப்படார், துன்புறும் விலங்குகளாலும் விடப் பிராணிகளாலும் தீங்கடையார் என இந்நூலின் இறுதியில் உள்ள நூற்பயன் செய்யுள் கூறுகிறது.

அன்பிலே தோன்றுவது ஒளி உலகம். பற்றிலே தோன்றுவது இருள் உலகம். அவா நிலையிலிருந்து பற்றுநிலைக்கு உயர வேண்டும். பற்றிலிருந்து அன்பு நிலைக்கு உயர வேண்டும். அன்பு நிலையிலிருந்து அருள் நிலைக்கு உயர வேண்டும். இவ்வாறு அருள் நிலைக்கு உயர்ந்த அருணகிரிநாதர் முருக பக்தர்களையும் அந்நிலைக்கு உயர்த்தி தான் பெற்ற ஸ்கந்த சாயுச்சியத்தைப் பெற வைப்பதற்காக அருளிய நூலே கந்தர் அலங்காரம் ஆகும். இவர் தமது வாழ்க்கையில் என்ன துன்பத்தை அடைந்தாரோ அந்தத் துன்பத்தின் நிழலையும் அவர் என்ன இன்பத்தை அடைந்தாரோ அந்த இன்பத்தின் ஒளியையும் இந் நூலில் காண முடிகிறது.

பரசிவ சோதிப் பிழம்பே முருகப் பெருமான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கை ஆகும். சிவ மைந்தனாகிய முருகப் பெருமான் தவப்பேறு சிறிதும் இல்லாத தனக்கு ஞான மெய்வழியைக் காட்டி ஆட்கொண்டு அருள் செய்த சிறப்பினை அலங்காரத்தின் முதலாவது பாடலில் விளக்குகின்றார். பிரபஞ்சப்பற்று ஒழிந்து பிறவி நோய் நீங்க வழிகாட்டிய கந்தவேட் பெருமானின் கருணையை வியந்து பாடுகின்றார். அடியவர்க்கு எளியவராகிய முருகப் பெருமானின் திருவருட் சிறப்பினை விதந்து போற்றுகின்றார்.

**பேற்றைத் தவஞ் சற்றுமில்லாத வெள்ளைப் பிரபஞ்ச மென்னுஞ்**
**சேற்றைக் கழிய வழிவிட்டவா செஞ்சடாவிமேல்**
**ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்**
**கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே.**

மனம் அடங்கினால் முத்தி. சினம் அடங்கினால் சித்தி கிடைத்துவிடும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர். மனத்திலே தளர்ச்சி ஏற்பட்டு விட்டால் செய்கின்ற காரியங்கள் எதிலுமே சித்தி ஏற்படாது. அம்பிகையை வழிபடுகிறவர்களின் மனத்திலே தளர்ச்சி ஏற்படுவதில்லையென்பதை "தளர்வறியா மனம் தரும்" என அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியிலே குறிப்பிடுகின்றார். மனமானது எந்த நேரமும் ஓய்வின்றிச் சலித்துக் கொண்டேயிருக்கிறது. அதனை இறைவனுடைய திருவடித் தியானத்தில் ஒருமுகப்படுத்த வேண்டும். கோயில் வழிபாடு, பூசை, யோகம் முதலிய எல்லா வகையான கிரியைகளும் மனதை ஒருவழிப்படுத்தும் பொருட்டே செய்யப்படுகின்றன. மனம் அடங்காவிடில் ஏனைய செயற்பாடுகளினால் பயன் எதுவும் இல்லாமல் போய்விடும்.

**சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்**
**மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே**

என்றே தாயுமான சுவாமிகளும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். சலனமற்ற நீரில் சூரிய சந்திர பிரதிவிம்பந் தோன்றுவது போல சலனமற்ற உள்ளத்தில் இறைவனுடைய அருட்காட்சி தோன்றும்.

மனிதனுக்கு கோபம் பெரும் பகையாகும். ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் சினத்தை விட வேண்டும். கோபத்தை விட்டவர்க்கே மனம் சாந்தியடையும்

**தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே வள்ளுவரின் பொய்யாமொழியாகிய திருக்குறளும் கூறுகிறது. கோபம் பாவத்திற்கு அஞ்சாது. கோபம் வந்த போது உடம்பில் இரத்தம் கொதிப்புற்று நரம்புகள் முறுக்கேறி அதனால் உடல் நலமும் கெடுகிறது.

அறமொன்றே மனிதனை அரண் செய்யும். அற வழியில் கொடுத்த பொருள் ஒன்று மட்டுமே மறுமைக்கும் துணை செய்யும். மனத்தை ஒரு நிலைப்படுத்தி சினத்தை விடுத்து அறத்தைச் செய்து, தெய்வீக நினைப்புடன் வாழ்பவர்களுக்கு கந்தவேட் பெருமானின் திருவருள் தானே தேடி வரும் என்பதைப் பின்வரும் கந்தரலங்காரப் பாடல் விளக்குகிறது.

**தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத்**
**தானமென்றும்**
**இடுங்கோள் இருந்தபடி இருங்கோள் எழுபாருமுய்யக்**
**கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்க**
**வைவேல்**
**விடுங்கோனருள் வந்து தானேயுமக்கு வெளிப்படுமே.**

நித்தியமான பொருள் இறைவன் என்பதையும் இந்த உலக வாழ்வு நிலையில்லாதது என்பதையும் ஞானம் பெற்றவர்கள் அனைவரும் அறிந்துள்ளார்கள். நமக்கு மரணம் நிச்சயம் என்பதைத் தெளிந்து கொண்டு நமக்குத் துணையாக இருப்பது இறைவன் திருவருள் என்று உறுதியாக உணர்ந்து அதனை அடைய முயற்சி செய்கிறார்கள்.

மரணத்தில் மங்கல மரணம், தவறான மரணம் என இருவகை உண்டு. உலக வழக்கில் எண்பது வயதுக்கு மேல் வாழ்ந்து விட்டு யாராவது இறந்து போனால் அதைக் கல்யாணச் சாவு என்று கூறுவார்கள். பழுத்த பழமாகிப் போய்விட்டார் என்று அத்தகைய மரணத்தை உலகம் வரவேற்கிறது. ஆனால் உண்மையான கலியாணச் சாவு என்பது இறைவனுடைய திருவருளைப் பெற்று இனிப் பிறவியே இல்லை என்று ஏற்படும் மரணமே ஆகும். உயிர் விடுதலை பெற்று இறைவனது கழலடியைச் சேர்ந்து எம்பெருமானோடு கல்யாணம் நிகழும் நிலையே அதுவாகும். இதுவே மங்கல மரணம் எனப்படும். இறந்து இறந்து பிறவி எடுத்து மரணம் அடைவது தவறு. ஞானிகளுக்கு இந்த மரணமாகிய தவறு இராது. அது விடுதலையாகப் பரிபூரணமாக இருக்கும். இதனையே மரணமிலாப் பெருவாழ்வு என்று அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

உடம்பினின்றும் உயிர் பிரியும் போது அளவற்ற துன்பத்தை உயிர் அடைகின்றது. பயங்களுக் கெல்லாம் தலையாயது மரணபயமே ஆகும். மனிதனின் வாழ்வில் யாராலும் தடுக்க முடியாத பெரிய அபாயமாக மரணமே காணப்படுகிறது. செல்வந்தர்களாலும், சிறந்த வீரர்களாலும், இணையற்ற பேராற்றல் உடையோராலும், வெண்கொற்றக் குடையின் கீழிருந்து தனிச் செங்கோல் தாங்கி அரசுபுரியும் வாள்வேந்தராலும் ஐயந்திரிபறக் கற்ற புலவராலும் மரணத்தை தடுக்க முடியாது.

முருகன் அடியார்களுக்கு மரண பயம் என்றுமே ஏற்படாது. ஒளியுள்ள மயிலும் வேற்படையும் கொண்டு சலங்கைகள் ஒலிக்கின்ற திருவடியுடன் காட்சி தரும் முருகவேளின் அருள் அடியார்களின் பயத்தை நீக்கும். சூரபன்மனால் இந்திரன் மாண்டிருந்தால் இந்திராணி மங்கல நாணை இழந்திருப்பாள். கந்தவேட் பெருமான் சூர சம்ஹாரம் செய்து இந்திராணியின் மங்கல நாணைப் பாதுகாத்தருளினார். வேலும் மயிலும் துணையாக இருப்பவர்களுக்கு மரணபயம் என்றுமே ஏற்படாது.

**மரணப்ரமாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்த துணை**
**கிரணக் கலாபியும் வேலு முண்டே கிண்கிணி முகுள**
**சரணப்ரதாப சசிதேவ மங்கல்ய தந்துரக்ஷா**
**பரணக் குருபாகர ஞானாகர கரபாஸ்கரனே**

மனத்தை ஒரு நிலைப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம் ஆகும். மனிதனுடைய வளர்ச்சி அவன் உடம்பைப் பற்றியதன்று, மனத்தைப் பற்றியதே ஆகும். மனப்பண்பு வளர வளர மனிதன் வளருகிறான். மனம் பற்பல பொருட்கள் மீது மோகம் கொண்டு அலைந்து திரிகிறது. மனத்தை அடக்கும் சித்தியே மிகமிகப் பெரிய சித்தி. இறைவன் திருவருளினால் அது கை கூட வேண்டும். அந்தச் சித்தி கைவரப் பெற்றால் உலகம் அவனுக்குள் அடங்கி விடும். இந்திரியங்கள் அடங்கிவிடும். பெண் ஆசையால் அழியும் மானிடர்களை அருணகிரியார் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி ஆகிய பாடல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அருணகிரிநாதர் கற்புடைய மகளிராகிய குலமகளைக் குறை கூறவில்லை. அறத்தின் வழியே இன்பம் நுகர்பவர்களைப் பற்றி அவர் சொல்லவில்லை. கண்ணாலும் மேனி மினுக்காலும் உலகோரின் மனத்தை மயக்கும் பாவையர்களைப் பற்றியே பேசுகின்றார்.

மாதர்களுடைய மொழியைப் பாலென்றும் பாதத்தைப் பஞ்சென்றும், கண்களைச் சேலென்றும் புகழ்ந்து அலைந்து திரியும் மனத்தை அருணகிரிநாதர் கண்டிக்கிறார். காமுகர்களுக்கு தாம் விரும்பிய மாதரது மொழி பால் போலவும், அவர் பாதம் பஞ்சினும் மென்மையுடையதாகவும், அவர் கண் சேற்கொண்டையை ஒத்ததாகவும் தோன்றும் சிங்கார மடந்தையர் வலையில் சிக்கித் தவிக்கும் மனம் திருச்செந்தூரில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் குமாரக் கடவுளின் கையில் இருக்கும் ஞான சக்தியாகிய வேலின் மகிமையைப் போற்றுகின்றதில்லை. வேலவனைத் தாங்கி நிற்கும் மயிலின் புகழைப் பாடுகின்றாயில்லை. வெட்சி மலரையும், தண்டையையும் அணிந்த திருவடி என்று முருகன் பாதங்களைத் துதிக்கின்றதில்லை. பிரபஞ்ச மயக்கத்தைத் தரும் மாதரைத் துதித்தால் நீ எவ்வாறு உய்வாய் எனத் தனது மனதிற்கே உபதேசம் செய்வதைப் பின்வரும் பாடலில் காணலாம்.

**பாலென்பது மொழி பஞ்சென்பது பதம் பாவையர் கண்**
**சேலென்பதாகத் திரிகின்ற நீ செந்திலோன் திருக்கை**
**வேலென்கிலை கொற்ற மயூரமென்கிலை வெட்சித்தண்டைக்**
**காலென்கிலை மனமே யெங்ஙனே முத்தி காண்பதுவே**

உலகில் பிறந்து வாழ்கின்ற மக்களுக்கு நாள், கோள், வினை, கொடுங்கூற்று ஆகிய நான்கின் வாயிலாகத் துன்பம் உண்டாகின்றன. முதல் மூன்றும் மனிதன் வாழ்கின்ற காலத்தில் துன்பத்தை உண்டாக்குகின்றன. வாழ்க்கையின் முடிவில் துன்புறுத்துவது கொடுங்கூற்று. நாளும் கோளும் வினையும் கருவிகளாக நின்று மனிதனுடைய வாழ்க்கையைப் பலவகையாக சீரழிக்கின்றன. வாழ்வு முற்றும் போது உயிரைக் கொண்டு போவதற்கு கூற்றுவன் வருகிறான்.

அருணகிரிநாதர்ப் பெருமான் வினையாலும், அந்த வினையின் விளைவைத் தருவனவாக நினைக்கின்ற நாளினாலும் கோளினாலும் வருகின்ற துன்பங்களுக்கு நல்ல பரிகாரம் கூறுகின்றார். முருகனுடைய திருவருள் இருந்தால் அவற்றால் அச்சம் கொள்ள வேண்டாம் என்று உறுதி கூறுகிறார். முருகப்பெருமான் தன்னுடைய திருக்கோலத்தை எனக்கு காட்டினால் நாள் என் செய்யும்? வினை தான் என் செய்யும்? கோள் என் செய்யும்? கொடுங் கூற்றுவன் என் செய்வான்? என்று கேட்கிறார். இறைவனுடைய திருவருளால் நம்முடைய வாழ்வில் நலம் உண்டாகும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தால் நாளும் கோளும் நமக்கு ஒன்றும் செய்யாது. அவை நமக்கு அனுகூலமாகவே இருக்கும் என்பது பக்தர்கள் கண்ட முடிபாகும்.

**நாளென் செயும் வினைதானென் செயுமெனை நாடி வந்த**
**கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங் குமரேசர்க்கு**
**தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுங் தண்டையுஞ் சண்முகமுந்**
**தோளுங் கடம்புமெனக்கு முன்னே வந்து தோன்றிடினே.**

பிறவி அறுவதற்குச் சிறந்த வழி மனதில் இடையறாது இறையருளைச் சிந்திக்க வேண்டும். இறைவனைச் சிந்திக்கச் சிந்திக்க ஏனைய சிந்தனைகள் நீங்கி, ஏனைய சிந்தனைகளால் விளையும் தீவினைகளும், அவ்வினைகளால் விளையும் துன்பங்களும் நீங்கிப் பேரின்ப ஊற்றெடுக்கும்.

**சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்**
**கண்இணைநின் திருப்பாதம் போதுக்கு ஆக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி**
**வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி**

என மணிவாசகப் பெருமானும் சிந்தனை வந்தனை எல்லாம் இறைவனை நோக்கித் திரும்ப வேண்டும் என்றே கூறுகிறார்.

உலகமெல்லாம் காத்தருளுகின்ற கந்தவேட் பெருமானின் திருவடியை உடம்பால் வணங்குதல் வேண்டும். இறைவனின் அருட் குணங்களில் சிலவற்றைக் கூறி வாயார வாழ்த்த வேண்டும். இறைவனை மனத்தால் சிந்திக்க வேண்டும். காயத்தால் வந்திக்க வேண்டும். வாக்கால் வாழ்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மனத்தால் செய்த பாவங்கள் சிந்திப்ப தால் நீங்கும். காயத்தால் செய்த பாவங்கள் வந்திப்பதால் நீங்கும். வாக்கால் செய்த பாவங்கள் வாழ்த்துவதால் நீங்கும் இவற்றைச் சிந்திக்கிலேன், வந்திக்கிலேன், வாழ்த்துகிலேன் என அருணகிரி யார் கந்தர் அலங்காரத்தில் குறிப்பிடுகின்றார்.

மயில்வாகனனைச் சந்தித்தால் இயமனைச் சந்திக்க வேண்டியதில்லை. மீண்டும் கருச்சந்திப்பும் ஏற்படாது. இறப்பும் பிறப்பும் கிடையாது. நிலையில் லாத உலக வாழ்வை நிந்தித்து ஒழிக்கின்றே னில்லை. மனைவி, மக்கள், உடம்பு ஆகியவற்றால் கிடைப்பதெல்லாம் இன்பம் இன்பம் என்று ஏமாந்து அலைகின்றோம். துன்பம் கானல்நீர் போல இன்ப மாகக் காட்சி தரும். ஆதலினால் உலக வாழ்வைப் பொய்யென்று நிந்தித்து மெய்வாழ்வைப் பெறுவதற்கு ஒவ்வொரு கணமும் முயற்சி செய்ய வேண்டும். மனத்தில் உண்டாகும் துன்பங்கள் புந்திக்கிலேசம் எனப்படும். செவ்வேளைச் சிந்திப்ப வர்களுக்கு பயம் உண்டாகாது. கூற்றுவனோடும் எதிர்க்கும் மனோதைரியம் உண்டாகும். உடம்பிற்கு வரும் நோய்கள் காயக் கிலேசம் எனப்படும். முருகப் பெருமானை வணங்கும் அடியார்கள் நோயற்ற வாழ்வினைப் பெறுவார்கள். மனத்திலும் உடம்பிலும் உண்டாகும் துன்பங்கள் நீங்க முருகனைச் சிந்தித்து வாழ்த்தி வந்திக்க வேண்டும்

**சிந்திக்கிலேனின்று சேவிக்கிலேன் றண்டைச் சிற்றடியை**
**வந்திக்கிலேனென்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனைச்**
**சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேனுண்மை சாதிக்கிலேன்**
**புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே**

ஒளியை வீசும் கண்களுக்கு ஞான ஒளி வீசும் முருகப் பெருமானுடைய திருவடியே துணை யாக உள்ளது. மொழியாகிய மலரில் சத்திய மாகிய மனம் கமழ்தல் வேண்டும். உண்மை வழுவாத மொழிகளுக்குத் துணையாக இருப்பது முருக நாமங்களே ஆகும். முருக பக்தர்கள் முருகா என்னும் நாமத்தை மகா வாக்கியமாகவே போற்றுகிறார்கள். முற்பிறப்பில் செய்த வினை களைப் போக்குவதற்கு முருகவேளின் பன்னிரு புயங்கள் துணையாக நிற்கிறது. தனித்து துணையின்றிச் செல்பவர்களுக்கு வேலும் மயிலும் துணையாகவரும்.

**விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள் முன்பு செய்த**
**பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி**
**வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே**

ஆலகால விடத்தைத் தான் உண்டு தேவர் களைக் காப்பாற்றிய சிவனின் மைந்தனாகிய முருகப் பெருமானை சதா கந்தா என்று கூறி வாழ்த்த வேண்டும். இந்த உடம்பின் ஒவ்வொரு அங்கமும் கந்தவேட்பெருமானை நோக்கி வணங்கு தல் வேண்டும். கல்வியின் பயன் இறைவனை அடைவதே ஆகும்.

**கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்**

என்றே திருக்குறளும் கூறுகிறது. 'நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' என்பதே நாவலர் பெருமானின் வாக்கும் ஆகும். உற்ற சுற்றம் எல்லாம் உயிர் பிரியும்போது கைவிட்டு விடுவர். உடலோடு பிணைந்து இருந்து ஜீவிய பிரியந்தம் செயற்பட்ட ஐம்பொறிகளும் ஆவி பிரியும் போது தத்தம் செயல்களை மறந்து அசைவற்று விடுகின்றன. எல்லோரும் கைவிட்ட பொழுது உயிருடன் ஒட்டிப்பிறந்த உடம்பும் கை நழுவ விட்டு விடுகின்றது. மெய் நழுவும் அக்காலத்தில் கை நழுவாது காப்பாற்றுபவர் கந்தப் பெருமானே. ஆதலால் அவர் திருவடியையே சிக்கெனப் பிடித்தல் வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**மைவருங் கண்டத்தர் மைந்தா கந்தாவென்று வாழ்த்து மிந்தக்**
**கைவருந் தொண்டனின்றி மற்றறியேன் கற்ற கல்வியும் போய்ப்**
**பைவருங்கேளும் பதியுங் கதறப் பழகி நிற்கும்**
**ஐவருங் கைவிட்டு மெய்வீடும் போதுன்னடைக்கலமே**

அல்லல் பிறவி அறுத்து ஆன்மா இறைவ னுடன் சேருதலே முத்திப் பேறாகும். அருணகிரி நாதர் பல இடங்களில் இறைவனின் திருவடிப்பேறு கிடைத்தல் வேண்டுமென வேண்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் திருவடி செம்மையுடையது என்பதால் காவிக் கமலக் கழல் என்கிறார். அடியவன் இறைவனுடன் உரிமையுடன் பேசுவான். அருணகிரி யாரும் காத்தருள்வாய் என்று முருகப் பெருமானை உரிமையுடன் வேண்டுகின்றார் என்றும் உயிர்க்கு கொழுகொம்பாக இருப்பவன் இறைவன் இறைவ னைப் பற்றிய உயிர்கள் ஒரு போதும் கலங்க மாட்டாது. கொழுகொம்பைப் பற்றாத கொடிகாற்றி னால் துன்புறுவது போல இறைவனைப் பற்றாத உயிர்கள் துன்பங்களால் கலங்கும். துணை யின்றித் தவிக்கும் அடியேனை உமது திருவடியில் சேர்த்துக் காத்தருள வேண்டுமென வேண்டுவதன் ஊடாக முருக பக்தர்கள் அனைவரும் ஞான பண்டிதனின் பாதங்களைப் பற்றி முத்தி பெறுவதற்கு பின்வரும் பாடல் வழிகாட்டுகிறது.

**காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்**
**தூவிக் குலமயில் வாகனனே துணையேது மின்றித்**
**தாவிப் படரக் கொழுகொம்பில்லாத தனிக் கொடிபோல்**
**பாவித் தனி மனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே**

அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந் தருளிய நூல்களில் முருகவேளுக்கு மிக உகந்த பாமாலை கந்தர்அலங்காரம் ஆகும். இத் திருவருட் பாக்களை நாள்தோறும் பாராயணம் செய்வோர் துன்பங்கள் பலவும் நீங்கி இன்புற்று எந்தை கந்தவேள் தன்னருளைப் பெற்று நலம் பெறுவர்.

## வருவாய் வருவாய் முருகா!

நல்லூர் வீதியினில் எங்கள் குல தெய்வம்
அருள்மழை பொழிவான் நல்லை - திருக்குமரன்
கொஞ்சும் சலங்கை தகதிமி ஆட
மயில் ஏறி வருவான் நல்லூர் முருகன்
நோய் பிணி வந்து பட்டேன் பெரும் துயரம்
உன் திருவருளால் மறைந்தது துன்பம்
மயிலேறும் பெருமான் நல்லை திருக்குமரன்
தேரேறி வருவான் துயரங்கள் தீர்ப்பான்
தேனும் திணைமாவும் விரும்பும் திருமுருகா
தேவ சேனாதிபதியே வள்ளியின் மணவாளா
தாயக மண்ணில் தமிழர் படும் துயரம்
தீர்க்கவே நீயும் தேரேறி வருவாய்
திரு ஆறுபடை பார்த்தேன்
பன்னிருகை பார்த்தேன் தேரில் வரும் முருகனின்
ஆறு திருமுகம் பார்த்தேன்
வருவாய் வருவாய் வருவாய் முருகா
நோயற்ற வாழ்வைத் தருவாய் திருக்குமரா.

**ம. புவனா**
**கன்னாதிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் செல்வாக்குற்ற மயூரகிரிப்புராணம்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

வரலாற்றுச் சிறப்பும் திருவருட் பெருக்கும் மிக்க ஆலயங்கள் மீது தலபுராணங்கள் பாடப்பட்டு வந்துள்ளன. தலத்தின் வரலாறு, அதன் சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றின் மகிமை, திருவருள் திறன் முதலான பல விடயங்களை இப்புராணங்கள் விரித்துரைக்கின்றன. வடமொழிப் புராணங்களில் காணப்படும் கதைகளை ஒருங்கு திரட்டி எழுதப்பட்ட தொகுப்பு நூல்களாகவே இவை விளங்குகின்றன. கி.பி 12ஆம் நூற்றாண்டில் பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பவரால் எழுதப்பட்ட திருவிளையாடற்புராணமே தமிழில் எழுந்த முதலாவது தலபுராணமாகக் கருதப்பட்டது. தல புராணங்களை ஆராய்ந்து அரியதொரு நூலினை வெளியிட்ட டேவிட் சூல்மன் என்பார் ஏறக்குறைய 2000 தலபுராணங்கள் ஏட்டுப்பிரதி வடிவில் வெளி வந்ததாகக் குறிப்பிடுவார். குறிப்பாக 16ஆம் நூற்றாண்டு தொடக்கம் 19ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைத் தலபுராணகாலம் எனக் குறிப்பி டக்கூடிய வகையில் ஏராளமான தலபுராணங்கள் அக்காலப் பகுதியில் எழுதப்பட்டன. சிதம்பரபுராணம், அருணகிரிப்புராணம், அருணாசலப் புராணம், காஞ்சிப்புராணம், சேதுபுராணம், திருவாரூர்ப் புராணம் என்பனவற்றை வகை மாதிரியாகக் குறிப்பிடலாம்.

## 1

இங்ஙனம் தமிழில் எழுந்த தல புராணங்கள் வரிசையில் மயூரகிரிப்புராணமும் ஒன்றாகும். பாண்டிநாட்டிலே தேவாரம் பெற்ற சிவஸ்தலங் களுள் ஒன்றான திருப்புத்தூருக்குச் சமீபத்தில் குன்றக்குடி என்னும் ஊரில் அமைந்துள்ள மயூர கிரி என்னும் முருகன் ஆலயத்தின் மீது இப் புராணம் பாடப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மதுரையைச் சார்ந்த 'சிவகங்கை வித்து வான் வேதாந்த சுப்பிரமணியபிள்ளை' அவர்கள் இப்புராணத்தைப் பாடியுள்ளார். காப்புச் செய்யுள் ஒன்றினையும் பாயிரச் செய்யுள் பதினாறினையும் மயூரகிரியின் வரலாறு உரைத்த சருக்கம் முதல் அருச்சனைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக் கங்களையும் கொண்டதாக இந்நூல் விளங்கு கின்றது. வடமொழியிலமைந்த மயூரகிரி மான்மியம் இதற்கு முதன்னூல் என்பர்.

முருகப் பெருமானின் வாகனமாகிய மயில் (மயூரம்) ஒருமுறை தன்னைக் கேலி செய்த (பிரம்மாவின் வாகனமாகிய) அன்னத்தையும் (விஷ்ணுவின் வாகனமாகிய) கருடனையும் விழுங்கியது. இதனால் கவலையுற்ற பிரம்மாவும் விஷ்ணுவும் முருகப்பெருமானை அண்டி அவற்றை மீட்டுத் தருமாறு வேண்டுதல் செய்தனர். அவரும் மயூரத்தினை அழைத்து கருடனையும் அன்னத் தையும் வெளியே உமிழும்படி பணித்தார். மயூரமும் அவற்றை வெளியே உமிழ்ந்தது. எனினும் அகங்காரத்தால் அன்னத்துக்கும் கருடனுக்கும் துன்பம் இழைத்த மயூரத்தினை திருப்புத்தூருக்கு அண்மையில் மலையாக மாறும்படி முருகப் பெருமான் சபித்தார். மயூரம் தன் பிழையுணர்ந்து வேண்டுதல் செய்யவே அதன் அகங்காரத்தை நீக்கி விமோசனம் தருதற் பொருட்டு அம் மயூர கிரியில் (மயில்மலையில்) முருகன் கோவில் கொண்டார். மயூரத்துக்கும் இதனால் முக்தி கிடைத்தது. இதுவே மயூரகிரி என்னும் தலத்தின் வரலாறாகும். மயூரகிரி வரலாறுரைத்த சருக்கம், தீர்த்த மகிமையுரைத்த சருக்கம், மயூரம் முத்தி பெற்ற சருக்கம் என்பனவற்றில் இவ்வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது.

இவ் வரலாற்றுடன் முருகப் பெருமானின் பிறப்பு, அவர் சூரனாதியோரை கொன்றழித்த பராக்கிரமம், வள்ளி தெய்வநாயகி என்னும் சக்திகளை மணஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வரலாறு என்பனவற்றை ஏனைய ஸ்கந்த புராணங்களில் நின்றும் திரட்டி மயூரகிரிப்புராணம் கூறுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன வற்றை முறையாகப் பெற்று விளங்கும் இத்தலத் துக்கு அகத்தியர், வசிட்டர், விசுவாமித்திரர், பிரமா, கருடன், இந்திரன், ஆதித்தன், மன்மதன், பாண்ட வர்கள் என்போர் வந்து முருகப் பெருமானை நமஸ்கரித்து, இஷ்ட சித்திகளைப் பெற்றதாக அந்நூல் கூறுகின்றது. அகத்தியச் சருக்கம், வசிட்ட விசுவாமித்திரர் சருக்கம், பிரமா கருடேசன் சருக்கம், இந்திரன் கதையும் ஆதித்தன் கதையும் மன்மதன் கதையும் உரைத்த சருக்கம், பாண்டவச் சருக்கம் என்பனவற்றில் மேற்படி முனிவர்களதும் தேவர்களதும் வரலாறுகளும் முருகப் பெருமானின் அருட் சிறப்புகளும் விரித்துரைக்கப்படுகின்றன.

## 2

தமிழகத்திலுள்ள முருக ஸ்தலத்தின் மீது பாடப்பட்ட இம் மயூரகிரிப்புராணம் ஈழத்தில் வாழ்ந்த சைவர்கள் மத்தியில் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை மிகுந்த செல்வாக்குப் பெற்று வந்துள்ளது. கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் என்பனவற்றிற்கு ஒப்பாக விரத காலங்களி லும் விழாக்காலங்களிலும் பாராயணம் செய்தும் படனம் செய்தும் வந்த நூலாக இது விளங்கிற்று.

ஈழத்தில் இப்புராணத்துக்கு இருந்த வரவேற்பை அது இரண்டு பதிப்புக்களைப் பெற்றிருந்ததினால் புரிந்து கொள்ள முடிகின்றது. இதன் முதல் பதிப்பு 1885ஆம் ஆண்டு நிகழ்ந்தது. நாவலரின் மருகர் வித்துவசிரோண்மணி ந.ச.பொன்னம்பல பிள்ளை அவர்கள் இந்நூலை நாவலரின் யாழ்ப்பாண சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டார். முதற்பதிப்பு வெளியாகி ஐம்பத்திரண்டு வருடங்களின் பின் 1937ஆம் ஆண்டு இந்துசாதனப் பத்திரிகையாசிரியர் ம.வே.திருஞானசம்பந்தம்பிள்ளையவர்கள் தேவை கருதி மீண்டும் இந்நூலை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பித்தார். இந்நூலின் முதற் பிரதிகள் பலவருடங்கட்கு முன்னரே அகப்படா தொழிந்தமையே இரண்டாவது பதிப்பைக் கொண்டு வரக் காரணம் என அவர் முகவுரையில் கூறுவது கவனிக்கத்தக்கதாகும்.

ஈழத்தவர்களே இப்புராணத்துக்கு உரை எழுதிப் பாதுகாத்தும் வந்தனர். இந்நூலை முதலில் பதிப்பித்த வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பல பிள்ளை அவர்கள் இந்நூலுக்குச் சிறந்ததொரு பொழிப்புரை வழங்கினார்.

**"இப்புராணத்திற்குச் சிறுவரும் எளிதிலுணரத்தக்க நடையுள்ள பொழிப்புரையொன்று எழுதி அச் சிடுவித்துத் தரல் வேண்டுமென்று காரைக்குடியைச் சார்ந்த முத்துப்பட்டணம் பெரி.நா.சொக்கலிங்கச் செட்டியாரும் மேற்படியூர் ரா.ம.கு.ராம. சொக்கலிங்கச் செட்டியாரும் கேட்டுக்கொண்ட படி உரை செய்து அச்சிடுவித்தேன்."**

என நூன்முகத்தில் பொன்னம்பலபிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். இதனால் ஈழத்திலேயே இந்நூல் முதலில் உரைபெற்றமை புலனாகின்றது. இந் நூலை இரண்டாவதாகப் பதிப்பித்த ம.வே.திரு ஞானசம்பந்தபிள்ளை அவர்கள் பொன்னம்பல பிள்ளை அவர்களின் உரையுடன் மேலதிகமாக விசேட உரை ஒன்றையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டார். பொன்னம்பலபிள்ளையின் உரையை விசேட உரை மேலும் எளிமைப்படுத்திற்று.

**"வித்துவசிரோமணியின் பொழிப்புரையை பொன் போற் போற்றி தமிழ்க் கல்வியறிவு குறைந்தவர்களும் இலகுவில் விளங்கும் வண்ணம் விசேட உரை எழுதி ஆங்காங்கே ... சேர்த்துள்ளேன் ..."**

எனப் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார் ம.வே.திருஞான சம்பந்தம்பிள்ளை.

மயூரகிரிப்புராணத்தில் ஈழத்தவர்கள் கொண்ட ஈடுபாடு அப்புராணத்தில் புதிய சேர்க்கைகள் இடம்பெறக் காரணமாயிற்று. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை தனது காலத்தில் 'தெய்வ நாயகி திருமணச் சருக்கம்' என ஒரு புதிய சருக்கம் இப்புராணத்தில் காணப்பட்டதாகக் குறிப் பிடுகின்றார். இச்சருக்கத்தை 'இடை செருகல்' என உறுதியாகச் சுட்டும் அவர், இச்சருக்கம் யாழ்ப்பாணத்து அராலியில் வாழ்ந்த பிராமணர் ஒருவரால் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்ட தாகக் கருதுகின்றார்.

**"சிலர் இப்புராணத்திலே தெய்வநாயகி திருமண சருக்கம் என ஒன்று ஈற்றிலுளதன்றோ,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதனை யொழித்துவிட்ட தென்னை என்பரா யின் அது வடமொழி மயூரகிரி மான்மியத்தில் இல்லாமையாலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு பிரமாணராற் புதிதாய்ப் பாடிச் சேர்க்கப் பட்டமை சந்தேகமின்றித் தெரிந்தமையாலும் வடதேசத்திலுள்ள ஏட்டுப் பிரதிகளில் தவிர்க் கப்பட்டமையாலும் ... யானும் அச்சருக் கத்தை இதனிற் சேர்த்தல் தவறு என்று ஒழித்து விட்டேன் என அறிக.''**

என்கிறார் பொன்னம்பலபிள்ளை.

### 3

மயூரகிரிப்புராணம் இங்ஙனம் ஈழத்தில் பதிப்பு உரை சேர்க்கை என்பனவற்றைப் பெற்றுச் செல் வாக்கு அடைந்தமைக்கான காரணங்கள் யாவை என்பது நுனித்து நோக்கப்படவேண்டியதாகும்.

i. ஈழத்தில் முருகவழிபாடு பண்டுதொட்டு முதன்மை பெற்றிருந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க முருகன் ஆலயங்கள் ஈழநாட்டில் பரவலா கக் காணப்பட்டன. ஈழத்தின் தென்பகுதியில் கதிர்காமத்திருத்தலம், வடபகுதியில் மாவிட்ட புரம், நல்லூர், கதிரமலை (சுன்னாகத்துக்கு அண்மையில் அமைந்திருந்ததாக நம்பப் படுகிறது), சித்திரவேலாயுதர் கோவில் (வையா பாடல் குறிப்பிடும் இத்தலம் எங்கிருந்தது என்பதை அறிய முடியவில்லை) என்பனவும் கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி கோவில், வெருகலம்பதி சித்திர வேலாயுதர் சுவாமி கோவில் என்பனவும், பதினேழாம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே புகழ்பெற்ற ஆலயங்களாக விளங்கின. போர்த் துக்கேயரின் ஆட்சியைத் தொடர்ந்து நிலவிய இந்துமத எழுச்சிச் சூழலில் புதிதாக மேலும் பல முருகன் ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட்டன. இங்ஙனம் ஈழத்தில் காணப்பட்ட முருக வழிபாட்டுச் சூழல் அங்கு அவ்வழிபாட்டுடன் தொடர்புபட்ட புராணங்கள் அறிமுகமாவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

ii. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற் றாண்டின் முன்னரைப் பகுதியிலும் ஈழத்தில் சைவ - கிறிஸ்தவ மத முரண்பாட்டு நிலை முனைப்பாகக் காணப்பட்டது. இச் சூழலில் இந்துமதப் பற்றுள்ளம் கொண்டோர் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெ டுக்க அதேவேளை சைவசமயத்தின் மீதான பற்றுணர்வையும், நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் வளர்க்க முயன்றனர். இந்துமதத்தின் மீதான பற்றுணர்வையும் நம்பிக்கையையும் வளர்க்கும் முயற்சிகளுள் ஒன்றாகவே புராண படனம் அமைந்தது. இந்துமதம் பற்றியும் இந்துப் பண்பாடு பற்றியும் போதுமான அறிவைப் புராணங்கள் கொண்டிருந்ததால் அவற்றைப் படிக்கவும், படிப்பதைக் கேட்கவும் தூண்டுவதனூடாக மக்களை உண்மையான சமயநெறியில் நடாத்திச் செல்ல அவர்கள் முயன்றனர். இத்த கைய புராணபடனச் சூழல் ஈழத்தில் மயூர கிரிப்புராணம் செல்வாக்குப் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம்.

iii. யாழ்ப்பாணக் கலாசாரத்தினைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் 'கந்தபுராண கலாசாரம்' எனக் குறிப்பிடுவார்கள். அந்தளவிற் குக் கந்தபுராணம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் இடம் பிடித்திருந்தது. கந்தபுராணப் படிப்பு (படனம்) யாழ்ப்பாணத்தில் பல ஆண்டு களாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. கந்த புராணம் பற்றிய ஆய்வுகளும் உரையுடன் கூடிய பல பதிப்புகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன. இங்ஙனம் கந்தபுராணம் யாழ்ப்பாண மக்கள் வாழ்வில் பெற்றிருந்த செல்வாக்கு ஏனைய முருக புராணங்களும் ஈழத்தில் பிரபலம் பெற வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கலாம். திருச்செந்தூர்ப்புராணம், மயூரகிரிப் புராணம் என்பன ஈழத்து முருகன் கோவில் களில் படிக்கப்படவும் பாராயணம் செய்யப் படவும் இதுவே காரணம்.

iv. ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலே காணப்பட்ட நெருக்கமான பண்பாட்டுறவின் பின்னணியில் ஈழத்தறிஞர்கள் தமிழகம் வருவதும் தமிழக அறிஞர்கள் ஈழம் வருவதும் வழக்கமாக இருந்தது. இத்தகைய பரஸ்பர தொடர்பின் பின்னணியில் தமிழகப் புராணங்கள் ஈழத்தில் அறிமுகமாவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கவேண்டும். ஈழத்தறிஞர்கள் மயூர கிரிப்புராணத்தை ஈழத்தில் அறிமுகஞ் செய்வதற்கும் பதிப்பித்துப் பாதுகாத்தமைக்கும் இத்தொடர்புகள் காரணமாக இருந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. ஈழத்தவர்கள் இந்திய தலங்களுக்குத் தல யாத்திரை செல்வது வழக்கமாக இருந்தது. திருச்செந்தூர், திருத்தணிகை, பழனி முதலான முருக ஸ்தலங்களுக்கு அவர்கள் தலயாத்திரை புரிந்தனர். மயூரகிரி முருகனின் குன்றுதோறாடல் என்னும் தொகைத் தலத்துட் சிரதானம் (சிறப்பு) பெற்று விளங்குவதால் அங்கும் தலயாத்தி ரையை ஈழத்தவர்கள் விரும்பி மேற்கொண் டிருக்க வேண்டும். அங்ஙனம் தலயாத்திரை செய்வோருக்கு மயூரகிரித் தலத்தின் சிறப்பினை, பெருமையினை எடுத்துக்காட்டும் பொருட்டு இப்புராணம் ஈழத்தில் அறிமுகஞ் செய்யப் பட்டிருக்கலாம்.

vi. மயூரகிரிப் புராணம் கந்த விரதங்கள் பற்றி விபரிக்கின்றது. கந்தசட்டி, சுக்கிரவாரம், கார்த்திகை விரதம் என்பன பற்றி மூன்று சர்க்கங்களில் இப்புராணம் விபரித்துச் செல்கின்றது. கந்த விரதங்களின் மகிமை, அவற்றை அனுட்டிக்கும் காலம், அனுட்டிக்கும் முறை, அனுட்டித்தோர் எய்திய பலன் என்பன பற்றிய விரிவான விளக் கங்கள் அச் சருக்கத்தில் இடம் பெற்றுள்ளன.

**இவ்விரதங்கள் பற்றிய அரிய தகவல்கள் முருக வழிபாட்டில் ஈடுபடுவோருக்கு அவசியம் வேண்டப்பட்டன. எனவே இத் தகவல்களை விரித்துரைக்கும் மயூரகிரிப் புராணத்தை ஈழத்தவர்கள் விரத காலங்களில் படித்துப் பயன்பெறும் பொருட்டு அறிமுகஞ் செய்திருக் கக்கூடும்.**

**“............. இத்தலபுராணத்தை சைவநன்மக்கள் இங்குள்ள சைவாலயங்கள் திருமடங்களில் கந்தசட்டி முதலிய விசேட புண்ணிய காலங்களில் கிரமமாகப் பக்தியுடன் படனஞ் செய்து வருவராயினர்.**

**என ம.வே.திருஞானசம்பந்தம்பிள்ளை அவர் கள் தனது சம காலநிலை பற்றி பதிப்புரையில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.**

இங்ஙனம் ஒரு காலத்தில் செல்வாக்குப் பெற்ற மயூரகிரிப் புராணத்தை இன்று பெயரளவில் தானும் அறிய முடியாத நிலையுள்ளது. புராண படனமரபும் பாராயண மரபும் இந்து சமயிகள் மத்தியில் படிப்படியாகக் குறைவடைந்து சென்று இன்று வெறும் சடங்குகள் போல ஆலயங்களில் நிகழ்வதைக் காணலாம். இந்நிலை புராணங்கள் பற்றிய அறிவு எம்மவரிடையே படிப்படியாக இல்லாமல் போவதற்குக் காரணமாக உள்ளது. இந்துமதம், இந்துப்பண்பாடு பற்றிய கருத்துக்களின் கருவூலங்களாக விளங்கும் புராணங்கள் உதா சீனப்படுத்தப்படல் எமக்கே தீங்காகும். ஆதலால் புராணபடன, பாராயண மரபை நவீன தேவை களுக்கு ஏற்றவகையில் மாற்றியமைப்ப தனூடாக புராணங்களுக்கு வாழ்வளிப்பதுடன் எமது மத அறிவையும் மதப்பற்றையும் நற் சிந்தனைகளையும் புடம் போட்டுக்கொள்ள முடியும்.

## பந்தவினையறுக்கும் பாலசுப்ரமண்யனே

கந்தனே கார்த்திகேயனே கடம்பனே குகனே
பந்தவினை அறுக்கும் பாலசுப்ரமண்யனே முருகா
வந்துநிதம் திருக்கோயில் வணங்கி வலம் வந்தால்
தந்திடுவாய் பரமபதம் தங்க மயில் வாகனனே!

*கவிமணி இராசையா ஸ்ரீதரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியப் பண்புகளை வளர்த்தெடுப்பதில் இந்து ஆலயங்களின் பங்களிப்பு

திரு S.K.யோகநாதன்
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இறைவனை வழிபடுவது தான் வாழ்வின் அடிப் படையாகும். அடியவர்களை மன ஒருமைப்பாட்டுடன் அழைத்துச் செல்வதே ஆலயங்களின் நோக்கமாகும். இந்துக்களின் வாழ்வியலில் ஆலய வழிபாடு பெறும் சிறப்பிடம் தனித்துவமானது. இறைவனை வழிபட வாய்ப்பு இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல. மனிதவாழ்வியலில் ஏற்படும் துன்பங்கள், துயரங்களை வென்றெடுக்க வழிபாடே பெரிதும் துணைபுரியும்.

மனித வாழ்க்கையில் சமயம் உயிர்ப்புடன் செயலாற்ற வேண்டும். சமயமே வாழ்க்கை; வாழ்க்கையே சமயம், என்னும் நிலை எய்தப்படும் போதே சமயம் வாழ்கின்றது. சைவம் ஒரு தத்துவம்; ஒரு சமயம்; ஒரு வாழ்வியல் நெறி.; இம் மூன்றினதும் சமநிலையான வளர்ச்சியிலேயே சைவசமயம் முழுமைத்துவம் அடைகின்றது.

இந்துக்களின் பண்பாட்டில், வாழ்வில் விழுமி யங்களின் மதிப்பு உயிரைவிட, உறவை விட அதியுயர்ந்தது. எவற்றை நாம் இழந்தாலும் விழுமியப் பண்புகளை இழந்து விடக்கூடாது. விழுமியங்கள் தான் மனித அடையாளங்கள். மிருகத்திலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவன. எனவே எம்மை அடையாளப்படுத்தும் மனித விழுமியங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். ஆலயங்கள் ஆதிகாலம் முதல் இன்று வரை இவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் அரும் பணியாற்றுகின்றன.

இன்று நாம் தகவல் தொழினுட்பயுகத்தில் பிரவேசித்துள்ளோம். இக்காலம் தகவல் தொழினுட்பத்தில் வளர்ச்சி பெற்றதுடன், விஞ்ஞான வளர்ச்சியில் பல தொழில் நுணுக்கங்கள் நிறைந்த தாகவும் மிளிர்கின்றன. இந்த நவீன யுகத்திற் கேற்ப நாம் மாறவேண்டியது காலத்தின் தேவை யாகும்.

இந்த நீரோட்டத்தில் மனித விழுமியப் பண்பு களை அடித்துச் செல்லாது அறப் பண்புகளைப் பேணும் நிலைக்களங்களாக விளங்குபவை இந்து ஆலயங்களாகும்.

என்றுமே, மாற்றமடையாத விழுமியங்களாகக் கொள்ளப்படுவன சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அஹிம்சை, நல்லொழுக்கம், இன்சொல் என்பன வாகும். இவையே உலகை வாழ்விப்பன. இவற்றை வாழ்வில் கடைப்பிடிப்போர் நிறைவாகவும், நிம்மதி யுடனும் வாழ்கின்றனர்.

சமயம் மனித ஒழுக்கமாக வேண்டும். சமயம் ஆன்மீக வாழ்க்கையோடு செல்லும் போது வன்மம் மறைந்துவிடும். உண்மை, நீதி, அன்பு, அறம், சாந்தி, சமாதானம் முதலியன மலர்ந்துவிடும்.

**சைவம் - அன்புநெறி**

சைவம் சிவத்தோடு சம்பந்தப்பட்டது. இது ஓர் அன்புநெறி. இந்த அன்பு அறத்திற்குக் கட்டுப் பட்டுக் கருமமாற்றவல்லது. எல்லா மனிதர் களையும் எவ்வித வேற்றுமைகளையும் பாராட்டாது சமமாக மதித்து அன்பு செய்வதன் மூலம், கரிசனை கொள்வதன் மூலம் கைமாறு கருதாது சேவை செய்வதன் மூலம், மனிதன் தெய்வீக நிலைக்குயர முடியும். ஒருவன் அன்பு நெறியில் வாழும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இரங்கி அன்பு செய்வது இறைவனுக் குரிய அறமாகும். இதனைச் சிவஞான சித்தியாரில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கில்லாத் தவம், தானம், வந்தித்தல், வணங்கல், வாய்மை இழுக்கிலான் அறங்களானால் இரங்குவான் பணியறம்".

அன்பு தான் இந்த உலகை புதுமை நிறைந்த தாக மாற்றும் வல்லமை பொருந்தியது. மனித சமுதாயத்திற்கு வாழ்வையும், வழமையையும் பெருக்கித் தருவது அன்பு மட்டுமே என்றால் மிகை யாகாது.

அன்பு வழியில் நடந்தால் சமுதாயத்தை முன்னேற்றகரமானதாக மாற்றமுடியும்.

**"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்துஞ் சிறப்பு"**

என அன்பின் மேன்மையை வள்ளுவர் அழகாகக் கூறியிருக் கின்றார். எனவே அன்பு வழியிலான சமுதாயத்தை ஏற்படுத்திக் கொள்வதில் ஆலயங் களின் பணி மகத்தானது.

**ஆலயங்களும் அறநெறியும்**

வழிபாட்டிற்காகவும், சமுதாய நிகழ்வுகளிற் காகவும் ஆட்சிமுறை செயல்களிற்காகவும் மக்கள் திரண்டு கூடும் இடமாகத் தொன்றுதொட்டு ஆலயங் கள் அரும்பணியாற்றி வந்தன. நீதிமன்றங்களாக, மருத்துவமனைகளாக, வங்கிகளாக, நூலகங் களாக, கல்விக்கூடங்களாக, கலை வளர்க்கும் இடமாக, அறநெறி பேணும் அரும் பொக்கிசங் களாக நிறைபணியாற்றியுள்ளமையை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது.

வறுமையில் வாடிய மக்களிற்கு கோயில்கள் உதவி புரிந்தன. ஆலங்குடி எனும் ஆலயத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் கி.பி 1152இல் சோழ நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது கோயில் பண்டாரத் திலிருந்து 1011 களஞ்சு பொன்னாபரணங்களையும், 464 பலம் நிறையுள்ள வெள்ளிப் பொருட்களையும் கடனாகக் கொடுக்கப்பட்டது எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை எல்லாம் ஆலயங்கள் மூலம் நடைபெறும் அறப் பணிகளுக்கு நல்ல எடுத்துக் காட்டாகும். இந்த அறப்பணிகளை இன்னும் ஆலயங்கள் முன்னெடுத்துச் செல்கின்றமை யைக் காணலாம்.

சமகாலத்தில் மக்களின் தேவைகள் மாறு கின்ற உலகிற்கேற்ப மாற்றமடைந்து செல்கின்றன. ஆயினும், ஆலயங்கள் என்பதைத் தவிர வேறெதற்கும் பயப்படாதநிலை உருவாகியுள்ளது. எனவே, அமைதியை வேண்டியோ அல்லது வேறு தேவை கருதியோ சமூகத்தவர் தேடி வரும் இடமாக ஆலயங்கள் மிளிர்கின்றன.

இந்துக்களின் சமூகச் செயற்பாடுகள் கலை, கலாசாரப் பின்புலமும் இந்து சமயத்தினைப் பொறுத்த வரையில் சமய அனுட்டானங்களாகவும், சமூக அங்கத்தவர்கள் யாவரும் இறைவன் வழி வந்தவர்களாக சிருஷ்டிக்கப்படுவர். திருமண வைபவம், சூரன்போர், கொலுவைத்தல், கொடி யேற்றம் போன்ற பல்வேறு முறைகளில் இந்து மக்களுக்கும், இந்து ஆலயங்களுக்கும் ஆன தொடர்புகளைக் காணலாம். இந்து மதத்தினைப் பொறுத்தவரை அங்கு ஒழுக்கம், அறம், ஒற்றுமை, ஒருவரை ஒருவர் மதித்தல் போன்ற அறப்பண்புகள் மேலோங்கிக் காணப்படுவதைக் காணலாம்.

எமது உலகியல் வாழ்வு தெய்வீக வாழ்வாக மாற நாம் சாதனைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும்.

**"எழுக புலருமுன்**
**தொழுது வணங்குக தூநீறணிக**
**அன்னை பிதாவின் அடியினை வணங்குக**
**கண்ணைப் போல காக்க அறத்தை**

**அழுக்காறு கோபம் அவா ஒழிக்க**
**விழுப்பம் மிக்க மேன்மக்கக டம்மை**
**ஒரு போதும் மறவா துறவு கொள்ளுக".**

இவ்வாறு அன்பு நெறியில் அறவழியில் அறத்தின் துணையோடு மனதை இறைவன் பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க வேண்டும். அறவழியில் கிடைக்கும் இன்பமும் பொருளும் என்றும் அழிவில்லாதவை யாகும். அறமே மனித வாழ்வுக்கு அடிப்படை. "தருமத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும்" என்றே இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆலய மணியோசை ஆர்ப்ப, ஆர்ப்ப வேதபுராண ஒலி செவியை நிரப்ப, தேவார இசை நெஞ்சை நிரப்ப, மந்திர ஒலி புத்துயிரூட்ட, அறநெறியைப் பின்பற்றி மக்கள் வாழ, ஆலயங்கள் உயர்ந்து நிற்கின்றன.

**விரதங்களும் விழுமியங்களும்**

உயிரினங்களில் மனிதன் மட்டுமே உயர் வானவன். அவன் அறிவும் செயலும் பல்வேறு கிரகங்களையும் தொட்டுப் பார்த்துக் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றது. எனினும் அவன் பல்வேறு நெருக்கீடுகளிற்கும், மன அழுத்தங்களிற்கும் உள்ளாகி நிம்மதியின்றித் தவிக்கின்றான். எனவே ஒழுக்காறுகளை வரையறை செய்து அமைதிப் படுத்தி, பண்படுத்தவேண்டி உள்ளது. இதற்கு ஆலயங்களே வழிகளாகவும் மனிதனின் உறவுப் பாலமாகவும் விளங்கின.

ஒரு மனிதனுக்கு முதலில் தேவையானது மன அமைதி. இது விரதங்களினால் கிடைக் கின்றது. விரதங்கள் அனைத்தும் நம்மையறியாமல் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுடன் வாழ் வையும் சிறப்படைய செய்வதற்கு மறைமுகமாக உதவுகின்றன. உளநலம் கிடைத்தால் உடல்நலம் நிச்சயம் கிடைக்கும். இறையுணர்வு உள்ளவர் களிடம் மனிதத் தன்மை இருக்கும். மனிதத் தன்மை இல்லாவிட்டால் அவனை மனிதனாகக் கொள்ள முடியாது. தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து முறையாக விரதமிருந்து அனுஷ்டிக்க வேண்டியவை எல்லாம் குறைவற அனுஷ்டித்து வருபவரிடம் மனிதத் தன்மை நிச்சயமாக வந்து விடும்.

உள்ளத்தில் நல்ல தூய்மையான எண்ணங் களைத் தேக்கி இறைவழிபாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்களாக விளங்கி மந்திரங்களை முறைப்படி ஓதவேண்டும். கோபங் களை அடக்கி விரதம் மேற்கொள்ளும் காலத்தி லேனும் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு பொறாமை, பொய்பேசுதல் போன்றவற்றை அறவே கைவிட்டு நல்லெண்ணத்துடன் திகழவேண்டும். எண்ணங்களைத் தூய்மைப்படுத்தினால் இறை வனின் அருள் கிடைக்கும். இந்து மக்கள் மனம் பொறி வழி போகாது விரதமிருப்பதன் மூலம் நல் விழுமியங்களை விருத்தி செய்தனர்.

எல்லா உயிரினங்களும் வீடுபேற்றின் வழியே இறைவனை அடைவதே சைவசமயத்தின் நோக்க மாகும். மனித உறவுகளின் வாழ்வியல் தத்துவங் களை விளக்கும் சைவம் மனிதனிடம் வேறுபாடு காட்டாமல் இறைவன் ஒருவன் என்பது போல அவனை வழிபடும் குலமும் ஒன்றே எனக் கூறுகின்றது.

மனித வாழ்வு செம்மையாகவும், அமைதி நிறைந்ததாகவும் அமைய வேண்டுமென்று கருதிய எமது முன்னோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நீதி நெறிகளையும், சமூகச் சட்டங்கள், விதிக ளையும் உருவாக்கினர். இவற்றை நடைமுறைப் படுத்தும் ஊடகமாக ஆலயங்களைத் தெரிவு செய்தனர். இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்த மக்கள் சமய விழுமியப் பண்புகளை விருத்தி செய்ததுடன் சமய ஆசாரங்களையும், அனுட்டானங் களையும் கைக்கொண்டு வாழ்ந்தனர்.

உண்மை, அன்பு, அறம், கருணை, அஹிம்சை போன்றவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் உலகில் மகிழ்வுடன் நிம்மதியுடன் வாழலாம். இந்த உலகமும் உயிரினங்களும் இயங்குவதற்கு ஒரு உந்து சக்தி இருக்கிறது. உலகில் எல்லாப் பொருட்களிற்கும் அப்பாற்பட்டதாக அதே நேரம் எல்லாப் பொருட்களிலும் கலந்து நிறைந்ததாக இருக்கிறது. எல்லாவற்றையும் கடந்தவரான கடவுளை வணங்குவதற்கு மக்கள் கூடும் இடமே ஆலயம்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளான இறைவன் ஆலயங்களில் இருந்து, அலையும் உள்ளங்களிற்கு அமைதியையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலையும் நல்குகின்றார். இறை வழிபாட்டின் மூலம் மக்களை ஈடேற்றுவதற்கு ஆலயங்கள் அமைத்துப் பரிபாலிப்பது சிறந்த புண்ணியச் செயலாக ஆரம்ப காலந்தொட்டு கருதப்பட்டு வந்துள்ளது.

கோயில்களைக் கட்டிய மக்கள் அவற்றின் பராமரிப்புச் சொத்துக்களையும் சேர்த்து வைத்தார்கள். ஆலயங்களை மக்கள் பராமரித்த அதேவேளை மக்களைக் கோயில்களும் பராமரித்தன. மக்களின் இன்ப துன்பத்திற்கான உதவிகளைச் செய்வதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் கோயில் நிதி பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. எனவே மக்கள் விழுமியப் பண்புகளில் இருந்து வழுவாது தமது பணிகளைத் தர்ம உணர்வோடு, மனிதாபிமான உணர்வோடு செய்தனர். ஆலயத்திலேயே இறைவன் உருவத்திருமேனியாக இருந்து அடியார்களிற்கு அருள் பாலிக்கிறான். எனவே, கந்தபுராணக் கலாசாரத்தைப் பின்பற்றும் எமது மக்கள் ஆன்மீக வாழ்வு சிறக்க பெருந்துணை புரிந்து வருவன ஆலயங்கள் ஆகும். இவை சீரிய பண்பாட்டின் நிலைக்களங்களாக விளங்குவதுடன், விழுமியப் பண்புகளை போற்றிப் பேணும் பொக்கிஷங்களாகவுந் திகழ்கின்றன. எனவே விழுமியப் பண்புகளை வளர்த்தெடுப்பதில் தொன்று தொட்டு ஆலயங்கள் அரும்பணியாற்றி வருகின்றன.

"**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**".

## உசாத்துணை நூல்கள்


1. பண்டைத் தமிழரின் வாழ்வும் வரலாறும் - க.கைலாசபதி
2. தெய்வ வழிபாடும் விரதங்களும் - இரத்தின ஷண்முகனார்
3. சைவ விழுமியங்களும் விரதங்களும் விழாக்களும் - குமாரசாமி சோமசுந்தரம்
4. மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் - குமாரசாமி சோமசுந்தரம்
5. சைவமும் மனித நேயமும் - முனைவர் இ.ஆர்.இரவிச்சந்திரன்
   (இரண்டாவது உலக இந்து மகாநாடு - 2005, ஆராய்ச்சிக்கட்டுரை)
6. இந்து ஒளி - தீபம் 10, சுடர் 01.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற இந்து சமய நிறுவனங்கள்

திருமதி சாந்தினி அருளானந்தம்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

19ஆம் நூற்றாண்டின் இந்துசமய வரலாற்றில் ஆறுமுகநாவலர் ஆளுமை மிக்க ஒருவராக விளங்கியதைக் காணலாம். பிரித்தானிய அரசின் ஆதரவு, அனுசரணை, பொருளாதாரபலம் முதலிய வற்றைக் கொண்டிருந்த அமைப்புக்களான மிசனரிச் சங்கங்களும், மனிதாபிமானம் கொண்டு தம் மதத்தைப் பரப்பும் மிசனரிமார்களும் மேற் கொண்ட தீவிரமான கிறிஸ்தவ சமயப் பரப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுத்து, சைவ சமயத் தைப் பாதுகாத்து அதனை நிலைநாட்டுகின்ற ஆளுமை நாவலரிடத்தே நிறைந்திருந்ததெனலாம். அவருடைய மறைவுக்குப் பின்னர் இத்தகையவோர் ஆளுமை மிக்க அறிஞர் எவரும் தோற்றம் பெற வில்லை. சேர். பொன்.இராமநாதன் தனது சட்டசபை வாதம் ஒன்றின் போது ஆறுமுகநாவலரின் மறைவி னால் கிறிஸ்தவ மிசனரிகளின் சமயம் பரப்பும் வேகம் அதிகரித்ததைச் சுட்டிக் காட்டியுள்ளமை நாவலர் ஆளுமையை விளங்கிக் கொள்ள துணை யாகின்றது.

## நாவலர் கால நிறுவன அமைப்புக்கள்

கிறிஸ்தவ சமயப் பரப்பு நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கும் இந்து சமயத்தைத் தொடர்ந்தும் ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும் நிறுவன அமைப்பு அவசியம் என்ற சிந்தனை நாவலரின் அபிமானிகளால் உணரப்படுகின்ற சூழ்நிலை, நாவலரின் மறை வினைத் (1879) தொடர்ந்து தோற்றம் பெற்றது. ஆயினும் இந்நிறுவன அமைப்புக்குரிய அடிப்படையை இட்டுக் கொடுத்தவரும் நாவலரே என்பதனை த.கைலாசபிள்ளை எடுத்துக்காட்ட முற்படுவதைக் காணலாம். நாவலர் காலத்தில் அவரால் நிறுவன மொன்று ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**"மிசனரிச் சங்கங்களின் பணிகளையும் பிரம்ம சமாஜத்தின் ஆற்றல்களையும் நன்கு மனங் கொண்ட நாவலரவர்கள் தாம் வழிநடத்திச் செல்லும் இயக்கம் நிறுவன அமைப்புடையதாய் அமைதல் வேண்டுமென்று கருதினார். இதனால் 1854ஆம் வருடம் தை மாதம் ஸ்ரீ வேதாகமோக்த சைவப்பிரகாச சமாசீய விக்கியாபனம் என்னும் பெயருடன் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அப்பிரசுரத்தின் மூலம் நாவலரவர்கள் அமைத்த நிறுவனத்தின் பெயர், இலட்சியம், நோக்கம், செயற்பாடு என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நிறுவனத்தின் பெயர் ஸ்ரீ வேதாக மோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீயம் என்ப தாகும்."**

இதிலிருந்து நாவலரால் உருவாக்கப்பட்ட நிறுவனம் பற்றி அறிந்து கொள்ளலாம். இந்நிறு வனத்தின் உருவாக்கத்தில் இந்திய இந்துமத சீர்திருத்த, மறுமலர்ச்சி இயக்கங்களின் செயற்பாடு களும், அவற்றால் இந்து சமயம் எய்திய வளர்ச்சி நிலைகளும் முக்கிய பங்கு வகித்ததைக் காணலாம். அத்துடன் இந்து சமய வீழ்ச்சியையும், கிறிஸ்தவ சமயத்தின் பரவலையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட கிறிஸ்தவ நிறுவன அமைப்புக்க ளையும் நாவலர் கவனத்திற் கொள்வதற்கு நிறைந்த சந்தர்ப்பங்களும் கிடைத்தன. இவற்றின் விளைவாகவே ஈழத்திலும் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு முதன்முதலில் நிறுவனமொன்று நாவலரால் தோற்றுவிக்கப்பட்டதெனலாம்.

ஸ்ரீ வேதாகமோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீயத்தின் உருவாக்கத்தையடுத்து 1864இல் சங்கர பண்டிதர் தலைமையில் 'பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம்' என்ற நிறுவனம் உருவாக் கப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆனால் இது சங்கர பண்டிதரால் ஸ்தாபிக்கப்படவில்லை என்றும் நாவலர் உருவாக்கிய சைவப்பிரகாச சமாசீயமே அவர் தமிழ் நாட்டில் இருந்த கால கட்டத்தில் சங்கர பண்டிதர் தலைமையில் புனரமைப்புச் செய்யப்பட்டுப் புத்துயிர்ப்புப் பெற்றதெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினம் வலியுறுத்துகின்றார். எவ்வாறாயினும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து இந்து

பத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், இந்து சமய வளர்ச்சியின் பொருட்டும் நிறுவன ரீதியான செயற்பாடுகள் நாவலர் காலத்திலேயே தொடங்கி விட்டதென்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## நாவலரின் மறைவுக்குப் பின் தோன்றிய நிறுவனங்கள்

### சைவப்பிரகாச சமாசீயம்

1879ஆம் ஆண்டு நாவலர் மறைந்த பின் நிறுவன ரீதியான செயற்பாடுகளே இந்து சமயத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதை நன்குணர்ந்த ஈழத்து இந்து சமய அறிஞர்கள் ஒன்றிணைந்து நிறுவனமொன்றை அமைத்தனர். இதில் நாவலரின் மாணவர்களும் அவரது அபிமானிகளும் பிரதான பங்கு வகித்தனர். இவர்களின் முயற்சி குறித்து இந்து சாதனம் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிடுகின்றது :

**"........ ஆகிய பதின்மூவர் நாவலர் பெருமானின் பணிகளை தனித்து ஒருவராலும் பணிபுரிய முடியாது எனக் கருதி ஒன்று ஒரு சபையாக இயங்குவதெனத் தீர்மானித்தனர். பதின்மூவரும் சைவப்பிரகாச சமாசீயம் என்னும் பெயரில் ஒரு சபையை உருவாக்கினர்."**

சைவப் பிரகாச சமாசீயம் நாவலரது பணிகளை முன்னெடுப்பதனையே நோக்கமாகக் கொண்டியங்கியது. நாவலரால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரின் பிற்பகுதி இந்நிறுவனத்தின் பெயராக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

### கிறிஸ்துமத கண்டனசபை

இந்துக்களை மதம் மாற்றுவதில் கிறிஸ்தவ மிசனரிகள் முழுமூச்சாகச் செயற்பட்டனர். அது மட்டுமல்லாது இந்து அறிஞர்களை வாதத்திற்கு அழைப்பதிலும் முன்னின்றனர். நாவலர் காலத்தில் பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம் செயற்பட்டதைப் போன்று 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்துமத கண்டன சபை செயற்பட்டதெனலாம். 1887ஆம் ஆண்டு இச் சபையை நிறுவுவதில் த.கைலாசபிள்ளை, இ.மாரிமுத்துப்பிள்ளை, ந.ச.பொன்னம்பலபிள்ளை, வை.சுப்பிரமணியபிள்ளை, சுவாமிநாத பண்டிதர் போன்றோர் பங்களிப்புச் செய்திருந்தனர். இச் சபையின் அங்கத்தவர்கள் கிறிஸ்தவர்களின் கண்டனங்களை எதிர்கொள்ளல், இந்துக்களிடையே சமய உண்மைகளை நிலை நாட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு சமகால இந்து சமய வளர்ச்சிக்குத் துணை நின்றனர்.

### கொழும்புசைவ பரிபாலனசபை

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் வடபகுதித் தமிழர்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். தென்னிலங்கையில் பூர்ஷ்வாக்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்த குமாரி ஜெயவர்த்தனா அப்பிரதேசத்தில் தமிழர்கள் எவ்வெவ் வழிகளில் செல்வாக்கைப் பெற்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். இப்பின்னணியில் யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களிலிருந்து சென்றவர்களும் தமிழகத்தில் இருந்து வந்தவர்களும் (செட்டிகள், தொழிலாளர்கள்) தென்பகுதியில் இந்துசமய பண்பாட்டு வாழ்வினை வளப்படுத்தினர். இதனுடைய பரிணாமமாகக் கொழும்பு போன்ற இடங்களில் பரவியிருந்த இந்துக்களின் சமய வாழ்வினை மேம்படுத்தும் பொருட்டு பல இந்துசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவற்றிலொன்றே கொழும்பு சைவ பரிபாலன சபையாகும். இச் சபை 1887ஆம் ஆண்டு இலங்கை சைவபரிபாலனசபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கியது. சேர். பொன்.இராமநாதனின் சகோதரரான குமாரசாமி முதலியார் யாழ்ப்பாண சைவபரிபாலன சபையின் தலைவராக மட்டுமன்றி இலங்கைச் சைவபரிபாலன சபையின் தலைவராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

### தம்பையா முதலியார் சத்திரம்

கொழும்பில் சைவசமயப் பணிகளில் ஈடுபட்ட இன்னொரு இந்து நிறுவனமாக தம்பையா முதலியார் சத்திரத்தை அடையாளம் காணலாம். இந் நிறுவனம் இந்து யாத்திரிகர், வியாபாரிகள் (செட்டிகள்) மற்றும் பலருக்குரிய தர்ம ஸ்தாபனமாக விளங்கியது. தம்பையா முதலியார் என்பவர் 30,000 ரூபா செலவில் 1880ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மேற்படி சத்திரத்தை நிறுவினார்.

### யாழ்ப்பாண சைவபரிபாலன சபை

கொழும்பை மையமாகக் கொண்டு இலங்கை சைவபரிபாலனசபை நிறுவப்பட்டவாறு பெரும்பான்மையாக இந்துக்கள் வாழும் யாழ்ப்பாணத்திலும் ஒரு சபை நிறுவப்பட்டது. யாழ்ப்பாண சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனசபை எனப்பட்ட இச்சபை ஸ்திரமான இன்று வரை இயங்கி வருகின்ற நிறுவனம் என்ற பெருமைக்குரியதாகும். ஆறுமுகநாவலர் மறைந்து ஒன்பது ஆண்டுகளின் பின்பு உதயமான இச்சபை ஆரம்பத்தில் யாழ்ப்பாண சைவசமய பரிபாலன சபை என்றே அழைக்கப்பட்டதாக தெரிகின்றது. இதன் முதலாவது தலைவராக நாவலரின் மருமகனும், மாணாக்கனுமாகிய ந.ச.பொன்னம்பலபிள்ளை தெரிவானார். நாவலரின் தமையனாரின் புதல்வனும், மாணாக்கனுமாகிய த.கைலாசபிள்ளை செயலாள ராக நியமிக்கப்பட்டார். சபாபதிச் செட்டியார் பொருளாளராகவும், நிர்வாக அங்கத்தவர்களாக 19 பேரும் தெரிவாகினர். இவர்களிற் பெரும்பாலான வர்கள் நாவலரின் உறவினராகவோ அன்றில் அவரது மாணவர்களாகவோ விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

சைவ பரிபாலனசபை இந்துசமய விருத்தியின் பொருட்டுப் பல மாகாணசபைக் கூட்டங்களையும் அதிகார சபைக் கூட்டங்களையும் நடாத்திப் பல்வேறு பணிகளை முன்னெடுத்தது. 17.09.1890 இல் நடைபெற்ற இரண்டாவது மகாசபைக் கூட்டத்திலேயே சைவபரிபாலனசபை என அழைப்ப தெனத் தீர்மானிக்கப்பட்டது. இச்சபை உள்நாட்டு அறிஞர்களைக் கொண்டும், இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழ்நாட்டு அறிஞர்களைக் கொண்டும் சைவப் பிரசங்கங்களை நடாத்தியது. ஓர் அச்சி யந்திரசாலையை அமைத்துப் பல்வேறு நூல்கள், பாடநூல்கள், பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டது. இந்துசாதனம் என்ற தமிழ்ப் பத்திரிகையையும் இந்து ஓகன் (Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டு, சமய வளர்ச்சியை விரைவுபடுத்தியது. 1890இல் இச் சபையால் நிறுவப்பட்ட இந்துக் கல்லூரி இந்துக்களின் கல்வி, சமய வரலாற்றில் முக்கியத் துவமுடையதாக விளங்கியது. 1891இல் சிதம்பரத்தில் நடைபெற்ற மகாநாட்டில் ஈழத்து இந்துக்கள் சார்பாக சைவசபரிபாலனசபையினரே கலந்து கொண்டனர். அது மட்டுமன்றி இந்து சமயத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டிய சுவாமி விவேகானந்தரை ஈழத்துக்கு வரவழைத்து, அவரது கருத்துக்களை ஈழத்தவரும் நேரடியாக அறியும் வாய்ப்பினை இச்சபை ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரந்துபட்ட பணிகளை இச்சபை முன்னெடுத்து இந்துசமயத்தின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பங்காற்றிய பெருமை சைவபரிபாலன சபைக்குண்டு.

**கொழும்பு சைவ வாலிபர் தேர்ச்சிச் சங்கம்**

கொழும்பிலே ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு சைவ வாலிபர் தேர்ச்சிச் சங்கம் ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிகளை விருத்தி செய்வதையும் சைவ சமயத்தைப் பலரும் அறியுமாறு செய்வ தையும் பிரதான நோக்கமாகக் கொண்டு செயற் பட்டதாக 19.08.1891இல் வெளிவந்த இந்து சாதனம் பத்திரிகையூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**விக்ரோறியா வாசிகசாலை**

ஈழம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இக்கால கட்டத்தில் இங்கிலாந்தில் கொண்டாடப் படும் விழாக்கள் இங்கும் கொண்டாடப்பட்டன. விக்ரோறியா மகாராணி முடிசூடிய 50வது ஆண்டு நிறைவு விழா 20.06.1887 அன்று யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடத்தப்பட்டது. இவ் விழாவின் ஞாபகார்த்தமாகவே விக்ரோறியா வாசிகசாலை அப்புக்காத்து சி.நாகலிங்கம் தலைமையில் ஸ்தாபனமாகியது. 1895இல் இவ் வாசிகசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது மின்றி, 1910ஆம் ஆண்டளவில் சைவ பரிபாலன சபை இதனைப் பொறுப்பேற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்து சமய அங்கத்தவர்களைக் கொண்டிருந்தமையும் சைவசமய பரிபாலன சபையின் கீழ் இயங்கியமையும் இதனை ஒரு சமயச் சார்பான நிறுவனமாக வெளிக்காட்டினாலும், இதன் நோக்கம் இளைஞர்களிடையே உலகின் நவீன போக்குகளையும் சிந்தனைகளையும் தெரியப்படுத்துவதன் மூலம் சுபீட்சமான எதிர் காலத்தை உருவாக்குவதாக இருந்தது. இப் பின்னணியில் ஈழத்தில் வெளிவந்த பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளோடு இந்திய மற்றும் பிறநாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாசிக் கின்ற வாய்ப்புக் கிடைத்ததெனலாம். மேலும் இந்நிறுவனத்தின் வாயிலாக சொற்பொழிவுகள், விரிவுரைகள் முதலானவையும் நிகழ்த்தப்பட்டன. உதாரணமாக இந்துப் பெண்களின் கல்வி குறித்து B.A சண்முகமும், நெவின்ஸ் செல்லத்துரை இந்தியாவின் 3வது தேசிய காங்கிரஸ் குறித்தும் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சைவமகாசபை**

1890ஆம் ஆண்டளவில் மட்டுவில் க.வேற்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு இந் நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் பன்னிரண்டு அங்கத்தவர்களையும் இச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டியங்கியதாக அறியமுடிகின்றது. சைவப் பிள்ளைகளுக்கெனத் தேவையான இடங்களில் பாடசாலைகளை ஸ்தாபிப்பது பிரசங்கிகளைக் கொண்டு சைவ சமயப்பிரசங்கங்களை நடத்துதல், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகை முதலானவற்றை அச்சிட்டுச் சைவர்களிடையே வழங்குதல் போன்ற பணிகளை நோக்கங்களாகக் கொண்டு இச்சபை செயற்பட முனைந்தது.

இந்துசாதனம் பத்திரிகைக் குறிப்பின் பிரகாரம் சாவகச்சேரியில் சைவமகாசபையொன்று அமைக் கப்பட்டு அதன் மூலம் சைவப் பிரசங்கங்கள் செய்யப்பட்டமையினால் கிறிஸ்தவப் பாடசாலை களுக்கு மாணவர்கள் செல்லாதவாறு தடுக்கப் பட்டனர் என்பதையும், இதனால் சைவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி பாதிரிமார்கள் துவைனம் என்ற அரச அதிபருக்கு கடிதம் எழுதியதையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதிலிருந்து சைவ மகாசபை இந்துக்களுடைய நிறுவன அமைப்பு, சமகால இந்து சமய வளர்ச்சி முதலானவற்றில் முக்கிய பங்கு வகித்ததென்பதைக் கண்டு கொள்ளலாம். ஆயினும் இந் நிறுவனம் பற்றி மேலதிக தகவல்களைப் பெறக்கூடிய சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை.

**இந்து இளைஞர் சங்கம்**

கிறிஸ்தவர்களின் சமயப் பரப்பு நடவடிக்கை களின் விளைவாக இந்துக்களிடையே தோற்றம் பெற்ற நிறுவன அமைப்புக்களில் ஒன்றாக இந்து இளைஞர் சங்கம் விளங்கியது. கத்தோலிக்கம் மற்றும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதமாற்ற நடவடிக்கைகளில் இளைஞர்களை மதம் மாற்றுவது முன்னிலை பெற்றிருந்தது. இதன் பொருட்டு முறையே கத்தோலிக்க இளைஞர் சங்கம் (1872), கிறிஸ்தவ இளைஞர் சங்கம் (1884) முதலியன உருவாக்கப்பட்டன. தம் மதங்களுக்கு இளைஞர் களை இணைத்துக் கொள்வதோடு, அம் மதங் களில் பற்றுடனும், ஒழுக்கத்துடனும் வாழ்வதற் குரிய நடவடிக்கைகளையும் இச் சங்கங்கள் மேற்கொண்டன.

கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களிலும் மற்றும் மதமாற்ற மையங்களிலும் மதமாற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கும், கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக மாறுவதைத் தவிர்ப்பதற்கும் அமைப்பொன்று தேவையென்பதை இந்துக்கள் உணர்ந்து கொண்டனர். இக்காலத்தில் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் இந்துக் கிரியை முறைகளைப் பின்பற்றவோ அவற்றை முறையாக அறிந்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை. கிரியை கள், அவற்றின் தத்துவம், விளக்கம் முதலான வற்றை அறிந்து கொள்வதிலும் அலட்சியமாக இருந்தனர். இப்பின்னணியில் இந்து இளைஞர் சங்கம் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாக விருந்தது. இக்கால இந்துசாதனம், இந்து ஓகன் பத்திரிகைகள் இது பற்றிய கருத்துக்களை முன் வைத்துள்ளன.

கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ இளைஞர் சங்கங்கள் ஈழத்தின் தென்பகுதி பௌத்தரிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி யமையால் அவர்களும் 1898இல் பௌத்த இளைஞர் சங்கமொன்றைத் தோற்றுவித்தனர். இந்துக்களின் தாயகமான இந்தியாவிலும் இந்து இளைஞர்களுக்கென ஓர் அமைப்பு இயங்கியது. இவையும் ஈழத்து இந்து இளைஞர் சங்க உருவாக்கத்துக்கு உந்துதலளித்தனவெனலாம். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டாலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இது சாத்தியமானது. 1903 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒன்பதாம் திகதி இந்து இளைஞர் சங்கம் நிறுவப்பட்டது. 1904 ஆம் ஆண்டு ஆவணி 27 ஆம் திகதி வெளிவந்த இந்து ஓகனில் இச் சங்கத்துக்குரிய யாப்பு வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக அமைப்பு முறை, செயற்பாடுகள் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

**வைதீக சைவபரிபாலனசபை**

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சைவமறுமலர்ச்சி, அந் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் தொடர்ந்ததை அவதானிக்க முடிகின்றது. ஆறுமுக நாவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தாகக் கருதப்படும் சைவமறுமலர்ச்சி, அவரது மறைவினை அடுத்து அவரது மாணவர்களாலும் அபிமானிகளாலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றின் விளைவாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல இந்துசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் ஒன்றே வைதீக சைவ பரிபாலனசபை யாகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்துசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட அறிஞர்களின் பங்களிப்புடன் இந் நிறுவனம் தோற்றம் பெற்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக் காட்டத்தக்கதாகும். சைவ பரிபாலன சபையிலும், வைதீக சைவபரிபாலனசபையிலும் பிரதான நிர்வாகியாக இருந்த த.கைலாசபிள்ளை,

**("சைவர்களை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒருங்கு கூட்டும்) உத்தேசத்தை இங்குள்ள சைவ பரிபாலன சபை, விவேகானந்த சபை முதலான சபைகள் மூலமாக முடிக்கக் கூடாதா? இதற்கென்றொரு சபை ஏற்றுக் கெனின், அந்த சபையார் தாங்கள் தொடங்கிய உத்தேசங் களையே முடிக்கக் கூடாமல் வருத்த மடையும் போது இதையுஞ் செய்யச் சொன்னால் எப்படிச் செய்வார்கள்?**"

என வினாவுவது வைதீக சைவ பரிபாலனசபையின் தோற்றத்திற்கான பின்னணியை விளக்குவதாக வுள்ளது. அது மட்டுமன்றிப் பல சபைகள் இருந்த போதும் இந்து சமய வளர்ச்சியின் பொருட்டு இன்னும் சில சபைகள் தேவையாக இருந்தன என்பதையும் இதிலிருந்து ஊகிக்க முடிகின்றது.

வைதீக சைவபரிபாலனசபை சைவ பரிபாலன சபையின் சில பணிகளை நிறைவேற்ற முற்பட்ட தையும் அச்சபையின் பெயரினை இறுதியாகக் கொண்டிருப்பதும் கவனிக்கற்பாலது. வைதிக சைவ பரிபாலன சபை 1904ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ஆம் திகதி வண்ணார்பண்ணை கிழக்கில் அமைந்திருந்த கண்மணி அம்மாள் சத்திரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிறுவனம் பெண் பாடசாலைகள் அமைத்தல், வைதிக சைவ சாஸ்தி ரங்கள் யாவுமடங்கிய புத்தகசாலை நிறுவுதல், வைதீக சைவ பரிபாலினி என்னும் பத்திரிகை வெளியிடுதல், பிரசாரகர்களையும் ஓதுவார் களையும் நியமித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது.

இந்நிறுவனத்தின் உள்ளார்ந்த பிரிவுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம் :

| | | |
|---|---|---|
| மகாசபை | - | (இலங்கை முழுவதிலுமுள்ள சைவர் அடங்கியது) |
| சிரேஷ்ட சபை | - | (மாவட்ட ரீதியாக அமைத்தல்) |
| உபசபை | - | (மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தென்மராட்சி, வடமராட்சி போன்றவை) |
| கோவிற்பற்று சபை | - | (கோவிற்பற்று என்னும் பிரிவுகளுக்குரியவை) |
| கிராமசபை | - | (கிராமங்களுக்குரியவை). |

இந்தியாவிலும் இவ்வாறான பிரிவுகள் ஏற்படுத் தவும் திட்டமிடப்பட்டு, அதற்குரிய விக்கியாபனம் "முந்துமின்!! முந்துமின்!!" என்ற தலைப்பில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும் அவதானிக்கலாம்.

**விவேகானந்த சபை**

இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில் சர்வ சமய மகாநாட்டில் உரையாற்றியதன் மூலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். இந்த அறிஞர் அமெரிக்காவில் ஆற்றிய உரையை அடுத்து அவரை முதன் முதலாக வரவேற்கும் பேறினை ஈழம் பெற்றுக் கொண்டது. சுவாமி விவேகானந்தர் தனது உரைகள், நடவடிக்கைகள் மூலம் இந்துசமயத்தை வீறுடையதாக்கினார். ஈழத்தின் தென்பகுதியிலும், வட பகுதியிலும் ஆற்றிய உரைகளால் சமய எழுச்சி ஊக்குவிக்கப்பட்டது. சைவ சமயத்தையே முதன்மையப்படுத்திய ஈழத்தவர்கள் விவேகானந் தரின் வருகையுடன் இந்து என்ற பெரும் அமைப் பினை உள்வாங்கிக் கொண்டனர். இதனைக் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

"**யாழ்ப்பாண இந்துக்களிற் பெரும்பான்மை யினர் சைவர்கள், சைவப்பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல மெல்ல வேதாந்தத்தை ஒப்புக் கொள்ள முடியாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானாற் சுவாமி விவேகானந் தரின் போதனைகளும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யா விட்டாலும், பெரும்பாலா னோரின் குறுகிய நோக்கையும் கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது.**"

சுவாமி விவேகானந்தர் 1902ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம் திகதி சமாதியடைந்தார். இதனை யிட்டு இந்துசாதனம் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு அமைகின்றது.

"**..... அவருடைய ஒப்பற்ற பேச்சாற்றலாலும் சமய உணர்வின் சுடரொளியாலும் இந்துக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டு மல்லாது கிறிஸ்தவர்களும் கூடியிருந்த அவையோரை உணர்ச்சி பொங்க சிலிர்க்க வைத்தது. சுவாமிஜீயின் வருகை இங்கு இந்து சமய மறு மலர்ச்சிக்குரிய நிகழ்வாக என்றென்றும் நினைவுக்குரியது"**

சுவாமிகளது வருகை ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை விளங்கிக் கொள்ள மேற்கூறிய கருத்துக்கள் துணை செய்கின்றன. இப் பின்னணியில் அவர் சமாதியடைந்து ஒன்பதாவது நாளன்று கொழும்பு விவேகானந்த சபை தோற்றுவிக்கப் பட்டது. 1902ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விவேகானந்த சபை உதயமானது இவை பெரும்பாலும் இந்து இளைஞர் அமைப்புக்களாகச் செயற்பட்டு, பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

சைவசமய மறுமலர்ச்சியின் பொருட்டு நாவலரால் தோற்றுவிக்கப்பட்ட சைவநிறுவனங்களை அடுத்து, இந்து சமயத்தைப் பேணிப் பாதுகாத்து, வளர்ச்சியடையச் செய்வதற்கு வேறும் பல இந்து நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் வாயிலாக ஈழத்து இந்துக்களிடையே சமய ஒற்றுமை, சமய உணர்வு, சமயத்தில் பற்று போன்றன ஏற்படுத்தப்படலாயின. குறிப்பாக அக் காலத்தில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து இந்து சமயத்தை மீட்டெடுப்பது இந்நிறுவனங்களின் தலையாய பணியாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. நிர்வாகக் குறைபாடுகள், நிதிப் பற்றாக் குறை, அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் முதலியன இந்நிறுவனங்களில் காணப்பட்ட போதும் சமய வளர்ச்சியின் பொருட்டு தம்மால் இயன்ற பணிகளை முன்னெடுத்தமை சிறப்புக்குரிய தாகும். இந்து நிறுவனங்கள் மேற்கொண்ட சமய நடவடிக்கைகள் 19ஆம் நூற்றாண்டில் மட்டுமன்றி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல்வேறு நிலைகளில் சமய வளர்ச்சியை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன. இவ்வகையில் வைதீக சைவ பரிபாலனசபை, விவேகானந்தசபை போன்ற வற்றின் பணிகள் சுட்டிக்காட்டத்தக்கவையாக அமைகின்றன. சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டில் இந்து சமய நிறுவனங்கள் சமய வளர்ச்சியில் பிரதான பங்கு வகித்தனவெனக் கூறலாம்.

## உசாத்துணை நூல்கள்


- த.கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம் (1955)
- இந்து தா்மம் 1992-93
- இந்து தா்மம் 1993-94
- இந்துசாதனம் பத்திரிகை.
- வைதீக சைவ பரிபாலினி பத்திரிகை
- Hindu Organ
- Selected speeches of Ponnampalam Ramanathan in the Legislative Council of Ceylon 1876 to 1894
- Kumari Jeyawardene, Nobodies to Sombodies, the Rise of the Coloniel Bourgeoisie in SriLanka (2000).


**குறிப்பு :** ஈழத்து சைவசமய மறுமலர்ச்சி ஆறுமுகநாவலரால் முன்னெடுக்கப்பட்ட போது 'சைவம்' என்பதே முன்னிலைப்படுத்தப்பட்டது. அவரது மறைவினை அடுத்து வந்த காலகட்டத்தில் (1879) விவேகானந்தா் வருகை முதலிய காரணங்களால் 'இந்து' என்பது முன்னிலைப்படுத்தப்படுவதைக் காணலாம். ஆயினும் இவ்விரு சொற்களும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. சைவ பரிபாலனசபை, இந்து சாதனம், இந்துக் கல்லூரி, வைதீக சைவ பரிபாலனசபை போன்றவற்றில் இவ்விரு பெயர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இக்கட்டுரையில் நாவலரோடு தொடர்புபடுத்துமிடத்து 'சைவம்' என்றும், அவருக்குப் பின்னர் வந்தவர்களோடு தொடர்புபடுத்துமிடத்து 'இந்து' என்றும் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பாடல் காட்டும் முருகன்

செல்வி செல்வஅம்பிகை நடராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

எமக்குக் கிடைக்கின்ற பழைமையான இலக்கியங்களாகக் கருதப்படுபவை சங்க இலக்கியங்கள் ஆகும். அகம், புறம் என்ற இருவகைப் பொருள் மரபுகளைக் கொண்டு பல புலவர்கள் பாடிய பாடல்கள் தொகை நூல்களாகவும், நீண்ட பாட்டு நூல்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. சங்க காலத்துக்கு அடுத்து வரும் சங்க மருவிய காலப் பகுதியில் அவைதிக சமயங்களான சமண, பௌத்தங்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அறநீதி நூல்கள் தோற்றம் பெறுகின்றன. சங்ககாலத்துக்குப் பிறகு குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த சமய மறுமலர்ச்சிக் காலமாக அமைவது பல்லவர் காலம் ஆகும். அக் காலத்தில் இறையடியார்களின் உள்ளங்களில் ஊற்றெடுத்த பக்தி உணர்வு சைவத் திருமுறைகளாகவும் வைணவப் பிரபந்தங்களாகவும் உருவெடுத்தன. சோழப் பெருமன்னரின் ஆட்சி முறை பல்லவரின் ஆட்சி முறையிலிருந்து பெரிதும் வேறுபட்டது. சோழராட்சியில் வறுமை, பிணி என்பன நாட்டைவிட்டு அகல வளம் செறிந்து விளங்கியது. கல்வியறிவும், கலைகளும் நன்னிலை அடைந்தன. உயிர்த்துடிப்பான இலக்கியங்கள் பல எழுந்தன. சோழப் பெருமன்னரின் வீழ்ச்சி தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமையமாகும். இஸ்லாமியரின் படையெடுப்பால் நலிவடைந்திருந்த இந்து சமயத்தையும், தமிழர் பண்பாட்டையும் பேண வேண்டும் என்ற உணர்வு நாயக்கர் காலத்தில் உருவாகியது. கோயில்களின் வரலாற்றினையும், இறைவனின் அருளையும் அற்புதச் செயல்களையும் பாராட்டுவனவாக பல பிரபந்தங்களையும் புராணங்களையும் இயற்றினர்.

இக் காலத்தில் பாடல்களைப் பாடிய புலவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள். தம்மைப் போற்றிய புரவலர்களையும், வள்ளல்களையும் மகிழ்விக்குமாறு கவிதைகளைப் பாடியுள்ளனர். இவர்கள் பாடிய தனிப்பாடல்கள் 'தனிப்பாடல் திரட்டு' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது. தனிப்பாடல்களில் சிவன், திருமால், அம்பிகை, விநாயகர், முருகன் முதலிய தெய்வங்களின் திருத்தலங்களும், திருநாமங்களும் பெருமைகளும் சிறப்பித்துப் பாடப்பட்ட பல பாடல்கள் காணப்படுகின்றன.

**முருகன் புகழ் பாடிய புலவர்கள்**

பல புலவர்கள் முருகனின் புகழைப் பல்வேறு வகையில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு அமைகின்றன:

01. ஔவையார்
02. காளமேகம்
03. பொய்யாமொழிப் புலவர்
04. ஒப்பிலாமணிப் புலவர்
05. பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான்
06. சொக்கநாதப் புலவர்
07. பலபட்டை சொக்கநாதப் புலவர்
08. நமச்சிவாயப் புலவர்
09. இராமசாமிக் கவிராயர்
10. சுந்தரக் கவிராயர்
11. இராமகவிராயர்
12. வெறி மங்கை பாகக் கவிராயர்
13. முத்துராமலிங்க சேதுபதி
14. கொட்டாம்பட்டிக் கருப்பையாப் பாவலர்
15. அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

இவர்களைத் தவிர பெயர் குறிப்பிடப்படாத பல புலவர்களுடைய பாடல்களும் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றன. அப்பாடல்களிலும் முருகனின் பெருமைகள் விதந்து பேசப்படுகின்றன.

**குன்றுதோறாடும் குமரன்**

பழந்தமிழர் நிலங்களை ஐந்து வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகப் பாகுபாடு செய்தனர். நிலங்களின் இயல்புக் கேற்ப அக்கால மக்களின் வாழ்வியலும் அமைந்தது. ஒவ்வொரு நிலங்களுக்கும் சிறப்பாக தெய்வம், உணவு, மரம், விலங்கு, பறவை, மலர், பறை, பண், தொழில், நீர் என கருப்பொருள்கள் வகைப் படுத்தப்பட்டிருந்தன. இயற்கை நிறைந்த இடங் களை இறை வழிபாட்டிடங்களாகக் கொண்டனர்.

மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சி என்னும் நிலப் பெயர் மலைச் சாரலில் மலரும் குறிஞ்சி என்னும் மலரின் பெயரால் உண்டாகியது. நீல நிறமுடையதான இக்குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்வது. அழகும், மணமும் நிறைந்தது. அருமருந்தாகிய தேனைக் கொண்டு விளங்குவது. நிலப்பகுதிகளில் முதலில் தோன்றியது குறிஞ்சி நிலம் என்பது ஆய்வாளர் கருத்து. குறிஞ்சி நிலத் திற்குரிய தெய்வம் சேயோன் ஆவான். இதனை

**'சேயோன் மேய மைவரை உலகமும்'**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். குறிஞ்சி நிலத்தில் விளைந்த மலைநெல்லும், தினை யரிசியும், பலாவின் கனியும், வள்ளிக் கிழங்கும், தேனும், செங்காந்தள் மலர்களும் முருகனுக்கு மடைப் பொருளாயின. நிலங்களில் முதலில் தோன்றியதும், இயற்கை வளம் நிறைந்ததும், உயர்ந்ததும், மக்களுடைய கண்களுக்குத் தொலைவில் இருந்தே தெரியக் கூடியதுமான மலையை உயர்ந் தோனாகிய முருகனுக்கு இருப் பிடம் ஆக்கினர். முருகனை 'மலைக்கிழவோனே' என நக்கீரர் பாராட்டுகின்றார். 'மலைவிருத்தன்' என்கிறார் அருணகிரிநாதர். மலையிலே விரும்பி உறைந்தாலும் இயற்கைமிகு இடங்களிலும் பரந்து விளங்குவான் என திருமுருகாற்றுப்படை சுட்டுகின்றது.

**'காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடப்பும்**
**மன்றமும் பொதியினும் கந்துடை நிலையினும்.'**

மற்றைய தெய்வங்களுக்கு இல்லாத சிறப்போடு விளங்கும் ஆறுபடை வீடு முருகனுக்கே உள்ளது. இந்த ஆறுபடை வீடும் பல வகையால் பெருமை உடையது. முருகன் விரும்பி உறையும் ஆறுபடை வீடுகளையும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் தொகுத்துக் கூறியுள்ளார். முருகன் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்ற ஆறு திருத்தலங்களையும் நிரல்படுத்தி முருகப் பெருமானின் பெருமைகளைப் பேசுகின்றார்.

தனிப் பாடல்களில் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணிகை, மயிலை, விராலிமலை, திருச்செங் கோடு, கோணகிரி, குன்றக்குடி முதலிய தலங்களின் சிறப்பும் முருகனின் திருவருட் சிறப்பும் பாடப் பட்டுள்ளன. நமச்சிவாயப் புலவர் திருத்தணி கையின் சிறப்புப்பற்றி,

**பங்கயமும் ஏரிகளும் பாவையர்கை யும்மணியும்**
**தங்கவளை சூழும் தணிகையே.**

தாமரை மலர்களும், பெரிய குளங்களும் மாதர் கைகளில் இரத்தினங்களும் பொன்வளை யல்களும் நிறைந்த திருத்தணிகை என்று தணிகையின் இயற்கைச் சூழலையும், மக்களின் வளத்தையும் பாடியுள்ளார்.

முத்துராமலிங்க சேதுபதி என்ற புலவரின் பாடலில்,

**திருவே ரகங்கொடுமூர் தென்சீ ரலைவாய்**
**திருவாவி னன்குடிசெங் கோடு - திருமயிலந்**
**தென்பரங்குன் றுதிருத் தணிகை சோணகிரி**
**யன்பரகங் குகன்வீ டாம்.**

என முருகனின் தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### முருகா என்னும் நாமங்கள்

**'ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டோமோ'**

என்பது திருவாசகம். இறைவன் ஒருவனே அவன். பல சமயத்தவர்களால் பலவாறு பெயரிட்டுப் போற்றப்படுகின்றான். ஒரு நாமமும் ஓருருவமும் இல்லாத இறைவன் அடியவர்கள் எப் பெயரைக் கொண்டு அழைத்தாலும் அந்த வடிவம் தாங்கி விரைந்து வரமருளுவான்.

**'எது பாவித்திடினும் அதுவாக வந்தருள்செய் எந்தை'**

என்கிறார் தாயுமான சுவாமிகள். ஒவ்வொரு வழிபாட்டாளனும் தான் விரும்பிய வடிவத்தைத் தெரிந்து அவ்வடிவத்திற்கு இட்ட பெயரே அவன் பூசிப்பதற்குரிய நாமமும் ஆகிவிடுகின்றது. இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமத்தின் பெருமையை சமயப் பெரியவர்கள் அழுத்தமாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

**'குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுய ராயின எல்லாம்**
**நிலம்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநில மளிக்கும்**
**வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்**
**நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.'**

என்று திருமங்கை ஆழ்வார் நாராயண நாமத்தின் பெருமையை விதந்து பாடுகின்றார். திருஞான சம்பந்தரும்.

**காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினும் மெய்ப் பொருளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

என திருநல்லூர் பெருமணச் சோதியிலே கலக்கும் போது நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார்.

இறை திருநாமங்களில் முருகன் நாமமும் சிறந்தது. முருகன் என்ற சொல் முருகன் அடியாகப் பிறந்தது. முருகு என்னும் சொல்கள், இளமை, மணம், முருகன், திருவிழா, அழகு, தெய்வத்தன்மை, என பல பொருள்களைக் குறிக்கும். இவற்றுள் அழகு, இளமை, மணம், தெய்வத் தன்மை என்ற நான்கு பொருள்களுமே சிறப்புற்று விளங்குகின்றன. இந் நான்கு சிறப்பையும் உடையவன் முருகன். ஆறுதிருமுகங்களுடனும் பன்னிரு திருக்கரங்களுடனும் அழகு, இளமை, மணம், தெய்வத்தன்மை என்ற நான்கும் ஒருங்கே பொருந்த பொலிந்து விளங்குகின்றான்.

தனிப் பாடல்களில் முருகனை குமரன், பிள்ளை, முருகன், செந்திலான், செட்டி, வேலன், குகன், கந்தன், செவ்வேள், சண்முகன் எனப் பல்வேறு நாமங்களால் முருகனை விளித்துள்ளனர். முருகனுக்கு நாமங்கள் பலவாக இருந்த போதிலும் முருகா என்னும் நாமம் சிறந்தது என சமயாசாரிகள் வாக்கினால் அறியலாம்.

**'முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில் அருகாத செல்வம் அடைவர்'**

என சிதம்பர சுவாமிகள் பாடி மகிழ்கின்றார்.

**'அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்**
**வெஞ்சமரில் அஞ்சல் என வேல்தோன்றும் - நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா என்று ஓதுவார் முன் '**

என்ற நக்கீரர் பாடல் துன்பம் நேர்கையில் முருக நாமத்தை ஓதுவார் முன் ஆறுமுகன் தோன்றுவான் என்பதை உறுதிபடக் காட்டுகின்றது.

### அழியா அழகன்

கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற ஒன்று அழகு என்று பெயர் பெறும். இறைவனுடைய திருவுருவங்கள் பலவாக இருந்தாலும் அழகுடைய திருமேனிகளிடத்தில் அடியவர்கள் அதீத ஈடுபாடு கொள்வர். இந்து சமயத்தில் முருகனும், திருமாலும் பேரெழிற் கோலம் கொண்டு விளங்குகின்றார்கள். ஆழ்வார்கள் திருமாலின் அழகைப் பலவாறு வருணித்துப் பாடியுள்ளனர்.

முருகப் பெருமானுடைய பேரழகைப் பற்றி அடியவர்கள் பலவாறு பாராட்டிப் பாடியுள்ளனர். இளமையும் அழகும் இணைந்து நின்றால் கண்ணைக் கவரும் கவர்ச்சியும் தானே வந்து விடுகின்றது. அழகு, இளமை, மணம், தெய்வத் தன்மை என்ற நான்கு பொருளும் சிறந்து நின்று அழியா அழகனாகின்றான். சூரன் முருகனுடைய பேரெழிலில் மயங்கி நின்ற வகையினை கச்சியப்பர் கந்தபுராணத்தில் அழகாகக் காட்டியுள்ளார்.

**ஆயிர கோடி காமர் அழகெல்லாம் திரண்டொன் றாகி**
**மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்**
**தூயநல் எழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்**
**மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.**

உலகம் காமனைப் பேரழகன் என்று சொல்கின்றது. காமனும் எம் பிரானுக்கு ஈடாக மாட்டான். இவனுடைய திருவடியின் பேரழகுக்கு ஆயிரம் கோடி காமன்கள் அழகு சேர்ந்தாலும் ஒப்பாகார். திருப்பெரும் வடிவத்துக்கு உவமை வகுக்க வல்லவர் யார்? என வியந்து நிற்கின்றான்.

திருச் செங்கோட்டு முருகப் பெருமானின் திருவுருவப் பேரெழிலைக் கண்டு அருணகிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதருடைய உள்ளம் பேரின்பம் அடைகின்றது. இந்த இரண்டு கண்களினால் மாத்திரம் தானே நான் காண்கிறேன்? பல கண்கள் பிரமதேவன் தந்திருந்தால் இன்னும் நன்றாக அனுபவித்திருக் கலாமே என்ற வேணவா அவருள் எழுகின்றது.

**மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு**
**மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதியினில்**
**சேல்அூர் வயல்பொழில் செங்கோ டனைச் சென்று கண்டு தொழ**
**நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான்முகனே.**

திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் குமரப்பெருமானைப் படிக்காசுத் தம்பிரான் என்னும் புலவர் இனிய பாடல்களால் பாடியுள்ளார். செங்கோட்டில் திகழ்கின்ற முருகப்பெருமானின் இளமை அழகையும், மேனியின் வண்ணப் பொலிவையும், வீரச் சிறப்பையும் வியந்து பாராட்டுகின்றார்.

**சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை**
**பொன்நல் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும் புகழும் பிள்ளை**
**சொல்நெஞ்சு உழல்கின்ற சூரனைக் கொன்ற சொக்கேசர் பிள்ளை**
**வண்ணக்கிளிப் பிள்ளை செந்தில் குறத்திக்கு மாப்பிள்ளையே!**

முருகனுக்குரிய திருநாமங்களில் பிள்ளை என்பதும் ஒன்றாகும். அத் திருநாமத்தால் இப் பாடலில் முருகன் குறிக்கப்பட்டுள்ளான். ஒருவருக்கு அழகாகத் தெரிவது மற்றொருவருக்கு அழகற்றதாகத் தெரியக்கூடும். அழகின் இரசனையில் கூட மாறுபாடான கருத்து உண்டு. இது எல்லா வற்றுக்கும் மேலாக உண்மையான உறுதியான அழியா அழகு உண்டென்றால் அது முருகனின் திருக்கோல அழகுதான். முருகன் மேல் அன்பு கொண்டவர்கள் மட்டுமல்லாமல் பகைவனாகிய சூரனே பாராட்டும் அழகு. அனைவர் உள்ளங் களையும் உருகவைக்கும் அழகு. அவனுடைய அழகின் இரசனைதான் மனிதனாகிய எமக்குப் பேரின்பத்தைத் தரக்கூடியது.

**வழிக்குத் துணைவன்**

பெரியோரைத் துணைக் கோடல் வேண்டு மென்பதற்கு வள்ளுவர் ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார். 'துணையோடு அல்லது நெடுவழி போகேல்' என்பது சான்றோர் அறிவுரை. பெரியவர் களுக்கு எல்லாம் பெரியவனாக இருப்பவன் முருகன். வாழ்க்கைப் பயணத்தில் அவனே எமக்கு உற்றதுணையாவான். தாயாக தந்தையாக நல்லாசானாக அனைத்துமாக அமைபவன்அவனே.

**'விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி**
**வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே'**

என்ற கந்தர் அலங்காரப் பாடல் இதனை எமக்கு உணர்த்துகின்றது. தொண்டை நாட்டுப் புலவரான சொக்கநாதர் தமக்கு இவ்வுலகில் முருகனைத் தவிர வேறு துணையில்லை என்று கூறுகின்றார்.

**துயிலையி லேஇடர் துன்னையி லேதெவ்வர் சூழையிலே**
**பயிலையி லேஇருள் பாதியி லேபசும் பால் அனத்தை**
**அயிலையி லேஇயது ஆமையி லேநமக்கு யார்துணைதான்**
**மயிலையி லேவளர் சிங்கார வேலர் மயிலையிலே.**

துயிலும் பொழுதும், துன்பம் நெருங்கி வரும் பொழுதும், பகைவர் சூழ்ந்து கொள்ளும் பொழுதும், நள்ளிரவில் நடக்கும் பொழுதும், நோய் வந்த காலத்தில் பாலொடு கூடிய சோற்றினை உண்ணும் பொழுதும் மூப்புப் பருவம் வந்த பொழுதும் மயிலைச் சிங்கார வேலனைத் தவிர வேறு துணையில்லை என சொக்கநாதப் புலவர் தெளிவுபடுத்துகின்றார்.

இந்து சமயம் அநுபூதிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இறையருளைப் பெறுவதற்கு எமது மனதில் ஆழப்பதிந்து கிடக்கும் அகந்தையை அகழ்ந்து எறிந்து விட வேண்டும். நான், நீ என்ற வேறுபாடு இல்லாத நிலையில் பேரின்ப நிலை வந்தடைகின்றது. 'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. இறைவனின் கருணையை, அருளைப் பெறுவதற்கு எம்மை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குன்றக் குடியாய் குமரா குகாவென்னைக்**
**குன்றாக் குடியாய்ஆட் கொண்டருள்வாய் - அன்றுவந்து**
**மன்றாடி னாற்கு வருகுருவே யானுநின்பான்**
**மன்றாடி னேன்கைவிடா மல்.**

கருப்பையாப் பாவலர் என்னும் புலவர் குன்றக் குடிக் குமரனிடம் தன்னை ஒப்படைத்து ஆட்கொண்டு அருளும்படி மன்றாடிக் கேட்கின்றார். முத்துராமலிங்கச் சேதுபதிப் புலவர் பேரின்பவீட்டை அடைவதற்குரிய வழி எது என்பதை தன் நெஞ்சுக் குக் கூறுகின்றார்.

**காடுதொறு மோடுவதென் காரணமோ நெஞ்சே நீ**
**வீடுபெறல் வீடலது வேறிலையே - தேடிநிதம்**
**வேலணிசெவ் வேளடியர் மெல்லிய செம் போதனைய**
**காலணிதல் சென்னி கடன்.**

நெஞ்சே காடுகள் எங்கும் போய்த் திரிவதன் காரணம் என்ன? வீடுபேறு அடைவதுதான் வினை யைக் களைவதற்கு ஒரு வழி. முருகன் அடியவர் களுடைய திருவடிகளை தினந்தோறும் தேடி சிரமேற் கொள்ளுதல் உன் கடமையாகும். சுந்தர மூர்த்தி நாயனார் போன்றவர்கள் பின்பற்றிய அடியார் வழிபாட்டு மரபின் தொடர்ச்சி நிலையினை இப்பாடல் நினைவூட்டுகின்றது.

### முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான்

இந்து சமயப் பக்திப் பாடல்களில் இறை வனைப் பழிப்பன போல அல்லது எள்ளி நகை யாடுவது போன்ற பாடல்கள் காணப்படுகின்றன. இறைவனின் பெருமைகளை நேரடியாகப் புகழாமல் நகையாடுவது போன்ற முறையில் வெளிப்படுத் தப்பட்டிருக்கும். தமிழ் இலக்கிய மரபில் இதனை 'பழிப்பது போல புகழ்தல்' என்பர். வடமொழியாளர் நிந்தாஸ்துதி என்பர்.

சைவசமய வளர்ச்சிக்கு வித்திட்டவர் காரைக்கால் அம்மையார். இவரது அற்புதத் திருவந்தாதியில் இவ்வுத்திமுறையை அதிகம் காணலாம்.

**'நீயுலக மெல்லாம் இரப்பினும் நின்னுடைய**
**தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய**
**மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி**
**விட அரவம் மேலாட மிக்கு'.**

இவருக்கு அடுத்த நிலையில் சுந்தரர் இம்முறையைக் கையாண்டுள்ளார்.

**திங்கள் தங்கு சடையின் மேலோர்**
**திரைகள் வந்து புரளவீசும்**
**கங்கை யாளேல் வாய்திறவாள்**
**கணபதியேல் வயிறுதாரி**
**அங்கை வேலன் குமரன் பிள்ளை**
**தேவியார் கோற்றட்டியாளால்**
**உங்களுக்காட் செய்ய மாட்டோம்**
**ஓணகாந்தன் தளியுளீரே**

குடும்பச்சூழல், புராணக் கதைகளை மையப் படுத்தி கற்பனையின் அடிப்படையில் எழுந்தவை யாக இப்பாடல்கள் அமைகின்றன. சோழ மன்னர் காலத்தைப் போல நாயக்கர் காலத்தில் புலவர்கள் பெரும்பாலும் ஆதிரிக்கப்படவில்லை. வாழ்த்துக் கவிகளுக்குப் பதிலாக வசைக்கவிகள் தோன்றின. மக்கள் மேல் வசைக்கவிகள் பாடுவதோடு அமையாது தெய்வங்கள் மீதும் வசைக்கவிகள் புனைந்தனர். 'வசைபாடக் காளமேகம்' என்று பெயர் சொல்லு மளவிற்கு வசைக்கவிகள் மலிந்திருந்தன. காள மேகப் புலவர் முருகன் மேல் நிந்தாஸ்துதி பாடியுள்ளார்.

**அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி**
**ஒப்பரிய மாமன் உறிதிருடி - சப்பைக்கால்**
**அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கு இங்கு**
**எண்ணும் பெருமை இவை.**

முருகனின் தந்தை சிவபெருமான் பிச்சை யெடுத்து உண்டு வாழ்பவன். தாய் மலையில் பிறந்த நீலி. பெண் கொடுத்த மாமனோ உறியில் வைத்திருக்கும் வெண்ணெய்யைத் திருடுகின்ற வன். சப்பைக் கால்களையுடைய அண்ணன் பெரிய வயிற்றை உடையவன். ஆறுமுகத்தானுக்குப் பெருமையாக மதிக்கும் சிறப்புக்கள் இவையாகும் என்பது இப்பாடலின் பொருள். முருகனின் குடும்பப் பின்னணியைக் கூறி அவன் மேல் நிந்தாஸ்துதி பாடப்பட்டுள்ளது.

**நாறுங் கடம்பு நடையுடையும் பாவனையும்**
**வீறுமுனக் கேன்பழநி வேலவா - ஆறுதனில்**
**வெட்டுண்டா னுங்களையன் வெண்ணெய்தனை யேதிருடிக்**
**கட்டுண்டா னுங்களம்மான் காண்.**

என்ற பாடலில் பழநிவேலவா, வாசனையுடைய கடப்பம் மாலையும் கம்பீரமான நடையும் உடையும், அழகிய தோற்றமும் இறுமாப்பும் இனி உனக்கேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய தகப்பன் திருநெல்வேலியில் இடைய னால் வெட்டப்பட்டார். உனது மாமனார் திருமால் இடையர் சேரியில் வெண்ணெய் திருடிக் கட்டப் பட்டு அடிபட்டார் என முருகன் மேல் நிந்தாஸ்துதி பாடப்பட்டது. பக்தி இயக்க காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட நிந்தாஸ்துதி மரபு நாயக்கர் காலத்திலும் தொடர்ந்து வந்துள்ளது.

**காதலர்க்கு அருள்பவன்**

பழந்தமிழர் நிலங்களை ஐந்து வகை யாகப் பாகுபடுத்திய போது தம்முடைய வாழ்வி யல் ஒழுக்கங்களையும் அந்நிலத்தின் இயல்புக் கேற்ப அமைத்துக் கொண்டனர். மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சிக்குப் புணர்தல் ஒழுக்கமாகியது. காதலர் கூடுவதற்கு உகந்த பெரும் பொழுதாகக் கூதிர் காலமும் (ஐப்பசி, காரத்திகை) சிறு பொழுதாகிய யாமமும் சிறந்த தாகியது.

குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். முருகன் காதலர் ஒன்றுபடுவதற்குரிய திருவருளைச் செய்பவன் என்று அக்காலத்து மக்கள் நம்பிக்கை கொண்டனர். சிறப்பாகப் பரிபாடலில் செவ்வேள் பற்றிய பாடல்களில் முருகனை வழிபடும் முறை களும் நம்பிக்கைகளும் இடம் பெற்றுள்ளன. சங்க அகத்திணைச் செய்யுட்களில் வந்துள்ள உலகி யற் காதல் பக்திப் பாடல்களிலே தெய்வீகக் காதலாக உருவெடுக்கின்றது. தலைவனிடத்தில் தலைவி கொண்ட காதல் இறைவனிடத்தில் அடியார் கொண்ட அன்பாக மாறுகின்றது. அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், ஆண்டாள் போன்றவர்களின் பாடல்களில் இம் மரபைக் காணமுடிகின்றது.

**சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே**
**பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்**
**முன்மாலை நகுதிங்கள் முகில்விளங்கும் மதிச்சென்னிப்**
**பொன்மாலை மார்பனென் புதுநலமுண் புகழ்வானோ.**

தன்னைக் காதலித்து அநுபவித்துவிட்டுப் பிரிந்த காதலன் மீண்டும் வருவது தாமதமாகும் நிலையில் காதலி அடையும் பரிதவிப்பின் வெளிப் பாட்டை அப்பரின் மேற்படி பாடல் காட்டுகின்றது.

முருகன் மேல் ஆன்மீகக் காதல் கொண்டு துயருறும் தலைவியின் உணர்வு நிலைகளைப் பல்வேறு வகைகளில் புலவர்கள் காட்டத் தவறவில்லை.

**வேலா விராலிமலை வீராவுனக் கொருபெண்**
**மாலாகி யேநின்று வாடுகிறாள் - நீலான**
**உற்பலக் கயற்கணிச்சி யுத்தரித் திடச்சமர்த்தி**
**அற்பசிற்றி டைக்கொடிச்சி யாள்.**

குறிஞ்சி நிலப் பெண்களை கொடிச்சி என அழைப்பர். இவள் விராலி மலை முருகன் மேல் காதல் கொண்டு வாடுவதை இப்பாடல் சித்திரிக் கின்றது. மற்றொரு பாடல் திருச்செந்தூர் குமரனிடம் அன்னப் பறவையைத் தூதாக அனுப்பும் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

**செந்திற் குமரன் திருவழகைக் கண்டவுடன்**
**வந்திருக்கும் மாரன் வதைக்கின்றான் - அந்திக்கு**
**முன்னமே சென்றென்றன் மோகமெலாஞ் சொல்லி வந்தால்**
**அன்னமே கும்பிடுவேன் யான்.**

தலைவி ஒருத்தி திருச்செந்தூர் குமரனின் திருவழகைக் கண்டு மோகித்து நிற்கின்றாள். செந்தூர்க் குமரனிடம் தன் காதலை மாலைக் காலத்துக்கு முன்பே தெரிவித்து விடும்படி அன்னப் பறவையைத் தூதாக அனுப்புகிறாள்.

**நிறைவு**

தமிழகத்தில் இஸ்லாமியப் படையெடுப்பால் நலிவடைந்திருந்த இந்து சமயத்தையும், பண்பாட் டையும் நிலைநிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. காலத்தின் தேவைகருதி சமயம் சார்பாகப் பாடல் கள் எழுந்தன. தலபுராணங்களாகவும், பிரபந்தங் களாகவும் மட்டுமன்றி உதிரியாகவும் கடவுளர் மீது பாடல்கள் எழுந்தன. இந்த வகையில் முருகன் மீது பாடல்கள் பாடப்பட்டன. தனிப் பாடல்களில் முருகனின் தலங்கள், திருநாமங்கள், அருட்செயல் களும் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். இன்றைய சூழ்நிலையில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கும் எமது இந்து சமயத்தைப் பாதுகாக்கும் கடப்பாடு ஒவ்வொரு இந்துவுக்கும் உண்டு. இன்றைய இளந்தலை முறையினர் இந்து சமயத்தையும் பண்பாட்டையும் கட்டியெழுப்புவதில் திடசங்கல்பம் கொள்ள வேண்டும். இந்து சமயத்தை நிலைநிறுத்து வதற்கு சமய இலக்கியங்களைப் படைப்பதிலும் பேணுவதிலும் சமயப் பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றுவதிலும் உறுதுணையாக நிற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் முருகன் பாடல்கள்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
இயக்குநர் / ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பண்டைக்காலம் தொடக்கம் இன்று வரையும் தமிழ் மக்களின் வணக்கத்துக்குரிய கடவுளாக முருகன் திகழ்கிறான். சங்க இலக்கியங்களில் பண்டைத் தமிழருடைய தெய்வமாக முருகன் போற்றப்படுகிறான். அழகுத் தெய்வமாக, போர்த் தெய்வமாக அவன் சித்திரிக்கப்படுகிறான். "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" என்று சங்க இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. போர்த் தெய்வமாகிய கொற்றவை யின் மகனாக முருகன் சித்திரிக்கப்படுகிறான். "போர்க்களம் இரத்தத்தாற் செந்நிறத்தையுடைய களமாகும்படி அசுரர்களைக் கொன்று இல்லை யாக்கிய இரத்தத்தாற் சிவந்த அம்பையும், சிவந்த கொம்பையுடைய யானையையும், உழல இட்ட வீரக்கழலையுமுடைய முருகக் கடவுளுக்குரிய இம்மலையானது சிவப்பாகிய பூங்கொத்துள்ள காந்தள் மலர்களையுடையது" என்னும் பொருள மைய,

**"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
சேங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"**

என்னும் குறுந்தொகை முதலாவது பாடல் அமைகின்றது. அழகிய முருகனுக்கு அழகு செய்வதாக அவனுடைய மார்பின் ஆரம் விளங்குவதை. "நெடுவேள் மார்பின் ஆரம்போல" என்று அகநானூறு (120:1-3) கூறுகின்றது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் நாட்டிலே முருக வழிபாடு அருகிவரத் தொடங்கியது. சிவன் முழுமுதற் கடவுளாகத் திருமுறைகளிலே பாடப்படுவதைக் காண்கிறோம். சிவனுடைய மகனாகச் சிற்சில இடங்களிலேயே முருகன் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். நாடு நிறைய சிவனுக்கும் திருமாலுக்குமே கோயில்கள் கட்டப்பட்டன. நாயன்மார்கள் சிவனுடைய கோயில் களுக்குச் சென்றே தேவாரம் முதலிய பாசுரங்களைப் பாடினர். முருகனுடைய பண்டைய தலங்களாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர். திருவாவினன் குடி, திருத்தணிகை, திருவேரகம், பழமுதிர் சோலை முதலியன இன்றும் மக்கள் வணங்கும் தலங்களாக அமைந்த போதிலும் அவை தேவாரங்களிலே பாடப்படவில்லை.

சோழப்பெருமன்னர் காலப் பிற்பகுதியில் முருகக் கடவுள் பற்றிப் பேசப்படுகின்றது. தமிழ் நாட்டு முருகனும் வடநாட்டுக் கந்தனும் ஒன்றுபடு கின்றனர். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கச்சியப்ப சிவாச்சாரியாருடைய கந்தபுராணத்துடன் முருக வழிபாடு தமிழ் நாட்டிலே மீண்டும் புத்துணர்வு பெறுகின்றது. சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடநாட்டிலே இஸ்லாமி யருடைய ஆட்சி பேரரசாகி வளர்கின்றது. மாலிக் கபூரின் தலைமையில் இஸ்லாமியப் படை தமிழ கத்துள்ளும் புகுந்தது. இந்தவேளை பண்டைத் தமிழரின் போர்த் தெய்வங்களாகிய முருகன் அவன் தாய் அம்மன் (கொற்றவை) மீண்டும் பாடல் பெறும் தெய்வங்களாக விளங்கத் தொடங்கின. குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பா, அருணகிரி நாதரின் திருப்புகழ், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து என்பன முருகனைப் பாடுவனவாக அமைந்தன. "அஞ்சு முகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும், வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்" என்று வீரமுள்ள, துணிவுடைய கடவுளாகவும் அடியாரின் கவலை, துயர் போக்குப வனாகவும் அசுரத்தனமுடையவர்களை அழிப்ப வனாகவும், "தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த வள்ளிக்கொடியை மணந்தோனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வள்ளியிலே காதல் கொண்டவனாகவும் அவர்களுடைய பாடல்களிலே சித்திரிக்கப்படுகிறான்.

இவர்களுடைய மரபிலே வந்த பாரதி முருகனை அவன் முன்னோர்கள் பாடிய முறையிலே பாடும் அதே வேளையில் சில புதுமையான முறையிலும் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

## 2. தேவர்களை மீட்ட கதை பாரதியில் மக்களை மீட்பதாக

தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களை அழித்து தேவருலகத்தினையும் தேவர்களையும் மீட்டவனாக முன்னர் பாடிய இலக்கியங்களிலே முருகன் பரந்துபட்ட முறையிலே இடம்பெறுகிறான். பாரதியும்.

**"அசுரர் முடிவே கருதும் வடிவேலவனே"**

என்றும்,

**"அமராவதி வாழ்வுறவே அருள்வாய்"**

என்றும்,

**"கல்லினை யொத்த வலிய மனங்கொண்ட**
**பாதகன் - சிங்கன்**
**கண்ணிரண் டாயிரங் காக்கைக்**
**கிரையிட்ட வேலவா"**

என்றும்,

**"மலை வாரத்திலே விளை யாடுவான் - என்றும்**
**வானவர் துன்பத்தைச் சாடுவான் "**

என்றும் பாடுகின்ற பாரதி சாதாரண மக்களைக் காக்கும் கடவுளாக முருகனைப் பல இடங்களிலே பாடுவதைக் காணமுடிகின்றது.

**"அடியார் பலரிங் குளரே**
**அவரை விடுவித் தருள்வாய்"**

என்றும்,

**"நீறுபடக் கொடும் பாவம் பிணிபசி**
**யாவையும் - இங்கு**
**நீக்கி அடியரை நித்தமுங்**
**காத்திடும் வேலவா"**

என்றும்,

**"மக்கள் யாவருக்குந் தலையா யினான்"**

என்றும் பாடுவதைக் காணுகின்றோம். விண்ணிலுள்ள கடவுளை மண்ணுக்குக் கொண்டு வரும் வழக்கம் பாரதியிடம் உண்டு. ஆழ்வார்கள் பாடிய கண்ணன் என்னும் கடவுளை, "மழைக்குக் குடை, பசிநேரத்துணவு, வாழ்வினுக் கெங்கள் கண்ணன்" என்று மக்களிடம் ஒட்டியுறவாடும் கடவுளாகப் பாரதி ஆக்குவதைக் கண்ணன் பாட்டிலே காண்கிறோம். முருகனையும் மக்களுடன் கொண்டுவந்து சேர்க்கின்றான்.

## 3. தமிழும் வீரமும்

தமிழ்ப் புலவர்களுடன் உறவாடும் தெய்வமாக முருகன் கருதப்படுகிறான். ஒளவை யாருக்கும் முருகனுக்குமுள்ள தொடர்பினை அவருடைய பாடல்களிலிருந்து அறியமுடிகின்றது. சுட்டபழம் வேணுமா சுடாத பழம் வேணுமா என்று கேட்ட மாட்டுக்காரச் சிறுவனிடம் (முருகனிடம்) சுட்ட பழம் வேணும் என்று கேட்ட ஒளவைக்கு நாவல் மரப்பழங்களை உதிர்த்த இடம்தான் பழமுதிர்சோலை (பழம் உதிர் சோலை). அந்த வேளைதான் முருகன் கொடியது, இனியது, பெரியது, அரியது எவை எனக் கேட்க அதற்கு ஒளவை பாடிய தமிழ்ப் பாடல்களை முருகன் விருப்புடன் கேட்டான். தமிழ்ச்சங்கத்தின் தலைவனாக முருகன் இருந்த வரலாற்றினை இறையனார் களவியலுரை கூறும். அருணகிரிநாதர் "முத் தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்று முருகனுக்குத் தமிழ்மீதுள்ள பெருவிருப்பைக் காட்டுகிறார்.

இந்த மரபிலே வந்த பாரதியும் முருகனைத் தமிழ்மொழியோடு, தமிழ் நாட்டோடு இணைத்துப் பாடுகிறான்.

**"வேடக் கனியை விரும்பியே - தவ**
**வேடம் புனைந்து திரிகுவான் - தமிழ்**
**நாடு பெரும்புகழ் சேரவே - முனி**
**நாதனுக் கிம்மொழி கூறுவான்"**

என்னும் பாடற் பகுதியில் தமிழ்நாடு பெரும்புகழ் பெற வேண்டுமென முருகன் எண்ணுவதாக பாரதி கூறுகிறான்.

**"மறை அர்த்த முணர்த்துநல் வாயினான் - தமிழ்ப்**
**பாவலர்க் கின்னருள் செய்குவான்"**

தமிழ்ப் பாவலரில் மன்னர் மட்டுமல்ல இறைவனுமே அன்புகொண்டுள்ளான். தமிழ்ப் பாவலருக்கு முருகன் இன்னருள் புரிவதாகப் பாரதி கூறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுடைய வீரம்பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மன்னர்களுடைய வீரம் மிக்க சீற்றத்துக்கு முருகனைப் புலவர்கள் உவமையாகக் கூறுவர். கந்தபுராணம் முருகனின் வீரச்சிறப்புக்களையெல்லாம் கூறும். பாரதி முருகனையும் அன்னை பராசக்தியினையும் ஒன்றாகக் காண்கிறான். "சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்" என்று பாடுகிறான். முருகனின் வேல் பாரதியின் பாடல்களிலே சிறப்பிடம் பெறுகின்றது.

**"வெற்றி வடிவேலன் - அவனுடை**
**வீரத்தினைப் புகழ்வோம்**
**சுற்றி நில்லாதே போ - பகையே**
**துள்ளி வருகுது வேல்"**

அத்தகைய வேலை வணங்குவதே தன் வேலை என்று பாடுகிறான்.

**"தோகைமேல் உலவுங் கந்தன்**
**சுடர்க்கரத் திருக்கும் வெற்றி**
**வாகையே சுமக்கும் வேலை**
**வணங்குவதே எமக்கு வேலை."**

முருகனுடைய பார்வையும் வெற்றி வேலும் தன்னைக் காக்குமெனப் புலவன் கூறுகிறான். அன்னை பராசக்தியின் அருட்பின்னணியிலே முருகனுடைய காத்தல் செயற்பாடு நடைபெறுவதாக பாரதி கூறுகிறான்.

**"வீரத் திருவிழிப் பார்வையும் - வெற்றி**
**வேலும் மயிலும்என் முன்னின்றே - எந்த**
**நேரத் திலும்என்னைக் காக்குமே - அன்னை**
**நீலி பராசக்தி தண்ணருள்..........."**

அன்னை பராசக்தி மடியிலே வேலுடனே முருகன் வளர்வதாகப் புலவன் காண்கிறான்.

**"அறிவா கியகோ யிலிலே**
**அருளா கியதாய் மடிமேல்**
**பொறிவே லுடனே வளர்வாய் அடியார்**
**புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்."**

என்னும் பாடல் முருகனின் சக்திவேலின் விளக்கம் தருவதாக அமைகின்றது. ஆண்மைக்கும் வீரத்துக்கும் எடுத்துக்காட்டாக முருகனையே பாரதி எண்ணுகிறான்.

**"நெஞ்சில் ஆவ லறிந்தருள் கூட்டுவான் - நித்தம்**
**ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்"**

என்று அவன் பாடுவதைக் காணலாம்.

### 4. திருத்தணிகையின் பெருமை

முருகனுடைய ஆறுபடை வீடுகளுள் திருத்தணிகையும் ஒன்றென முன்னர் பார்த்தோம். இத்தலத்தின் பெயர் செந்தமிழ் என்று பாரதி வியக்கின்றான்.

**"திருத்தணிகை மலைமேலே குமார தேவன்**
**திருக்கொலுவீற் றிருக்குமதன் பொருளைக் கேளீர்**
**திருத்தணிகை யென்பதிங்கு பொறுமை யின்பேர்**
**செந்தமிழ்கண் டீர் பகுதி: 'தணி'யெ னுஞ்சொல்**
**பொருத்தமுறுந் தணிகையினால் புலமை சேரும்**
**'பொறுத்தவரே பூமியினை ஆள்வார்' என்னும்**
**அருத்தமிக்க பழமொழியும் தமிழி லுண்டாம்**
**அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்."**

வீரமும் ஆண்மையும் சினமும் மிக்க முருகனே, பொறுமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவன் என்னும் கருத்தினை பாரதி இப் பாடலிலே சிறப்பாக எடுத்துக் கூறுகிறான். ஒரு தலைவனுக்கிருக்கவேண்டிய பண்பு இங்கு சுட்டப்படுவதைக் காணலாம். வீரமும் வெகுளியும் வேண்டப் பட்டாலும் பொறுமை தேவைப்படும் இடத்திலே அதனைக் கடைப்பிடிப்பவன்தான் சிறந்த தலைவனாவான். தேவர்கள் சிறை மீட்க அசுரருடன் சினத்துடன் போர் புரிந்து பின்னர் அச்சினம் தணிய முருகன் வீற்றிருந்த மலையே திருத்தணிகை எனப்பட்டது. இதற்குப் புதிய விளக்கம் கொடுக்கும் பாரதியின் சிறப்பும் நயக்கத்தக்கது.

### 5. முருகனும் காதலும்

வள்ளி மீதுள்ள காதலைக் கூறுவதாக இரண்டு பாடல்களும், வள்ளி முருகனிடம் கிளியைத் தூதனுப்புவதாக ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன. ஏனைய பாடல்களிலும் வள்ளியுடன் முருகனை இணைத்துப் பாடுவதைக் காணலாம். எல்லை மீறிய காதல் பாடல்கள் பலவற்றைப் பாரதி பாடியுள்ளான். வள்ளிப்பாட்டிலும்,

**"வட்டங்க ளிட்டுங் குளமக லாத**
**மணிப்பெருந் தெப்பத்தைப் போலே - நினை**
**விட்டு விட்டுப்பல லீலைகள் செய்துநின்**
**மேனி தனைவிட லின்றி - அடி**
**எட்டுத் திசையும் ஒளிர்ந்திடுங் காலை**
**இரவியைப் போன்ற முகத்தாய் - முத்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்தம்**
**இட்டுனைச் சேர்ந்திட வந்தேன்."**

என்று பாடுவதைக் காணலாம். இத்தகைய பாட்டைப் பற்றி வ.வெ.சு. ஐயர் கூறும் கருத்து ஒன்றினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பாரதியினுடைய 'கண்ணன் பாட்டு' இரண்டாவது பதிப்பு வெளிவந்தபோது வ.வெ.சு. ஐயர் அதற்கு ஒரு முன்னுரை எழுதியுள்ளார். அதில் ஆண்டாள் முதலிய ஆழ்வார்கள் மதுரபாவத்திலே பாடிய பாசுரங்கள் பற்றிக் கூறிவிட்டு,

**"ஆனால் இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின்மீது**
**நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது.**
**அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசந்தர்ப்பமாகிவிடும்.**
**ஸ்ரீ பாகவதத்திலுங் கூட கோபிகா உபாக்கியானங் களில் சுக பகவான்**
**இவ் வரம்பை அங்கங்கே கடந்துவிட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.**
**நமது கவியும் அப் பாவத்தை விரிக்கையில் பரபக்தியை விடச் சாரீரமான**
**காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார். ஆனால் சுகப் பிரம்மமே**
**நிறுத்த முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறை கூறலாமா?**

என்று குறிப்பிட்டுள்ளார். பாரதியின் எல்லை மீறிய காதல் பாடல்களை வ.வெ.சு. ஐயர் இனங் காணுகிறார். ஆனால் அதனை நியாயப்படுத்தியும் உள்ளார்.

### 6. முடிவுரை

பாரதியின் இஷ்ட தெய்வம் பராசக்தி. அவளையே பல பாடல்களில் பாடுகிறான். பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனை விவரித்துப் பாடுகிறான். விநாயகருக்கு ஒரு மணிமாலை பாடியுள்ளான். ஆண்மை, வீரம் என்பனவற்றுக்கு முருகனே அவன் கண்முன் தோன்றுகிறான். தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மகனாக முருகன் இருப்பதும் பாரதிக்கு முருகனைப் பாடுவதிலே ஒரு விருப்பு ஏற்பட்டுள்ளது.

## கண்கண்ட தெய்வமே முருகா

உடன் தேர் ஓடவேண்டும்
எம்துயர் போக வேண்டும்
நன்மைகள் மட்டுமே நடக்க
நல்லூரான் பார்வை படவேண்டும்
விண்ணவர் மகிழ வேண்டும்
வினைகள் பறந்தோட வேண்டும்
கண்கண்ட தெய்வமே முருகா
எமைக் காக்க பாருமையா.

**இராம ஜெயபாலன்**
**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடியே தஞ்சம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்**
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் செந்தமிழ்ப் பரமாசாரியனும் செவ்வேட் பெருமான் ஈழநாட்டில் கோயில் கொண்டுள்ள திருத்தலங்கள் பல. அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள முருகன் சந்நிதியில் ஏழைகளின் தெய்வமாக, அன்னதானக் கந்தனாக, அடியார்க் கெளியனாக எழுந்தருளியுள்ளான். நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும், அபிஷேகக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் காவடிக் கந்தனாகவும், வினை தீர்க்கும் விசாகனாகவும் கோயில் கொண்டுள்ளான்.

முருக வழிபாடு சங்ககாலத்திற்கு முந்திய வேதகாலம் தொட்டுத் தமிழ் மக்களிடையே இருந்து வந்தது. கலியுகத்துன்பம் தீர்ப்பதற்குக் கலியுக வரதனாகிய கந்தப் பெருமானைத் தியானிக்குமாறு வேதவியாசர் கூறினார். முருகனை வேலில் ஆவாகனம் செய்து வழிபடும்முறை நல்லூர், சந்நிதி இன்னும் பல கோயில்களில் காணலாம். வைகாசி மாதத்தி லிருந்து விசாகனின் மகோற்சவங்கள் தொடர்ந்து, பல வகையான புனித நாட்களைக் கொண்ட ஆடி மாதத்தில், அருணகிரி நாதர் போற்றிப் பாடிய காக்கும் கதிர்காமக்கந்தன் மகோற்சவமும், மாரு தப்புரவீகவல்லிக்கு அருள் புரிந்த மாவிட்டபுரக் கந்தன் மகோற்சவமும் நல்லன எல்லாம் தரும் நல்லைக்கந்தன் திருவிழாக்களும், செல்வச் சந்நிதி வேலன் திருவிழாக்களும் முருக பக்தர் களுக்குப் பேரின்பத் திருநாட்கள்.

தொன்மையும், சிறப்பும், கீர்த்தியும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க முருகன் ஆலயங்களுள் நல்லூர் கந்தன் ஆலயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். இந்நாட்களில் யாழ்ப்பாணமே விழாக் கோலம் கொண்டிருக்கும். மகாவரப்பிரசாதியான முருகப் பெருமான் அருளாட்சி நடத்தும் ஒரு பூஞ்சோலை நல்லையம்பதி சார்ந்தவருக்குச் சாகாவரம் கொடுக்கும் நல்லூரை வீழ்ந்து கும்பிடுவாய் விரைந்து என்பது மகாஞானி யோகர்சுவாமியின் அருள்வாக்கு. ஆலயத்தின் தோற்றமும், அழகும், கோபுரமும், ஆலயத்தின் உட்புறத்தே அழகொழிக்கும் ஓவியங் களும் காணக்கண் கோடிவேண்டும். பூலோக கைலாயமாக விளங்கும் இவ்வாலயத்தின் மணியோசை, மக்களின் உயிர் காக்கும் நாதமாக அமைந்துள்ளது. இங்குள்ள விசேட அம்சம் யார் வரவுக்கும் காத்திராத காலந்தவறாத பூஜை, அபிஷேகம், அலங்கார உற்சவம், வீதி உலா என்பன நேரம் தவறாது நடைபெறும். ஆலயமணி அந்தந்த நேரங்களில் ஒலிக்க அதேநேரம் ஆலயப் பூஜை மணியும் ஒலித்துப் பூஜைகள் ஆரம்பிக்கும் ஒழுங்கே தனி அழகு. முடியுடைவேந்தரும், சாமானியர்களும் ஆண்டிகளும் வேறுபாடின்றி தலைவணங்கும் ஆலயம். இவ்வாலயத்தின் தேர்முட்டி மண்டபம் ஞானிகள் பலர் இருந்து மக்களுடன் பேசி உற வாடிய புனிதமான இடமாகும். இந்தத் தேரடியில் தான் செல்லப்பா சுவாமிகள் உண்மை நிலையை உணர்ந்தார். யோகர் சுவாமிகளும் இத்தேரடியிலேயே ஞானம் பெற்றார். ஈழத்துச் சித்தர்கள் நடமாடிய பூமியிலே, பச்சை மயில் வாகனன், வள்ளி தேவசேனா சமேதராக வடிவேலுடன் கண்ணிறைந்த கடவுளாகக் கண்மணி முருகன் காட்சி தருகின்றான். ஆலயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் சுற்றியுள்ள வீதிகள் எங்கும் தாகசாந்தியும், ...தானங்களும் சனசமுத்திரமாக வரும் ...ர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆறுபடை வீடு கொண்ட பரமன், சிக்கலிலே வேல் வாங்கி செந்திலிலே போர் முடித்த சக்தி வடிவேலன், தமிழ் தெய்வம் முருகன், தமிழர் தெய்வம் முருகன், தமிழ் தந்த தெய்வம் முருகன், உலகம் உய்ய உதித்த உமைபாலன், அடியார்க்கு நல்ல பெருமான், அவுணர் குலமடங்கப் பொடியாக்கிய பெருமான், எங்கே நினைப்பினும் அங்கே முன்வந்து அருள் செய்பவன், சர்வசீவதயாபரன். இல்லை யெனாது வரமீந்தருளும் தொல்லைவினை தீர்க்கும் கந்தன் நல்லையம்பதியிலே கோயில் கொண்டு, அடியார்களின் இன்னல்களையும், துயரங்களையும் அகற்றி நல்லருள் புரிந்து அருளாட்சி செய்கின்றான். முன்னை வினைதீர்க்கும் நல்லூர்க் கந்தவேளின் சேவடிகளைப் பற்றினோர்க்குத் துன்பம் இல்லை. அந்த ஆறுமுகச் செவ்வேளின் அருட்பிரவாகமே அடியார் கூட்டம் அணிதிரண்டு வருவதற்குக் காரணம். மகோற்சவகாலத்தில் அதிகாலையிலேயே பக்தர்கள் நிறைந்து விடுவார்கள். பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிப் பரவி ஏத்துகின்ற பக்தர் கூட்டம், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபடும் காட்சி மனதை உருக்கிவிடும். முருகா, குமரா, குகா, சண்முகா, வடிவேலா, அப்பனே, நல்லூர்ப்பதி அரசே சரணம், சரணம் என்று உருகும் செயலை, அரோகரா கோஷத்துடன் விழிநீர் அருவி போற் சொரிய பக்தி பரவசத்தோடு வழிபடும் காட்சியை இங்கு காணலாம். கலியுகவரதன் வள்ளி தேவ சேனா சமேதராக அலங்காரக் கந்தனாக எழுந்தருளும் காட்சி காணக்கண் கோடி வேண்டும். "நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரிநாதர் பாடியது போன்று அவன் அழகுக்கு உவமை சொல்ல முடியாது. அவனை வணங்குவதற்கும், அவன் அருட்பிரவாகத்தில் மூழ்கித் திளைப்பதற்கும் ஆனந்தமயமான சிவ சக்தி மைந்தனின் திருவருள் வேண்டும். கந்தன் ஆலயத்திருவீதியை மிதிப்பதற்கும் பூர்வ புண்ணியப் பலன் வேண்டும். மகிமையும், புனிதமும் நிறைந்தது இந்த மண்.

மஞ்சத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, மாம்பழத் திருவிழா, கைலாசவாகனத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தோற்சவம், திருக்கல்யாண வைபவம் எல்லாம் தரிசித்து வழிபட்டு மகிழ்ந்து இன்பத்தின் எல்லைக்கே சென்று விட்லாம்.

நித்தம் வணங்குவோருக்கு முத்தி அருளும் முதல்வன், நாமம் வெகுகோடி கொண்ட முருகன், கருமேனி தாங்காது திருமேனி தாங்கி வந்த வள்ளல், கோருகின்ற வரமருளும் கோழிக் கொடிக் கரசன், பெண் இருவரோடும் பொன் மயிலேறி நல்லைநகர் மன்னன் தேர்த்திருவிழாவிற்கு, ஓம் எனும் காண்டாமணியோசை ஒலிக்க, மங்கல வாத்தியங்கள் இசைக்க, பக்தர்களின் பஜனை நாதத்திலே, ஆன்மகோடிகளுக்குப் பேரருள் புரிய, விண்ணும் மண்ணும் மகிழ, அரோகரா, அரோகரா கோஷமிட, சர்வாலங்கார பூஜிதராக, ஆறுமுகப் பூங்கொத்து அபயக்கரத்துடன் ஆறுதலைத்தர, அடியார் வெள்ளம் நடுவினில் ஆடி ஆடி ஆனந்த நடனம் புரிந்து சித்திரத் தேரேறி வரும் காட்சி காணக் கோடிகண்கள் போதாது. கந்தபுராணக் கதை சொல்லும் சின்னமணித் தேரினிலே, தேவாதிதேவன், தெய்வசிகாமணி, நல்லூரின் சிவமணி, சங்கநாதம் ஒலிக்க, துந்துபி முழங்க நாதகானம் இசைக்க, வேதகானம் ஒலிக்க, பஜனைக் கோஷ்டிகள் பின்தொடர, ஆயிரமாயிரம் காவடிகள், அடியளித்து அருள் வேண்டும் அன்னையர், அன்பர்கள் அங்கப் பிரதட்ஷணம் செய்து வீதி யெல்லாம் உருண்டுவர, ஆடுவோரும் பாடுவோரும், அவனருள் வேண்டுவோரும், வானுலகில் இடம் பிடிப்பதற்காக திருத்தேர் வடம்பிடிக்க திரண்டு நிற்கும் அடியார்களும், மலைபோல் குவிந்துள்ள தேங்காய்களை வினைகளெல்லாம் சிதறி ஓட அடிப்போருமாக தெய்வத்திருநகர் நல்லூர்க் குமர மூர்த்தி, பொன்மணித் தேரினிலே பவனி வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசக் காட்சியை சொல்ல முடியுமா? சொல்லில் அடங்குமா? பச்சைப் பீடத்தில், பச்சைத் திருவாசி, பச்சைப் பட்டுச்சாத்தி, பச்சை மாலைகள் சூடி எங்கும் பசுமையாக ஐயன், அற்புதக் கூத்தன் தேரினின்றும் இறங்கி ஆடிவரும் ஆனந்தக் காட்சி, அருள்புரியும் திருக்கோலம் கண்டு பேரானந்தத் தால் நெஞ்சம் நிறைந்துவிடும்.

மறுநாள் தீர்த்தத்திருவிழா. சண்முக தீர்த்தத் திலே, நல்லூரான் நாமஞ் சொல்லி, பாவங்கள் எல்லாம் பொசுங்கிவிட, ஊழ்வினை அகல, தொடர்ந்து வரும் அவலங்கள் தீர, தொண்டர்க் கினியானை நினைத்து மகிழ்ந்து ஊர் கூடி தீர்த்தமாடி, வல்வினைகள் யாவும் தீர்த்தோம், தீர்த்தோம். வடிவேலன் திருவருளைப் பெற்றோம், பெற்றோம். நல்லூரான் திருவடியே தஞ்சம், தஞ்சம். நமனுக்கும் நாமினி அஞ்சோம், அஞ்சோம் என்று எம்பெருமான் கருணை மழையில் மனஅமைதி பெறுவர். பஞ்ச மூர்த்திகளும் கொடி, குடை, ஆலவட்டம் முறையே வர, பழனி ஆண்டவர் திருமுன்பு விசையாக எழுந்தருளி நிற்க, அஸ்திரதேவர் திருக்குளத்துக் குள்ளே தீர்த்தமாடிய பின் அடியவர்கள் எல்லாரும் பரமானந்த சாகரத்துள்ளே இறங்கித் தீர்த்தம் ஆடி, நல்லூர் வாழும் கந்தனை திருவருளை ஈந்தெம்மைக் காத்தல் வேண்டுமென, தீர்த்தமாடலாகிய அருளல் நிகழ்ந்ததும் கரங்கு வித்து வணங்கி வேண்டிய வரங்களைப் பெறுவர்.

மறுதினம் திருக்கல்யாண உற்சவம் அழகன் என்ற சொல்லுக்கு முருகன் என்று பொருள். பச்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில்வேலும், கச்சைத் திருவரையும், சீறடியும், செங்கையும், ஈராறு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும், விரிகிரணம் சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும் வைத்த கண் வாங்காமல் பார்க்கப்பார்க்க பரவசமூட்டும் புன்னகை தவழும் உதடும் திவ்விய ரூப சௌந்தர்ய சொரூபனுக்கும், அன்னம் போலும், மஞ்ஞை போலும் அழகிய தேவசேனைக்கும், வள்ளிநாயகியாருக்கும் நடக்கின்ற திருமணத் திருக்காட்சிகாண நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே என்று அங்க லாய்க்கத் தோன்றும். இந்திரன் மகளாம் தெய்வ யானையை கற்புமணம் புரிந்து பின்பு தேனென்று பாகென்று உவமிக்கொணாத் தெய்வவள்ளியைத் தேடிச் சென்று அருளாடல்கள் புரிந்து வள்ளி நாச்சியாரை ஆட்கொண்டான்.

வள்ளி திருமணம் முருகனுடைய பெருங்கருணைத் திருவிளையாடல். பாசக்கட்டில் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா 'முருகா, முருகா' என அவன் நாமம் சொல்லி அழைக்க ஓடோடி வந்து பிரபஞ்சச் சேற்றிலிருந்து எடுத்துத் திருவடி யிற் சேர்ப்பான். பக்குவ ஆன்மா, பரமாத்மாவைச் சேர்தல் திருமணம். திருவடி நிழலிலே சிவானுபவம் பெறுதல் திருக்கல்யாணம். ஆணும் பெண்ணுமாய் உயிர்கள் காதலாற் கூடிக் களித்து வாழ வேண்டும் என்ற பெருங் கருணை யினால் இறைப்பொருள் தன்னுள்ளே ஆணும் பெண்ணுமாகிய இருவேறு தன்மைகளை அமைத்துக் கொண்டு உலகத்தை நடாத்துகிறது. மலையரசன் பொற் பாவை வாள் நுதலாள் பெண்திருவை இறைவன் உலகறியத் தீ வேட்டுத் திருமணம் புரிந்தான். ஆண்டாண்டு தோறும் இத்திருக்கல்யாணத்தை நம் ஆலயங்களிலே கொண்டாடுகிறோம். சிவனும் சக்தியுமாய் நின்று இறைவன் உயிர்களை இயக்கா விட்டால் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பம் துய்க்கமாட்டா. திருமணம் தவத்தால் பெறும் திருவருள் வாழ்வு. திருவடிப்பேறெய்துவதற்கு திருமணம் செந்தமிழ்ச் சைவநெறி காட்டும் வழி. இறைவன் திருமணம் புரிந்து காட்டியிராவிட்டால், உலகமே மணம் புரிந்து மனையறம் புரிந்து நன்னெறித் தவஒழுக்கம் கைக்கொள்ளாது. காம நுகர்ச்சி இல்லாத இறைவன் உலகில் இல்வாழ்க்கை நடாத்துவதற்கு நடித்துக் காட்டும் நடிப்பே இறைவன் திருக்கல்யாணம் நம்முடைய திருமணம் திருவடி சேர்ப்பிக்கும் வாயில்.

சிவனாரின் செல்லப்பிள்ளை, உமையவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தேனின் பூரண அனுக்கிரகத்தைப் பெற "அருணதள பாதபத்ம மனுதினமுமே துதிக்க ப தமிழ் தானளித்த மயில் வீரா" என்று அவன் திருப்புகழை அகமுருகிப் பாடிப் பணிந்து மகிழ்ந்து அவனருள் பெறவேண்டும். தீராப் பிணியகற்றும் தேவன், வைதாரையும் வாழ வைக்கும் பரமன், தேவர் சிறைமீட்ட செல்வன், சூரனை ஆட்கொண்ட வேலன் நம்மையும் ஆட்கொள்வான். சரவணத்திலுதித்த சண்முகனைப் போற்றிப் பணிந்து வழிபட்டால், கருணாமூர்த்தி வந்தே அருள்புரிவான். "சாலநின் பதத்தன்பையே வேண்டுவன் தமியேன்" என வீரவாகுதேவர் வேண்டிய வரம் போல நாமும் வேண்டிப் பெற்று உய்வோம்.

எந்நாளும் நல்லூரை வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே.

**"வேதாந்த சித்தாந்தம் கற்றதனால் என்ன**
**வேடிக்கை கதைகள் பேசினால் என்ன**
**வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்**
**வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே"**

என்று மகாஞானி சிவயோகர் சுவாமிகள் பாடியது போல் நாமும் அவனைச் சரணடைந்து அவனருள் பெறவேண்டும். அந்த மதியணி சங்கரன் தந்த மருந்து, துதி செய்வோரைக் காக்கும் மருந்து, துஷ்டர்களுக்கு எட்டாத மருந்து, அருமருந்து, திருமருந்து, இல்லையெனாது அருள் செய்யும் பெரு மருந்து, ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து, இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து, நல்லன எல்லாம் தரும் ஆனந்த மருந்து நமக்கருள்புரிய நல்லாரிலே வீற்றிருக்கிறான். நித்தமும் அந்த வெற்றி வடிவேலனைச் சிந்தித்து, மனதைத் தூய்மையாக்கி, அறநெறிப்படி ஒழுகி, தெய்வீகமாக வாழ்ந்து நல்லைக் கந்தசுவாமியின் திருவருளைப் பெற்றால் இனிதே வாழலாம்.

**"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே**
**எல்லாம் மறப்பேனடி - கிளியே**
**இரவு பகல் காணேனடி"**

**"ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி**
**நான் மறந்து போவேனோடி - கிளியே**
**நல்லூரான் தஞ்சமடி".**

# நல்லையில் அமர்ந்திருந்து ஞானநடம் புரிபவனே

**பல்லவி**

நல்லூரின் நாயகனே ஞானவடிவேலவனே
பொல்லா வினையறுக்கும் பெருமானே ஷண்முகனே

**அநுபல்லவி**

எல்லோரும் சேர்ந்து ஒன்றாய் ஏத்தியே துதிக்கின்றோம்
பல்லாண்டு பாடி உந்தன் பதமலர் போற்றுகின்றோம்

**சரணம்**

நல்லையில் அமர்ந்திருந்து ஞானநடம் புரிபவனே
தொல்லை வினை தீர்க்கும் தூயவனே மால்மருகா
கல்லையொத்த மனமும் கசிந்துருகச் செய்திடுவாய்
இல்லையினித் துன்பமென்றே வணங்கி மகிழ்ந்திடுவோம்

**சைவப்புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் காட்டும் முருகன்

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

கந்தபுராணம் முருகக் கடவுளின் வரலாற்றை விரித்துரைப்பது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கச்சியப்ப சிவாசாரியார் என்பவரால் வடமொழி ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியைத் தழுவி ஆக்கப்பட்ட இந்நூல் தமிழில் எழுந்த புராணங்களில் மிகப் பெரியது. கந்தபுராணம் 10345 பாடல் அமைப்புடையது. ஆறு காண்டங்களாகவும், 141 படலங்களாகவும் பகுத்து அமைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியரது படை யெடுப்பினால் கோயில்கள் அழியும் நிலை தோன்றியதால் கோயில்களின் பெருமைகளை எடுத்துக் கூறி கோயில்களுக்கு ஆதரவாக மக்களைத் திரட்ட வேண்டிய தேவையிருந்தது. சிவன், முருகன் நிகழ்த்திய அற்புதங்களை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்தகைய பின்னணியிலே தான் கவிஞர் கடவுளையும் கடவுளின் திருவிளையாடல்களையும் பொருளாகக் கொண்டு இலக்கியங்களையும் படைத்தனர். இச் சூழலிலே தான் கச்சியப்ப சிவாச் சாரியார் முருகனுடைய வரலாற்றைக் கூற கந்தபுராணத்தைப் படைத்தளித்தார் எனலாம். இக்காலப் பகுதியில் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவைப் படைத்தார். கச்சியப்பருக்குப் பின்னர் தோன்றிய அருணகிரிநாதரும் முருகன் மீது எண்ணில்லாத பக்திப் பாசுரங்கள் பாடியுள்ளார். முருகவணக்கம் முதன்மை பெற்ற காலமாக இப்பகுதி விளங்குகின்றது. சிவன் அருளினாலே முருகன் தோன்றி அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றியது போல இறைவனே இஸ்லாமியர் படையெடுப்பை முறியடித்துத் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று அக்கால மக்கள் விரும்பியதை இந்நூலின் தோற்றம் சுட்டுகின்றது.

முருக வழிபாட்டிற்கு என ஒரு தனிப் பாரம் பரியம் இருக்கின்றது. வடமொழியிலே ஸ்கந்தன், குமாரன், கார்த்திகேயன், சுப்பிரமணியன் என அழைக்கப்படும் கடவுளைத் தமிழிலே முருகன் என வழங்குவர்.

திருமுருகாற்றுப்படை காட்டும் திருப்பரங்குன்ற முருகன் தமிழ்க்கடவுளாக உள்ள நிலையையும் திருச்சீரலவாயிலில் உள்ள முருகன் வடமொழிக் கார்த்திகேயனாக உள்ள நிலையையும் காணலாம்.

பரிபாடல் ஐந்தாம் பாடல், திரிபுரம் எரித்த இறைவனும் இறைவியும் கூடி இன்புற்ற வேளையில் தோன்றிய கருவைக் கார்த்திகைப் பெண்கள் புசித்து சரவணப்பொய்கையிற் செவ்வேளை ஈன்றனர் என்ற செய்தியைத் தருகிறது. இவ்வாறு முருகன் பற்றிய சிந்தனை வளர்ந்து ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் எழுந்த இலக்கி யமே கந்தபுராணம். ஸ்கந்த முருக இணைப்புப் படிமத்தின் முழுமையைக் காட்டும் பேரிலக்கிய மாகத் திகழ்வது கந்தபுராணம்.

கந்தபுராணத்தின் பிரதான கதையம்சம் கந்தக்கடவுளின் வரலாறு ஆகும். பிரமதேவர் ஒரு வேள்வி செய்யத்தொடங்கினார். அதற்குச் சிவபெருமானை அழைத்தபொழுது அவர் நந்தி தேவரை அனுப்பினார். தக்கன் நந்திதேவருக்கு நடந்த மரியாதையைக் கண்டு வெகுண்டு கோபம் கொண்ட பொழுது அவனது அடங்காத்தன்மை யைக் கண்டு நந்திதேவர் சாபமிட்டார். தக்கன் தன் செல்வங்களை விரைவில் இழப்பானென்றும் அவனுக்குத் தேவர்கள் ஒத்தாசையாக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அளவற்ற ஊழிக்காலம் அசுரர்களிடம் வருந்துவார்களென்றும் சபித்தார். இதன் காரணமாக அசுரர்களது கொடுமையால் தேவர்கள் விண்ணர சிழந்தும் சிறைப்பட்டும் ஏவற்பணி செய்தும் துன்புற்றனர். இதனால் இந்திரன் முதலிய தேவர்கள் தவம் செய்து சிவபெருமானிடம் தமது குறையை முறையிட அதற்கு இயைந்து சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணிலிருந்து முருகனைத் தோற்று வித்தார். முருகனைப் படைத்து அக்குமாரன் மூலம் அசுரரை அழித்து தேவர்களுக்குப் புதுவாழ்வு நல்கினார் என்பதே கந்தபுராணத்தின் கதைக் கருவாகும்.

முருகனின் பிறப்பை கச்சியப்பர் குறிப்பிடும் போது உமாதேவியார் அருகிருக்க சிவபெருமான் ஆறுமுகத்திருவுருவம் கொண்டு அவற்றிலுள்ள நுதற்கண்களாறினும் ஆறு அக்கனிப்பொறி களை உதிப்பிக்க அவை உலகெங்கும் பரவின. சிவன் மீண்டும் அவற்றைத் தன் முன் வரவழைத்து ஆறு பொறிகளையும் வாயுதேவனையும் அக்கினி தேவனையும் கங்கையில் இடும்படி கட்டளை யிட்டார். அவர்கள் கங்கையில் இட்டதும் கங்கை அவற்றைச் சரவணத்தடாகத்தில் சேர்த்தும் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் அமைய ஒரு குமாரர் தோன்றினார். குமாரக்கடவுள் ஆறுகுமாரராகத் தோன்றி ஆறு கார்த்திகைப் பெண்களிடம் அவர்கள் முலைப்பாலைப் பருகி வளர்ந்தனர் என கச்சியப்பர் குறிப்பிடுவார். ஆறு குமாரனையும் ஊமாதேவியார் சேர்த்து அணைக்க ஒரு திருமுருகனாகத் தோன்றினார் எனக் கந்தபுராணம் குறிப்பிடும்..

**அருவமுமம் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒரு திருமுருகன் வாந்தாங் குதித்தன உலகம் உய்ய.**

முருகனது தோற்றம் பற்றி உற்பத்திக் காண்டம் திருவவதாரப் படலத்தில் உருவமற்றதும் உருவமுடையதாகியும் தமக்கோர் முதலற்ற தாகியும் பல பொருளாகியும் ஒரு பொருளாகியும் பிரமமென்றும் பெயர்த்தாகியும் நின்ற சோதிப் பிழம்பே ஒரு திருமேனியாக ஆறுதிருமுகங்களையும் பன்னிரண்டு திருக்கரங்களையும் கொண்டு உலகத்தார் உய்யும்படி ஒரு சிறந்த குமாரர் தோன்றினர் என கூறப்படுகிறது.

முருகனது குழவிப்பருவ திருவிளையாடல் களை திருவிளையாட்டுப் படலம் குறிப்பிடுகின்றது. கிரகங்களையும் நட்சத்திரங்களையும் பிறவற்றை யும் நிலை பிறழ்வித்தார். முருகனது சிறு குறும்பு களால் தேவர்கள் துன்புற்றனர். இந்திரன் முருகனு டன் கொடிய போரைத் தொடங்குகின்றான். முருகன், இந்திரன் ஆகிய இருவரும் மாறி மாறிப் பாணங்களை ஏவினர். முருகன் ஏழு பாணங்களை இந்திரன் மீது ஏவ இந்திரன் அவசரமாகி வீழ்ந்தான்.

இவ்வாறு தேவர்களின் தலைவனான தேவர் இந்திரனை வெற்றி கொண்ட சிறுவனாக முருகனைக் கந்தபுராணம் குறிப்பிடும். இதனால் முருகன் தேவசேனாதிபதியாகச் சிறப்புற்றார். முருகன் பிரமனைப் பிரணவப் பொருள் கேட்டுத் தலையிற் குட்டி சிறை செய்து தானே சிறிது காலம் படைப்புத் தொழிலை மேற்கொண்டதை கந்தபுராணம் (அயனைச் சிறைபுரிபடலம்) குறிப்பிடுகின்றது.

படைப்புக்கடவுளான பிரமனுக்கும் தம்மைச் சான்றோனாக்கிய தம் தந்தைக்கும் (சிவபெருமான்) பிரணவத்தின் உட்பொருளை உணர்த்திய சாமிநாதன் ஞானநாயகன் அவர் படைப்புத் தொழிலை தாமே மேற்கொண்டு தேவர்களும் அசுரர்களும் தம் ஆற்றலைக் கண்டு அஞ்சுமாறு தேவருலகை ஆட்சி புரிந்தவர்.

**"ஆயிரங் கோடி அண்டத்தின்**
**உயிர்கட் கெல்லாம் நாயகன்"**
**"மூலகாரணமாய் நின்ற மூர்த்தி**
**இம் மூர்த்தி அன்றே"**

என முருகனது ஒப்பற்ற தலைமைப் பண்பினைக் கந்தபுராணத்தில் காணலாம். தமிழ்ச் சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனாக விளங்கியதை கந்தபுராணம் குறிப்பிடு கின்றது.

**"செந்தமிழ் வடாது கலைசேர்ந்துழி உலாவும்
சேந்தன் என்பதாலும் வலியுறுகின்றது"**

என்ற அடிகள் இதனைத் தெளிவுபடுத்தும்.

முருகன் போரிலே பேராற்றல் வாய்ந்தவன் என்பதை அவனுடைய குழவிப் பருவ நிகழ்ச்சி களே சான்று தருகின்றன. மேலும் ஆயிரத்து எட்டு அண்டங்களை அடக்கியாண்ட சூரபன்மனையும், சிங்கன், தாரகன், இரணியன், வச்சிரவாகு, அக்கினிமுகன், பானுகோபன் போன்றவர்களுடன் போரிட்ட காட்சி கலிங்கத்துப் பரணியின் போர்க் காட்சியை ஞாபகப்படுத்துவதாக அமைகின்றது. வீரவாகு சிங்கன் இருவருக்கும் இடையில் போர் நடைபெற்றது.

ஆறுமுகன் போருக்கு வரும் காட்சியை

**மூவர்கள் முதல்வன் வந்தான்
முக்கண்ணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான்
வேற்படை வீரன் வந்தான்**

என போறப்படை வீரனாக கந்தபுராணம் காட்டும். அவனுடைய அரசியல் திறனும் சிந்தனை ஆற்றலும் வீரபாகுவை தூதனுப்பிய பகைவரை அஞ்சி நடுங்குமாறு செய்த செயல்திறனும் தலை வனுடைய ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. அசுரர்களைக் கொன்று தேவரைச் சிறைமீட்டு அவர்களுக்கு அமைதியான இன்ப வாழ்வை அளித்த முருகனுடைய அளப்பெரும் அறிவுத் திறனையும் போர்த்திறனையும் அருள் திறனையும் நோக்கும் பொழுது அவனே தனிப்பெருந் தலைவன் என்ற எண்ணத்தைக் கந்தபுராணம் தருகின்றது.

இராவணன் படையிழந்து, குடையிழந்து, நடையிழந்து நிற்கும் போது 'இன்று போய் இராமன் போர்க்கு நாளை வா' என உயிர் கொடுக்கின் றதை கம்பர் இராமாயணத்தில் காட்டுவார். அதை அடியொற்றி கச்சியப்பரும் முருகனைப் படைப்பது ஒப்பு நோக்கத்தக்கது. சூரன் படையிழந்து நிராயுத பாணியாக நிற்கும் வேளை முருகன் நிராயுத பாணியாய் நிற்கும் பகைவனைக் கொல்லுதல் தர்மத்தின் வழி அன்று என போரிற்கு நாளை வா என அனுப்பியதைக் கந்தபுராணம் காட்டுகிறது.

இறுதியில், தீமை புரிந்தவர்கள் ஆயினும் இறைவன் முன்னிலையில் அவர்களுக்கு முத்தி கிட்டும் என்ற உண்மையை ஆசிரியர் சூரன் வாயிலான புலப்படுத்துகின்றார்.

**தீயவை புரிந்தாரேனும் குமரவேள்
திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி
அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ
அருசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்
பெற்று உய்ந்தான்.**

சூரனது அகந்தையும் அசுர உடலும் அழிகின்றது. அவன் சேவலும் மயிலுமாகிப் பிறவிப் பெருங்கடல் நீங்கி முத்திபெற்றான் எனச் சூரனை ஆசிரியர் சித்திரிக்கிறார்.

முருக வழிபாட்டிற்கு ஒரு தனிப்பாரம்பரியம் இருக்கின்றதைக் காணலாம். அசுரர்களை அழித்து தேவர்களைக் காப்பாற்றிய வரலாற்றை கந்த புராணம் காட்டுகின்றது. அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பாற்றும் கடவுளாக முருகன் சித்திரிக்கப்படுகின்றான். இதனாலேதான் முருகன் போர்வீரனாகச் சித்திரிக்கப்படுகின்றான். இதனால் தான் தேவசேனாதிபதியாகக் காட்டப்படுகிறான். சிவனுக்கு உட்பொருளை உணர்த்திய ஞான குருவாக படைக்கப்பட்டுள்ளான். தமிழ்ச்சங்கத்தின் தலைவனாக, தன்னிகரில்லாத் தலைவனாக மூலகாரணமாய் நின்ற முழுமுதற் பொருளாகவும் கந்தபுராணத்தில் முருகன் படைக்கப்பட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களும் மகோற்சவங்களும்

கானகதாவாரிதி
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா

கோயில்களே பக்தி நெறியை வளர்க்கும் வாயில்களாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தெய்வீகத்தை உயிராகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் தமிழர்கள். இவர்களுடைய நாகரீகம் சமய அடிப்படையிலேயே வளர்ச்சியுற்றது. மனையிலும், காட்டிலும், வயலிலும், கடற் கரையிலும் இறைவழிபாடு நடத்திய மக்கள் காலகதியில் நிலையான ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள். அவற்றைச் சார்ந்து, வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனான இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் குறிக்கோள் எனக் கொண்டார்கள். இதன் பயனாகவே ஆலயங்கள் சிறப்படைந்தன.

உள்ளத்தின் வளர்ச்சிக்கும், உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். இறைவன் எங்கும் இருக்கின்றான். என்றாலும், கோயிலில் தான் அவனை உணரமுடிகிறது. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தனா கிய அவன், கோயில்களில் இருக்கிறான் என்பதை நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்கின்றோம். ஏனைய இடங்களில் இறைவன் விளங்குவதற்கும் கோயிலில் எழுந்தருளி இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. இறைவனை எங்கும் காணவேண்டுமானால், அவர் களுக்கு உயர்ந்த ஞானபக்குவம் வேண்டும். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவு ளைக் காணுகின்ற ஞானிகளுக்கே அந்தநிலை ஏற்றது. ஆனால், அத்தகையோர் ஒருசிலரே. ஏனையோர் கோயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களையும், வடிவங்களையும் காண்பதன் மூலமே இறைவனை உணருகிறார்கள்.

**"திருக்கோயில் உள்ளிருக்கும்**
**திருமேனி தன்னை**
**சிவ னெனவே கண்டவர்க்குச்**
**சிவன் உறைவான் ஆங்கே"**

என்ற வாக்கின்படி விக்கிரகத்தின் உள்ளே ஊடுருவி நின்று நாம் காணவேண்டிய உண்மைப் பொருளே இறைவனாகும்.

சிறப்பாக இறைவனைக் கற்கோயில்களிலும், அடியவர் உள்ளத்திலும் காணமுடியும். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்பவன் இறைவன். அந்த நிலையில் சிந்தித்த மனிதன் உடம்பின் அமைப்பையே கோயில் அமைப்பாகக் கொண்டு கட்டிடங்கள் மூலம் ஆலயங்களை அமைத்தான். பண்டைக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் கோயில்களே முதன்மையான இடம் பெற்றிருந்தன. கோயிலுக் குரிய செலவுகள் போக எஞ்சிய பகுதி கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு விடுதிகளும், மருத்துவ விடுதிகளும், இசைக் கல்லூரிகளும், ஆலய நிர்வாகத்திலேயே இயங்கின. தஞ்சை இராசராசசோழன் காலத்தில் இத்தகைய திருப்பணிகள் நடைபெற்றதாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. மக்கள் பணியே மகேசன் பணியாகப் பேணப்பட்டது. இதனால் ஆலயங் களும், மக்கள் வாழ்க்கையும் நெருங்கிய தொடர்பு டையனவாக விளங்கின.

நல்லமுறையில் அழகான கட்டிடங்களும், விக்கிரகங்களும் அமைத்தால் மட்டும் போதாது. விழாக்களும், நித்திய, நைமித்திய பூசைகளும், சிறப்புற நடைபெறுவது ஆலய வளர்ச்சிக்கு இன்றியமையாதன. காலத்துக்குக் காலம் குட முழுக்காட்டி (கும்பாபிசேகம்) சிறப்பு விழாக்கள் செய்து வருவது, திருவருட்சக்தி பெறுவதற்கு இடமளிப்பதாகும். மந்திரம் மூலமாகவும், அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாகவும், விக்கிரகத்திற்குத் தெய்வீக சக்தி கொடுக்கப்படவேண்டும். மின்சார இணைப்பும் மின் விசிறியும் சேர்ந்து காற்று வீசுவதற்கு உதவுவது போல மந்திரம் முதலிய கிரிகைகளும், விக்கிர கத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுவதற்கு உதவுகின்றன. மின்சார இணைப்பு இல்லாவிட்டால், மின்விசிறியால் பயனில்லை. அதே போல் கிரிகைளோடு கூடிய பூசைகள் இல்லா விட்டால், விக்கிரகத்திலிருந்து திருவருட் சக்தியை எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே ஆலயங்களில் விழாக்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

திருவிழாக்கள் எல்லாம் ஊருக்குச் செய்யும் சாந்திபோல் அமைவன. அன்றாடம் நிகழும் நித்திய பூசையிற் சில குறைகள், குற்றங்கள் நிகழ்வதும் இயற்கையே. அக்குறைகளினால் ஏற்படும் குற்றங் களை நைமித்திய பூசைகளே நீக்குகின்றன என்பார்கள்.

**"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"** (திருக்குறள்)

**"நித்தியத்தில் நைமித்திய மாதலின்**
**அதனை முற்கூறினார் என்பர்".**

இங்கே சிறப்பு என்பது நைமித்தியமாகும். இறைவனைப் பற்றிச் சிறப்பாகத் தியானிக்க வாய்ப்பளிக்கும் நாட்கள் திருவிழா (மகோற்சவம்) நாட்களாகும். மனிதனுடைய பந்தபாசத்துக்கு இது ஒரு விடுமுறை என்று கூறினால் மிகையொன்றும் இல்லை. விரதம் என்பது, உள்ளத்திற்குத் தெளிவு தருவதாகும். மக்களுக்காக ஒரு ஆன்மீகச் சூழ்நி லையை ஏற்படுத்தித் தருவதற்கே மகோற்சவம் என்று கூறப்படும் திருவிழாக்கள் ஏற்பட்டன. மகோற்சவ நாட்கள் தான், ஒருவனுடைய உண்மை வாழ்க்கைக்கு உரிய நாட்கள். அவை இறைவனோடு தொடர்புகொள்ள வாய்ப்பளிக்கும் நாட்களாகும். எனவே இந்த நாட்களில் மக்கள் சிவாலய தரிசனம் செய்து சிறந்த தீட்சாபயனைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்படியான விழாக்கள் பலகாலமாக நம்நாட்டில் நடைபெற்று வந்தமை தெரிய வருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

**"ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்**
**கணத்தார்க்கு**
**அட்டிட்டல் காணாது போதியோ**
**பூம்பாவாய்"**

எனத் திருமயிலாப்பூர் பதிகத்திலே பாடியுள்ளார். இன்னும்

**"பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்"** என்றும் பாடியுள்ளார். திருக்குறள் முதலிய நூல்களிலும் திருவிழாக்கள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. திருவாரூர் திருவாதிரை விழாவை அப்பர் சுவாமிகள் சிறப்பித்துப் பாடியமையும் நாம் அறிந்ததே. மகோற்சவங்கள் என்பதன் பொருள் "மேலான யாகம்" என்பதாகும். உற்சவம் என்றால் சுகத்தைக் கொடுப்பது. இதில் ஈடுபடுவோர் அனைவருக்கும் மேலான இன்பத்தையும், உள்ளத்துக்கு அமைதி யையும், உயிருக்கு ஊதியத்தையும் நல்கும். எனவே

**"தனக்குவமை யில்லாதான்**
**தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது"**

என்ற திருவள்ளுவர் கூற்றைச் சிந்தையிற் கொண்டு சிவாலய தரிசனம் செய்து, மகோற்சவ தரிசனம் பெற்று வாழ்வாங்கு வாழ்தல் மக்கட் பிறவியின் மகத்தான கடனாகும்.

**"மண்ணினிற் பிறந்தார் பெறும்**
**பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார் தம்மை**
**அமுது செய்வித்தல்**
**கண்ணினால் அவர்நல்விழாப்**
**பொலிவு கண்டார்தல்**
**உண்மை யாமெனில் உலகர்முன்**
**வருகென உரைத்தார்"**

அடியாரைப் போற்றலும், அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபட்டு நல்ல விழாவைக் கண்டு மனம் மகிழ்ந்து நல்லருள் பெறுவதுமே இந்த வையகத்தில் நாம் பிறந்ததன் பயன் என்கிறார் சம்பந்தப்பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளில் பாம்பு வழிபாடு

ப. கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

உலக நாடுகளில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வருவதை அறிய முடிகின்றது. மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வந்தமைக்கும் தற்பொழுதும் கூட வழிபட்டு வருவதற்கும் பிரதான காரணங்களாக தேவையும் பயமும் அமைகின்றன. தென்கிழக்காசிய, தென்னாசிய, மேற்குலகம் ஆகிய நாடுகளில் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்கள் இந்து சமயக் கடவுளர்களான சிவன், சக்தி, விஷ்ணு, முருகன், விநாயகர், பிரமன், சூரியன் ஆகியோர்களுக்கும் மற்றும் தேவ அரசர்கள், அகத்தியர், காரைக்காலம்மையார், இறந்தோர்கள் (முதாதையர்கள்) மரம் (விருட்சம்), பாம்பு, பசு (இடபம்), உயிரினங்கள், இயற்கைக் கூறுகள் ஆகியவற்றுக்கும் கலைத்துவம் வாய்ந்த திருக்கோயில்களை நிறுவி வழிபாடாற்றியதையும், இன்று வரை வழிபாடாற்றி வருவதையும், அங்கு கிடைத்த சான்றுகளி லிருந்தும், வழிபாட்டு நடைமுறைகளிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்து சமயமும் அதனைச் சார்ந்த பண்பாட்டு விழுமியங்களும் ஒரு காலத்தில் உலகெங்கும் நன்கு பரவியிருந்ததை வரலாற்று நூல்களில் இருந்து அறியமுடிகின்றது. உலகெங்கும் நன்னிலையில் சிறப்புற்று விளங்கிய இந்துப் பண்பாடு பின்னர் தென்கிழக்காசிய நாடுகளில் நன்கு சிறப்புற்று விளங்கியது.

தென்கிழக்காசிய நாடுகளில் பல இனங்கள், சமயங்கள், மொழிகள், பண்பாடுகள் அனைத்தும் கலந்துறவாடுகின்ற நிலை ஏற்பட்டது. இத்தகைய வேறுபாடுகளிடையேயும் பன்மைச் சமூக அடிப்ப டையிலும் வாழ்கின்ற தென்கிழக்காசிய மக்கள் அன்னியர்கள் நுழைவதற்கு முன்பிருந்து பண்பாட்டு முறைகளை அடியோடு மறந்துவிட வில்லை என்பது வியப்புக்குரியதாகும். தென்கிழக் காசியப் பழைய பண்பாட்டு முறைகள் என்ற வகையில் சிலவற்றை கோட்ஸ் (Codes) என்ற வரலாற்றா சிரியர் தொகுத்துக் கூறியுள்ளார். அவைகள் :-

1. நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்தி நெற்பயிர் விளைத்தல்
2. எருது, எருமை போன்ற மிருகங்களை உழவிற்குப் பயன்படுத்துதல்
3. உலோகங்களின் பயனை அறிந்திருத்தல்
4. கப்பல் செலுத்துவதில் திறமை
5. பெண்களுக்குச் சமூகத்தில் மிக உயர்ந்த இடம் - தாய்வழிச் சொத்துரிமை
6. நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மை.
7. இயற்கை வழிபாடு (Animism) மூதாதையர் வழிபாடு, நில வழிபாடு
8. மலை உச்சியில் கோயில்கள் கட்டுதல்
9. பெரிய மண்பானைகளில் வைத்து இறந்தவர் களைப் புதைத்தல், புதைத்த இடத்தில் குத்துக் கல்லறைகள் கட்டுதல் (Dolmens)
10. மலைகள் - கடல்கள், பறப்பன் - நீந்துவன, மலைவாழ் மக்கள் - கடலோர மக்கள் போன்ற இயற்கை மாறுபாடுகளை தெய்வ நியதியாக ஏற்று வழிபடுதல் ஆகியவை ஆகும்.

தென்கிழக்காசிய நாடுகளில் மாறுபட்ட சமயங்கள், பண்பாடுகள், மொழியினங்கள், நுழைந்து, பல நூற்றாண்டுகளாக மக்களிடையே பரவியிருந் தாலும், அந்நாட்டு மக்கள் தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையான பண்பாட்டியல்புகளை மறக்காமல் போற்றிக்காத்து வருகின்றனர் என்பது பெருவியப் பிற்குரியதாகும். இன்று மீண்டும் உலககெங்கும் இந்துப்பண்பாட்டம் சங்கள் பரவி, மக்களால் பண்பாட்டம்சங்கள் பேணப்பட்டு வருகின்றதைக் காணமுடிகின்றது.

உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும் எங்கும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத் திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவதும், அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச் செயல்களாகும்.

உலகின் மிகப்பழைய நாகரிகங்கள் தோன்றிய இடங்களாக எகிப்து, மெசபட்டோமியா, பாபிலோனியா, சுமேரியா, கிரேக்க, உரோம, சிந்துவெளி ஆகியன விளங்குகின்றன. இவற்றுள் சிந்துவெளி தவிர ஏனைய இடங்களில் மிகப் பண்டைக் காலத்திலேயே மக்கள் பாம்பை வழிபட்டனர் என்பதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. எனவே வழிபாட்டின் தோற்றமும் தொன்மையும் இடைக்காலத்தன அல்ல. மிகப் பழங்காலத்தன என்பது விளக்கமாகின்றது.

உலக நாடுகளான பொனீசியா, மெசபட்டோ மியா, பாபிலோனியா, கிரேக்கம், இத்தாலி, உரோமாபுரி, சர்மதியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, சீனா, ஜப்பான், கம்போடியா, நேபாளம், எகிப்து, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பாம்பு வணக்கம் நிலவியிருந்தது. இந்நாடுகளில் இவ்வழிபாட்டு மரபு நன்கு சிறப்புற்றிருந்தன என்பதற்கு இந்நாடுகளில் கிடைத்த தொல்பொருட் சான்றுகள், இலக்கி யங்கள் மற்றும் தற்போதைய சமூகத்தில் நடை முறையில் பேணப்படுகின்ற நம்பிக்கைகள் ஆகியன சிறந்த சான்றாதாரங்களாக அமைகின்றன.

உலகில் எத்தனையோ உயிர்கள் உள்ளன. அவற்றுள் எத்தனையோ மக்களால் வழிபடப் பெறுகின்றன. ஆனால் அவற்றுள் பாம்பு வழிபாடு மட்டும் முதன்மை பெறுவதற்குப் பல காரணங் களுண்டு. அதற்குரிய காரணங்களாக

1. விரைவாகச் செல்லும் தன்மை
2. உடன் தோன்றுவதும், உடன் மறைவதும்
3. இடுகாடு, சுடுகாடு, பொந்துள்ள மரம், பழைய சுவர்கள், கரையான் புற்று ஆகிய இடங்களில் வாழ்தல்.
4. மலைப்பாம்பின் பாரித்த தோற்றமும் தாக்கும் ஆற்றலும்.
5. நச்சுப் பாம்புகள் கடித்தலும், விரைவில் நஞ்சு பரவுதலும்.
6. பிளவுண்ட, அடிக்கடி வெளியே நீட்டப்படும் நீண்ட நாக்கு.
7. பல்வேறு வகை வண்ணங்கள், வண்ணக் கலப்புக்கள்.
8. தோலை உரிக்கும் திறம்.
9. நூற்றுக் கணக்கில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்.
10. இரட்டைத் தலைப்பாம்புகள், இயல்பாகப் பிறத்தல் உள்ளன. மூன்று, ஐந்து, ஏழு ஆயிரம் தலைப்பாம்புகள் என்ற கற்பனைப் பெருக்கத்திற்கு இடம் கொடுத்தது.
11. கடுங் குளிரையும் கடும் வெயிலையும் தாங்கும் ஆற்றல்.
12. நிலத்தில் விரைந்து ஓடுவதும், நீரில் விரைந்து நீந்துதலும்
13. பாம்பிற்குள்ள இமையா விழிகளும் தொலை நோக்கும்
14. வியப்பாகப் பின்னித் தழுவிக் கொள்ளும் திறம்
15. அழகாகப் படம் விரித்து ஆடுதல்
16. பாம்பனைத்தும் இரண்டு ஆண் உறுப்புக்களைப் பெற்றிருத்தல், சில நான்கு ஆண் உறுப்புக் களைப் பெற்றிருத்தல்.
17. விரைவான வளர்ச்சி, நீளம் ஆகியன
18. நஞ்சைப் பாய்ச்சும் திறம் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்துப் பண்பாட்டு மரபில் பாம்பு இந்துத் தெய்வீக வரலாற்றுடன் தொடர்புபட்ட ஒன்றாக விளங்குகின்றது. இந்துக் கடவுளரான சிவன், விநாயகர், முருகன், சக்தி, விஷ்ணு ஆகிய கடவுள்களுக்கு, பாம்பு முறையே அணிகலன்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், ஊர்திகளாக அமைந்து விளங்கியதை இந்துமத தெய்வீக வரலாற்று நூல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. சிறப்பாக விஷ்ணு பாம்பின் மீது நின்று ஆடிய நடனத்தினை காளிங்கன நர்த்தனம் எனவும், நாகம் அம்பாளைப் பூசித்தமையால் (வழிபட்டமையால்) நாகபூஷணி யம்மன் எனவும் அழைக்கப்படுகின்றன. இந்துக்கள் தங்களது திருக்கோயில் வழிபாட்டு மரபிலே நாகதம்பிரான், சந்தானகோபாலர் ஆகிய தெய்வங் களையும் போற்றி வழிபட்டு வருவதைக் காண முடிகின்றது. இந்த வகையிலே பாம்பு (நாகபாம்பு) தனித்தும், இந்துக்கடவுள்களுடன் இணைத்தும் போற்றி வழிபடப் பெற்று வருவதன் மூலம் இந்துப் பண்பாட்டு மரபில் பாம்பு வழிபாட்டின் முக்கியத்து வத்தினை உணரமுடிகின்றது.

பாம்பு தொடர்பான பல்வேறு நம்பிக்கைகள் இந்து மக்களிடையே பேணப்பட்டு வருகின்றன. வீட்டிற்கு நாகங்கள் (பாம்பு) வந்தால் நாகதம்பிரான் வந்துவிட்டதாக எண்ணி அதனைக் கைகூப்பி வணங்குவர். சிலர் தமது இறந்த உறுப்பினர் நாகதம்பிரான் வடிவில் வந்ததாகவும் கூறுவர். வெள்ளிக்கிழமைகளில் வந்தால் இன்னும் சந்தோஷப்படுவார்கள். மறந்தும் கூட அவைகளை அடித்துத் துன்புறுத்தமாட்டார்கள். நாகத்தினை அடித்துக்கொன்றால் நாகதோஷம் ஏற்படும் என இந்துக்கள் நம்பி, அதனைக் கொல்லாது பாதுகாத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாகத்தினை (பாம்பினை) சிறப்பாக நாகர் இனமக்கள் வழிபட்டு வந்தார்கள் என அறிய முடிகின்றது. நாகத்தினை சிறப்பாக வழிபட்டு ந்த மக்களினத்தினை நாகர் வம்சம் (நாகர்கள்) என அழைத்தனர். நாகரினம் சிறப்புடன் வாழ்ந்தமையால் தான் அவர்கள் வாழ்ந்த அவ்வப் பகுதிகளில் அவர்களது பண்பாட்டு அம்சங்களும் நன்கு வேரூன்றியுள்ளன.

இந்துப்பண்பாடு தோன்றி வளர்ந்த இந்திய நாட்டில் பாம்பு வழிபாடு மிகவும் பிரதான இடத்தினைப் பெற்று வருகின்றது. வைதீக சமயத்தில் பாம்பு எங்கும் இடம்பெற்றுள்ளது. சிவனுக்கு அணிகலன் பாம்பு, முருகனுக்கு அடியுறை பாம்பு, மாரியம் மனுக்குச் சின்னம் பாம்பு, அய்யனார் (சாத்தா) உடன் தொடர்புடையது பாம்பு, திருமாலுக்கு உறையுள் பாம்பு. இவ்வாறே இந்தியப் பழம்பெரும் சமயங்களான பௌத்தத்திலும் சைனத்திலும் பாம்பு நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. புத்தர் தவமிருக்கும் போது, பெரும் நாகங்களே அவரைக் காத்தன. சைவசமயத் தீர்த்தங்கரரான பார்சுவ நாதருடன் பாம்பு தொடர்புபடுத்தப்படுகின்றது. திராவிட நாகரிகச் சின்னங்களுள் மிகப் பழைய தாகக் கருதப்படும் மொகஞ்சதாரோவில் கண் டெடுக்கப்பட்ட சின்னங்களில் நாகவழிபாட்டுச் சின்னமும் ஒன்றாகும். இந்தியா முழுவதும் பரவியுள்ள வைதீக சமய மக்களால் இன்றும் கொண்டாடப்படும் பாம்பு வழிபாட்டு விழா நாக பஞ்சமியாகும். இந்தியா முழுவதும் நாக பஞ்சமி விழா மாநிலம் தோறும் சிறுசிறு வேறுபாட்டுடனேயே நிகழ்கின்றது.

தமிழிலக்கியங்களில் நாகவழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் நாகர் பெயர்களில் பல ஊர்கள் விளங்குகின்றன. தமிழ் நாட்டில் நிலவும் நாகவழிபாட்டை ஆறு வகையாகப் பிரித்து நோக்கியுள்ளனர்.

அவையாவன:-

1. தனிக் கோயில் வழிபாடு
2. அரசு, வேம்பு மரத்தடி நாகவழிபாடு
3. பாம்புப்புற்று வழிபாடு
4. தலவிருட்ச நாகவழிபாடு
5. பிள்ளையார் பக்க வழிபாடு
6. இல்லநாக வழிபாடு என்பன

தென்னாசியாவில் குறிப்பாக இந்தியா, ஈழம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தொல்குடியினரான ஒஸ்ரலோயிட் இனமக்களின் பண்டைய வழிபாட்டு நெறியாக இது விளங்கியது. இலங்கையில் வாழும் இந்து சமயத்தமிழ் மக்களிடையே இந்தியத் தமிழரை ஒத்த நாக வழிபாட்டு நம்பிக்கைகள் உள்ளன. இந்நாகவழிபாடு தோன்றி வளர்ந்த முறைபற்றி அறிந்து கொள்வதற்கு இங்கு கிடைத்த இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாதாரங்களாக விளங்குகின்றன. ஈழத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகவழிபாடு ஆதிக்குடிகளின் வழிபாடு என்பதைப் பாளிநூல்களில் காணப்படும் ஜதீகங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. இலங்கையின் வடபால் அமைந்துள்ள நாகதீபம், நாகவழிபாட்டிற்குரிய இடம் எனக் கூறப்படுகின்றது. பாம்பின் சிலைகள் மரங்களின் கீழும், ஆற்றோரங்கள், நீர் நிலைகள், கோயில்கள் ஆகிய இடங்களிலும் வைத்து வழிபடப்பட்டன. நாகத்தினை ஈழத்தில் இந்து மக்கள் மட்டுமல்லாது பௌத்த மதத்தினரும் வழிபட்டு வருகின்றதைக் காணமுடிகின்றது.

ஈழத்தில் நாகதம்பிரான் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களாக, நாகர்கோயில், புளியம் பொக்கணை, புத்தூர், நவாலி, செம்பியன்பற்று, வடலியடைப்பு, பொன்னாலை, மல்லாகம், புளியந் தீவு, அனலைதீவு ஆகியன காணப்படுகின்றன. நயினாதீவு, சண்டிருப்பாய், அராலி, கோண்டாவில், நவாலி, பரந்தன், உரும்பிராய் முதலான பலவிடங்களில் நாகபூஷணி அம்மன் ஆலயங்கள் உள்ளன. ஐந்தலையரவு பூசிக்கும் பொருட்டு இறைவன் அருட்சக்தி வடிவாய் அமைந்த ஆலயங்கள் நாகபூஷணி அம்மையாலயங்க ளாகும்.

பொனீசியா நாட்டு மக்கள் வாயில் தன் வாலை விழுங்குவது போல உள்ள பாம்பை தம் சொர்க்க உலகத் தெய்வமான 'தாத்' என்பதற்குரிய சின்ன மாகக் கருதினர். திரியன் நாணயங்களில் பாம்பு வழிபாட்டு உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவையன்றி இந்நாட்டில் உள்ள பண்டைய சின்னங்களிலும் பாம்பு வழிபாட்டிற்கான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. உலக நாகரிகங்களும் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகங்களுள் ஒன்றாக விளங்கும் மெசபட்டோமியா நாகரிகத்தில் பாம்பு வழிபாடு மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கே மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பாம்பு வழிபாடு இருந்தமை யைப் புலப்படுத்துகின்றன. கல்லிலும் சுட்ட செங்கல்லிலும் பானைகளிலும் பாம்புருவங்கள் செய்யப்பட்டிருந்தன.

பாபிலோனியாவில் கொவோ என்ற தெய்வம் ஒன்று குறிக்கப்படுகின்றது. இத் தெய்வம் பாம்பு உருவினதாகும். பாபிலோனியர் மண்ணின் வளமை யைப் பாம்பாக உருவகப்படுத்தி அழைப்பர். அத்துடன் வழிபட்டு வந்தனர். பண்டைய நாகரிகப் படைப்பாளருள் ஒருவராகிய கிரேக்கர் பாம்பைப் புனிதமாகப் போற்றினர். போரில் வீர மரணம் எய்திய வீரர்கள் அனைவரும் பாம்புகளாகத் தோன்றுவர் என்பது அவர்களது நம்பிக்கையாகும். சில கடவுளர் பாம்புருவில் இருந்தனர். சில கடவுளர் பாம்புருவில் தோன்றுவர் என்று அவர்கள் நம்பினர். கலைகளிலும், தெய்வப் பழங் கதைக ளிலும் பாம்பைக் கடவுளோடு தொடர்புபடுத்தினர். உயிர்ப் பாம்புகளைக் கோயில்களில் வைத்துக் காத்தனர். அவற்றிற்கு நேர்ந்து கொண்டு போய், ரொட்டி, தேன் ஆகியவற்றை வைத்து வழிபடுவர். கிரேக்கர், பாம்புகள் தம் குடும்பங்களைக் காப்பன எனக் கருதினர். செடி, கொடிகளை அவை காக்கும், தம் நகரைக் காக்கும் என எண்ணினர்.

வட அமெரிக்க இந்தியர் பாம்புகளை மழை, மின்னல், இடி போன்றவற்றுடன் இணைத்துப் பேசினர். வட அமெரிக்க இந்தியரிடை பாம்பு, மனிதரையும் விலங்குகளையும் விழுங்கி விடுவதாக நம்பிக்கை யுள்ளது. கொம்பு முளைத்த பாம்பு இருப்பதாகவும் அவர்கள் கருதினர். நடு அமெரிக்கா, மெக்சிக்கோ ஆகிய இடங்களில் பானைகளில் பாம்புருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. தென்னமரிக்க மக்களிடை யேயும் பாம்பு வழிபாடும் இதனோடு தொடர்புடைய நம்பிக்கைகளும் பேணப்பட்டன.

உலக நாடுகளுள் ஒன்றாக விளங்கும் அவுஸ்ரேலிய மக்கள் பாம்பு வழிபாட்டினை இயற்றி வந்தனர். இவர்களது இப்பாம்பு வழிபாட்டினை வானவில் பாம்பு வழிபாடு, முன்னோர் (பாம்பு) வழிபாடு என இரண்டாக வகுத்து நோக்கப் பட்டுள்ளது. ஜப்பான் நாட்டில் பாம்போடு தொடர்பு பட்ட பல தெய்வீகக் கதைகள் பேசப்படுகின்றன.

தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றாக விளங்கும் கம்போடியாவில் இந்துப் பண்பாடு நன்கு சிறப்புற்று விளங்கியிருந்தது. இங்கு பாம்பு வழிபாடு நன்னிலையில் விளங்கியதை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு 'நகோன்வாட்' என்ற கோயில் ஒன்று உள்ளது. இக் கோயில் முற்றாக ஒரு பாம்புக் கோயிலாகும். அக்கோயிலின் கூரை எங்கணும் ஏழு தலைப்பாம்புருவங்கள் நூற்றுக்கணக்கில் வரையப்பட்டுள்ளன. கோயிலின் மூலை முடுக்கு எங்குமே பாம்புருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தனியே பாம்பிற்கெனக் கருவறை இல்லை, கோயில் முழுதுமே கருவறை தான். இக் கோயிலைக் கண்டறிந்து முதலில் உலகிற்கு அறிவித்த பெருமைக்குரியவர் பிரான்சு அறிஞர் எம் முகோ என்பவராவார்.

இந்திய வட எல்லையில் இருக்கும் நேபாளம் தனி நாடாகும். இந்நாட்டில் இந்தியச் சமயங்களும் நம்பிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. இந்நாட்டு மக்களும் பாம்பினை வழிபடுகின்றனர். இந்நாட்டு மக்கள் ஆனி மாதத்தில் தேய்பிறை காலத்து ஐந்தாம் நாளன்று நாகபஞ்சமி விழாவைக் கொண்டாடுவர். சங்கு நாராயணன் என்ற இடத்தில் இவ்விழா சிறப்புறக் கொண்டாடப்படும். அவ்விடத்தில் வைணவத் திருமாலுடன் தொடர்புடைய கருடனின் உருவம் அங்கே உள்ளது. இவ் வழிபாட்டின் போது மக்கள் தமக்கும், பயிர் விளைச்சலுக்கும் நல்வாழ்த்து வழங்க வேண்டும் என நாகவேந்தனை மந்திரம் ஓதி வேண்டிக் கொள்வர்.

உலகத்தின் பழைய நாகரிகங்களுள் ஒன்றாக விளங்கும் எகிப்திய நாகரிகச் சின்னங்களுள் பாம்பு வழிபாடு பற்றிய அரிய குறிப்புக்கள் பல கிடைத்துள்ளன. எகிப்திய அரசர்தம் அரச சின்னமே படம் எடுத்தாடும் நாகபாம்பு ஆகும். எகிப்து மக்கள் அரசனை ஆண்டவனாக வணங்கினர். பாம்பை இறந்த அரசனின் ஆவியாக வழிபட்டனர். எகிப்தியர், காணும் உயிரனைத்தையும் வழிபட்டனர். அவர் வணங்கிய உயிர்களுள் பாம்பு முதன்மை பெற்றிருந்தது. எகிப்துக் கடவுளான ஓசிரிசு தலையில் பாம்பு படமெடுத்த நிலையில் உள்ளது. அவரது மனைவியின் பெயர் ஈசிசு. அவர் தலையிலும் பாம்பு ஒன்று படமெடுத்த நிலையிலுள்ளது. நாகபாம்பு வழிபாடு எகிப்தில் மட்டுமே சிறந்து விளங்கியது. எஞ்சிய ஆப்பிரிக்க நாடுகளில் மலைப்பாம்பு வணக்கமே மிகுதி எனினும், மலைப் பாம்பை மட்டுமன்றி வேறு பிற சிறு சிறு பாம்புகளை யொட்டியும் பல்வேறு நம்பிக்கைகள் ஆப்பிரிக்க மக்களிடையே நிலவின.

சுருக்கக் கூறின் உலகிலே வாழ்ந்த, வாழ்கின்ற மக்களால் நன்கு போற்றி வணங்கப்பட்ட, தற்பொழுதும் வணங்கப்படுகின்ற உயிரினங்களுள் ஒன்றாக பாம்பு விளங்குகின்றது. இப் பாம்பினை மக்கள் பல்வேறு காரணங்களுக்காகப் போற்றி வணங்கி வருகின்றனர். இப்பாம்பு இந்துத் தெய்வத்துடன் இணைந்தும் தனித்தும் வணங்கப் படுகின்றது. இப்பாம்புக்கு மக்கள் சிறியளவிலும் பெரியளவிலும் கோயில்கள் அமைத்து வழிபாடி யற்றி வருகின்றார்கள்.

## உசாத்துணை நூல்கள்


1. அருமருந்தன் சி.ர. **பண்டைக்கால நாகரிகங்களின் வரலாறு** (கி.பி. 476 வரை) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1985
2. அறவாணன் க.ப. **பாம்பு வழிபாடு** (திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு) பாரிநிலையம், சென்னை, 1979
3. சிற்றம்பலம் சி.க. **ஈழத்து இந்து சமய வரலாறு (பாகம் 1)** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1996




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தும் அரனும்

வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா
(கோப்பாய் சிவம்)

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஒரு பழமொழி உண்டு. எண்கள் நமது கண்கள் எனலாம். ஒவ்வோர் எண்ணுக்கும் ஒவ்வொரு விதமான தனிச்சிறப்பு உண்டு. அவ் வகையில் ஐந்து என்ற எண்ணுக்கு உள்ள பெரும் சிறப்பு அதன் ஆன்மீகச் சிறப்பு ஆகும்.

ஐந்தெழுத்து, ஐம்பூதம், ஐம்புலன், ஐம்பொறி, ஐந்தவத்தை, ஐந்திணை, ஐவகை ஒழுக்கம், பஞ்சலோகங்கள், பஞ்சகோசம், பஞ்சம ஹாயக்ஞம், பஞ்ச சீலங்கள், பஞ்சமஹாபாதகங்கள், பஞ்சாங்க நமஸ்காரம், பஞ்சகிருத்தியங்கள், பஞ்சமூர்த்திகள், பஞ்சப் பிராணன்கள், பஞ்ச கலைகள், பஞ்ச வர்ணங்கள், பஞ்சசுத்தி, பஞ்சபாணம், பஞ்சாங்கம், பஞ்சகவ்வியம், பஞ்சப்ரம்ம மந்திரங்கள், பஞ்சா மிர்தம், பஞ்சாயுதங்கள், பஞ்சாசனங்கள் என்று ஐந்துகளின் தொகுப்பைப் பலவாக விரிக்கலாம்.

ஒன்றேயாகிய பரம்பொருள் பலவாகிய ஆன்மாக்கள் மலபரிபாகம் அடைதற்காகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை நிகழ்த்தும் பொருட்டுப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் என்ற பஞ்சமூர்த்திகளாய் நின்று பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலமைந்த இப்பிரபஞ்சம் என்னும் **புவனத்தை** உண்டு பண்ணினான்.

அதேபோல மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுடனும் அவற்றின்வழி செல்லும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களுடனும் அன்மயகோசம், பிராண மய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்சகோசங் களுடனும் பிராணன், அபானன், உதானன், சமானன், பிரம்மன் என்னும் பஞ்சப் பிராணன்களுடனும் **கரண**ங்களுடனும் சேர்ந்த உடம்பு என்**னும்** **தனு**வையும் அவ்வான்மாவுக்கு வழங்கினான்.

அவற்றின்வழி அனுபவிக்கும் சாக்கிரம், சொப்பனம், சுளுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளும் ஐந்திணை மரபோடு சேர்ந்த ஐவகை ஒழுக்கங்களும் கொண்ட அனுபவங்களாகிய **போகங்**களையும் ஏற்படுத்தினான்.

இங்கு தனு, கரண, புவனங்கள் இறைவன் தந்தவை, போகங்கள் நாமே அவற்றின்வழி பெற்றுக் கொள்பவை. அந்த போகங்கள் நன்றாக அமையவும் அவற்றால் கிடைக்கும் இறுதிநிலை நன்றாக அமையவும் வேண்டிய வழிவகைகளை நாமே உருவாக்கவேண்டும். அவை நம் அறிவால் நாமே தீர்மானித்துக்கொள்ள வேண்டியவை என்றாலும் அதற்கு வேண்டிய அறிவை நமக்கு அவன் தந்துள்ளான் என்பதோடு நம் முன்னோர்கள் அதற்கான வழிவகைகளை உருவாக்கித் தந்தும் உள்ளனர்.

ஆலயங்களும் அங்குள்ள திருவுருவங் களும் அங்கு நடைபெறும் நித்திய நைமித்திகக் கிரியைகளும் வழிபாடுகளும் அத்தகையனவே.

நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரமும் கொலை, களவு, கள்ளருந்தல், புலாலுண்ணுதல், பொய்பேசுதல் ஆகிய விலக்க வேண்டிய பஞ்சமா பாதகங்களும் வழிபட வேண்டிய பிரம்ம, விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் என்ற பஞ்சமூர்த்திகளுக்கான கிரியைகளின் போது நாம் செய்துகொள்ள வேண்டிய ஆத்மசுத்தி, ஸ்தல சுத்தி, த்ரவ்யசுத்தி, மந்த்ர சுத்தி, லிங்கசுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பஞ்ச சுத்திகளும் பயன்படுத்த வேண்டிய ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோ ஜாத என்னும் பஞ்சப் பிரம்ம மந்திரங்களும் அவர்களுக்குரிய அனந்த, சிம்ம, யோக, பத்ம, விமல எனப்படும் பஞ்சாசனங்களும் அங்கு துணைநிற்கும் பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியம் மற்றும் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், தேங்காய்த் துருவல், மாதுளம்பழம் என்னும் பஞ்சாமிர்தம் முதலியனவும் குறிப்பிடத்தக்க ஐந்தோடிணைந்த ஆன்மீக அம்சங்களாம்.

இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு ஒரு மஹாகும்பாபிஷேக யாகசாலையையும் அங்கு நிகழும் கிரியைகளையும் விரிவாக ஆராயும் போது இன்னும் பல உண்மைகளை நாம் அறிய லாம். யாகசாலையில் ஆகாயம் **(ஆகாசம்)** ஆகிய பரவெளியும் காற்றும் **(வாயு)** இயல்பாகவே எங்கும் பரந்திருக்கிறது. யாககுண்டங்களில் அக்னி **(தேயு)** வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் தண்ணீர் **(அப்பு)** இருக்கிறது. சர்வதேவதா ஸ்வரூபம் என வர்ணிக்கப்படுவதும் எல்லாத் தெய்வ சக்தியையும் தன்னுள் அடக்கிவைத்து வளர்த்து அதன்பின் திருவருவத்தில் அபிஷேக மாகும்போது அங்கு அந்த சக்தியை வழங்குவது மாகிய கும்பத்தில் நிறைக்கப்படும் ஜலம் தவிர்ந்த ஏனைய பொருட்கள் யாவுமே **பிருதுவி** அல்லது நிலம் ஆகிய மண்ணின் அம்சமே. அதாவது குடம் செய்யப்படும் மூலப்பொருள் மண் அல்லது மண்ணிலிருந்து பெறப்படும் உலோகம் ஆகும். மாவிலை, தர்ப்பை, தேங்காய் முதலிய யாவுமே பிருதுவியின் அம்சமே. இவ்வாறு **பஞ்சபூதங்** களும் இங்கு தொடர்புபடுவது கவனிக்கத்தக்கது.

பிரபஞ்சம் என்பது பஞ்சபூதம் என்பதிலிருந்தே வந்தது. பிரபஞ்சமெங்கும் பரந்தும் கரந்தும் நிறைந்தும் நீக்கமற விளங்கும் பரம்பொருட் சக்தியை நமது கண்ணுக்கெட்டும் வகையில் மாத்திரமல்லாமல் கைக்கெட்டும் வகையிலும் கொண்டுவந்து நமது அனுபவத்தில் கலக்கச் செய்யும் முயற்சியே கும்பாபிஷேகக் கிரியைகளின் தத்துவம்.

இங்கு சிறப்பம்சமாகக் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்ற கூற்றுக்கிணங்க எட்டாப் பொருளாக இருக்கும் பரமனை மாயவித்தையால் முன்னாலே கொண்டுவந்து நிறுத்துவது போலல்லாமல் அறிவும் உணர்வும் ஏற்கும் வகையில் படிப் படியாகவும் கலையம்சங்களோடும் கொண்டு வந்து சேர்ப்பதே கவனிக்க வேண்டியதாகும். ஆகாயத்தில் முகில்களிடையே காணப்பட்ட மின்சக்தியை அவதானித்து அறிந்து உணர்ந்து அதனை ஒரு மின்கலத்துள் அகப்படுத்தி வைத்துத் தேவைக் கேற்ப பயன்கொள்வது போல அத்தனை விஞ்ஞான அறிவியல் நுட்பங்களோடுதான் ஆகமம் கிரியை களை நெறிப்படுத்தி நிற்கிறது.

**ஆகாயம்** என்ற முதலாவது மூலப் பொருள் வெறும் கருத்துணர்வில் நிலை பெறுவது தான். அதற்கு உருவமோ நிறமோ அசைவோ செயலோ எதுவும் கிடையாது. ஆனால் ஆகாயம் என்னும் பரவெளியானது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. மறுதலையாக எல்லாம் நிலை பெற்றிருப்பதும் ஆகாயமாகிய பரவெளியில் தான். இதுதான் பரம்பொருளின் உண்மை நிலையும். அனைத்தையும் கடந்தும் அனைத்தின் **உள்**ளே யும் இருக்கும் **கடவுள்** நிலை. இது வைஷ்ண வர்கள் கூறும் பரம் என்னும் முதலாவது நிலை யுடன் ஒப்பிடப்படலாம்.

**காற்று** என்னும் இரண்டாவது நிலையில், நிலையியல் சக்தி இயக்க சக்தியாகிறது. காற்றுக்கு அசைவு உண்டு. செயல் உண்டு. அதனை நாம் உணரமுடியும். ஆனால் அப்போதும் அது காட்சிக்கு எட்டாததாக இருக்கிறது. விபவம் என்று வைஷ்ணவம் கூறும் இரண்டாவது நிலை இதுவே.

**நெருப்பு** என்னும் மூன்றாவது நிலை காட்சிக்கும் உரியதாகிவிட்டது. ஆனால் தொட்டு அனுபவிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. ஆக்கல் அழித்தல் ஆகிய இரண்டு செய்பாட்டுக் கும் உரியதாக, வாழ்வின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை தொடரும் பெரும் சக்தியாக நம்மை நெருங்கிவந்துவிட்ட பரம்பொருளின் நிலை இது தான். வியூகம் என வைஷ்ணவர்கள் இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். யாகசாலையில் ஆகாயமும் காற்றும் எங்கும் பரந்த நிலையில் இருக்க அக்கினி குண்டங்களில் அடங்கியதாக உள்ளது. அந்த இரு பூதங்களினூடாகப் பரம்பொருட் சக்தியை ஈர்த்தெடுத்து அடக்கி வைத்திருப்பதாக அமைகிறது. சாத்வீக நிலையில் பரவெளியில் கலந்திருந்த அருட்சக்தியை நிலைச்சக்தியாக அங்கு நிறைந் திருந்த இயல்பு மாறி இயக்க சக்தியாக - சாத்வீகமும் ராஜசமும் கலந்த நிலையில் காற்றினுள் கொண்டுவந்த ராஜசம் மிக்க நிலையில் அக்கினி யில் துடிப்போடு நம்முன் காணவைக்கிறது.

**நீர்** என்ற நான்காவது நிலை நமது பிரியத்துக்குரியது. நம்மோடு என்றும் தொடர்பு டையது. காண்பதற்குமட்டுமல்லாமல் தொட்டுத் தழுவி அனுபவிக்கும் பொருளாகவும் இன்பம் தரும் குளிர்நிலையுடையதாகவும் ஆகிவிட்டது. ஆனால் தனக்கென ஓர் உருவமோ திடநிலையோ இல்லாத நீர் சார்ந்ததன் வடிவமாக உள்ளது. அந்தர்யாமித்துவம் என வைஷ்ணவர்கள் கூறும் இந்நிலைக்கு அவர்கள் நிலக்கீழ் நீரையே உதாரணமாகக் கொள்வர். கண்ணுக்குத் தெரியா மல் நிலத்தின் கீழ் எங்கும் நிறைந்திருக்கும் நீர் சிறிது முயற்சியுடன் நிலத்தைத் தோண்டுவதன் மூலம் பெறக்கூடியதாக உள்ளது என்பது இதன் பொருள். அக்கினியிலே வீறார்ந்த நிலையில் ராஜசமாக உறைந்திருந்த பரம்பொருள் இங்கு ராஜசமும் தாமசமும் கலந்த நிலையில் இயக்க மும் நிலையும் கலந்த நிலையில் அலையெறிந்து கொண்டிருப்பதை உணரலாம். அகாயத்திலிருந்து காற்றினூடாக அக்கினியில் கொண்டுவரப்பட்ட சக்தி இப்போது கும்பத்திலுள்ள நீரில் தளும்பு கிறது.

**நிலம்** என்பதுவே பஞ்சபூதங்களில் இறுதியான நிலை. இது உறுதியான நிலையுங் கூட. திடத்தன்மையும் உருவமும் உறுதியும் உடையதாக நம்மோடு என்றும் தொடர்புடையதாக இருப்பது. இங்கு அருட்சக்தி தாமச நிலையிலே மறுபடி நிலைச்சக்தியாக மாறி அசையாமல் இறுகிநிற்கிறது. வேண்டிய நேரம் வேண்டிய வண்ணம் வேண்டியவரிடம் வெளிப்படும் தன்மையை இங்கு உணரலாம். கும்பத்து நீரில் தளும்பிய அருட்சக்தி இப்போது நிலத்தின் அம்சமான கற்சிலையில் அபிஷேகத்தின் மூலம் கலந்து செறிந்திருக்கிறது.

நிலத்தினுள் நீருண்டு. தோண்டினால் கிடைக்கும். நிலத்தினுள் நெருப்புண்டு. கற்களை அல்லது மரங்களை உரோஞ்சினால் பெறலாம். எரிமலையாகவும் அதனைக் காணலாம். நிலத்தினுள் காற்று உண்டு. காற்றில்லாத இடம் உண்டா? நிலத்தினுள் ஆகாயம் உண்டு. மண்ணைத் தோண்டியால் ஏற்படுவது வெளிதானே!

நிலத்தினுள் யாவும் உண்டு. அதனால் தான் நாமும் அதில் நிலைபெறுகிறோம். நம்மைத் தாங்குவதும் நமக்கு எல்லாம் தருவதும் நாம் செய்யும் செயல் யாவற்றுக்கும் சாட்சிபூதமாகவும் பொறுமையாகவும் இருப்பது நிலம் அல்லவா? அதனால்தான் நிலமகள் என்றும் பூமாதேவி என்றும் தெய்வீக நிலை கொடுக்கின்றோம். நிலத்தின் அம்சங்களான மண், கல், செம்பு, வெள்ளி, தங்கம், பஞ்சலோகம் (அடடா, இங்கும் ஐந்து!) முதலிய வற்றில் இறைதிருவுருவங்களை அமைக்கின்றோம். அவற்றாலேயே கோவிலைக் கட்டுகிறோம். பிருதுவி அம்சம் என்று ஏற்கெனவே பார்த்த கும்பத்தில் குவிந்திருக்கும் சக்தியை கும்பநீர் சொரிதல் மூலம் நிலம் தந்த திடப் பொருளாகிய திருவுருவில் எழுந்தருளச் செய்கிறோம்.

சக்தியை விரைவில் ஈர்த்துச் செறிவோடு வைத்திருந்து சிறிது சிறிதாக வெளிவிடும் தன்மை கருங்கல்லிற்கு உண்டு. அதுவே மூலவராக அமையும் தகுதி பெறுகிறது. சக்தியை உடனே ஈர்த்து உடனே வெளிவிடும் தன்மை உலோகங் களுக்குண்டு. அதனால் உற்சவராக அமையும் தகுதி உலோகத்திற்காகிறது. மூலவரிடம் செறிந்து சிந்தாமல் சிதறாமல் பாதுகாக்கப்பட்டும் அபிஷேக ஆராதனைகளாலும் தீபாராதனை களாலும் மந்திர உச்சாரணங்களாலும் திருமுறை பாராயணங்க ளாலும் வளர்க்கப்படும் சக்தியை உற்சவர் வாங்கி வெளியே கொண்டுவந்து தருகிறார்.

பஞ்சபூதங்களில் செறிந்த பஞ்சமூர்த்தி யாகிய பரம்பொருளைப் பஞ்சாட்சர மந்திரம் ஓதி வழிபட்டுப் பரமபதம் அடைந்து பரமானந்தப் பேறடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்திக்கு வழிகாட்டும் முத்துக்குமரன்

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
மாவையாதீனகர்த்தா

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை - தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" எனும் முதியோர் வாக்கின் உண்மைப்பொருளில் ஆலயமும் மந்திரமும் இணைக்கப்பட்டிருக்கிறது. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்ததுவே" என தாயோடு இணைந்து பிறந்த நாட்டுடன் சங்கமித்து வாழும்போது அதுவே தேவவுலக வாழ்விலும் பார்க்க அதிவிஷேஷமாகும் என்பதும் வசிட்டரிஷி வாக்கு. நாடே உலகம், வீடே கோவில், தாய் தந்தையர்களே சிவமும் சக்தியுமாவர். அறிவுப் பொக்கிஷங்களான ஆகம, சாஸ்திர, இதிகாச நூல்கள் இவற்றை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன. இந்த உணர்வுகள் தான் மனிதனைப் பக்குவப்படுத்தி, நல்வாழ்வில் வாழ வைத்து முக்தியடையும் மார்க்கத்தை வழிகாட்டி நிற்கும். இதன்வழிவே ஆலயதரிசனம் செம்மை பெறும்.

இறைவனைத் தாங்கிநிற்கும் ஆலயமும், அவரை உணர்ந்துகொள்ள உதவும் பூசை, ஆராதனா மந்திரங்களும் எவ்வாறு உலகை வாழ வைக்கிறதோ அதேபோன்றுதான் வாழும் இல்லங் களும், அங்கு தங்கும் தாய்தந்தையர்களும், நடைபெறும் நற்செயல்களும். இறைவனது நாமங் களால் நாமகரணங் கொண்டவர்களை அழைக்கும் போது, அதனால் கொண்ட நாமார்ச்சனைகளும் மக்களை என்றும் வாழவைத்து உலகையே அவை ரக்ஷித்துநிற்குமென்பதும் ஈசன் வாக்கே. கந்தபுராணம் இவற்றை உலகிற்கு நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது. ஒருவரது பெயர் மூலந்தான் உயிர்சக்தி உய்வடையும். அப்பெயரை ஓயாது உச்சரிப்பதால் உடலிலும் சூழலிலும் மந்திரசக்தி ஊடுருவி மனதை மகிழ்விக்கும். சிவபிரான்கூட சரவணப்பொய்கையில் தமது குமாரர்களைப் பார்த்து உமாதேவிக்குக் கூறுகையில்

**"ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை**
**தூங்கினள் கொண்டுசென்று சரவணத் திடுதலாலே**
**காங்கேய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவணத்தில்**
**பாங்கரில் வருதலாலே சரவணபவ னென்றானான்**
**தாயெனவாரால் போந்து தனங்கொள் பாலருந்தலாலே**
**ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல்பேர் பெற்றான்**
**சேயவன் வடிவமாறுந் திரட்டிநீ யொன்றாய்ச் செய்தாய்**
**ஆயதனாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்**
**ஆதலினமது சக்தி யறுமுக னவனும் யாமும்**
**பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்**
**ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்**
**போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்."**
(கந்தபுராணம்)

உலகில், தாய் தந்தையர்கள், மக்கள் எவ்வாறு பணிகளை மேற்கொண்டனர், தம் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படவேண்டும், அதற்கு எவ்வாறு பிள்ளைகட்கு நாமகரணஞ் செய்ய வேண்டும், நாமங்களால் ஏற்படும் அருட் தன்மைகள் யாவை என்பனவற்றை இக் கந்தபுராண பாடல்கள் அறியத் தருகின்றன. பல்வேறு நாமங்களில் 'முத்துக் குமரன்' என்ற நாமமும் முருகனுக்குண்டு.

அனாதியான சைவசமய வாழ்வியல் வழிகாட்டலில் மானிடப் பிறவியின் நோக்கம், நலன் என்னவென் பதையும், இவற்றைப் பேணிநிற்க உதவும் மார்க் கங்களையும், பல்லாயிரக்கணக்கான நூல்கள் அறியத்தருகின்றன. இவற்றுள் கந்தபுராணம் சிறந்ததோர் வழிகாட்டி நூல் என்பது அறிஞர்களது கருத்துமாகும். அழகுத் தெய்வமென கருதும் முருகனுக்கு ஏராளமான விழாக்கள் பருவகாலங் களிற்கேற்றவாறு நடைபெறுகின்றன. ஒவ்வோர் விழாவும் மனிதசமுதாய மனங்கட்கு ஏற்றவகையில் கொண்டாடப்படுவதும் மரபுமாயிற்று. இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வவ் விழாக்களில்கூட பண்டைய ஆதாரங்களோடு பெற்றபேறுகளை இணைத்து தத்துவ உண்மைப்பொருட்களை உலகிற்கு விளங்க வைத்துக்கொண்டே தொடர்கின்றன. முருகப் பெருமானுக்குரிய விழாக்களில் 'கந்தசஷ்டி விழா' தனித்ததோர் முக்கியத்துவம் கொண்டிருக்கிறதென விஸ்வாமித்ரரிஷி உட்பட சகலரும் அறியத் தந்துள்ளனர்.

இவ்விழா ஐப்பசி மாதத்தில் அமைகிறது. ஐப்பசி மாதமும் அதிசிறப்புவாய்ந்த மாதமென்பது கணிதர்களின் கணிப்பாகும். ஐப்பசி மாதத்தை "துலாமாதமெனவும்" அழைக்கப்படுகிறது. துலா புராணம் எனும் உபபுராணமும் இம்மாதத்திற் குண்டு. ஜீவராசிகள் அனைத்திற்கும் பிராண சக்தியாகத் திகழும் 'கதிரவன்' இப்பக்ஷத்தில் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறார். இந்தத் துலா இராசியில் சஞ்சரிக்கும்போது இவரது வீரியம் குறைந்து சோர்வடைவதால் சூரியன் நீசமாகிறார் என்பது சோதிடசாஸ்திரம். இதனால் இம்மாதத்தில் வெப்பம் மங்கி மழையும் அதிகமாகிறது.

"ஐப்பசி கார்த்திகை அடைமழையே" என்பது ஓர் பழமொழி. இக்காலங்களில் உயிரினங்களது ஆரோக்கியங்களும் பாதிப்பிற்குள்ளாகிறது. துலா ராசியின் அதிபதி சுக்கிரன். இவரை வெள்ளி எனவும் அழைப்பது வழமை. வெள்ளிக்கிழமை சுக்கிரவாரமென வர்ணிக்கப்படுகிறது. எனவேதான் ஐப்பசி மாத சுக்கிர வாரங்கள் விரதமனுஷ்டிக்க ஏதுவானதென அமைந்துவிட்டது. ஐப்பசி மாதத்தில் நீர்நிலையங்களில் விசேஷமான அமிர்தசுரபித் துளிகள் இணைகிறதென வேதகால ரிஷி சமூகத்தினர் கண்டறிந்துள்ளனர். இம்மாதத்தில் புனிதநீராடி சுக்கிரவாரவிரதமனுஷ்டிப்பதால் உடல் உள ஆரோக்கியமும், நிறைகொண்ட ஞானங்கள் கைகூட அறிவு வளர்ச்சியும் உண்டாகும். முருகப் பெருமானது மாதமாதலால் அம் முருகப்பெருமானது ஆராதனைகளால் ஆயுள்விருத்தி, தான்யம், தனம், புத்ரலாபம், இன்னும் வேண்டப்படும் செல்வங்களைப் பெறமுடியுமென கந்தபுராணத் தரவுகள் கூறுகின்றன. பாரதநாட்டில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, காவேரி, சிந்து எனும் திவ்ய நதிகளிலும் சமுத்திரங்களிலும் மக்கள் தவறாது இம்மாதத்தில் நீராடி தத்தம் சித்திகளைப் பெறுவர். இதனையே "துவாஸ்னானம்" என்றழைப்பதும் வழமை. அதிகாலை வேளையில் இந் நீர்நிலைகளில் அமிர்தத்திற் கொப்பான ஔஷதமும் சேர்வதால் அந்நீர் அருந்துவதற்கும் உகந்ததென "அஷ்டாங்க சங்கிரகம்" நூல் அறியத்தருகிறது. இந்த நீர் வகையை "காங்கோதகம்" என்று எப்போதும் எதற்கும் சிறந்ததெனவும் - "ஸாமுத்ரம்" - சமுத்திர நீர் ஐப்பசியில் மாத்திரமே உபயோகத்திற்கு உகந்ததெனவும் அறியத்தருகிறது. சமுத்திரராசன் முருகப்பெருமானை சமுத்திரத்திலிருந்தவாறே தரிசனம் செய்ய பேராசைகொண்டு துதித்து நின்றான். ஐப்பசி மாதத்தில் தான் சங்கு, சிப்பி, சோகி என்பன விருத்தி கொள்கிறது. சிப்பிகளில் முத்து விளையும் மாதமும் ஐப்பசியே. இம் மாதத்தில் வரும் அமாவாசைகூட சக்திகொண்ட திதியாக தீபாவளியோடு சார்ந்துநிற்கும் அமாவாசையோடு கந்தசஷ்டி எனும் முருகப் பெருமானது விரதகாலமும் தொடரும். விரதங்கள் மூலம் நாம் எமக்கு எதைப்பெற வேண்டுமென எமது இரு கைகளாலும் இரந்துநிற்க, முருகப் பெருமான் வழங்குவார். வழங்கிக் கொண்டேயிருப்பார் என அகஸ்தியமுனிவர் உலகிற்கு விதந்தோதினார். இப்பன்னிரு கரங்களின் செயல்பாடுகளை சங்கப் புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் மிக ஆழமாகவே வர்ணித்து விட்டார்.

இவ்வாறு மனதில் சிந்தித்து, துதிகளால் முருகனைப்போற்றி எமக்கு வேண்டிய செல்வங்களைப் பெறவே இம்மாதத்தில் முருகவழிபாடு அதிசிறந்ததென்பது சான்றோர் கண்ட முடிவு.

சமுத்திராசன் மூலமாகவே முருகப் பெருமானுக்கு "முத்துக்குமரன்" என்ற புனிதநாமம் எழுந்தது (முத்து + குமரன்) இந்த முத்துக்குமரன் என்ற சொற்றொடரே அளவற்ற அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றதென்பது ஞானிகளது கூற்று.

அமாவாசையை "தர்சம்" என வடமொழி வாக்கியம் பதிந்துள்ளது. சூரியனைச் சிவமெனவும், சந்திரனையும் சக்தியெனவும், இவை இரண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நிலையில் அமைவதையே 'தர்சம்' - அமாவாசை என்பது தெளிவு. இத்தகைய சமநிலை ஏற்படும் தினத்தில் ஐப்பசி மாதத்தில் வரும் "சுவாதி" நட்சத்திரம் இணைவதும் ஓர் சக்தி தரும் செயலாக அமைகிறது. சிறப்புமிக்க ஏராளமான நிகழ்வுகள் இக்காலகட்டங்களில் உலகில் இயங்கிநிற்கும் முக்கியமாக கடலில் சங்குகளது கற்பம், சிப்பி சோகிகளது உயிர் வாழும் திறன் என்பன ஓங்கினிற்கும். இதனை மிகப் பழமை வாய்ந்த வடமொழி ஏட்டுச்சுவடியில் ஓர் சுலோகம்

**"ஸ்வாதித்ய சூர்ய ஸதிதேரவென**
**மேனகர முக்தா ஜலபிந்தலஹ -**
**தேசீர்ணா சுக்தியீர் முக்தாஹ (பீதர)**
**ஜயந்தே நிர்மலத் விஷஹ."** எனக் கூறுகிறது.

சுவாதி நட்சத்திரத்தில் சூரியன் சந்திரன் சஞ்சரிக்கையில் மேகத்திலிருந்து விழும் ஜல பிந்துக்கள் சிதறி, சிதறும் போது அதற்காக ஏங்கிநிற்கும் சிப்பிகள் சிதறல்களை உட்கொள் வதால் அவர்களிடம் பக்குவமான முத்துக்கள் விளைகின்றன. இம்முத்துக்கள் தான் மங்கலில் லாது, களங்கமில்லாது, ஒளியுள்ளதாக, ரம்யமாக அமையும். இவைதான் சிறந்த முத்துக்கள். துலாமாதத்தை சமமான நிறை எடுத்துக்காட்டும் உபகரணமாக உணரப்படுகிறது. இது சிவ சக்தி யின் சமமான தன்மையையும் ஐப்பசி மாதமும் அமாவாசையும் இணைவதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஸ்வாதி நக்ஷத்திரத்தின் அதிதேவதை வாயுபகவான் எனப்படுகிறது. இந்த வாயுபகவான் தான் சிவசக்தியின் ஐக்கியத்தால் உண்டான "ஆனந்தம்" எனும் மழைநீர்த் துளிகளை பூமிக்குக் கொண்டு வருகிறார் என்றும், இது ஐப்பசி மாதத்தின் தலையாய சிறப்பு என வியாசபகவான் முதல் பல ரிஷிகளும் உணர்ந்து உலகிற்கு அறியத்தந்துள்ளனர்.

இச்சிவசக்தியின் ஆனந்தச்சின்னமாகவே முருகப்பெருமானும் திகழ்கின்றார். பளிச்சிடும் வெண்மையான முத்துக்களாக சிப்பிக்குள் தோன்றியுள்ளார். மோட்சத்தைக் குறிக்கும் சொல் லாக "முத்து" கருதப்படுகிறது. வடமொழியில் இதனை "மௌத்திகம" எனப்படும்.

முருகப் பெருமானுக்கு ஆறு வதனங்களுண்டு. இதே அடிப்படையில் முத்தின் குணங்களும் ஆறு விதமாக அமைகிறது என "ரத்னப்பரீட்சை" நூலிலிருந்து தெரியவருகிறது. முத்துமாலையை நாம் நிரந்தரமாக கழுத்தில் கொண்டால் இறையருள் நிச்சயம் கூடுமெனவும் இந்நூல் அறுதியிட்டுக் கூறுகிறது.

முத்துமாலைகளை அணிகலன்களாகக் கொண்ட சமுத்திரராசன் முருகப்பெருமானை நேரில் தரிசிக்க வேண்டுமென தவங்கள் மூலம் இரந்துநின்றான். அவனது உள்ளத்தில் உணரக் கூடியதாக ஐப்பசி மாத சுக்கிரவார சுவாதி நக்ஷத்திரத்தில், அமிர்த நீர் துளியாக ஆவலோடு ஆகாசத்தை நோக்கிய சிறந்ததோர் சிப்பியின் வாயினுள் அமிர்தநீர்துளி வீழ்ந்து பெருமான் முத்தாகி, சமுத்திரராசனுக்கு "முத்துக்குமரனாக" தோற்றங்காட்டி அருள் பாலித்தார் என்பது ஸ்காந்தம். முத்துக்குள் தோன்றியதனால் முத்துக் குமாரனாகினார். இந்த முத்துக்குமாரனுக்கு ஏற்படும் விழா ஸ்கந்தசஷ்டி விழாவிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஸ்கந்தசஷ்டி இரண்டாம் நாளில் முருகன் பிரணவமூர்த்தியாகி வெள்ளை யானையில் எழுந்தருளி பிரணவமும் பிரணவப் பொருளும் பிரணவத்தினுள் இருப்ப வனும் நானே என்றும் முத்திக்கு அருளுபவனும் தானே எனவும் காட்சி தருவார். இதனை அருண கிரிநாதர்.

**"ஓமெழுத்திலன்பு - மிகவூறி**
**ஒவியத்திலந்தம் அருள்வாயே"** எனப் பாடியுள்ளார்.

சமுத்திராசனைப்போல் நாமும் முருகப் பெருமானைத் தரிசித்து முத்தியடைவோமாக. அவனருள் எங்கும் நிலவுக.

**"நாலுவேதப் பொருள் நாயகனை**
**நாத ரருணகிரிக்கு அருள் நல்லோனை**
**நீலச் சிகண்டி ஏறி நின்றவனை**
**நித்தம் துதி செய்ய நலமாமே".**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய(வன்) புராணம்

வ. கோவிந்தபிள்ளை

சிவவழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிறப்புற்று வந்துள்ளது என்பதை ஆய்வுகள் மூலம் பலர் நிறுவியுள்ளனர் எனவும் கி.மு. 2000 ஆண்டுகட்கு முன்பே சிவவழிபாடு பிரபல்யம் அடைந்திருந்ததை சிந்துவெளி அகழ்வுகளிற் கிடைத்த சிவயோகியின் முத்திரை, இலச்சினை என்பன உறுதிசெய்வதாக ஆய்வாளர்கள் காட்டியுள்ளார்கள் எனவும் கூறுவர்.[1] இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த சிவவழிபாட்டிற்கு கோயில்களும் அமைத்து வழிபடலாயினர். கடைச்சங்க காலத்தில் எழுந்த தாகக் கருதப்படும் சிலப்பதிகாரகாலத்திற்கு முன்பும் சிலப்பதிகார காலத்திலும் மக்கள் வழிபடும் பொருட்டு சிவன், முருகன், திருமால் ஆகிய கடவுளர் களுக்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டுள்ளனர். சிவனைக் குறிப்பிடும் பொழுது ஏனைய கடவுளர்களிலும் பார்க்க சிவனே பெரியவன் என்பதைக் காட்டுவதாகப் "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"[2] என்று குறிப்பிடுவாராயினர். இவ்வாறு சிவனை முதலிற் குறிப்பிட்ட பின்னர் "அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்"[3] என்று எடுத்துக்காட்டி உள்ளனர். எனவே சங்ககாலத்தில் இருந்து அல்லது அதற்கு முன்னைய காலங்களிலிருந்தே சிவவழிபாடும் முருக வழிபாடும் தொடர்ந்து தமிழ் மக்களிடையே பெரு வழக்கில் இருந்து வந்துள்ளது என்பதைப் பிற சங்கஇலக்கிய நூல்களிலிருந்தும் அறியக் கூடியதாகவுள்ளது.

சிலப்பதிகாரத்தில் முருகனை "அறுமுகச் செவ்வேள்" என்று குறிப்பிட்டமை போன்று சிவனை "சிவன்" என்றோ வேறு பெயர் சுட்டியோ குறிப்பிடாது "பெரியோன்" என்றே குறிப்பிடுவராயினர்.

**"பெரியோரைப் பேணா தொழுகிற் பெரியாரால் பேரா இடும்பை தரும்"[4]**

என்ற திருக்குறள் கூட பெரியோனாகிய சிவனைப் பெரியோனாகப் பேணாதொழுகியிறந்துபட்ட சலந்தரன் முதலிய புராணகால அசுரமன்னர்களின் வரலாற்றைச் சுட்டுவதாக அமைகின்றது எனலாம். காலப்போக்கில் சிவனைக் குறித்த "பெரியோன்", "உயர்ந்தோன்" என்ற சொற்கள் "ஆற்றலாற் பெரியராய வேந்தர்மேலும், தவத்தாற் பெரியராய முனிவர் மேலும் நின்றது".[5]

தேவாசுர யுத்தம் நிகழ்ந்தபோது ஆறிருதடந் தோளையன் பக்கலாக நின்ற பூதசேனைகள், பாரொடு திசையும் வானும் நீங்குதலின்றிச் சூழ்ந்த பகைவனாகிய சூரபன்மனையும் அவனது அளவற்ற வெள்ளம் சேனைகளையும் கண்ட மாத்திரத்தே, ஏக்கங்கொண்டு தாம் முன்பு கொண்டிருந்த வன்மையனைத்தும் நீங்கியவர் களாகி அவனது வரத்தின் பெருமை பற்றியும் வரத்தினாற் பெற்றனவை பற்றியும் குறிப்பிடும் பொழுது,

***"வரத்தினிற் பெரியர் மாய வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போ ருக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச் செய்கையிற் பெரியர் தாங்கும்
கரத்தினிற் பெரியர் யாரும் காலனிற் பெரிய ரம்மா"[6]***

என்று கூறுகின்றனர். இதில் "காலனிற் பெரியர்" என்பது காலனைக் காலாலுதைத்த சிவனை நிகர்ப்பர் என்றே குறிப்பதாகக் கச்சியப்பர் பாடிச் செல்கின்றார்.

'**பெரியோன்**' என்ற சொல் சிவனைக் குறிப்பது போன்று "உயர்ந்தோன்" என்பதும்

"தேவர்தம்மில்
பனிதரு திங்கள் வேணிப் பகவனே யுயர்ந்தோன்"[7]

எனச் சிவனைக் குறிக்கலாயிற்று. ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்று கூறப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு குணங்களையும் உடைய சிவபெருமானே பகவன் ஆவார். இவ் ஆறு குணங்கட்கும் "பகம்" என்று பெயர்.[8] இவற்றை உடையோனே பகவன்; இவனையே உயர்ந்தோன், பெரியோன் என்று புராண நூல்கள் கூறும்.

எனவே சிலப்பதிகாரம் எழுதிய இளங் கோவடிகள் முதலாகத் திருவிளையாடற் புராணம் பாடிய பரம்சோதி முனிவர் ஈறாக சிவனுக்கு வழங்கி வந்த "பெரியோன்", "பெரியவன்", "உயர்ந்தோன்" என்ற சொல்லை பொருளாகக் கொண்டு தனக்குவமையில்லாத சிவனைப் பற்றியும் அவனது பிரபாவங்கள் இயல்புகள் குணங்கள் திருவருட் செயல்கள் என்பன பற்றியும் சைவாகமத்துக் கூறப்பட்டவாறு பாடிச் சென்றுள்ளனர்.

சம்பந்தர் தமது திருப்பதிகத்தில் சிவனைப் பெரியர், பெரியவன் என்று குறிப்பிட்டுப் பாடியமை போன்று[9] சேக்கிழாரும்,

**"பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொரு ளாகியுள்ள**
**பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன்"**[10]

என்று பாடுவாராயினார்.

இறைவனது எண்ணற்ற திருவிளையாடல் களுள் தாம் விரும்பியனவற்றுள் சிலவற்றைப் பரஞ்சோதி முனிவர் தேர்ந்தெடுத்துப் பாடியதே திருவிளையாடற்புராணம் ஆகும். இதேபோன்று உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசனது மன்னுரி மைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன் உயிர் பெற்றெழுந்தமை முதலாகத் தாம் முன்னின்றும் தமது அடியார்களில் அதிட்டித்து நின்றும் நிகழ்த்திய சிவனது (பெரியவனது) சில திருவருட் செயல்களை எடுத்துக் கூறுவதே சேக்கிழார் பெருமானது பெரிய புராணம் ஆகும்.

இவ்வாறு உயிர் பெற்றெழுந்த நிகழ்ச்சியை சேக்கிழார் வாயிலாக, "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என இறைவன் தனது புகழை, பெருமையை, திருவருட்பாங்கை அஞ் ஞானிகளும் அறியும்படி செய்கின்றார். இக் கருப் பொருளாகிய பதிப்பொருளே "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்". ஞானிகளாலும் உணர்வதற்கும் உணரினும் ஓதுவதற்கும் "அரிய வன்", "பெரியவன்" எனக் கடவுள் வாழ்த்து முதல் இறுதி வரை நூலுள் இழையோடுவதை உய்த்துணர முடியும்.

"ஓதுவோர்க்குப் பெருமை சேர்ப்பதாலும் **சிவன் பெருமையை,** அச் சிவபிரான் அடியார்க்கு எளியனாக எழுந்தருளிய அருமையில் எளிய பெருமையை எடுத்து விளக்குவதனாலும் முன்னும் பின்னும் இதனை ஒத்த **பெருமையுடைய** நூல் தோன்றாமை யினாலும், "பெரியபுராணம்" என்று பாராட்டப் பட்டது".[11]

இப் பெரியபுராணத்தின் ஒரு பகுதியை முதன் முதலில் அச்சில் பதிப்பித்தவர், மழவை வீர சைவப்புலவர் மகாலிங்கஐயர். அப்பதிப்பு வெளி வந்த ஆண்டு 1843... ஆறுமுகநாவலர் முதற் பதிப்பு 1884ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இவர்கள் ஒவ்வொருவரும் அவ்வப்போது தனித் தனியே ஓலை ஏடுகளை ஆய்ந்து புராணத்தைப் பதிப்பித்தனர்.[12]

பெரியோன், பெரியவன் என்ற சொற்கள் சிவனுக்குப் பண்டைக் காலம் தொட்டு வழங்கப் பட்டு வந்தமையாலும், சேக்கிழார் தம்முடைய நூலுக்குப் பெரியபுராணம் என்று பெயர் சூட்டியுள் ளமையினாலும் இந்நூலைக் கற்றுத் திழைத்த நாவலர் அவர்கள், "பெரிய" என்னும் சிவனைக் குறித்த சொல்லுக்கு "திருத்தொண்டர்" என்ற சொற்பொருளும் சிவனைக்குறித்து நின்றமையால் சேக்கிழார் நூலுக்கு இட்ட "பெரியபுராணம்" என்ற நூற் பெயருடன்,

**"பெரிய புராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம்"**

எனப் பரிசோதித்துக்கொடுக்க தியாகராசபிள்ளை 1888ல் 7ம் பதிப்பாகப் பதிப்பிப்பாராயினார். இதில், "என்று வழங்குகிற" என்ற சொற்றொடர் அது காறும் பெரியபுராணம் என்ற பெயரிலேயே இந் நூல் வழக்கிலிருக்கலாயிற்று என்பதை தெளி வுறக் காட்டுகின்றது.[13]

கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளின் பின்னர் 1935ல் கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடாக சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியாரு டைய உரையுடன் இந்நூல் வெளியிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது "திருத்தொண்டர்புராணம் என்னும் பெரிய புராணம்" அருண்மொழித்தேவர் என்னும் நாயனாரால் அருளியது என மாற்றஞ் செய்யப்பட்டு அந்நூலின் பிந்திய பதிப்புகளிலும் காட்டப்பட்டுள்ளது.[14] இவ்வாறான மாற்றங்களால் சேக்கிழார், தாம் இயற்றிய நூலுக்கு "பெரியபுராணம்" என்று பெயர் வைக்கவில்லை என்று வாதிடுபவர்களும் உண்டு.

"உலககெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தவரும் உணரினும் ஓதுதற்கரியவராக விளங்குபவரும்

**"மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார்**
**தூமறை பாடும் வாயார்" [15].**

அப்போது,
**"ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட**
**கோதிலா அமுதே இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்**
**யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன்"[16]**

எனச் சுந்தரர் ஏது மறியாதவராகி நின்றபோது அவர்
**"பல்லாறுலகினில் நம்புகழ்பாடென்றுறு பரிவி**
**நல்லார் வெண்ணெய் நல்லூரருட்டுறை மேவிய நம்பன்**
**எல்லா வுலகுய்யப் புரமெய்தா னருள் செய்தான்"[17]**

என்றும் அதேபோன்று, தேவாசிரியன் மண்டபத் துளிருந்த அடியார்களைப்பற்றியும், முன்பு போன்று

**"இன்னவா றின்னபண்பென் றேத்துகே னிதற்கு யானார்**
**பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்செய்"[18]**
என்று சுந்தரர் வேண்டிய போதும்,

இறைவன் தாமே அடியவர்க்கெல்லாம் அடியவ னாகி அல்லல் தீர்க்கின்றவர் என்பதைப் புலப் படுத்துகின்ற வகையில்,

**தொல்லை மால்வரை பயந்த தூயாள்தன் திருப்பாகன்**
**அல்லல் தீர்த்துலகுய்ய மறையளித்த திருவாக்கால்**
**"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்"[19]**

எனத் தம்புகழ் உலகெலாம் பரவும் வண்ணம் பாடுமாறு செய்வாராயினார்.

சிவன் ஆதியும் அந்தமும் அற்றவன். அதே போன்று அவனது தொண்டும் ஆதியந்தம் இல்லாதது மட்டுமன்றி எவராலும் இத்தன்மைத் தானதென அறிதற்கரிய பெருமையை உடையது மாகும். இதனாலேயே,

**"பூத நாதன் பொருவரும் தொண்டினுக்**
**காதி யந்த மிலாமை அடைந்தனன்"[20]**
என்றும்
**"தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர் தம்**
**பொருவருஞ்சீர் புகலலுற்றேன்".[21]**
என்றும் பாடுகின்றார் சேக்கிழார்.

எனவே ஒப்பற்ற தொண்டிற்கும் "திரு" என்ற பதத்திற்கும் சிறப்பானவராகக் கருதப்படுபவர் சிவன் ஒருவனே. ஆதலால் அவரைத் திருத் தொண்டர் என்றும் அவர் பற்றிய புராணத்தை "திருத்தொண்டர் புராணம்" என்றும் குறிப்பிடு வாராயினர்.

நாவலரும், இது பற்றியே,
பெரிய புராணம் என்று வழங்குகிற
திருத்தொண்டர் புராணம்" என்றும் பின் வந்தோர், "திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம்" என்றும் இந் நூலைக் குறிப்பிடு வாராயினர். எவ்வாறு அழைப்பினும் பொருள் சிவனைக் குறிக்கும் புராணமே ஆகும்.

திருவிளையாடற் புராணத்தில் வரும் இசைவாது வென்ற படலம், சமணரைக் கழுவேற்றிய படலம், வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்தபடலம் என்பன மெய்யடியார்கள் அல்லது நாதன் விரும்பும் அடியார்கள் பற்றியனவே. இருப்பினும் சம்பந்தரது அற்புதச் செயல்கள் என்று பல்லோராலும் கருதப் படுவனவற்றை பரஞ்சோதி முனிவர் கூறும் பொழுது,

**"பருமுத்த முலையாள் பங்க னருளினாற் பசும்பொற் றாளம்**
**திருமுத்தின் சிவிகை காளம் தெண்முத்தின் பந்த ரின்ன**
**நிருமித்த வகைபோற் பெற்றுப் பாலையை நெய்தலாக்கிப்**
**பொருமுத்த நதிசூழ் வீழிப் பொற்படிக்காசு பெற்று"[22]**

என்றும்,
**"அருமறை வணங்குங் கோயிற் கதவினை யடைக்கப்பாடிப்**
**பரனுறை பதிகளெங்குந் தொழுதனர் "[23]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பாடுவதிலிருந்து அனைத்து அற்புதச் செயல்களும் ஒப்பற்ற சிவனது பெருங்கருணைத் திறத்தினை வெளிப்படுத்தும் திருவருட் செயல்க ளேயன்றி அடியார்களது செயல்கள் என்பதற் கில்லை என்பது ஒரு தலை.

சுருங்கக் கூறின், பதியும் பதிவாக்கும் பதிப் பொருளும் கற்போரைக் கசிந்துருகச் செய்யும் சிவனது அளப்பரிய திருவருட் சிறப்பும் பெரிய அளவில் நிறைந்து விளங்கும் திருவருட்பனுவலே பெரியபுராணம் எனபதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்பு

1. மேற்குநாடுகளில் சைவத்தமிழ் கலாசாரம், நல்லைக்குமரன் மலர், 2006, கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதன்.
2. சிலப்பதிகாரம் - இந்திர வீழ்வூரெடுத்த காதை, வரி. 169.
3. மு.கு. நூல், வரி 170.
4. திருக்குறள் - குறள் 892.
5. மு.கு. நூல், அதி. 90, அதிகார விளக்கம்.
6. கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம், செய். 52.
7. திருவிளையாடற் புராணம், செய். 300.
8. மேற்படி செய்யுளுக்கு, ஈக்காடு இரத்தினவேலு முதலியார் இயற்றிய விருத்தியுரை, பக். 167.
9. நல்லைக்குமரன் மலர், 2005, மன்று(ள்)ளார் அடியார், பக். 45-46.
10. பெரியபுராணம், செய். 929.
11. பெரியபுராணச் சொற்பொழிவு, பக். 136.
12. பெரியபுராண முன்னுரை, தமிழ்த்தென்றல் திரு. வி. க.
13. பெரியபுராணம் 7ம் பதிப்பு, 1888ம் ஆண்டு தியாகராஜபிள்ளை பதிப்பு.
14. பெரியபுராணம் முன்னுரை, C. K. சுப்பிரமணிய முதலியார், கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு.
15. பெரியபுராணம், செய். 216.
16. மு.கு. நூல், செய். 218.
17. மு.கு. நூல், செய். 222.
18. மு.கு. நூல், செய். 344.
19. மு.கு. நூல், செய். 345.
20. மு.கு. நூல், செய். 24.
21. மு.கு. நூல், செய். 6.
22. திருவிளையாடற்புராணம், செய். 3128.
23. மு.கு. நூல், செய். 3129.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கடவுள் முருகனும் தெய்வத் தமிழும்

சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம் B.A
(ஓய்வுபெற்ற அஞ்சலதிபர்)

தமிழர்கள் தெய்வ பக்தியிற் சிறந்தவர்கள். அவர்கள் தாம் வாழுமிடமெல்லாம் தெய்வத் திருக் கோயில்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர். மற்றைய எல்லாக் கடவுளரையும் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்பப் பூசித்து வந்தாலும், முருக வழிபாட்டிற்கு தமிழர்கள் ஒரு தனிச் சிறப்புக் கொடுத்து வந்துள்ளார்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

முருகன் தமிழ்க் கடவுள்; தமிழ் மக்கள் சாலவும் போற்றி வழிபடும் தனிப்பெருங் கடவுள்; தமிழ் மொழிக்குரிய கடவுள். தமிழ் மொழியை சிவபெருமானுக்கும், அகத்தியருக்கும், பிறர்க்கும் அறிவுறுத்திய கடவுள் முருகன். ஓங்காரம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருளைச் சிவபெரு மானுக்குத் தமிழ் மொழியின் வாயிலாகவே, முருகப் பெருமான் உபதேசித்தருளினார்.

**"கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்**
**கொஞ்சித் தமிழாற் பகர்வோனே"**
என்பது அருணகிரிநாதர் திருப்புகழ்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்ப னைச் செஞ்சுடர் வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி காந்தனை" என வரும் கந்தர் அலங்காரச் செய்யுளால், முருகப் பெருமான் தமிழ் மொழியை உலகிற் பரப்பினனாதல் உணரலாம்.

உலகமெல்லாம் முதலில் கடலில் மூழ்கி யிருந்ததென்றும், பிறகு நீர் வடிய வடிய முதலில் மலை தோன்றிப் பின் மண் தோன்றியது என்றும் கூறுவர். முதலில் தோன்றிய மலையையும் அதனைச் சார்ந்த இடத்தையும் குறிஞ்சி நிலம் என தமிழ் மக்கள் வகுத்துக் கொண்டனர். அந்தக் குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகன் என்பது தமிழர் கொள்கை. 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்று தொல்காப்பியம் கூறுகின்றது. முதன் முதலில் தோன்றிய திணைக்கு உரிய தெய்வ மாக முருகனை வைத்த தமிழருக்கு அப்பெருமான் பால் மிகுந்த பக்தி இருப்பதில் வியப்பில்லையே.

சங்க முற்காலத்தில் தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடித் தமிழாராய்ச்சி செய்த இடத்திற்குச் சங்கம் என்று பெயர். மூன்று சங்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தமிழ் நாட்டில் இருந்துள்ளன. தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று அந்த மூன்றையும் அழைத்தார்கள். தலைச் சங்கத்தில் புலவரோடு புலவராகக் கடவுளரும் இருந்து தமிழாராய்ந்தார்களாம். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும், பிறரும் சங்கப்புலவரோடு இருந்து தமிழுக்கு வளம் வழங்கியுள்ளனர். அந்தப் புலவருக்குள் தலைமைப் புலவராக இருந்தவர் அகத்திய முனிவர். சங்கம் நிறைந்திருந்தபொழுது, அவ்வகத்தியற்குத் தமிழுரைத்த முருகக் கடவுளே பெருந்தலைவனாக வீற்றிருந்தான். புலவர்களுக்குள் முதற் புலவனாக அவன் இருந்தான். இப்படித் தலைச் சங்கத்தின் தலைமைப் புலவனாக முருகப் பெருமான் வீற்றிருந்த பெருமையை நக்கீரர், 'பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே' என்று திருமுருகாற்றுப்படையில் போற்றுகின்றார்.

இவ்வாறே குமரகுருபர சுவாமிகளும் தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றிய முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழில்,

**'சங்கத் தமிழின் தலைமைப் புலவா**
**தாலோ தாலேலோ'** என்று பாடுகிறார்.

இப்படிப் புலவருள் தலைவனாக இருந்ததோடு, சங்கப் புலவர்களின் தகுதியறியும் அதிகாரிகளாகவும் முருகன் இருந்திருக்கிறான். இந்தச் செய்தியை நினைந்தே நக்கீரர் முருகனை 'நூலறி புலவ' என்று திருமுருகாற்றுப்படையில் பாடுகிறார்.

இங்ஙனம் கடவுளரும் தமிழ்த் தொடர்பு பெற்ற வழியே, பெருமையுடையராகக் கருதிப் போற்றுவது தமிழ் மக்களின் இயல்பு. அந்நிலையில் 'முருகு' என்ற சொல்லில் இருக்கும் 'உ'கரம் காக்கும் தன்மையுடையது. உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் கடவுள் முருகன். தமிழ் மொழியில் வல்லோசை, மெல்லோசை, இடைஓசை என்று மூன்று ஓசைகள் உண்டு. இம் மூன்று ஓசைகளும் 'முருகு' என்ற சொல்லில் அடங்கியுள்ளதை அவதானிக்கலாம்.

ஆறுமுகப் பெருமான் தமிழ்மொழியின் வடிவமாகவே அமைந்து திகழ்கின்றான் எனச் சான்றோர்கள் போற்றுகின்றனர். தமிழ்மொழியிலுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் அவனது தோள்களாகவும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாகவும் (முகத்திற்கு மூன்று கண்கள் வீதம்) தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என வழங்கும் இன எழுத்துக்கள் ஆறும் தனது திருமுகங்களாகவும், தமிழில் உள்ள தனிநிலை எனப்படும் ஆய்த எழுத்தை, ஒப்புயர்வற்ற தனது வேற்படையாகவும் கொண்டு, தமிழ் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவினனாக விளங்குகின்றான்.

**"கண் நிகர் மெய்யும், சென்னிக்**
**கணம் உறழ் இனத்தின் கூறும்,**
**திண்ணிய புயங்களே போல்**
**திகழ்தரும் உயிரும், வேறொன்று**
**எண்ணிடற் கரிய தாகும்**
**எ;கமும், இயலிற் காட்டும்**
**புண்ணிய முருகன் செய்ய**
**பொற்பதம் போற்றி வாழ்வாம்."**

- புலவர் புராணம்

முருகப் பெருமான் தமிழின் பால் கொண்ட காதலுக்கோர் எல்லையில்லை. வள்ளியம்மையின் இனிய சொற்களை முருகன் எப்போதும் தன் செவிகளுள் ஒன்றினாற் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார். அத்தகைய முருகன், யார் ஏனும் ஓர் அடியார், எங்கேனும் ஓர் இடத்தில், திருமுருகாற்றுப்படையை ஓதிப் பாராயணஞ் செய்வராயின் வள்ளியம்மையின் இனிய சொற்களையும் புறக்கணித்து விட்டு, தன் பன்னிரு செவிகளையும் ஒரு சேரச் சாய்த்து உற்றுக் கேட்டு உவகை உறுகின்றானாம். இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் சீகாளத்திப் புராணத்தில், நக்கீரச் சருக்கத்தில்,

**பொன்னவிர் சுணங்கு பூ'த்த**
**புணர்முலைக் கருங்கண் வள்ளி**
**கன்னலும் அமுதும் தேனும்**
**கைக்கும்இன் தீஞ்சொல் மாற்றித்**
**தன்நிகர் புலவன் கூறும்**
**தமிழ்செவி தாழ்த்துக் கேளா,**
**அந்நிலை மனம் களிப்பான்**
**அறுமுகம் படைத்த கோமான்**

என்று அருளிச் செய்கின்றார். அன்பர்கள் திருமுருகாற்றுப்படை ஓதுதலை முருகன் செவி மடுத்துக் கேட்டு மகிழ்கின்றான் என்றால், முருகனுக்குத் தமிழின் பால் உள்ள எல்லையற்ற பெருவிருப்பத்தினையாம் என்னென்போம்!

முருகன் தமிழ்மொழியை மட்டுமன்றி, அவ்வினிய தமிழால் தன்னை ஒருவர் வைதாலும் கூட, அது கேட்டு மகிழ்கிறான். அதோடு மட்டுமன்றி அவர்களைச் சிறந்த நிலையில் வாழவும் செய்தருளுகின்றானாம்.

**மொய்தார் அணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்**
**வைதாரையும் அங்கு வாழவைப்போன் வெய்யவாரணம் போற்**
**கைதானிரு பதுடையான் தலை பத்துங் கத்தரிக்க**
**எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.**

முருகன் அருள்பெற்ற புலவர்களும் அருளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர்களும் எண்ணிலடங்கா இருப்பினும் அவர்களில் சிலரோடு முருகன் தமிழ் மொழியை மையமாக வைத்து திருவிளையாடல் புரிந்துள்ளான். அவர்களில் முதலில் வைத்து எண்ணப்படுபவர் அகத்திய மாமுனிவராவர். அகத்தியமுனிவர் தமிழின் விரிவைக் கண்டு அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டார். முருகனுடைய திருவருள் பெற்றால் தமிழ் முழுதும் அறியலாம் என்று உணர்ந்து வடிவேற்பெருமானை உபதேசித்துத் தமிழை அவன்பால் அறிந்தான். இதனை 'குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமர முத்தம் தருகவே' என்ற பிள்ளைத் தமிழும்,

**'சிவனை நிகர் பொதியவரை முனிவகை மகிழ இரு செவி குளிர இனிய தமிழ் பகர்வோனே'**

என வரும் திருப்புகழும் தெரிவிக்கும்.

**ஔவையார் :** ஔவையார் முருகனை வழிபடும் நியதியுடையவர். அதனால் அப்பிராட்டியிடம் முருகன் ஆடுமேய்க்கும் சிறுவனாகச் சென்று, நாவல் மரத்திலிருந்து சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று வினாவி அவரைச் சிந்திக்கச் செய்தார். ஔவையாரும் தாம் இடைச் சிறுவனாக வந்த முருகனிடம் தோல்வியுற்றதை, இப்பாடலில் மனம் நொந்து குறிப்பிடுகிறார்.

**"கடுங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாரி**
**இருங்கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்கானில்**
**காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்ற**
**தீரவு தூஞ்சாதென் கண்"**

சிறுவன் முருகப் பெருமானாக மாறி நின்றான். ஔவையாரும் முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கினார். ஔவையாரின் தமிழ்ப் புலமையை உலகோருக்கு வெளிப்படுத்துவதற்காக, அவரிடம் 'அரியது எது? பெரியது எது? இனியது எது? கொடியது எது' என்ற வினாக்களை வினாவிய ருளினார். இவற்றிற்கு ஔவையார் அளித்த பதில் பாடல்கள் யாவரும் அறிந்ததே.

**நக்கீரர் :** இவர் சங்கப் புலவர்களுக்குத் தலைவர். முருகன் இவருக்குத் தமிழிலக்கணத்தை உபதேசித்தார். கற்கிமுகி என்ற பூதம் இவரை மலைக்குகையில் அடைத்தபோது திருமுருகாற்றுப்படை பாடியருளினார். முருகன் பூதத்தை வேலினால் கொன்று நக்கீரரை மலைக் குகையிலிருந்து விடுவித்து அருள்புரிந்தார்.

**"அருவரை திறந்துவன் சங்க்ராம கற்கிமுகி அபயமிட அஞ்சலென் றங்கீரனுக்குதவி"** - திருவகுப்பு

**கச்சியப்ப சிவாச்சாரியார் :** கந்தவேளின் கட்டளைப்படி கந்தபுராணத்தைப் பாடியருளினார். ஒவ்வொரு நாளும் பாடிய பாடல்களை முருகன் திருவடியில் வைப்பார். மறுநாள் அதில் திருத்தங்கள் இருக்கும். எனவே முருகன் திருத்திய தெய்வத் தமிழ் நூல் 'கந்தபுராணம்' அரங்கேறிய போது முதற்காப்புச் செய்யுளாகிய 'திகடசக்கரம்' என்ற பதப்பிரிவு செய்ய என்ன ஆதாரம் என்று புலவர்கள் மறுத்தார்கள். முருகனே மறுநாள் புலவர் வடிவில் வந்து 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலைத் தந்து உதவியருளினார்.

**அருணகிரிநாதர் :** பல்காலந் தவஞ்செய்தார். முருகன் மயில்மிசை காட்சி தந்து நாவில் வேலினால் 'ஓம்' என்றெழுதி 'முத்து முத்தாகத் தமிழ்பாடு' என்று கருணை புரிந்தார். 'முத்தைத் தரு' என்று தொடங்கி ஏராளம் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினார்.

**பகழிக்கூத்தர் :** இவருக்கு வயிற்றுவலியுண்டாயிற்று. எத்தனையோ வைத்தியம் செய்தும் வயிற்றுவலி நீங்கவில்லை. முருகன் கனவில் தோன்றி 'அன்பனே! என்னைப் பாடு, உன் வயிற்றுவலி தீரும்' என்று அருளிச் செய்தார். முருகன் கருணையை நினைத்து பகழிக்கூத்தர் விம்மிதமடைந்தார். செந்தி மாநகரம் சென்று அதியற்புதமான தமிழிலே பிள்ளைத் தமிழ் பாடினார். வயிற்று வலியும் நீங்கியது.

குமரகுருபரர் ஐந்து வயது வரை ஊமையாய் இருந்தவர். செந்தில் ஆண்டவன் திருவருளால் ஐந்து வயதிலேயே 'கந்தர் கலிவெண்பா' பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவரோதய சுவாமிகளுக்கு முருகன் 'உலகம் உட்கொண்டுவப்ப முருகவேள்' என்று ஆறுமுகனார் அடியெடுத்துக் கொடுத்து உபதேச காண்டம் என்னும் நூலை 2602 செய்யுளாகப் பாடினார்.

இராமலிங்கஅடிகளார் முருகன் திருவருளால் திருவருட்பா பாடியருளினார். முருகதாச சுவாமிகள் முருகன் அருளால் எட்டு வயதிலேயே பணியை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான கவிகள் பாடியருளினார். பாம்பனடிகள் முருகன் திருவருளால் 6666 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் அருளிய 'ஷண்முகக் கவசம்' முக்கிய பாராயண நூலாக இன்றும் திகழ்கிறது. தேவராய சுவாமிகள் திருச் செந்தில் ஆண்டவனருளால் மக்களால் விரும்பிப் பயின்றுவரும் 'கந்தசஷ்டிக்கவசம்' என்னும் அருமையான நூலைப் பாடியருளினார்.

நெஞ்சை உருக்கும் தன்மையுடையது நமது தமிழ்மொழி. அருணகிரிநாதர் தமிழையும் முருகனையும் பல இடங்களில் சேர்த்துப் பாடியிருக்கிறார். 'செந்தமிழ் சொல் மாலைக்கார', 'செந்தில் வாழ் செந்தமிழ்ப் பெருமாளே', தண்டமிழில் மிகுநேய முருகேசர்', 'தமிழ்பாடல் கேட்டருள் பெருமானே', 'தெள்ளு தமிழ்பாடத் தெளிவோனே' 'அரிய தமிழ் தானளித்த மயில் வீரா' என்ற தொடர்களால் அறியலாம்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மணி வாக்கின்படி முருகப் பெருமானால் எமக்கு அளிக்கப்பட்ட தெய்வத்தமிழால் அப்பெருமானைப் பாடிப் பரவி வழிபட்டு இம்மை மறுமை நலங்களை எய்தி வாழ்வோமாக.

**முருகா எனவுனை ஓதுந் தவத்தினர் மூதுலகில்**
**அருகாத செல்வம் அடைவார் வியாதி அடைந்து நையார்**
**ஒரு காலமுந் துன்பம் எய்தார் பரகதி உற்றிடுவார்**
**பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே.**

- சிதம்பரசுவாமிகள்

## உசாத்துணை நூல்கள்

| | |
|---|---|
| முருகன் | திருமுருக கிருபானந்தவாரியார் |
| பெரும் பெயர் முருகன் | கி.வா.ஜகந்நாதன் |
| முருகன் பெருமை | புலவர்ஏறு நா.ரா.முருகவேள் MA.MOL |
| முருகன் திருவருள் | N.K.வேலன் B.A |
| கந்தசஷ்டி சொற்பொழிவுகள் | பேராசிரியர் பாலூர் கண்ணப்பமுதலியார் MA.BOL |
| முருகன் அல்லது அழகு | தமிழ்த் தென்றல் திரு.வி.க.கலியாணசுந்தரனார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

சைவப்புலவர் முருகேசு முரளிதரன் M,Ed.
அதிபர், ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.

இந்துக்களின் பல்வகைப்பட்ட வழிபாடுகளில் நவக்கிரக வழிபாடும் ஒன்றாகும். நவக்கிரக வழிபாடு பெரும்பாலும் சிவன் கோயில்களிலும் பெருமாள் கோயில்களிலும் அவற்றுக்கென அமைக்கப்பட்ட தனியான சன்னிதிகளில் நடை பெறுகின்றது. அத்துடன் சில ஆலயங்களில் சூரியன், சந்திரன், சனி போன்றவற்றிற்கு தனியான சன்னிதி இருப்பதையும் காணமுடிகிறது.

நவக்கிரகங்களானவை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் (குரு), சுக்கிரன், சனி, ராகு, கேது என்பனவாகும். இந்தக் கிரகங்கள் மனிதனின் வாழ்க்கையில் விளையாடும் தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. ஒரு கிரகத்தின் தோசத்தால் பீடிக்கப்பட்ட மனிதன் அத்தோசத்திலிருந்து விடுபட பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியவனாக உள்ளான். குறிப்பாக நளனின் வாழ்க்கையில் சனீஸ்வரனின் கோபத்தால் நளன் அனுபவித்த துன்பங்களுக்கு ஈடில்லை என பழங்கதைகள் வாயிலாக அறிகின்றோம். அதே போல் ஏனைய கிரகங்களும் நோய்களையும், துன்பங்களையும், தோல்விகளையும் ஏற்படுத்த வல்லவை. எனவே அவற்றிற்கு பிரீதி செய்வதன் மூலம் நாம் ஓரளவேனும் ஆறுதலடையலாம் என்ற நம்பிக்கை இந்துக்கள் மத்தியில் நிலவுகிறது.

கிரகங்களில் ஏற்படும் மாற்றங்களின் தன்மைக் கேற்ப மனிதனது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவதனைக் காணலாம். சில கிரகங்கள் கொடுப்பதிலும் கெடுப்பதிலும் வல்லவை. எனவே அவை வலிமையானவை என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

ஜாதகத்தில் கிரகங்கள் நிற்கும் இடத்திற் கான பலன்கள்

| சூரியன் | சந்திரன் | செவ்வாய், சனி, ராகு, கேது |
|---|---|---|
| 1. வியாதி | தேகசுகம் | நிலைக்கேடு |
| 2. கவலை | விவாதம், நஷ்டம் | வியாதி, நஷ்டம் |
| 3. நன்மை | திரவியலாபம், சுகம் | திரவியலாபம், ஜெயம் |
| 4. ரோகம் | நம்பிக்கையின்மை | விரோதம், சுபம் |
| 5. ரோகம், சோகம் | வியாதி, சோகம் | பலசேதம், கலகம் |
| 6. அனுகூலம் | சந்தோசம் | லட்சுமீகரம், சுகம் |
| 7. பயம், கஷ்டம் | போசனசுகம், லாபம் | ரோகம், கஷ்டம் |
| 8. துக்கம், வியாதி | பிரயாணபயம் | மரணபயம், துக்கம் |
| 9. நிலைமாறுதல் | உதரபீடை, பயம் | காரியநஷ்டம் |
| 10. ஜெயம், லாபம் | நிலைபேறு, அதிகாரம் | அபகீர்த்தி, செலவு |
| 11. நன்மை | திரவியலாபம், சுகம் | லாபம், சுகம் |
| 12. காரியநஷ்டம் | கேடு | பிணி, துயரம், செலவு |

| புதன் | வியாழன் | சுக்கிரன் |
|---|---|---|
| 1. அவமானம் | விரோதம், பொருளழிவு | போகம், லாபம் |
| 2. சோகம் | பணவரவு, சுகம் | களத்திரசுகம் |
| 3. பயம் | காரியநஷ்டம் | அதிகாரம், சந்தோசம் |
| 4. சந்தோசம் | பந்துக்கிலேசம் | பந்துக்கூட்டம் |
| 5. குடும்பகலகம் | திரவியலாபம், ஜெயம் | லாபம், கீர்த்தி |
| 6. திரவியலாபம் | துயரம் | யோகம், கவலை |
| 7. சோகம், கலகம் | கோபம், சுகம் | ஸ்தீரிபீடை |
| 8. புத்திவிருத்தி | வியாகூலம், பங்கம் | பிரியம், போகம் |
| 9. இடையூறு | அதிகாரம், சம்பத்து | திரவியம், தர்மம் |
| 10. சுகபோகம் | நஷ்டம், துக்கம் | அவமானம், கலகம் |
| 11. சந்தோசம் | தனலாபம், சுகம் | போசனசுகம் |
| 12. அசௌக்கியம் | பிரயாணம், சோகம் | சுகலாபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு ராசி வீடுகளில் இலக்கினத்தி லிருந்து கிரகங்கள் தாம் நிற்கும் இடத்திற்கேற்ப பலனைத் தருவார்கள். ஆயினும் பெரும்பாலான கிரகங்கள் ஒன்றரை மாதத்திற்கு ஒருமுறை அடுத்த வீட்டிற்கு மாறிக் கொள்வதால் பெரும் பாலும் அதன் பலன்களைப் பார்த்துக் கொள்வது குறைவாகவே இருக்கின்றது. சனி, வியாழன் என்பன குறைந்தது ஒருவருட காலத்திற்கு ஒரு முறை மாறிக் கொள்வதால் அதன் மாற்றங்களில் மக்கள் அக்கறையுடையவர்களாகக் காணப்படு கின்றனர்.

இத்தகைய நவக்கிரகங்களுக்கென தனியான கோயில் அவசியமா? அல்லது தனியான சன்னிதி அவசியமா என விவாதிப்போரும் உளர். எனினும் அதன் தாக்கத்தை உணர்ந்தவர்கள் அதன் அச்சம் காரணமாக தனியான சன்னிதியின் அவசியத்தை வலியுறுத்துவர். நவக்கிரகங்களை தினமும் வழிபட்டு வரவேண்டிய அவசியமில்லை என்பதை உணர்ந்தவர்கள் அதற்கு தனியான சன்னிதி அவசியமில்லை என்று கூறுவர். இன்னும் சிலர் ஆகம விதிகளில் நவக்கிரக சன்னிதி பற்றிக் கூறப்பட்டிருக்கவில்லை. எனவே ஆலயங்களில் நவக்கிரக சன்னதியுடன் சூரியன், சந்திரன், சனி என்பவற்றிற்கு தனியான சன்னிதிகளும் அமைந் திருப்பதைக் காணலாம். கிரகங்களின் தாக்கங் களால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் இதனை ஏற்றுக் கொள்வர்.

இன்னும் சிலர் ஆலயங்களில் நவக்கிரகங் களுக்கு தனியான சன்னிதி அமைப்பது தவறு. அவை மூலவரைத் தியானித்தவாறு வரிசையாக மகா மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர். இதற்கு திருநல்லாறு ஆலயத்தை உதாரணமாகக் கொள்கின்றனர்.

இவ்வகையிலான நவக்கிரக வழிபாடு இந்துக் களின் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் செல்வாக்கு செலுத்துகின்றன. சுப, அசுப காரியங்களில் நவக்கிரகங்களுக்கு தனித்தனியே கும்பம் வைத்து வழிபாடு செய்வதனைக் காணலாம். இதற்கு அவர்கள் கூறும் நியாயம் "உலகம் அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிக ளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பங்களாலும் அல்லல்பட்டிருக்கும் வேளையில் அவற்றிலிருந்து விடுபடவும் எல்லாப் பிராணிகளின் பயம், பிணி, நோய் தீரவும் நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கி ஹோமம் செய்ய வேண்டும்" என்கின்றனர்.

வேதோக்தம், ஆகமோக்தம் ஆகிய எல்லா சுபகாரியங்களிலும் நவக்கிரக யாகம் விசேடித்துச் சொல்லப்படுகின்றது. இறைவனுடைய இல்லத்தில் கோள்களுக்கு இடமேது என்ற காலம் போய் கிரகங்கள் இல்லையெனில் இறைவன் சிந்தை ஏற்படாது என்ற உண்மையை மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஒன்பது கிரகங்களுக்கும் அதி தேவதைகளாகவும், பிரத்திபதி தேவதைகளாகவும் பதினெட்டுத் தெய்வங்கள் உளர்.

நவக்கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருட்களாவன :

| | | |
|---|---|---|
| சூரியன் | - | சக்கரைப்பொங்கல் (சூடானது) |
| சந்திரன் | - | பால்பாயாசம் (ஆறியது) |
| செவ்வாய் | - | கற்கண்டுப்பொங்கல், பொங்கல் |
| புதன் | - | புளியோதரை (புளிச்சாதம்) |
| குரு | - | தயிர்ச்சாதம் |
| சுக்கிரன் | - | நெய்ப்பொங்கல் |
| சனி | - | எள்சாதம் |
| ராகு | - | உழுந்துச்சாதம் |
| கேது | - | சித்திரான்னம். |

## நவக்கிரக தம்பதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | - | கங்கை, சாயா |
| 2. | சந்திரன் | - | ரோகினி |
| 3. | செவ்வாய் | - | சக்தி, தேவி |
| 4. | புதன் | - | ஞானசக்திதேவி |
| 5. | வியாழன் | - | தாராதேவி |
| 6. | சுக்கிரன் | - | சுபகீர்த்தி |
| 7. | சனி | - | நீலாதேவி |
| 8. | ராகு | - | சம்ஹிதா |
| 9. | கேது | - | சித்திரலேகா. |

நவக்கிரகங்களின் தோற்றம் பற்றிய புராணக் கதைகள் சிலவற்றை நோக்குவோம்.

அத்திரி முனிவர் தூய தவம் செய்த போது அவர் உடலிலிருந்து வெளிப்பட்ட இந்திரியம் பிரம தேவனால் ஒரு குழந்தையாக்கப்பட்டது. அக் குழந்தை காசியை அடைந்து நூறு கற்பகாலம் செய்த தவத்தின் பேறாக ஆகாயம், பூமி, பயிர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் என்பனவற்றின் அதிதெய்வமாக சிவன் அருளினார். சந்திரனது ஒரு கலையைத் தனது முடியில் அணிந்து சந்திரனை மேன்மைப்படுத்தினார். பின்னரும் அரிய வேள்விகளைப் புரிந்து சிவனின் ஒரு கண்ணாகவும் விளங்குகின்றார். இருபத்தேழு நட்சத்திரங்களும் சந்திரனைக் கணவனாக அடைந் துள்ளனர்.

புதன் சந்திரனது பிள்ளையாகும். சந்திரனுக்கும் வியாழபகவானின் மனைவி தாரைக்கும் மகனாக பிறந்தார் புதன், சிவனைத் தொடர்ச்சியாக வழிபட்ட தன் பயனாக ஒன்பது நவக்கிரகங்களில் ஒருவனாக விளங்கும் பாக்கியத்தைப் புதன் பெற்றார்.

பிருகு முனிவரின் மகனான பார்க்கவனால் மேற்கொள்ளப்பட்ட கடும் தவத்தினால் தனக்குப் பிள்ளையாய் வரும் பேற்றைப் பெற்ற வெள்ளி (சுக்கிரன்) இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவி மந்திரத்தை அருளியதுடன் அசுரர்க்கு குருவாகவும் உலகின் தலைவனாகவும் சிவனின் அருளைப் பெற்றார். இவர் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் இறந்த அசுரர்களை சஞ்சீவி மந்திரத்தின் மகிமையால் உயிர்த்தெழச் செய்ததை அறிந்த சிவன் பார்க்கவனை விழுங்கி விட்டார். யுத்தம் முடிந்து தேவர்கள் வெற்றிபெற்ற பின் சிவனின் சுக்கிலத்துடன் வெளிவந்தான். அதனால் பார்க்கவனுக்கு சுக்கிரன் என்ற பெயர் வந்தது.

ஒருமுறை சிவனின் நெற்றியிலிருந்து சிந்திய வியர்வைத்துளி நிலத்தில் விழுந்ததும் ஒரு குழந்தையாகியது. அதனைப் பூமாதேவி எடுத்து வளர்ந்தார். அக்குழந்தை வளர்ந்த பின் மேற் கொண்ட கடும் தவத்தால் அதன் உடலினின்று அக்கினி உண்டானது. எனவே அக்குழந்தைக்கு 'அங்காரகன்' என்ற பெயர் உண்டானது. இவனே யுத்தகாரகன். இவன் நெருப்பின் தோற்றத்தில் இருந்தமையால் செவ்வாய் எனப்பட்டான்.

ஆங்கீரதமுனிவர் பத்தாயிரம் தேவ வருடங்கள் மேற்கொண்ட தவத்தின் பயனாக அவரால் பூசிக் கப்பட்ட சிவலிங்கத்தை வணங்குபவர் விவேகமும் மனத்தெளிவும் நல்லறிவும் பெறுவர் என சிவன் அருளியதுடன் சுவர்க்கத்திலுள்ள தேவர்களுக் கெல்லாம் குருவாக விளங்கவும் அருள்புரிந்தார். அந்த ஆங்கீரத முனிவரே வியாழன் ஆவார்.

காசிபருக்கும் அதிதி என்னும் பெண்ணுக்கும் மகனாகச் சூரியன் பிறந்தான். இவர் உதிக்கும் போது பிரம்மாவின் வடிவமாகவும், நடுப்பகலில் சிவனின் வடிவமாகவும் திகழ்பவர். சூரியன் கங்கையைத் திருமணம் செய்தான் கங்கை சூரியனின் வெப்பம் தாங்காது தனது நிழலை ஒரு பெண்ணாக உருவாக்கிவிட்டு தந்தையிடம் சென்று விட்டாள். அந்நிழலே சாயாதேவியாவாள் சூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்த பிள்ளை களில் ஒருவரே சனி ஆவான். இவர் சிவனைப் பூசித்ததன் பயனாக சனீஸ்வரன் என்ற பெயரையும் நவக்கிரகங்களுள் ஒருவராகும் பாக்கியத்தையும் பெற்றார்.

**இந்தியாவில் நவக்கிரக சன்னிதிகள்**

பெரியகுளத்திலுள்ள வரம் தரும் விநாயகர் கோயிலில் சூரியனை மையமாக வைத்து பிறகிரகங்கள் நாற்பத்தைந்து பாகை கோணத்தில் வட்டவடிவமாக அமையப்பெற்றதுடன் தம்பதிக ளாகச் சேர்ந்து காட்சியளிக்கின்றன.

திருப்பைஞ்ஞீலிவனேஸ்வரன் கோயிலில் நவக்கிரக சந்நிதி இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக நந்திதேவருக்கு முன்பாக அகல்விளக்கு அளவில் ஒன்பது குழிகள் உள்ளன. அதில் எள்ளெண்ணெய்யை ஊற்றி தீபமேற்றி அதையே நவக்கிரகமாக வழிபடுகிறார்கள்.

திருவாரூர் தியாகராஜர் கோயிலில் நவக் கிரகங்கள் ஒரே நேர்கோட்டில் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றன். இங்கு நவக்கிரகங்கள் தனித்தனியே ஆதிக்கம் காட்டாமல் சிவனுக்குக் கீழ் அடங்கியிருப்பதாக ஐதீகம்.

நத்தம் கைலாசநாதர் கோயிலில் நவக்கிர கங்கள் அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

சுசீந்திரம் தானுமாலயன் ஆஞ்சநேயர் ஆலயத்தில் மூலவருக்கு மேலேயுள்ள மேற் கூரையில் நவக் கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் ஸ்ரீ பகவத் விநாயகர் கோயிலில் நவக்கிரக விநாயகர் உள்ளார். இவர் சூரியனை நெற்றியிலும், சந்திரனை நாபிக் கமலத்திலும், செவ்வாயை வலது தொடையிலும், புதனை வலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க் கையிலும், வியாழனைச் சிரசிலும், வெள்ளியை இடது கீழ்க்கையிலும், சனியை வலது மேல் கையிலும், ராகுவை இடது மேல்கையிலும், கேதுவை இடது தொடையிலும் கொண்டு காட்சியளிக் கின்றார்.

வடநள்ளாற்றில் விஸ்வரூப ஸ்ரீ சர்வமங்கல சனீஸ்வர பகவான் கோயிலில் ஆறடி உயரத்தில் விஸ்வரூப சனீஸ்வரன் உள்ளார்.

திருநீர்மலை அரங்கநாதப் பெருமாள் கோயிலில் தலைநாகர் சிலை உண்டு. நாகதோசம் நீங்க இங்கு பக்தர்களே அபிஷேகம் செய்கி றார்கள்.

திருநாகேஸ்வரத்திலுள்ள நாகராஜ சந்நிதியில் ராகுகாலத்தில் அபிஷேகம் செய்து ராகு, கேது தோசங்களை நிவர்த்தி செய்யலாம் என்பது நம்பிக்கை. நாகராஜ மேனியில் பால் அபிஷேகம் செய்தால் அது நீலநிறமாக மாறும் அதிசயம் இங்கு நிகழ்கிறது.

**நவக்கிரக வழிபாட்டின் பலன்கள்**

1. சூரியன் - சகல காரிய சித்தி, வசீகரம்
2. சந்திரன் - தடைநீங்கும், முன்னேற்றம்
3. செவ்வாய் - எதிரிகளை ஜெயித்தல்
4. புதன் - சகல சாஸ்திர ஞானம் உண்டாகும் கலைகளில் தேர்ச்சி, புகழ் உண்டாகும்
5. வியாழன் - சகல சம்பத்தும் உண்டாகும் கல்வியில் சிறந்து விளங்கலாம்.
6. வெள்ளி - திருமணம் ஆகாதவர்க்கு திரு மணம் நடைபெறும். திருமணத் தடங்கல் நீங்கும். சௌபாக்கியம் உண்டாகும். குழந்தையில்லா தவருக்கு மகப்பேறு உண்டாகும்.
7. சனி - தீராத வியாதிகள் தீரும். கடன் ஒழியும், ஆபத்து நீங்கும்.
8. ராகு - செவ்வாய்க்கிழமைகளில் ராகு காலப் பூசை செய்தால் காரிய சித்தி உண்டாகும்.
9. கேது - தரித்திரம் நீங்கும், வியாதி தீரும் பீடைகள் நிவர்த்தியாகும்.

சுவாமியறையில் அரிசிமாவில் குறித்த கிரகத் திற்குரிய கோலத்தை வரைந்து அதன் மந்திரத்தை பயபக்தியுடன் படித்து வந்தால் கிரகங்களின் அருளைப் பெறலாம்.

மந்திரங்களில் உயர்வான மந்திரம். சூரிய பகவானுக்குரிய காயத்திரி மந்திரமாகும். தினமும் உரிய முறையில் பதினாறு தடவைகள் காயத்திரி மந்திரத்தை உச்சரித்து வந்தால் உயர்ந்த பேறு கிடைக்கும். உச்சரிப்புத் தவறானால் எதிர்மாறான பலன்களே கிடைக்கும். எனவே முறையான குருவிடம் பயிற்சி பெற்று காயத்திரி மந்திரத்தை உச்சரிப்பது நல்லது.

சனீஸ்வரன் பல்வேறு தாக்கங்களை உண்டாக் குவதனால் அதன் தாக்கத்திற்கு உட்பட்ட வர்கள் சனீஸ்வர மந்திரத்தை உச்சரித்து ஆறுதல் பெற வேண்டியவர்களாக உள்ளனர். பின்வரும் மந்திரங்கள் சனீஸ்வரனுக்குப் பிரியமானவைகளாகும்.

**நாராயண வித்மஹே**
**கட்கஹஸ்தாய தீமகி**
**தன்னோ விஷ்ணுப் பிரசோதயாத்**
**(11 தடவை)**

**காகத்வஜாய வித்மஹே**
**கட்கஹஸ்தாய தீமகி**
**தன்னோ மந்தப் பிரசோதயாத்**
**(11 தடவை)**

**நீலாஞ்சன சாமாபாசம்**
**ரவிபுத்ரம் ஜமாக்ரஜம்**
**ச்சாயா மார்த்தாண்ட சம்பூதம்**
**தம் நாமாமி சனைஸ்வரம்**
**(11 தடவை)**

**ஓம் இக்காம் இக்கீம் இக்கௌம் சிகசனயே நமக ஹரீ ஓம் தத்சத்.**

மேற்படி மந்திரத்தை முறையாக ஓதினால் சனீஸ்வரனுக்குப் பரீதி உண்டாகும். அதனால் துன்பம் நீங்கும். இதே போல் ஏனைய கிரகங்களுக் கும் மந்திரங்கள், தோத்திரங்கள், அகவல்கள் என்பன உள்ளன. அவற்றை உரிய முறையில் படித்து குறித்த கிரகங்களின் தோசங்களிலிருந்து விடுபடுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சரவணபவ என்னும் திருமந்திரந்தனை சதா ஜெபியென் நாவே"

வாகீசகலாநிதி நயினை கனகசபாபதி நாகேஸ்வரன் *M.A.*
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

தனிப்பெருங் கடவுள் முருகப்பெருமான். சிவனும் முருகனும் வேறல்லர். மிகப்பழங்காலந்தொட்டே முருகவழிபாடு நிலவிவந்துள்ளது. சங்க இலக்கியங் களுட் திருமுருகாற்றுப்படை நக்கீர தேவநாயனா ரால் அருளிச் செய்யப்பட்டது. அருளும், பொருளும், வீரமும், ஞானமும் தருங் கடவுளாகவே தனிப் பெரும் முருகப்பெருமான் சித்தரிக்கப்பட்டுள்ளார். மக்களது இயல்பான வாழ்வை விளக்கும் தத்துவ மாகவே முருக தத்துவம் இன்று வரை இலங்குகிறது. இயற்கையம்சங்களையும் தமிழர்தம் பண்பாட்டை யும் அடியொற்றியமைந்த வழிபாடாகவே முருக வழிபாடு வளர்ச்சிபெற்று வந்துள்ளது. காலத்திற்குக் காலம் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப முருக வழிபாட்டம்சங்கள் தலைமைபெற்று உரைக்கப் பட்டவையாயினும் இன்றைய காலத்தேவையில் முருக வழிபாட்டின் நாமசங்கீர்த்தனம் பிரார்த்தனையில் முருகன் நாமத்தை அவன் பெயரைச் சொல்லி உச்சரித்து ஜெபித்து நினைந்து வழிபட வேண்டிய நிலையே தலைமை பெறுகிறது எனலாம்.

'ஆன்மபோதம்' என்பது தான் ஆலய வழிபாட்டின் - இலட்சியம் - குறிக்கோள் - நோக்கம் - பயன். விக்கிரகங்களும், கட்டடங்களும், பூசை களும், அபிஷேகங்களும் மற்றும் உற்சவங்களும், கிரியைகளும், பாவனைகளும் எல்லாம் வழிபடு வோருக்கு ஆன்மலயிப்பை ஆன்ம போதத்தை தூண்டவல்லனவாயமைய வேண்டும் என்பதே வழிபாட்டு நெறியின் இலக்கு, இவற்றிற்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்டனவே மந்திரங்கள். வழிபாட்டு மரபிலே மந்திரங்களுக்குத் தனித்த வோரிடமுண்டு. 'மந்திரம்' வாயினாலே ஜெபிக்கப் படவேண்டியன. அடியவர் கருத்தும், சிந்தனையும், கண்ணும், காதும், புலன்களும் இறைலயிப்பி லிருந்தாலும் வாயும் நாவும் பிரதான தொழிலாக மந்திரத்தை அதாவது 'சரவணபவ' எனும் திருமந்திரத்தை சதா ஜெபியென் நாவே" என்பதற் கொப்ப நெட்டுருச் செய்தவண்ணமே இருக்க வேண்டும் என்று பக்தன் விரும்புகிறான். 'அரன்நாமம்' திருவைந்தெழுத்து 'ந'கராதி பஞ்சாட்சரம் என்றும் 'சி'கராதி பஞ்சாட்சரம் என்றும் அமையும். முருக நாமம் 'சரவணபவ' என்றும் 'முருகா' என்றும் கூறப்படும். ஷடாட்சரம் என்பது 'சரவணபவ' சரணடைந்து முருகனைத் துதிப்பதால் வாழ்வு வளம் பெறுகிறது. தெய்வ வழிபாடு, கடவுள் நினைப்பு, என்பதெல்லாம் சரணாகதி தத்துவமே யாகும். நான் எனும் முனைப்பு அறுந்த நிலையி லேயே நாயகன் திருவடிப்பேறு சித்திக்கிறது. இனி முருகவழிபாட்டின் மேன்மைகளுடன் 'திருமந்திரந் தனைச் சதா ஜெபியென்நாவே' என்னும் கருப் பொருளை பற்றிச் சிந்தித்துக் கொள்வது திண்மை யான நன்மை பயப்பதாகும்.

**முருக நாமம்**

மனிதர்களுக்கென்று சிறப்பான உறுப்பு 'நா' என்பதாகும். 'நா'வென்பது 'நாக்கு' என்னும் உறுப்பைக் குறிக்கும். நரம்பில்லாதது 'நாக்கு'. நாக்கின் தொழிற்பாட்டினாலேயே 'சத்தம்' பிறக்கிறது. 'தால்' என்பது நாவை அசைத்து இசைப்பதைக் குறிக்கும். குழந்தைக்குத் தாய் பாடும் பாடல் தாலாட்டு. தொட்டிலில் தூங்கும் மழலைகளுக்குத் தாய்மாரின் இதமான தாலாட்டு இன்பந்தந்து நிற்கிறது. சலனமற்றுத் தூங்குகிறது. குழந்தைக்கு இசையினிமையையும், தாய் தன்னரு கிலே நிற்கிறாள் என்ற பாதுகாப் புணர்ச்சியும் தாலாட்டிலே உள்ளன. 'சத்தம்', 'ஓசை' என்பன குழந்தையின் செவிகளுக்குக் கேட்பதால் அது அம்மாவின் பாதுகாப்புத் தனக்குள்ளது என்பதை உணர்கிறது. ஆதலினால் அசைவற்றுத் தூங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. உறக்கத்திற்கும், தன்னம்பிக்கைக்கும், நிம்மதியான நித்திரைக்கும் "பாதுகாப்பு' என்பது அவசியமாகிறது. சமய வாழ்க்கை வாழும் மனிதர்கள் இப் பாதுகாப்புணர்ச்சியை மந்திரங்களை உச்சரிப்பதினாலும், கடவுள்களை நினைத்து சிவ சின்னங்களை அணிவதனாலுமே பெற்றுக் கொள்கின்றனர். இவ்வழக்குத் தொன்றுதொட்டு மானிடவாழ்விலே சுவறிக் கிடக்கிறது. இப்போது புரிகிறதல்லவா "திருமந்திரந்தனைச் சதா ஜெபி என் நாவே" என்று பாடுபவர்களின் தீரம்!! தினமும் எப்பொழுதும், எச்சந்தர்ப்பத்திலும் முருகன் நாமத்தைத் தியானித்து உச்சரிக்க வேண்டும் என்பதனை நாமனைவரும் நெஞ்சிலே நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும். அன்பும், பக்தியும், அருளுணர்ச்சியும் தருகின்ற சக்தி மந்திரங்களுக்கும், திருநாமங்களுக்கும் உள்ளன. "சொல்லச் சொல்லத் தித்திக்குமே சுந்தரனின் நாமரசம்" என்றும் அன்பர்கள் கூறுவதுண்டு. சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சிவனிட்ட கட்டளையே "நமக்கு மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்" என்று பெரிய புராணம் கூறும். "சொற்றமிழ் பாடு" என்ற கட்டளையை நாம் சற்று ஊன்றிக் கவனிக்க வேண்டும். 'சொல்லாலே தமிழ்பாடு' என்ற விளக்கம் காணத்தக்கது. 'மந்திரம்போல் வேண்டுமடாசொல் லின்பம்' என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடுகிறார். மணிவாசகர் தேனினுமினிய திருவாசகம் என்னும் அமுதச் சொற்களாலே சிவனைப் பாடியுள்ளார். திருவாசகமும் திருக் கோவையாரும் எட்டாந் திருமுறைகளெனலாம். இறைநாமத்தை உச்சரிப்பதும், தேவார திருவாச கங்கள் ஓதுவதும், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, அபிராமி அந்தாதி ஓதுவதும் 'திருமந்திரந்தனைச் சதா ஜெபி என் நாவே' என்பதில் அடங்குவன. 'நாக்கு' எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும். திருநாமம் ஐஞ்செழுத்தும் செப்பிய வண்ணமே இருக்க வேண்டும். "வாயராத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்' என்பார் திருநாவுக்கரசு நாயனார். "பாடும் பணியே பணியாயருள்வாய்" என்று இரந்து நிற்கிறார் அருணகிரிநாதர். முருகன் திருப்புகழைப் பாடவேண்டும் என்ற உணர்ச்சி இன்று அனைவரிடத்திலும் பெருவேகங் கொண்டுள்ளது. "முருக வள்ளலை இரப்பதே நமது வாழ்வு" என்ற முடிவைப் பலர் எடுத்துவிட்டனர். இவர்களுள் பெரும்பான்மையினர் இளைஞர்களும், பெண்களுமேயாவர். உண்மையை உணர்பவர்கள் இளைஞர்கள். அதனை மறுக்க முடியாத பருவத்தினர். நீதியை நேசிப்பவர்கள். ஆதலினாலே தான் இளைஞர்கள் இன்று முருக நாமத்தை உச்சரித்து வாழ்விலே உயர்ச்சிகாணத் துடிக்கின்றனர். வாழ்க்கையை அனுபவித்து அவ்வாழ்க்கையின் தாரதம்மியத்தை நன்கு உணர்பவர்கள் பெண்கள் தான். பெண்ணி னத்தின் இலட்சிய வேட்கையே முருகப் பெருமானைத் துணைகொண்டு வாழ்வதே. சதா சிந்தித்தும் வந்தித்தும், துதித்தும், பாராயணஞ் செய்தும் வாழ்வதையே பெண்கள் சைவத்தமிழ்ப் பெண்கள் குறிக்கோளாகக் கொள்வர். இன்றைய சூழ்நிலையிலே இவ்வாசை, நாமங்களை உச்சரிக்கும் நாட்டம், அவா, வேட்கை, துடிப்பு என்பன வேகங் கொண்டே காணப்படுகின்றன. தஞ்சமும், அடைக்கலமும், நிம்மதியும், அமைதியும், அருளைநாடும் ஈடுபாடும் தான் முருகநாமத்தை இடைவிடாது உச்சரிக்க வேண்டும் என்ற நிலையைத் தோற்று விக்கின்றன. சலனமற்ற வாழ்வைத் தருவன நாம சங்கீர்த்தனங்களே. அருள் தரும் ஆனந்த மலையான சிவனையோ, முருகனையோ சிக்கெனப்பிடித்த வண்ணம் ஜெபித்துத் துதிப்பதால் பாடிப்பரவிப் பணிவதால் நமக்குள்ள சுமைகளெல்லாம் தீர்ந்து விடுகின்றன. உடலும், மனமும், புத்தியும் பஞ்சு போலாகி விடுகின்றன. 'இன்பமே எந்நாளும் துன்ப மில்லை' என்ற நம்பிக்கை ஏற்பட்டு வருகின்றது. எனவே "சரவணபவ எனும் திருமந்திரந்தனை சதா ஜெபி என் நாவே" என்று உரத்துப் பாடத் தோன்றுகின்ற தல்லவா. தமிழ்ப் பாடல்களுக் குள்ளே முருகப் பெருமான் மீது பாடப்பட்டுள்ள பக்திப்பாடல்கள் அனைத்துமே பெருமைபெற்றன.

### முருகன் திருப்பாடல்

முருகப்பெருமானின் புகழையும், திருநாமத்தையும் பேசியவர்கள், பாடியவர்கள், எழுதியவர்கள் யார்? என்ற ஆராய்ச்சியை முன்னெடுப்பதால் முருகப் பெருமானின் தனிப்பெருங்கருணை துலக்கமுறும். நக்கீரர் முதல் நாகேஸ்வரன் வரை முருகன் புகழ் பேசப்படுவதற்கும் பாடப்படுவதற்கும் முதற்காரணம் தமிழ்மொழியேயாகும். முருகன் தமிழ்க் கடவுள். தமிழை மிக விருப்புடன் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செவிகளினாலே கேட்டு அருள் செய்பவன். ஆதலினால் முருகன் திருப்பாடல்களை அடியார்கள் தினமும் செந்தமிழிலே பாடியேத்தி நிற்கிறார்கள். எனவே முருக நாமத்தினாலே தமிழ் பரப்பப்படு கின்றது. முருகன் புகழ் தமிழாலே துதிக்கப் படுகிறது. "செந்தமிழ் வழுத்தியுனை அன்பொடு துதிக்க வரமருள்வாயே" என்று தானே அருணகிரி நாதரும் தமது திருப்புகழிலே கேட்டுத் துதிக்கிறார். எனவே 'தமிழ்' எனும் பாடத்தைப் படிக்க வரம் கிடைக்கவேண்டும். தமிழ்மொழியிலமைந்த பாடல்க ளைப்பாட அம்மொழிவழிக் கல்வியைக் கற்க வேண்டும். நல்ல தமிழாசான்களிடம் ஐயந்தெளிந்து தமிழ்மொழியின் மாண்புகளை உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்களே தமிழால் முருகனை வணங்கத் தகைமையுடையவர்கள். கணிதமும், விஞ்ஞானமும், விண்வெளியாராய்ச்சியும், கணனியும், மற்றும் நவீன கண்டுபிடிப்புகளும், 'தமிழிலே முருகனை வழிபடும் தன்மைக்கு' நிகராக ஒரு போதும் வாரா. எனவே நாம் உண்மையிலே செய்யத் தக்கது யாது எனில் தாய்மொழிக் கல்வியையும், சமயவாழ்வையும் முன்னெடுக்க முனைவதேயாகும். அத்துடன் தாய் மொழியாம் தமிழ்மொழியை நன்கு கற்றுத் தெளிவதற்குரிய முன்முயற்சிகளை எடுப்பதுமாகும். "பாடும் அடியார் கூட்டத்துடன் பழகுவதற்கும் ஒரு பக்குவம் வேண் டப்படுகிறது. "தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்பது உணர்ந்து தெளியப்பட வேண்டியது. "அடியார் நடுவுள்ளிருக்கும்" தன்மை நமக்கு வாய்க்க வேண்டும் என்ற உணர்வு நலன் நமதுள்ளத்துள் முகிழ்க்க வேண்டும். அந்த ஆனந்தமேலீடு வாய்க்கப் பெறுவதற்கும் உள்ளம் பழுக்க வேண்டும் அல்லவா! அதாவது மனத் தளவிலேயும், அறிவள விலேயும், அனுபவவளவி லேயும் 'எளிமைத் தன்மை' 'இயல்புநிலை' வாய்க்கப் பெறும் போது தான் 'அடியாருடன் உறவாடும் எளிவந்த நிலை" தோன்றும் "பரம்பொருள் கீழிறங்கமாட்டாமை" என்றில்லை. "இரங்காமலிருக்கமாட்டாமையே சிவ தத்துவம்" "எளிவந்த கருணை" என்பதே தெய்வத்தின் உயர்நிலை. ஆதலினால் 'வான் வந்தவான் கருணையை" எண்ணினால் தமது 'செருக்கு' அடங்கம், உண்மை துலங்கும், அருள் ஊற்றெடுக்கும், அன்பு பெருகும், ஆராதனை செய்ய வேண்டும் என்பதால் நாமங்களைச் செபிக்கும் உணர்வு தோன்றும்.

முருகப் பெருமானைப் பாடுவோர் என்ன சொல்லிப்பாடுகின்றனர் என்று பார்ப்பது சுவை பயப்பதாகும். அருணகிரிநாதரது திருப்புகழ் பாடல்களிலே அவரது வாழ்க்கைவரலாறே பேசப் பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானின் பராக்கிரமத்தைப் பாடுகிறது. தேவர் சிறைமீட்ட திறத்தை வியக்கிறது. கந்தசஷ்டி கவசம் தமிழாலே முருகனைத் துதிப்பதுடன் தம்மைக் காத்தருள் புரியுமாறு விண்ணப்பஞ் செய்யும் பாங்கினையும் கொண்டு பாலன் தேவராய சுவாமிகளாற் பாடப்பட்டுள்ளது. காண்டங் காண்ட மாயமைந்துள்ள கந்தபுராணத்திலே முருகப் பெருமானின் உற்பத்தி திருப்பெருவடிவம் முருகப் பிரபாவங்களனைத்தும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. புராணபடனத்தைக் கேட்பவர்களும், புராணம் படிப்பவர்களுமே முருகப்பெருமானின் பரங் கருணைக்குப் பாத்திரராவார்கள் என்பதே விதி. ஆதலினாலே எப்படியாயினும் முருகப் பெருமா னைப் பாடுக! வாழ்த்தியேத்துக! வழிபடுக! என்பதே வாழ்க்கைக்கு நிம்மதி, செய்யத்தக்கது. முருகனைப் பாடுவதே பாதுகாப்பு. முருகனைப் பாடுவதே பஞ்சத்தை ஓட்டுவது, வினை களைவது. முருகனைப் பாடுவதே, தமிழ் வளர்ப்பது. முருகனைப் பாடுவதே, வாழ்வில் வளம் பெறுவது. முருகனைப் பாடுவதே, மனதிற்கினிமை பயப்பது. முருகனைப் பாடுவதே பேரின்பந் தருவது, முருகனைப்பாடுவதே தமிழ் உச்சரிப்பில் தேர்ச்சி பெறுவது, முருகனைப் பாடுவதே மனப்பாடஞ் செய்வது, முருகனைப் பாடுவதே உளப்பிணி போக்குவது, முருகனைப் பாடுவதே துயர்களை வது, முருகனைப் பாடுவதே சமய வாழ்வு என்பது. எனவே அனுதினமும் முருகப்பெருமானை நினைத்துப் பாடுதல் வேண்டும்.

முருகபக்தர்கள் வேல், காவடி, சேவல், மயில் என்று தனித்தனி பாடும் மரபும் உண்டு. முருக னுக்குக் காவடிச் சிந்து பாடுதல் பெருமரபாகும். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், பாலரும் காவடி எடுப்பது வழக்கம் இன்றும் உண்டு. நாதஸ்வரம், தவில், உடுக்கு என்னும் வாத்தியங்களின் உதவியுடனும் சலங்கை, உறுமி மேளம் என்பவற்றுடனும் சல்லரியுடனும் முருகப் பாடல்களைப் பாடும் மரபும் உண்டு. ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வரும் போது கதிர்காமம், செல்வச்சந்நதி, நல்லூர், கந்தவனக்கடவை போன்ற இடங்களில் இன்றும் காவடியாட்டம் நிகழ்வதுண்டு. மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் காவடியாட்டம், உடுக்குப் பாட்டு என்பன நிகழ்வதுண்டு.

**1.1 முருகன் தமிழ்க்கடவுள் என்பதற்கான சான்றுகள்**

1. "சேய் தமிழ் நூற் சீக்கு ஐ" - கந்தரந்தாதி, 37
2. "செந்தமிழ் நூற் சீரங்க ராக விநோத என்பார்க் கில்லை தீவினையே" - கந்தரந்தாதி, 98
3. "நூலறிபுலவ", "பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே" - திருமுருகாற்றுப்படை
4. "பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும் நீயே" - கல்லாடம்
5. "செஞ்சொல் தெரி புலவோனே" - திருப்புகழ், 614
6. "மதித்த முத்தமிழிற் பெரியோனே" - திருப்புகழ் 294
7. "தமிழ் தனைக் கரைகாட்டிய திறலோனே" - திருப்புகழ்1286
8. "திருத்த முத்தமிழ்க் கவிக்கொருத்த" - திருப்புகழ் 252
9. "கொழு தமிழுண்டு முதற் புலமைக்குக் கொட்டுக சப்பாணி, குரவடி யமரு மிடைக்கழி யற்புத கொட்டுக சப்பாணி" - திருவிடைக்கழி பிள்ளைத்தமிழ்

**1.2 தமிழ்விநோதர் :** முத்தமிழ் ஆர்வத்திலேயே பொழுது போக்கும் அவா உடையவர் என்பது

1. "அதிமதுர சித்ரகவி நிருபனும் அகத்தியனும் அடிதொழுது தமிழ்த்ரய விநோதக் கலா தரனும்" - திருவகுப்பு
2. "மீனவனு மிக்கபுலவோரு முறைபொற்பலகை மீதமர் தமிழ்த்ரய விநோதக் காரனும்"
   - திருவகுப்பு
3. "முத்தமிழ் வித்வ விநோதா கீதா
   மற்றவரொப்பில ரூபா தீபா
   முத்தி கொடுத்தடி யார்மேல் மரமால் முருகோனே"
   - திருப்புகழ், 838

**1.3 தமிழ்க்குரு :** தமிழ் ஆசான் என்பது

1. "செந்தமிழ் தெளிவு கொண்டடி யார்க்கு விளம்பிய பெருமாளே" - திருப்புகழ், 1193
2. "மெய்ப் பலகைச்
   சதுபத்து நவப் புலவர்க்கும் விபத்தியில் ஞான
   படலத் துறுலக் கணலக் யதமிழ்த் த்ரயமத்
   திலகப் பொருள்வருத் தியினைப்
   பழுதற் றுணர்வித் தருள்வித்தகசற் குருநாதா"
   - திருப்புகழ், 126

**1.4 தமிழ்ப்பிரியர் – தமிழிற் காதலுடையார்**

1. "உணர்வோர் படித்த தமிழ் செவியார
   வைத்தருளு முருகோனே" - திருப்புகழ், 224
2. "தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
   தண்டமிழின் மிகு நேய முருகேசர்"
   - திருப்புகழ், 729
3. "பெய்யு முத் தமிழிற் றயாபர!
   பிஞ்ஞகர்க் குரை செப்புநாயக!
   - திருப்புகழ், 830
4. "தூயவர் கதித்த முத்தமிழ் மாலா யோதிய
   செழிப்பை நத்திய சீலா வீறிய - மயில்வீரா
   - திருப்புகழ், 853
5. பாட்டில் விருப்புடையார் என்பது :
   "நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே!
   கெழீஇக் கேளிர் சுற்றம் நின்னை
   எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே"
   - பரிபாடல்

குழந்தை வடிவேலனாகிய இந்தக் குழந்தைக்கு வளருவதற்கு வேண்டிய உணவு தமிழே. இந்தக் குழந்தைக்குக் கலப்புப்பொருள் (பாதுகாப்புப் பொருள்) தமிழே. குழந்தைக்கு முதல்முதல் கொடுப்பது தேன். பின்னர் வளருதற்கு வேண்டியது பால் அமுது. வரகவி மார்க்க சகாயதேவர் அருளிய திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழிற் பாடுகின்றார்.

**"அம்மைமுலை யுண்டு விளையாடும் இளையோனை**
**எமையாட்கொண்ட குமரேசனைச்**
**செம்மையுள ஆறுமுகனைத்திரு விரிஞ்சைவரு**
**சேயைப் புரந்தருள்கவே**
**மும்மைமலம் அகலநக் கீரமுநி சொன்ன திருமுருகா**
**றெனுந் தேறலும்**
**எம்மருண கிரிநாதர் ஓதுபதினாறாயிரந் திருப்புகழ்**
**அமுதுமே".**

திருமுருகாற்றுப்படை என்னுந் தேன் முதலில் குழந்தைக் குமரனைக் காக்கும். பின்னர்த் திருப்புகழ் அமுது அக்குழந்தையைக் காக்கும் கால அளவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படை முதன்மைத் தானத்தது. இனைப் "பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை" என்றார் காளத்திப் புராணத்தில்.

குமரகுருபரசுவாமிகள் தாம் இயற்றிய மதுரைக் கலம்பகத்தில், தடாதகாதேவியென்றொருபேர் தரிக்கவந்ததுவும், தனிமுதல் ஒருநீ சௌந்தர மாறனானதுவும் குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பேர் கொண்டதும் தண்டமிழ் மதுரம் கூட்டுண எழுந்த வேட்கையாலெனிலிக் கொழி தமிழ்ப் பெருமையாரறிவார்". என மிக அருமையாகப் பாராட்டியுள்ளார்.

**"கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்**
**பாட லறிவித்த படை வேளும் "**

என்பது தமிழ்விடுதூது.

**"மாணிக்காலறிஞர் பெருங்குடித் தோன்றி**
**இறையோன் பொருட்குப் பரணர் முதல் கேட்கல்**
**பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்**
**பாய்பாரறிய நீயே ஆதலின்"**

என்பது கல்லாடம் முருகர் துதி. சிவபிரான் தாம் இயற்றிய "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளில் நக்கீரனார் குறை கண்டபொழுது சங்கப்புலவர்கள் முன்பு நின்று வாது செய்தனர். முருகப்பிரானோ சங்கப்புலவர்கள் எல்லாம் மாணவர்கள் போலத் தமது முன்பு நிற்கத் தாம் ஓரதிகாரியாய்ச் சாரதா பீடத்திருந்து அவர்களைச் சோதித்து வீற்றிருந்தனர். என்னே முருகன் தமிழ்ப்புலமைத் திறம் இருந்தவாறு! இக்கருத்தைப் பின்வரும் செய்யுள்களிற் காண்க.

**'அரியதாதை தானே - மதுரேசன்**
**அரிய சாரதாபீட மதனி லேறி யிடேற**
**அகில நாலும் ஆராயும் - இளையோனே'**

- திருப்புகழ், 1055

**"மூவர்கட் கரியான் நிற்ப முத்தமிழ் சங்கத் தெய்வப்**
**பாவலர் வீற்றிருக்கும் பாண்டிநன்னாடு போற்றி".**

**"முருகன் சங்கத்திருப்பவன் நம் முக்கட் கடவுள் நிற்பவன்"**
- திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

சேக்கிழார் பெருமானுக்குச் சிவபிரான் உலகெலாம் என முதலெடுத்துத் தந்ததுபோல முருகரும் நக்கீரருக்கு 'உலகம்' என முதலெடுத்துத் தந்தனர் எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திற் கூறப்பட்டுள்ளது.

**"தலமகிழ் தமிழ்க்கு நல்ல தண்டமிழ்முருக சென்று**
**நலமுறு கனவிற் சொல்வான் நற்றமிழ் முருகன் நம்பேர்**
**பலமிகு தமிழினாலோர் பாட்டாற்றுப்படையா நம்மை**
**உலக மென்றெடுத்துப் பாடென்றுள்ளுறை**
**கொடுத்தானன்றே".**

எனவரும் செய்யுளால் விளங்கும் இச் செய்யுளில் தமிழுக்கும் முருகருக்கும் உள்ள ஒற்றுமை 'தமிழுக்கு நல்ல தண்டமிழ் முருகன்" "நற்றமிழ் முருகன்" என்னுஞ் சொற்றொடர்களால் விளங்கும். இவ்வொற்றுமை "நற்றமிழ்க்கின்றுணை ஞான சம்பந்தன்" என்னுந் தேவாரந் திருவாக்கோடு ஒத்துணரற்பாலது. அருணகிரியாரும் "உலகம் உவப்ப" என முருகப்பிரானே முதல் எடுத்துத் தந்தனர் எனக் கூறியுள்ளார். இதனை,

**"அடிமோனை சொற்கிணங்க' 'உலகமுவப்ப' என்றுன் அருளாலளிக்குகந்த - பெரியோனே**
எனவருந் திருப்புகழால் (203) அறியலாகும்.

## 1.5 முருகனே சம்பந்தரான செய்தி

திருஞானசம்பந்தப் பெருமானுடைய சரிதம் பெரிய புராணத்திற் காணலாம். முருகப்பெருமானது திருவருட் தோற்றமே சம்பந்தப் பெருமான் என்பதற்கு ஆதாரங்கள் பலவுள. அருணகிரிநாதரும், ஒட்டக் கூத்தருமே நமக்குப் போதிய சான்றாவர். சம்பந்தப் பெருமான் தமிழ்ப் பாக்கள் பாடிச் செய்த அற்புத லீலைகளை எல்லாம் முருகப்பிரான் இயற்றியன வாகவே அருணகிரியார் தமது திருப்புகழிலும், கந்தரந்தாதியிலும் பாராட்டியுள்ளார். தமிழ் சம்பந்தப்பட்ட வரையிலும் அருணகிரியார் கூறி மகிழ்ந்ததைக் கூறுவோம்.

**"தம்பந்த மறத் தவநோற்புவர் குறைதீரச்**
**சம்பந்த னெனத் தமிழ் தேக்கிய - பெருமாளே"**

**"சுருதியாய், இயலாய், இயல் நீடிய**
**தொகுதியாய், வெகுவாய், வெகுபாஷைகள்**
**தொடர்புமாய், அடியாய், நடுவாய், மிகு துணையாய், மேல்"**
என்று நீண்டபாடலாய் வருகிறது.

உமை முலைப்பாலுண்டு சுருதித் தமிழ்க் கவிப் பொருளாகச் சம்பந்த பெருமான் செய்த திருவிளை யாடல்களை முருகப் பெருமான் இயற்றினவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி அருணகிரியார் பாராட்டியது போலக் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரும் தாம் இயற்றிய தக்கயாகப்பரணி என்னும் நூலிலே சம்பந்தர் சரிதத்தை முருகப்பிரான் சரிதமாகவே விளக்கமுற ஓதுவர். அந்நூலிற் கோயிலைப் பாடிய பகுதியிற் சரஸ்வதிதேவியை நோக்கிப் பார்வதி தேவி,

"வெண்டாமரையாளே! தெய்வமகளும், எனக்கு மருமகளுமான வள்ளி என்னும் பெயருடையவளை மணஞ்செய விரும்பிய என்பிள்ளை முருகன் மதுரைமாநகரில் சமணரோடு வாதுவென்ற கதையை எனக்குச் சொல்லுக" என்று கேட்ட தாகவும் உடனே சரஸ்வதியும் அச்சரித்திரத்தைக் கூறினதாகவும் வரும் பாகம் படிக்கப்பழக்க மிக இனிமையாக இருக்கும். அது,

**"வருகதை தெய்வமகள் என் மருமகள்**
**வள்ளிவதுவை**
**மனமகிழ் பிள்ளை குமரன் மதுரையில் வெல்லும்**
**இனிய**
**ஒருகதை சொல்லு! தவள ஒளி வரி செவ்வி முளரி**
**ஒளி திகழ் அல்லி கமழும் ஒருமனைவல்லி எனவே"**

என வரும் பாவால் விளங்கும்.

தாம் இறைவன் திருவொளி ஆவதைச் சம்பந்தர் "கருக்குடி மைந்தன் தன்னொளியான மெய்ஞ்ஞான சம்பந்தன்" என்னும் அருமை வாக்கால் விளக்குகின்றார். முருகப் பெருமானும் இறைவனது நெற்றிக் கண் ஒளிதானே!

இங்ஙனம் சம்பந்தராய்த் தோன்றிய முருகப் பெருமானுக்குத் தமிழில் உள்ள புலமையும் காதலும் அவரருளிய அற்புதத் தேவாரங்களில் ஒவ்வொரு பதிகந்தோறும், ஒவ்வொரு பாடல் தோறும், ஒவ்வொரு அடிதோறும், ஒவ்வொரு சொற்றொடர்தோறும் விளங்கும் என்பது மிகையாகது. செம்மை பழுத்த தமிழுக்கும், இயற்கை இன்பம் பெருகுந் தமிழுக்கும், பொருள் ததும்பு் தமிழுக்கும், இசைமலி தமிழுக்கும், பக்திச்சுவை சொட்டுந் தமிழுக்கும், சித்ரத் தமிழுக்கும், தெய்வத் தமிழுக்குஞ் சம்பந்தப் பெருமான் தமிழே தக்க இலக்கியமாகும்.

ஆறுமுகத் திருஞான சம்பந்தருக்குத் தமிழின் மீதிருந்த ஆக்கம் அவர் தமது தேவாரத்தில் தமக்கும் தமிழுக்குங் கொடுத்திருக்கும் அடை மொழிகளாலும் விளங்கும் உதாரணமாக,

"நற்றமிழ் ஞானசம்பந்தன்"

"நற்றமிழ்க் கின்றுணை ஞானசம்பந்தன்"

"தமிழ்க்கிழமை ஞானன்"

"அருந்தமிழ் கற்று முற்றுமாயினான் அவன் பகர்ந்த சொற்கள்"

"தண்தமிழ், மெய்த்தமிழ், தகுதமிழ், வண்டமிழ், நற்றமிழ், மிகுதமிழ், இன்தமிழ், தெரிதமிழ், சீரார்தமிழ், செந்தமிழ், விரிதமிழ், துளங்கில்தமிழ், குன்றாத்தமிழ் பெருகிய தமிழ், இசைமலிதமிழ், பல ஓசைத்தமிழ், ஆரா அருந்தமிழ், திருநெறிய தமிழ், நலங்கொள் தமிழ், ஞானமிக்க தண்டமிழ், பேரியல் இன்தமிழ்" எவையென காண்க.

அருணகிரியாரிடம் தமிழைக் கேட்டுருகிய தமிழ்க்கடவுள், தமது தந்தையார் இருவர் தமிழுக்கு உருகித் திருவீழிமிழலை என்னும் தலத்திற் படிக்காசு தந்தது போலத் தாமும் அருணகிரியாருக்குப் படிக்காசு அளித்தார் என்னும் விடயத்தைச் 'சென்னிமலை யாண்டவன் காதல்' என்னும் அருமையான நூல் செவ்வனே விளக்குகின்றது.

**"பச்சைமயில்லான் சூரைப்பாயு மயிலான் சேரும்**
**இச்சைமங்கை வாரணத்தான் ஏறுமங்கை**
**வாரணத்தான்**
**நாட்டில் அருணகிரிநாதன் திருப்புகழ் சொல்**
**பாட்டின் மகிழ்ந்து படிக்காசளித்த பிரான்**
**தாலமிகுஞ் சென்னிமலை தன்னில் வளர் கல்யாண**
**வாலசுப்பராய னென்று வாணர்புகழ் வசாலினான்"**

என்னுங் கண்ணிகளிற் காண்க. அப்பர் சுவாமிகளுக்குஞ் சம்பந்தப் பெருமானுக்குஞ் சிவபிரான் திருவீழிமிழலையிற் படிக்காசு தந்தது அவர்களிடம் தமிழ் கேட்கும் இச்சை காரணம் பற்றியே என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில்,

**"இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால்**
**காசு நித்த நல்கினீர்**
**அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே"**

என்னும் பாசுரத்தில் விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இந்தத் தமிழ்ப் பித்து பிறைசூடிய பித்தருக்குமுண்டு. அவர் மகனார் முருகனுக்கும் உண்டு. எனவே இது அவருக்குப் பரம்பரைப் பித்து என்க. அதனாலன்றோ தன்னை முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன் என்று அருணகிரியார் வெளியிடுகின்றார்.

**1.6 சிவப்பிரகாசசுவாமிகளுக்குத் தமிழில் வெற்றியளித்தது**

முருகன் தமிழ்ப்பிரியன். இரு தமிழப்புலவர்கள் வாது செய்யும் வேளையில் முருகன் யார் பக்கமிருப்பான் எனின் கூறுதும். ஆணவ அழுக்கு அடைந்தார்மாட்டுஇரார், ஆணவம் ஒழிந்தார் மாட்டே இருப்பர் என அறிக. இதற்குச்சான்று சிவப்பிரகாச சுவாமிகளின் சரிதத்தில் ஒரு பகுதியால் விளங்கக் கிடக்கின்றது. சிவப்பிரகாச சுவாமிகள் திருச் செந்தூர் முருகவேளைத் தரிசித்துப் பிரதக்ஷணம் வரும் போது அங்கிருந்த தமிழ்ப் புலவர் ஒருவர் சுவாமிகள் திருநெல்வேலி சிந்துழந்துறையில் தருமபுரவாதீனத்து வெள்ளியம் பலவாண சுவாமி களிடம் பாடல் கேட்டவர் என அறிந்து, தமது வழக்கப்படியே வெள்ளியம்பலவாண சுவாமி களைத் தூஷிக்கச் சிவப்பிரகாச சுவாமிகளுக்கும் திருச்செந்தூர்த் தமிழ்ப் புலவருக்கும் வாது ஏற்பட்டது. புலவர் நாம் இருவரும் நிரோட்டகயமகம் பாடுவோம், முன்னர்ப் பாடி முடித்தவர்க்கு மற்றவர் அடிமையாதல் வேண்டும் என்றனர். சிவப்பிரகாச சுவாமிகளும் அதற்குடன்பட்டனர். நிரோட்டகமாவது பாடலைப் பாடும் போது பாடுவோரது உதடுகள் ஒட்டாவகைக்குள்ள எழுத்துக்களை வைத்துப் பாடுவது. ப, ம, வ, உ, ஒ முதலிய இதழ் ஒட்டும் எழுத்துக்களும், இதழ் குவியும் எழுத்துக்களும் வாராவகைப் பாடல்கள் அமைய வேண்டும். ஆதலால் இவ்வகை அந்தாதி நிரோட்டஅந்தாதி, இதழகல் அந்தாதி எனப் பெயர்பெறும். செந்தூர்ப் புலவர் ஒரு செய்யுள் பூர்த்தி செய்யுமுன்னே சிவப்பிரகாச சுவாமிகள், 'திருச்செந்தில் நிரோட்ட கயமக அந்தாதி' என்னும் 30 பாடல்கள் கொண்ட அந்தாதி நூலைப் பாடி முடித்தனர். புலவரும் அடிமையாயினேன் என வணங்கினார். வெள்ளியம் பலவாண சுவாமிகளிடம் சென்று வணங்கி அடிமை யாயினர். மேல்வரும் செய்யுள் இதழகலந்தாதியில் வருவது :

**"கணக்காக நாய்கடின் காயநிலையெனக்**
**கண்ணியென்ன**
**கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற் செந்திற்**
**கந்தநெற்றிக்**
**கணக்காக னார் தந்த நின்றானையேயினிக்**
**காதலினாற்**
**கணக்கா கனாநிகர்த் தேயழியால்கத்தின்**
**காதலற்றே".**

செந்தூர்க் கந்த! இத்தேகம் அழிவது ஆதலின் இத்தேகத்தின் மீதுள்ள காதலற்று உன்மீது காதல் நிரம்பும் வகை வரந்தந்து காத்தருள் என்பது இச் செய்யுளின் கருத்து. அடியேன் கேட்கும் வரம் யாதெனில் மதுரம் பெருகும் தமிழ்ச் சொன்மாலை உனக்கு அணியும் பாக்கியமுள்ள பிறவியே வேண்டும் என்பதே சிவப்பிரகாச சுவாமிகள் வேண்டும் வரம். தமிழ்க்கல்வியையும், தமிழ் விருத்தியையும் நாடினோர் தமிழ்க் கடவுளாம் முருகனையன்றி வேறு நாடுதற்கு இடமில்லை என்பது இக்கட்டுரையின் தேர்ந்த முடிபாகும்.

துதி

**"செந்தமிழ்க் கடவுள் நீ என்றுனைப் பெரியோர்கள்**
**செப்புவது பேருண்மையே**
**செந்தமிழையன்று நீ சம்பந்தமூர்த்தியாய்ச்**
**செகமுழுதுமே விரித்தாய்**
**முந்தி சங்கப்புலவர் தங்கலாந் தீர்க்கவே**
**மூகனாத் தோன்றி நின்றாய்**
**முன்னுனைப் பாடாத கீரனை வெருட்டித்திரு**
**முருகாறுபெற்ற தன்றி**
**வந்தனை செய்யாத பொய்யாமொழியை வாழ்விக்க**
**மார்க்கத்தில் எதிரில் வந்து**
**வழிமறித்தொருபாடல் பெற்றது நிரம்பாது**
**வாரிதியின் வெள்ளமெனவே**
**சந்தஞ்சொ லருணகிரி தேன்பாவு பாடற்**
**றனியமுது கொள்கை கொண்டாய்**
**தண்டமிழ்ச் சுவையுனைப் போலொடுவர்**
**கண்டதிலை தணிகாசலக் கடவுளே".**

முருகனையே பாடிப் பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே என்னை மீட்டுவிடு!

மலர் சின்னையா
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

மனம் என்பது மனிதர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பொதிந்து வைக்கப்பட்டுள்ள எண்ணங்களின் ஊற்று எனலாம். மனத்தின் இயக்கம் அபூர்வ மானது. அது யாரால்? எப்படி? எங்கிருந்து இயக்கப்படுகிறது? மூளையின் இயக்க சக்தியா? மனித உயிருக்கு மட்டும் கொடுக்கப்பட்ட இயற்கையின் அபூர்வக் கொடையா? மனிதனை உலைத்திடும் மாயையை விலக்க ஆன்மாவுடன் இணைந்து இயங்கும் இறை இயக்கமா?

மனித உடல் வளர்ச்சியும், உள வளர்ச்சியும் கால வளர்ச்சியுடன் இணைந்தது. உடல் வளர்ந்து உச்சமடைய மனமும் நேர்த்திசையில் பலம் பெற்று உயர்கின்றது. அதனை ஆளுமை என்கின்றோம். உடல் உச்ச வளர்ச்சிக்குப் பின் இளமையைக் கடத்தி முதுமையை வெளிக்காட்டும். பிறப்பிலிருந்து முதிர்ச்சி வரை உடல் வளர்ச்சி கூம்பகத் தன்மை கொண்டது. ஆனால் மனம் நேர்க்கணியத் தன்மை கொண்டது. மனம் கற்பதன் மூலமும், அனுபவங் களை அடுக்கிக் கொள்வதன் மூலமும் உயர்ந்து செல்கின்றது. இறுதியில் மனம் பக்குவப்பட்டுவிடும்.

குழந்தையாய் இருந்தபோது நாம் கள்ளம் கபடமற்றிருந்தோம். சிறுவராய் இருந்தபோது இவ்வுலகம் எமக்கென்றிருந்தோம். கட்டிளமைப் பருவத்தில் எமக்குள் இவ்வுலகம் என்றிருந்தோம். வளர்ந்ததும் பொறுப்புக்களை ஏற்றோம். முதுமையில் நிதானமானோம். தளர்ந்ததும் பற்றின்றி இருந்தோம். இறை பயணத்தை விரும்பி ஏற்போம்.

இத்தகைய மனித வாழ்க்கையில் மனதின் இயக்கம், மனித நியதிகளை ஏற்று கற்றுக் கொள்வதன் மூலம் அதிக வளர்ச்சியடைகிறது. புறந்தள்ளி கற்றலில் தன்னைப் பூரணப்படுத்த முடியாத மன... இயக்கத்தை தீய சக்திகள் சூழ்ந்துவிடும். இவை சுகபோகத்தையும் நவநாகரிகம் என்ற போதையையும் ஊட்டும். இம்மாயை வசப்பட்ட மனம் குறுக்கு வழிகளில் பணம் தேடிச் சொர்க்கம் காணும். மனிதப் பண்புகள் அவரை விட்டு விலகிச் செல்லும். ஒருவன் தன் மனம் மாயைப் போதைக்குள் சிக்குண்டு இருப்பதை அறியக்கூடிய சந்தர்ப் பங்கள் (சமய போதனைகள், வழிகாட்டல்கள், நல்ல உறவுகள் மூலம்) கிட்டும். அப்போது மனம் மீண்டுவிட்டால் தப்பித்துக்கொள்ள முடியும். தப்பிக்கமுடியாத மனங்கள் ஊழ்வினைக்குள் மூழ்கித் தம்மை மாய்த்துக் கொள்ளும். ஆன்மாவிற்கு விடுதலை கிடைக்காது. இறைவனை அறியவும் அடையவும் முடியாது போய்விடும். உடல் தளரும் போது பொன், பெண், பூமியாலே பட்டதுபோதும் என்று சிலரது மனங்கள் உணரும். அப்போது உணர்ந்து என்ன பயன்? இருந்தும் தன் தவறுகளை மனித மனம் என்று உணர்கின்றதோ அன்றே இறைவன் அவனை ஏற்றுக் கொள்கின்றார். அதனால் தான் "தாயினும் நல்ல தலைவன்" என்று திருஞானசம்பந்தர் இறைவனைப் போற்றிப் பாடுகின்றார்.

இறைவன் மீது அன்பு செலுத்தும் நோக்குடன் ஓயாது பிரார்த்தனை செய்வதும், பொருள் பணம் கொடுத்து ஆலயங்கள் கட்டுவதும், அதீத பணம் செலவிட்டு ஆடம்பரமாகத் திருவிழாக்கள் செய்வதும், ஓயாமல் இறை நாமம் சொல்லிய வண்ணம் இருப்பதும் எம்மவர் பலரின் செயற்பாடுகளாகும்.

இவை அவர் அவர் மன விருப்பிற்கேற்ப செய்யப்படுபவை. அவ்விருப்பில் உள்ளார்ந்த இறை அன்பும், பக்தியும், மனிதநேயப் பண்புகளும் உட்பொதிந்திருக்கிறதா? என்பதை அவரவர் மனம் ஆழச் சிந்தித்துச் செயற்படுதல் வேண்டும்.

மனிதன் இறைவனின் சாயலாய்ப் பிறந்தவன், ஒவ்வொரு மனிதனிலும் இறைவன் குடி கொண்டி ருக்கிறான். மனிதனில் எத்தனையோ பேர் தெய்வச் செயலை மனிதர்களுக்குச் செய்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மனித மனங்களில் வாசம் செய்பவன் என்ற உண்மைகளை அனுபவ ரீதியில் கண்டவர்களும், உணர்ந்தவர்களும் நாம் அறியும் வண்ணம் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

காடவராஜா என்பவர் கட்டிய பெரும் கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு இறைவனை அழைத்த போதும் இறைவன் அங்கு செல்லாமல் பூசலார் தன் உடலின் ஒன்பது வாசல்களுக்கேற்ற முறையில் வகுத்தமைத்த ஆலயத்தின் பிரவேசத்திற்குச் சென்றிருந்தமை இறைவன் மனங்களில் வாசம் செய்பவன் என்பதற்கோர் எடுத்துக்காட்டு.

இறை நம்பிக்கை அசைக்க முடியாத அளவிற்கு ஒருவர் மனதில் வலுக் கொண்டிருந்த போது இறைவன் மனித வடிவினனாகி தன்வடிவினாகி மற்றும் அசரீரி (ஒலி) வடிவினாகி மக்கள் முன் நடமாடிய வரலாறுகளும் உண்டு.

அரசன் விதித்த அணை கட்டும் கட்டளையை நிறைவேற்ற யாருமில்லையே என்று ஏங்கிய செம்மனச்செல்வியின் மன ஏக்கத்தை நீக்க இறைவன் (மனித வடிவில்) கூலியாளனாய் வந்தார். தான் யாரெனக் காட்ட அடிபட வேண்டிய சந்தர்ப் பத்தையும் ஏற்படுத்தினார். தன்னில் பட வேண்டிய அடி அடித்தவருக்கும் உலகின் அத்தனை மக்களுக்கும் உணரவும் வைத்தார்.

சிவதொண்டாக சிவனடியாருக்கு அமுதூட்டிய பின் தாம் உண்ணும் வழமை கொண்ட சிறுத் தொண்டரிடம் இறைவன் சிவனடியார் வேடம் தாங்கிச் சென்றார். தலை மகனாயும், ஒரே மகனாகவும் இருக்கும் பிள்ளையை கறி சமைத்துத் தந்தால் மட்டும் உண்பேன் என்று சிவனடியார் கேட்கிறார். அவரின் விருப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற இறை நம்பிக்கையோடு, தன் ஒரே ஒரு மகனைப் பிள்ளைக் கறியாக்கினார். உணவுண்ணச் சிவனடியாரை அழைக்கிறார். சிவனடியாராய் சிறுத்தொண்டர் முன் நிற்கும் இறைவன் தன்னுடன் சேர்ந்திருந்து உணவு உண்ண மகனை அழைக்குமாறு கூறுகின்றார். எப்படி வருவான் மகன்? சிறுத்தொண்டரின் நிலையுணர்ந்த இறைவன், மீண்டும் மகனை அழைக்குமாறு கூறுகின்றார். சிறுத்தொண்டர் அழைக்கிறார்; மகன் ஓடோடி வருகின்றான்.

மனித வாழ்க்கையில் பிள்ளைப் பாசம் உயிரிலும் மேலானது. ஆனால் சிறுத்தொண்டரின் மனமோ பிள்ளைப் பாசத்திலும் இறைநம்பிக்கை மேலோங்கியிருந்தது. அதில் ஸ்திரம் கொண்டிருந்தது. சிறுத்தொண்டரின் மனதை நேசித்த இறைவன் மனித உருவினராய் வந்து சிறுத்தொண்டரைச் சோதித்து அற்புதம் செய்தார்.

பதினாறு வயதுடன் தனது உயிர் முடிவுறும் என்றிருந்த மார்க்கண்டேயர் இறைவன் தன்னைக் காப்பாற்றுவான் என்ற பூரண நம்பிக்கையோடு சிவலிங்கத்துடன் பிரியாதிருந்து வரம் கேட்டார். உரிய நாளில் வந்த இயமன் பாசக் கயிற்றை மார்க்கண்டேயர் மீது வீசினான். அவ்வேளையில் கூட இறைநம்பிக்கை தளராத மார்க்கண்டேயர் சிவலிங்கசொரூபத்தைப் பற்றிப் பிடித்து சிவனை அழைத்தார். அப்போது எம்பெருமான் சிவலிங்கத்திலிருந்து தோன்றி இயமனை வதம் செய்து மார்க்கண்டேயரின் உயிரைக் காப்பாற்றினார்.

கண்ணப்ப நாயனாரின் மனம் இறைவனை நம்பியது. திருக்காளத்தி மலைக் கோயிலில் இறைவன் சிலையைக் காண்கிறார். கண்டதும் திருக்காளத்தி அப்பனோடு தன்னை இணைத்துக் கொண்டார். தன் உயிரிலும் மேலாக இறைவன் மீது காதல் கொண்டார். அதனால் தான் மிகவும் விரும்பி உண்ணும் இறைச்சியை இறைவனுக்கும் கொடுத்துண்ண அவரின் மனம் விரும்பியது. இறைச்சியை இறைவன் முன் படைத்தார். உணவு உண்ணாது விடின் கண்ணப்பன் மனம் தாங்க மாட்டான் என்பதற்காகக் கண்ணப்பர் கண்களுக்கு மட்டும் தெரியாதபடி இறைச்சியை மறைத்தார். இறைவனின் உருவச் சிலையின் கண்களிலிருந்து இரத்தம் வடியச் செய்து, தன் பக்தன் கண்ணப்பன் தன் உயிரிலும் மேலான கண்ணைத் தனக்கு தரக்கூடிய உயரிய காதல் மனம் கொண்டவன் என்பதை நிரூபித்தார். இரண்டாவது கண்ணையும் இறைவனின் கண்ணிற்குப் பதிலீடு செய்ய கண்ணப்பன் துணிந்த போது "நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!" என்று பாசம் மிகுந்த குரலில் அசரீரி வடிவில் தடுத்தாட் கொண்டார். "வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற விபுலானந் தரின் பாடல் வரிகளும், அன்புகொண்ட மனித மனங்களையே இறைவன் விரும்புவான் என்பதைப் புலப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையில் வாடிய தருமி பொற்கிளி பெறுவதற்காக இறைவனை அன்புருக வேண்டிய போது இறைவன் தருமிக்கும் பாட்டெழுதிக் கொடுத்தார். நக்கீரரால் அப்பாடல் நிராகரிக்கப்பட்டதனால் தருமி வருந்தினான். தருமியின் மனவருத்தம் நீக்க மனித வடிவினனாக இறைவன் வந்து தருமியுடன் சென்ற நக்கீரருடன் வாதிட்டார்.

மேற்குறிப்பிட்ட கதைகளின் மூலம் நாம் அறிவது அன்பு, பக்தி, நம்பிக்கை கொண்ட மனங்களை இறைவன் நேசிக்கின்றான். அவர்களோடு சேர்ந்தே நடமாடுகிறான் என்பதே.

மனிதப் பிறப்பு எல்லா ஜீவராசிகளிலும் மேலானது. இயற்கையால் படைக்கப்பட்ட பௌதிக அம்சங்களையும், அத்தனை உயிரினங்களையும் ஆட் கொண்டு அனுபவிக்கும் வல்லமை படைத்தவன் மனிதன்.

**புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி**
**பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாகி**
**கல்லாய் மனிதராய் ...** என்ற திருவாசக வரிகள் மனிதரின் அடுத்த படியேற்றம் தேவர் நிலைக் குரியது. தேவர்நிலைக்கு வருவதற்கு முன்னுள்ள பிறப்பே மனிதப்பிறப்பு. எனவே மனிதர்களாகப் பிறப்பெடுத்த நாம் அனைவரும் பேறுபெற்றவர்களே. மனிதப் பிறவிக்கு மட்டும் ஆறாம் அறிவாகிய பகுத்தறியும் ஆற்றல் வளத்தை இறைவன் கொடுத் திருக்கின்றான்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா..." எனக் கூறப்படுகிறது. இதிலிருந்து எம்மனதை நாமே செப்பனிட வேண்டும். பிறவிப் பிணி அறுப்பதற் காகவே ஆன்மா மனிதப் பிறவி எடுத்தது என்றும், இறைதேடலுக்கான வாழ்க்கையே மனித வாழ்க்கை என்றும், இறை இன்பமே பேரின்பம் என்றும், உலகப் பற்றிலிருந்து என்றைக்கு ஆன்மா விடுதலையடைகிறதோ அன்றே ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடும் என்றும், அத்தகைய வாழ்வே பேரின்பம் என்றும் எமது ஆத்மீக வரலாறுகள் கூறுகின்றன.

**"மனமே! செங்கட்டியையும் பொன்னையும் சமனாய்**
**ஒதுக்கிய திருநாவுக்கரசர் மனம்போல்,**
**எல்லா உயிர்களையும்**
**நேசித்துக் கொள்."**

# பந்தவினையறுத்தே பரமபதம் தந்திடுவாய்

**பல்லவி**

கந்தா முருகா கதிர்வேலவனே வா வா
உன்தாள் சரணடைந்தோம் உலகநாதன் மருகனே வா - கந்தா முருகா

**அனுபல்லவி**

சிந்தாகுலந் தீர்க்கும் சிங்காரவேலவனே
பந்தவினையறுத்தே பரமபதம் தந்திடுவாய் - கந்தா முருகா

வீதியில் வந்து நிதம் விழுந்து கும்பிட்டாலே
ஓடிடும் பாவங்களே போய்விடும் துன்பங்களே
நாதியற்ற நாங்கள் நம்பியே வந்துவிட்டோம்
நீதியே நிலைநாட்டி நிம்மதியைத் தான் தருவாய் - கந்தா முருகா

**கவிமணி இராசையா ஸ்ரீதரன்**
(நாச்சிமார் கோயிலடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்சுரக்கும் நல்லைத் திருவூர்

ஏ. சிவலிங்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச்சந்தை என அழைக்கப்படும் வரலாற்று இடத்தின் கிழக்கே புவனேகபாகு என்பவரால் முதலில் நல்லூர் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டது.

பின்னர் ஆட்சிக்கு வந்த இந்திய மன்னர்கள் தமது நாட்டின் முறையைப் பின்பற்றி அக் கோயிலின் அண்மையில் அரச அரண்மனைகள், தமது படைகளான யானைகள், குதிரைகள், தங்கும் காப்பகங்கள் ஆகியவற்றை நிர்மாணித்தனர். மேலும் நாட்டை அலங்கரிக்கும் பல சிறப்புக்களை யும் தமது கலாசாரப்படி அமைத்தனர். நல்லூர் கந்தசுவாமி கோயிலின் கீழ்திசையில் வெய்யிலு கந்த பிள்ளையார் கோயிலையும், தென்திசையில் கைலாயநாதர் கோயிலையும், மேற்திசையில் வீரமாகாளி அம்மன் கோவிலையும், வடபால் சட்டநாதர் கோயிலையும் நிறுவினர். மேலும் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தப் பாவனைக்காக வடபால் பகர வடிவில் ஓர் நீர் நிலையைத் தோண்டினர். தென்னந்திய யமுனா நதியின் புனித நீரைக் காவடிகளில் தருவித்து இங்குள்ள நீர் நிலையில் சேர்ப்பித்தனர். யமுனா நதியின் புதிய தீர்த்தம் சேர்ந்ததால் இந்த நீர்நிலை யமுனா ஏரி - யமுனாரி என்ற பெயருடன் இக்கோயிலின் பாவனைக்கு உதவியது.

இந்த மன்னர்கள் இப்பகுதியின் இதர பணிகளைச் செய்வதற்காக பல்வகை இனத்தவரையும் இங்கு குடியமர்த்தினர். கோயில்களில் வேதம் ஓதவும் பூசைகள் செய்யவும் அந்தணர்களையும், தச்சுத் தொழிலாளரையும், இரும்புத் தொழிலாளர் களையும், கன்னார வேலையாளர்களையும், பொற் தொழிலாளரையும், துணி நெசவாளர்களையும், ஓவியம் வரைவோரையும், இசைக்கலைஞர் களையும், பாணர்களையும், பண்டாரங்களையும் தொழில் ரீதியாக வெவ்வேறு இடங்களில் குடிய மர்த்தினர். அவர்கள் வசித்த குறிச்சிகள், தெருக்கள் அவர்களின் மரபுப் பெயரில் அழைக்கப்பட்டன.

இவர்களின் தண்ணீர்ப் பாவனைக்காக வெவ்வேறு நீர்நிலைகளையும் அமைத்தனர். அவற்றுட் சில பிராமணக்கட்டுக்குளம், பண்டாரக்குளம், நாயன் மார்குளம் ஆகியன. இவர்களின் பல்வேறு வசதிக ளையும் திறம்பட அமைத்ததால் இவர்களின் பணி மக்களுக்கும் பேருதவியாக இருந்தது. இன்னோ ரன்ன சிறப்பான நல்ல வசதிகளுடன் கூடிய ஊர் - நல்ல ஊர் - நல்லூர் என வழங்கப்பட்டது. இப்பெயர் இன்றும் ஓர் நற்பெயராகவே அழைக்கப் படுகிறது.

மேலும் தம்முடன் அழைத்துவந்த கல்விமான் கள், பண்டிதர்கள் மூலம் தமிழை வளர்த்தனர். இதனால் இங்கு சைவசமயமும், செந்தமிழும் சிறப்புற்றோங்கவும் நகரின் இயற்கை வனப்பு எழிலூட்டவும் இப்பகுதி ஓர் புனிதமான இடமாகவே அமைந்தது. இவ்வூர் மக்களும் நல்ல சிந்தனை யுடன் செயற்பட்டு சைவமும் தமிழும் பேணிக் காக்கும் அரும்பணியில் ஈடுபட்டனர்.

1560இல் மேலைத்தேச அந்நியர் படையெடுப் பால் இவை யாவும் சின்னாபின்னமாகின. கோயில்கள் இடிக்கப்பட்டன. நல்லூர் கந்தசுவாமி கோயில் வழிபாட்டுக்குரிய வேல் மற்றும் புனிதப் பொருட்கள் மெய்யடியார்களால் எடுத்து மறைத்து வைக்கப்பட்டன. யாவரும் பயந்து வேறிடங்களுக் குச் சென்றனர். கந்தசுவாமி கோயில் இருந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் உருவானது. ஏறக்குறைய 170 வருட காலம் எமது சமயம் வெளியில் தெரியாதபடி பக்தர்கள் அகத்தளவில் மட்டும் இறைவனைப் பூசித்து ஆசாரங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவந்தனர். இக்காலம் ஓர் இருள் சூழ்ந்த காலமாகவே இருந்தது.

இறுதிக்காலத்தில் ஒல்லாந்தரின் யாழ் அரச பணிமனையில் பணியாற்றிய இரகுநாத மாப்பாண முதலியார் என்பவர் அரச அதிகாரிகளிடம் அனுமதிகோரி கந்தசுவாமி கோயிலைத் தமது நிலத்தில் கட்டுவதற்கு விண்ணப்பித்தார். இவரது முயற்சி காரணமாக 1734இல் இக்கோயிலைக் கட்டுவித்தார். இவரே இவற்றைப் பரிபாலித்தார். நாட்டு மக்களும் நல்லூர்க் கந்தனை உள்ளன்போடு வணங்கி வந்தனர். இரகுநாதமாப்பாண முதலியாரும் அவருடைய சந்ததியினரும் தொடர்ந்து கோயில் அறங்காவலராகப் பணியாற்றி வருகின்றனர். கோயில் பரிபாலனம் வருடாவருடம் சிறப்பித்து இன்று சைவ உலகில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நிர்வாகக் கட்டமைப்பில் மிக உயர்ந்த நிலையில் யாவராலும் போற்றப்படும் கேந்திர நிலையமாக அமைந்துள்ளமை முருகன் திருவிளையாடலாகும்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கீழ்த் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோயில், நாயன்மார் குளத்தடி பேச்சியம்மன் கோயில், மூத்தவிநாயகர் கோயில், பாணன்குளம் அம்மன் கோயில் ஆகியவை அமைந்துள்ளன. தென்திசையில் கைலாயநாதர் சிவன் கோயிலும், கைலாச பிள்ளையார் கோயிலும் இணைந்து காணப்படுகிறது. மேற்திசையில் வீரமாகாளி அம்மன் கோயில் (இக்கோயில் கிராம நிர்வாக அமைப்பில் வண்ணார்பண்ணைப் பிரிவில் இடம்பெறுகிறது), சிவன் கோயில் மற்றும் ஸ்ரீமுத்துவிநாயகர் கோயில் என்பன அமைந்துள்ளன. கந்தசுவாமி கோயிலின் வடகீழ் வீதியில் மனோன்மணி அம்பாள் அருள் புரிகிறார்.

வடபால் பண்டாரக்குளம் விநாயகர் ஆலயம், கொண்டலடி பைரவர் கோயில், சட்டநாதர் சிவன்கோயில், சிவஞானப் பிள்ளையார் கோயில், முக்குறுணிப் பிள்ளையார் கோயில், இலங்கை நாயகி அம்மன் கோயில், வீரபத்திரர் கோயில் ஆகியனவும், வடகீழ் திசையில் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலும், ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் கோயிலும் அமைந்துள்ளன. இவை யாவும் வருடாந்த விழாக்கள், பெருவிழாக்கள் நிகழும் திருத்தலங்களாகும். மேலும் இப்பகுதியில் எண்ணற்ற சிறு வழிபாட்டுத் தலங்களும் அமைந்துள்ளன. இக்கோயில்கள் 1990 வரை நல்லூர் கிராமசேவையாளர் பிரிவுக்குள் அடங்குபவையாகும். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மையமாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட கோயில்களை ஒன்றிணைக்கும் எல்லைக் கோட்டினுள் அடங்கும் பிரதேசம் ஓர் புனித நகராகும்.

நல்லூரில் அவதரித்த ஆறுமுகநாவலர் சைவத்தையும், தமிழையும் விடாமுயற்சியுடன் புயல்வேகத்தில் வளர்க்கச் சித்தங்கொண்டார். நாடெங்கும் பாடசாலைகள் நிறுவியும் வேண்டிய ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தும், மாணவர்களுக்கு சமயம், தமிழ் இலக்கணம் போன்ற பாடங்கள் பயில உதவியாக நூல்களை ஆக்கியும், நூல்களைப் பதிப்பிக்கும் அச்சு இயந்திரங்களை நிறுவியும், ஊக்குவித்தார். கந்தபுராண கலாசாரத்தை யாழ்ப் பாணத்தில் பரவ வித்திட்டார். ஆண், பெண், சிறுவர் என வேறுபாடின்றி சைவசமயத்தில் கவர்ச்சி ஏற்படும் வண்ணம் சமயப் பிரசங்கங்கள் செய்தார். நாவலரின் பெருமுயற்சி கடல்கடந்து இந்தியாவிலும் அச்சு இயந்திரம் அமைத்தும், நூல்கள் வெளியிட்டும், பாடசாலைகள் நிறுவியும், பிரசங்கங்கள் செய்தும், தூய தமிழையும் சைவத்தையும் வளர்க்க உதவினார். இதனால் நாவலர் என்ற பட்டத்தையும் பெற்றார். நல்லை நகர் பெருமையடைந்தது.

ஆறுமுகநாவலரின் அரும்பணியால் கந்தபுராண கலாச்சாரம் இங்கு வேரூன்றி மக்கள் ஆசார சீலர்களாகவும், தூய்மை, சமயபக்தி, விரதங்கள், நோன்புகள் காத்தல் போன்ற சமய நெறியாளர்களாகவும் காணப்பட்டனர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என எண்ணி ஐந்து வயதான பிஞ்சுப் பருவத்தே இலக்கணம் பொதிந்து தூய தமிழையும் சமயப்பற்றினையும் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பாடசாலைகளிலேயே போதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்கள், சமய நிறுவனங்கள், பொது இடங்கள் யாவும் புராணபடனம், சமயச் சொற்பொழிவு, சமய விரிவுரைகள் நடைபெறும் சிறந்த மையங்களாக மாறின. இதனால் இப்புனித இடங்களை நாடி நல்லதைச் சிந்திக்கும் ஆன்மீக சிந்தனையாளர்கள் அணுகினர். நாடும் முன்னேறியது.

நாவலரின் நெறியைப் பின்பற்றி சமய மறு மலர்ச்சிக்கு உதவ முன்வந்தவர் மணி பாகவதர் - மணி ஐயர் என்றழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தம்பிரான் சுவாமிகள். இவர் நல்ல சமய பக்தியும், இனிமையாகப் பாடக்கூடிய இசை ஞானமும் மிகுந்தவர். இறையருளினால் சங்கீத கதாப்பிரசங்கம் செய்து மக்களைத் தன் பணியின் பால் ஈர்த்தவர். நல்லூரின் விடிவுகாலம் கிட்டவும் "நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்" என்னும் சமய நிறுவனத்தை நிறுவி அதன் முதல் குரு மகாசந்நிதானம் என்ற நற்பெயரையும் பெற்றார். இந்த ஆதீனம் இலங்கையின் ஒரே ஆதீனமாக யாழ் நல்லூரில் அமைந்தமை இவ்வூரின் சிறப்பாகும். சைவசமயம் சார்பான எந்த விடயங்களும் இவ் வாதீனம் மூலமாகவே வழிநடாத்தப்படுகிறது. இவ்வாதீன முதலாவது குரு மணியின் சிறப்பும் இவ்வூரின் நற்பேறும் காரணமாக இங்கு ஓர் சிறந்த மணி மண்டபம் அமைந்துள்ளது. சமய, சமூகப் பணிகள் நடைபெறும் கேந்திர நிலையமாகவும் இது அமைந்துள்ளது. இறையருளினால் இங்கு சமய ஒளி நன்கு பிரகாசிக்கிறது. முதலாவது குருமகா சந்நிதானத்தின் சமாதி நிலையின் பின் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதானமாகப் பதவியேற்றுச் சிறப்பாகப் பணியாற்றுகிறார். இவர் சமய பக்தியும் ஆதீனத்தை மிகத் துரிதமாகச் செயற்படுத்தும் விவேகமும் இன்றைய சூழலில் சமரசப் பணியிலும் பங்காற்றும் மனோபாவமும் மிக்கவர். குறிப்பாகச் சமயப் பணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஒரு கலங்கரை விளக்காகவும் நல்லை நகருக்கு அணிசெய்யும் நிறவனமாகவும் அமைந்துள்ளது.

இப்புனித நகரில் நல்லூர்க்கந்தன் சைவ ஒளி, அமைதியான சூழல், மக்களின் பக்திநெறி, அரவணைப்பு ஆகிய யாவும் ஞானிகள், யோகிகள், சாதுக்கள், நல்லறிவாளர்கள் போன்ற பலரைக் காந்தசக்தி போல் ஈர்த்து இன்பம் நுகர வைக்கிறது.

மேலும் நல்லூர் தேரடி பல சித்தர்களையும், யோகிகளையும், பக்தர்களையும், இறைபித்தர் களையும் கவர்ந்து தன்னகத்தே நடமாட வைத்த தால் அவர்களின் அருளும் ஆத்ம ஒளியும் நன்கு பிரகாசிப்பதுடன் பல நன்மைகள் அவ்வப்போது நடைபெறுகின்றன.

அணிஞ்சில் மரமானது தனது விதைகளைப் பரப்புகின்றது. அவ்விதைகள் தூர இருந்தாலும் அம்மரத்தின் ஈர்ப்புசக்தியால் இழுக்கப்படுகிறது. தாமாகவே தாய் மரத்தடியில் வந்து கூட்டமாக முளைத்துப் பயிராகின்றன. அதேபோல எங்கிருந் தாலும் நல்லை நகரின் சிறப்பால் ஈர்க்கப்பட்ட ஆன்மீகநெறி தழுவிய பலரும் நல்லூர் புனிதநகர் எல்லைக்குள் கூடிவாழும் நல்வினைப் பயனையும் பெறுகின்றனர்.

மேலும் இப்புனித தலத்தின் விழாக்காலங் களில் பக்தர்களின் பசிப்பிணி போக்க அறுபத்து மூவர் குருபூசை மடம், மூத்ததம்பி அன்னசத்திரம், துர்க்கா மணிமண்டபம் ஆகியவை அன்னதானப் பணியை மேற்கொண்டு அரவணைக்கின்றன. ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்களும் நன்கு செயற்படுகின்றன.

இப்புனிதநகரில் யாழ் மாநகரசபை தலை மைக்காரியாலயமும், யாழ் கல்விப் பணிமனையும், நல்லூர் பிரதேச கமநல சேவைநிலையமும் அமைந்துள்ளன. யாழ்ப்பாணக் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் அரண்மனை முகப்புத் தூண்களும், பண்டார மாளிகையும் புராதனச் சின்னமாக இன்றும் காப்பாற்றப்படுகின்றன. இவற்றின் வடபால் திவ்விய ஜீவன சங்கத்தின் பிரமாண்டமான பிரதான மண்டபமும் அமைந்துள்ளது. இங்கு எத்தனையோ சித்தர்கள், அருளாளர்கள் நேரில் வந்து கால்பதித்தனர். அருட்பார்வையினால் ஆன்மீக உள்ளங்களுக்கு ஆறுதல் தந்தனர். ஆத்ம சிந்தனையும் ஆன்மீக நெறியும் அருள் ஒளியும் பரவலாக ஆராயப்படும் மத்திய நிலைய மாகவும் செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்விய ஜீவன சங்க மண்டபத்தின் மேல் திசையில் கதிர்காமக் கந்தனின் சின்னமாக அமைந்த ஒரு சிறிய முருகன் வழிபாட்டு மையம் ஸ்ரீபாலகதிர்காமம் 1990இன் பின் விழாக்களும், கதிர்காம உற்சவமும், வேல்விழா பவனியும், கதிர் காம உற்சவ இறுதி மூன்று நாட்களிலும் இங்குள்ள முருகன் எழுந்தருளி ஒருசில கிராமங்களின் பிரதான வீதிகளால் உலாவந்து மக்களுக்கு அருள் ஒளி தருகின்றார்.

சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள முருகன் வழிபடு நிலையத்திலிருந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கொடியேற்ற வைபவத்துக்கான கொடிச் சீலை கொடியேற்றத் தினத்திற்கு முதல் நாள் ரதபவனியாக எடுத்து வந்து நல்லூர் கந்தன் ஆலயத்தில் ஒப்படைக்கப்படுகிறது. இப்பணி இப்பகுதி வாழ் செங்குந்த மரபினர் பண்டுதொட்டு வழங்கிப் பெருமையடைகின்றனர்.

மேலும் இம்மரபினர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி நோன்பிருந்து ஆசாரசீலர்களாக கந்தனின் சூரன்போர் தினத்தன்று முருகனின் படை உதவியாட்களாக வேடந்தாங்கி இதற்கான விசேட ஆடை அணிகள், ஆயுதங்கள் தாங்கிய வண்ணம் பவனிவருவது பக்திபூர்வமான கண் கொள்ளாக் காட்சியாகும். இவர்கள் இத்தூய பவனி மூலம் தமது புனிதமான பணியை முருகனுக்கு அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் முருகன் திருவருளும் கிடைக்கப் பெறுகிறார்கள்.

வடஇலங்கையின் மக்களது பேரானந்தத்துக் கும், நிறைவான ஆன்மிக வாழ்வுக்கும் யாமிருக்கப் பயமேன், அஞ்சேல் என்று உறுதிமொழி கூறுவது போல நல்லைக்குமரனின் மணியோசை கேட்கிறது. மணிக்கோபுர மணிகள் ஐந்தும், நடமாடும் மணியாக மிகப்பெரிய காண்டாமணியொன்றும் (முக்கிய விழாக்களில் உலா வருவது) யாவருக்கும் அபய மளிக்கும் முருகனின் சின்னமாக அமைகிறது. நல்லைக்குமரனும் சூழவுள்ள தெய்வங்களும் கருணையுடன் அருள்மாரி பொழிகின்றனர். இப் புராதன நகர் அன்றுதொட்டு இன்றுவரை செந்தமிழுக்கும் சைவசமய முன்னேற்றத்துக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. இயற்கையாகவே அருள்சுரக்கும் நல்லைத் திருவூர் மேலும் சிறப்புற நல்லைக்குமரன் செம்பொற்பாதம் பணிவோமாக.

# சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

**பலன் :** வீட்டில் செல்வம் பெருகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியை சில சிந்தனைகள்

ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா *B.A. (Hon) M.Phil*
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பஞ்சபூதங்களிலான நமது உடல் செயலாற்று கின்றது. பஞ்சபூத உடலிற்கும் ஐம்புலன்களுக்கும் மனிதனுடைய மனம் புத்தி முதலிய அந்தக் கரணங்களிற்கும் மேலானதாக உடலுடன் கூடியது ஜீவன். ஜீவனை ஆத்மா என்று அழைப்பர். இந்த ஜீவன் தான் எடுத்த உடலை விட்டு நீங்குவதனையே இறப்பு என்கிறோம்.

நமது இந்து மதத்தில் மனிதராய்ப் பிறந்த அனைவரும் தாம்பெற்ற பிறவியின் பயனை அடைவதற்காக சில கிரியைகள், செயல்கள் என்பன வகுக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் பிறந்தது முதலாக இறப்புவரையான கிரியைகள் பூர்வக் கிரியைகள் எனப்படும்.

ஜாதகம் குறித்தல், பெயர் வைத்தல், உணவூட்டல், முடிஇறக்குதல், காது குத்துதல், வித்தியாரம்பம், தீக்ஷை, விவாஹம் முதலியன சில பூர்வக்கிரியைகள் ஆகும். ஒருவர் இறந்தபின் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்தியது எனப் பொருள்படும். உத்தரக்கிரியை, தகனம், பாஷாணஸ்தாபனம், சபிண்டீகரணம், ஏகோத் திஷ்டம், மாசியம் என்பன அபரக்கிரியைகளுள் அடங்கும். மனிதன் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உரிய வாறு வாழ்வைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும் ஆத்ம சாதனையில் ஈடுபடவும் கிரியைகள் உதவுகின்றன. இறந்த திதியின் பன்னிரண்டு மாதமும் செய்யப் படுகின்ற மாசிகத்துடன் 27-30 நாட்களுள்ளும் செய்யப் படும் ஊனமாசிகம், 40-45 நாட்களுள் செய்யப்படும் திரைபக்ஷமாசியம், 170-180 நாட்களுள் செய்யப்படும் ஊனஷாண் மாசிகம், வருஷாப்திகத்திற்கு முன்பாக 340-355 நாட்களுக்குள் செய்யப்படும் ஊனாப்திகம் என்னும் மாசியங்களையும் செய்தல் வேண்டும். பிதிரர்களுக்காகச் செய்யப்படும் கிரியைகளுள் சிரார்த்தமும் முக்கியமான ஒன்றாகும். மேற்கூறப் பட்ட பதினைந்து மாசிகங்களும் சிரார்த்தம் போலவே நிகழ்த்தப்படுவன.

சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்யப் படுவது எனப் பொருள்படும். சிரார்த்தங்கள் அன்ன ரூபசிரார்த்தம், ஆமரூபசிரார்த்தம், ஹிரண்ய சிரார்த்தம், தர்ப்பண சிரார்த்தம் என வகைப்படும்.

**"சிரத்தயா தீயதே யஸ்மாத் சிரார்த்தம் தேன உச்யதே"** சிரத்தையுடனும், நம்பிக்கையுடனும் செய்யப்படுவதால் சிரார்த்தம் என ஸ்மிருதி நூல்கள் கூறுகின்றன. குருவானவரிடமும் நூல்களில் கூறப்பட்டுள்ளபடி நம்பிக்கையுடனும் இந்த தேகம் விட்டு வேறு தேகமடைந்த பிதிரர்களுக்கு செய்யப்படும் கிரியை சிரார்த்தம் என அழைக் கப்படும். பிதிரருக்குரிய கிரியைகள் பொதுவாகக் குதபகாலம் எனக் கூறப்படும் நண்பகல் பன்னி ரண்டு மணிக்கு மேலேயுள்ள காலப்பகுதியில் நிகழ்த்துதல் வேண்டும் அன்னரூப சிரார்த்தம் என்பது உணவு அளித்து படைத்து நிகழ்த்துதல், ஆமசிரார்த்தம் அரிசி மரக்கறி என்பவற்றை தானமாகக் கொடுத்து நிகழ்த்துதல், ஹிரண்யரூப சிரார்த்தம் இயன்ற அளவு தக்ஷணை வழங்கி நிகழ்த்துதல், தர்ப்பண ரூப சிரார்த்தம் எள்ளு நீர் இறைத்து தர்ப்பணம் கொடுத்து நிகழ்த்துதல் என்பனவாகும்.

சிரார்த்தத்தினால் பிதிரர்கள் மாத்திரமன்றி அக்கினி (ஹோமம்) வழிபாட்டால் தேவர்களும் பிராம்மணருக்கு உணவு, தானங்கள் வழங்குவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்க்கத்திலிருப்பவர்களும் பிண்டமிடுதல், எள் நீர் இறைத்தல் இவற்றால் இயமலோகத்தினரும், அன்னதானத்தினால் மனிதர்களும் திருப்தி அடைகிறார்கள். காகத்திற்கு உணவு அளிப்பதால் அர்தவம்சத்தில் பிறந்து பிதிரர்களான அனைவரும் திருப்தி அடைகின்றனர் என நூல்கள் கூறுகின்றன. கிரியைகளின் போது மீதமாக எஞ்சிய உணவி னால் நரகவாசிகள் திருப்தி அடைகின்றனர். இவ்விதமாக நிகழ்த்தப்படுகின்ற கிரியையினால் எல்லோரும் திருப்தி அடைகின்றனர். எந்த மனிதர்கள் அமாவாசைதினத்தில் பிதிர்வழிபாடு செய்கிறார்களோ அவர்கள் பிதிர் தேவருடைய ஆசீர்வாதத்தினால் இன்பம் அடைகிறார்கள் என சுப்பிரபேதாகமம் கூறுகின்றது. மேலும் உத்தரா யணத்தில் தை அமாவாசை தினத்திலும் தக்ஷிணா யனம் ஆடி அமாவாசை தினத்திலும் எந்த பிதிரர் களைக் குறித்து வழிபாடுகள் செய்கிறார்களோ அப்பிதிரர்கள் நற்கதி அடைகிறார்கள் என காரணா கமும் கூறுகின்றது. மேலும் அபரக்கிரியைகளினால் தான் நிலமும் கிராமமும் நகரமும், நாடும், வானமும், பூமியும் செழிப்படையும் என வைத்திய நாத தீக்ஷிதம் என்னும் ஸ்மிருதிநூல் கூறுகின்றது.

பூர்வக் கிரியைகளும் அபரக்கிரியைகளும் பொதுவாக சோதிடத்தோடு சம்பமந்தப்பட்டவை. பூர்வக் கிரியைகள் யாவும் திதி, கரணம், யோகம், நாள், நக்ஷத்திரம், வாரம் என்பன எல்லாம் நல்லன வாகத் தேர்ந்து எடுத்து நிகழ்த்தப்படுபவையாகும். இவ்விதமாகவே அபரக்கிரியைகளுக்கும் சில நிர்ணயங்கள் கூறப்பட்டுள்ளது. ஒருவருடைய இறப்பு நிகழ்ந்த முறைமை மற்றும் இறப்பு நிகழ்ந்த வேளை என்பவற்றிற்கும் கிரியைகள், சிரார்த்தம் என்பன நிகழ்த்தப்படவேண்டிய காலங்கள் என்பன பற்றி எல்லாம் சோதிட நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. குறிப்பிட்ட ஓர் திதியானது இரண்டு நாட்கள் இருக்குமானால் எந்த ஒரு நாளில் மத்தியான காலத்திற்கு மேல் குறிப்பிட்ட திதி இருக்கின்றதோ அத்தினமே உரிய நாளாகும். அபரக் கிரியைகளில் கருமை நிறமான எள்ளும், தர்ப்பைப் புல்லும் பயன்படுத்தப்படுகின்றது. இவை யிரண்டும் விஷ்ணுவினுடைய கையிலிருந்து தோன்றியதனால் விஷேடம் பொருந்தியவை எனக் கூறப்படுகின்றது. ஐம்பூதங்களின் வடிவான இந்த உடல் ஐம்பூதங்களுடனேயே இணைகின்றது. கிரியைகள் யாவும் ஐம்பூதங்களுடன் இணைந்த வகையிலேயே நிகழ்த்தப்படுகின்றன.

பொதுவாக மக்கள் மத்தியில் பஞ்சமி தோஷ மென்பது வழக்கில் உண்டு. இது பஞ்சமி திதியைக் குறித்ததல்ல. அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நக்ஷத்திரங் களில் ஏதாவது ஒரு நக்ஷத்திரம் இருக்கின்ற ஒரு நாளில் ஒரு இறப்பு நிகழுமானால் அதனையே பஞ்சமிதோஷம் எனக்கூறுவர். இது போலவே சில நஷதிரங்கள், திதிகள், கிழமைகள் என்பனவும் தோஷத்திற்கு உரியவை என சோதிடநூல்களில் கூறப்பட்டுள்ளது.

எமது சமய மரபில் பிராயச்சித்தங்களும் கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். தோஷங் களையும் எடுத்துக்கூறி அவைகளை நீக்குவதற்கு வேண்டிய வழிவகைகளையும் சமயநூல்கள் எடுத்துக்கூறி மக்களினது வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவே சாஸ்திரங்கள் - அறிவு நூல்கள்.

திதிக்கு பூமிதானமும், நக்ஷத்திரத்திற்கு சுவர்ணதானமும், கிழமைக்குத் திலதானமும் செய்தல் வேண்டும். இவற்றிற்கு மாற்றாக பொருளைத் தானம் பண்ணி தோஷங்களை நிவர்த்தி செய்து காரியங்களைச் செய்யலாம் என நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இவ்விடயங்களில் நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்களை விட மரபு, நடைமுறை என்பனவும் பின்பற்றப்படவேண்டும். ஏனெனில் வைத்திய நாததீக்ஷிதம் போன்ற ஸ்மிருதிநூல்களில் "இங்கு கூறப்பட்ட விடயங்களை விட அவ்வூர்ப் பெரியவர் களிடமும் பெண்களிடமும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் கேட்டு அனுசரித்துச் செய்தல் வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளதை நோக்கும் போது நூல்களிற் கூறப்பட்டவற்றை விட அவ் வக்குல மரபுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகள், கிராமங்களில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள் என்பனவும் பின்பற்றப்படவேண்டியவையே. கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பூர்வ அபரகிரியைகள் பற்றி இருக்குவேதம், அதர்வவேதம் முதலான வேதங்களிலும் சூத்திர இலக்கியங்களான ஆபஸ்தம்பர், போதாயனர், ஆஸ்வலாயனர் என்பவர்களாலியற்றப்பட்ட சூத்திர நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வைத்தியநாத தீக்ஷிதம், பூர்வப் பிரயோகம், அபரப்பிரயோகம் ஆகிய நூல்களில் குலமரபுகள், தேச நடைமுறைகள் என்பவற்றுடன் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் இணைத்து மூல நூல்களில் கூறப்பட்டவற்றை விரித்து விளக்கிக் கூறுவது நோக்கத்தக்கதாகும். இவற்றிற்கு விளக்க நூல்கள் பல காலந்தோறும் எழுதப்பட்டு வந்துள்ளன. இவற்றில் நமது பிரதேசத்தில் வாழ்ந்த நாவலர் பெருமானின் நூல்கள், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் இயற்றிய சைவ சிராத்தவிதி, சிவபாத சுந்தரனார் இயற்றிய சைவக்கிரியைகள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

"மனமேவ மனுகூஷ்யாணாம் காரணம் மோகூஷ பந்தயோ" என்பது வேதவாக்கு. மனிதனுடைய மனமும் சிந்தனைகளுமே இம்மைக்கும் மறுமைக் கும் நல்வாழ்விற்கும் காரணமாகும். மனதைப் பண்படுத்தி ஆற்றுப் படுத்துவதற்கும், நல்ல முறையில் வாழ்வினை மேற்கொள்ளவும் கிரியைகள் உதவுகின்றன. எனவே மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், யாதுமோர் குறைவு இலாத நற்கதி அடையவும் நூல்களிற் கூறப்பட்டவாறு சிரத்தை யுடன் கிரியைகளையும் கடமைகளையும் நிறை வேற்றி வாழ்வது சாலச்சிறந்தது.

## சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி!

**பலன் :** நோயற்ற வாழ்வு பெருகும், எல்லா நலன்களும் பெருகும்!

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**பலன் :** எல்லோராலும் வேண்டப்பட்டு சந்தோஷம் பெருகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை செய்வோம்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
*B.A (Hons)*

பிரார்த்தனை சக்தி வாய்ந்தது. அதிலும் கூட்டுப் பிரார்த்தனையின் சக்தி அளப்பரியது. மனதை அலையவிடாது ஒருநிலைப்படுத்தி ஒன்றையே வேண்டிச் செய்யும் கூட்டுப் பிரார்த்தனையினால் இறையருள் கிட்டுவது திண்ணம்.

பிரார்த்தனை செய்பவரின் மனம் அன்பு மயமானதாகவும் தூயதாகவுமிருக்கவேண்டும். மனதில் வஞ்சகமும், சூதும் நிறைந்து கிடக்கையில் பிரார்த்தனை செய்வதனால் பயனேதும் கிட்டாது. இறைவன் குடிகொள்ள ஏற்றதாக மனதை ஆக்கிக் கொண்டு வழிபாடு செய்யவேண்டும். மனமொன்றி, மனமுருகி பிரார்த்திக்க வேண்டும்.

இன்று துன்பங்களும் துயரங்களும் நம்மைச் சூழ்ந்து கிடக்கின்றன. 'இவற்றின் பிடியிலிருந்து விடுபட வழியில்லையா?' என எமது மனங்கள் தவிக்கின்றன. 'எம்மைக் காக்க இறைவன்தான் வரவேண்டும். என நாம் கருதுகின்றோம் உண்மை. இன்று எமக்கு வேண்டியது இறையருள் தான். பிரார்த்தனை மூலம் இறையருளை நாம் பெறலாம்.

திருமுறைப் பாடல்கள் மந்திரங்களை ஒத்த சக்தி வாய்ந்தவை. அவற்றைப் பாடியோர், இறையருள் பெற்றவர்கள். அவர்கள் அவற்றைப் பாடியபோது, பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. திருமுறைகளின் அற்புத சக்தியை நாம் விளங்கிக் கொள்ள சில அற்புத நிகழ்வுகளை மட்டும் இங்கு பார்ப்போம்.

திருஞானசம்பந்த நாயனார் கொடிமாடச் செங்குன்றூரில் இருந்தபோது, அவருடனிருந்த அடியார்களுக்கு குளிர்காய்ச்சல் ஏற்பட்டது. 'அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடி, சம்பந்தப்பெருமான் அவர்களது நோயைப் போக்கினார். அதே போன்றே திருநீற்றுப் பதிகத்தைப் பாடி கூன்பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்த்தார். திருநாவுக்கரசு நாயனார் தமக்கு ஏற்பட்ட சூலைநோயைக் குணமாக்குமாறு வேண்டி 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' என ஆரம்பிக்கும் திருப்பதிகத்தைப் பாட அந்நோய் நீங்கிற்று. 'ஆலந்தான் உகந்து அமுது செய்தானை' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி சுந்தரமூர்த்தி நாயனார் தாம் இழந்த கண்பார்வையை மீண்டும் பெற்றார். இவ்வாறு தேவாரங்களைப் பாடி, நாயன்மார் செய்த அற்புதங்கள் பலவாகும். எனவே திருமுறைப் பாடல்கள் அருட்சக்தி கொண்டவை யாகும்.

கோளறு பதிகத்தைப் பாடினால், கிரகங்களால் ஏற்படும் துன்பதுயரங்கள் நீங்கும் என்பர். நாளும் கோளும் நல்லதாய் மாறும் என்பது மட்டுமன்றி நமக்குத் துயர்தரும் பலவிடயங்களும் நல்லதாகும் எனக் கூறுவதாக அப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன.

**மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து**
**மறையோது மெங்கள் பரமன்**
**நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்**
**கொடு நோய்க ளானபலவும்**
**அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே.**

என்ற தேவாரத்தில் இறைவன் மனதில் குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதனால் கூற்றுவனும் கொடிய நோய்களும் அடியார்களுக்கு மிகவும் நல்லவையாகும் எனப் பாடப்பட்டுள்ளது. மற்றொன்றில்,

**வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்**
**மிகையான பூத மவையும்**
**அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல**

என அவுணரும் இடியும் மின்னலும் ஐம்பூதங்களும் நல்லவையாகும் என்று கூறப்படுகின்றது எனவே இயற்கையால் ஏற்படும் அழிவுகள், நோய்கள் முதலிய அனைத்தையும் இப்பதிக பாராயணம் நிவர்த்திக்கும்.

எமது துயரங்களைப் போக்கி நாமனைவருமே மகிழ்வுடன் வாழ வேண்டுதல் செய்வதற்கேற்ற திருமுறைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து கூட்டுப் பிரார்த்தனைகளின் போது பாடினால் எமக்கும் மிகுந்த பயன் கிட்டும். நாம் எவ்வளவு துன்ப துயரங்கள் வரினும் உன்னை மறவோம். நாம் படும் துயரங்களைப் போக்கு. தீவினைகள் எம்மை அணுகாது காத்துக் கொள். நீ எம் மனதுள் குடி கொண்டதால் அனைத்துமே எமக்கு நல்லவையாக அமையட்டும் என இறைவனிடம் தஞ்சமடைந்து வேண்டினால் அவன் கருணை செய்வான்.

கூட்டுப்பிரார்த்தனையின் போது பலர் சேர்ந்து ஒன்றாக வேண்டுதல் செய்கின்றோம் அந்தக் கோரிக்கையை இறைவன் நிச்சயம் ஏற்பானல்லவா? அனைவரது மனங்களும் ஒரே வேண்டுதலைச் செய்வதற்கு நாம் பாடும் பாடலின் பொருளுடன் மனம் ஒன்றிக்க வேண்டும். அதற்காக முதலிலேயே அவற்றின் பொருளை ஒருவர் அனைவருக்கும் விளக்கிக் கூறுவது நல்லதாகும். அதன் பின்னர் பாடும்போது பொருளை உணர்ந்து பாடக்கூடியதாக அமையும். இவ்வாறு பாடக்கூடிய திருமுறைப் பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

'மறையுடையாய் தோலுடையாய்' என ஆரம் பிக்கும் பதிகம் அடியார்களின் இடர்களை நீக்கு மாறு வேண்டும் பதிகமாகும். 'இடர் களையாய் நெடுங்களம் மேயவனே' என ஒவ்வொரு தேவாரத்தின் இறுதியிலும் உருக்கமாக வேண்டுதல் இப்பதிகத்தி லுள்ளன,

"அவ்வினைக் கிவ்வினையாம்" எனத் தொடங்கும் பதிகம் எமது தீவினைகள் எம்மை வந்து சேராதிருக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சி நிற்கிறது. நாம் செய்த தீவினைகள் தானே இன்று துன்பங்களாய் வருகின்றன. "தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்" என ஒவ்வொரு தேவாரத்தின் முடிவிலும் வருவதாக இப்பதிகம் அமைந்துள்ளது. இதனைப் பாட எம் தீவினைகள் அகலும். கோளறு பதிகம் "வேயுறு தோளி பங்கன்" என உள்ளம் புகுந்ததனால் தீயவை அனைத்தும் நல்லவை யாகும் என்கிறது.

இப்பதிகம் தீமை செய்யும் அனைத்தையும் கூறி "நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என அவையனைத்தும் அடியாருக்கு நல்லதாக அமைய வேண்டும் என வேண்டும் தேவாரங்களைக் கொண்டது.

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்**

என ஆரம்பிக்கும் பதிகத்திலுள்ள தேவாரங்கள் அனைத்துமே 'நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் இறைவனை வழிபடுவோம்' என்பதை வலியுறுத்தி அவனது இன்னருளை வேண்டி நிற்பவை.

**வாழினும் சாவினும் வருந்தினும்போய்**
**வீழினும் உன்கழல் விடுவேனல்லேன்**
**தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்**
**போரிள மதிவைத்த புண்ணியனே**
**இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோ உனதின் னருள் ஆவடுதுறையரனே**

என்ற தேவாரம் எம் மனங்களை அவனது கழல் களில் பிணைக்கின்றதல்லவா?

'திருவும் மெய்ப் பொருளும் செல்வமும்' எனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கும் திருப்பதிகம் 'படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே' என் நாம் பாடும் துயரைப் போக்குமாறு பிரார்த்திப்பதாகும்.

திருவாசகத்தில் அடைக்கலப்பத்திலுள்ள பாடல்கள் அனைத்தும் 'உன் அடைக்கலமே' என இறைவனிடம் அடைக்கலம் கோரி நிற்கின்றன. நாம் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்தும் பிறவி யென்னும் பெருந்துன்பத்தினின்றும் காக்குமாறு அடைக்கலம் கேட்டு இப்பதிகத்தைப் பாடலாம்.

மாணிக்கவாசகரின் பிடித்த பத்து 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே' என இறைவனை இறுகப் பற்றும் முடிவைக் கொண்டது. இவற்றைப் பாடும் போது மனம் இறைவனை இறுகப் பற்றிக் கொள்ளும்.

**அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே**
**பெருந்திறல் அருந்தவர்க் கரசே**
**பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த**
**போகமே யோகத்தின் பொலிவே**
**தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

எனப் பாடும்போது துன்ப இருளிலே கிடந்து துடிக்கும் மனம் இறைவனைச் சிக்கெனப் பற்றிக் கொள்ளும்.

திருமுறைப் பாடல்களிலே எமக்கேற்றவை பல இருக்கின்றன. மேற்கூறியவை சிலவே. திருமுறைகளின் அருமை பெருமைகளை நாம் மறந்து வருகிறோம். அவற்றின் பயன், பாராயணஞ் செய்யச் செய்ய விளங்கும். எனவே திருமுறை களைத் தேடியெடுத்து, மனமொன்றி, உள்ள முருக, ஒன்றுசேர்ந்து ஓதுவோமேயானால் அதன் பயன் நிச்சயம் எமக்குக் கிட்டும்.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்த ருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

**பலன் :** நல்லவற்றையே பேசி, நல்லறிவு பெருகும்!

## குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்

**பலன் :** செல்வம் பெருகும், துன்பங்கள் மறையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் ஒன்றே!

யோகேஸ்வரன் அஜித்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

அண்ட சராசரங்களுக்கு முழுமுதற் பொருளாய் சக்தி மூலமாய் நதி மூலமாய் விளங்குகின்ற பரம்பொருள் குணங்குறிகளற்ற சொரூப நிலையினர். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாகிய இறையை சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்களினாலும் யோகிகளினாலும் மட்டுமே உணரமுடியும். இதனையே அப்பர் பெருமான்

**"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடை புண்ணியன்"**

என்கிறார்.

அவர்கள் இறைவனையே உள்ளம் உருகி உருகி நினைந்து அட்டாங்க யோகம் முதலிய அரும்பெருஞ் சாதனைகளினாலும் மனித சக்திக்கு அப்பாற்பட்டு உலகியல் இன்பங்களைத் துறந்து அஷ்டமா சித்திகளும் கைவரப்பெற்று உலகையும் அதனுள் இறைந்து கிடக்கின்ற சக்திகளையும் கூட தம்வசமாக்கிக் கொண்டவர்கள்.

உலகியல் வாழ்க்கையில் சிக்கி பந்த பாசங்களினால் கட்டுண்டு, சிற்றின்பங்களையே பேரின்பமெனத் திழைத்திருக்கும் எம்மினால் அண்டங் கடந்த ஆனந்த வெள்ளப் பொருளாக உலகெங்கும் வியாபித்திருக்கும் இறைவனை உணர முடியாது.

இத்தகைய நிலையில் ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குவதற்கு திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி ஆன்மாக்களுக்கு உடம்பையும் கருவி கரணங்களையும் படைத்துக் கொடுத்தருளினார். அவ்வாறு படைக்கப்பட்ட படைப்புக்களை

**புல்லாகிப் பூடாய் புழுவாய்**
**மரமாகிப் பல்மிருக மாகிப்**
**பறவையாய்ப் பாம்பாகி**
**கல்லாய் மனிதராய் பேயாய்**
**கணங்களாய் ...**

என்றார் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான். அவ்வாறு படைக்கப்பட்ட பிறவிகளுள் மனிதப் பிறப்பு மேலானது.

**"அரிது அரிது மானிடராதல் அரிது"** என்று ஔவையாரும்

**"எண்ணிய பிறவிதன்னில் மானிடப்**
**பிறவிதான் யாதிலும் அரிதரிது காண்"** என்று

தாயுமானவரும் மனிதப் பிறப்பின் மேன்மையை விளக்குகிறார்.

மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். நினைக்கிற கருவி மனம். அது குரங்கு போன்றது. அதனை ஒரு முகப்படுத்தி மனதை ஆளுகின்ற சக்தி பெற்றாலே இறைவனை நாம் காணமுடியும்.

நாம் மனிதப்பிறவி பெற்றதன் நோக்கமே இறைபக்தி காரணமாக உளங்கசிந்து உள்ளுருகும் நலம் பெற்று முக்தியைத் தழுவுதற்கேயாம். அதனாலேயே மணிவாசகர்

**"கலந்த அன்பாகி கசிந்து உள்ளுருகும்**
**நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி"** என்கிறார்.

எனவே இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவர்கள் மீது உண்டான பேரருட் கருணையினால் பலபடி இறங்கி அருள்புரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் உணர்வலைகளை ஆத்மீகத்தின் பால் ஈடுபாடு கொள்ளச் செய்யும் முயற்சியின் படியாக அமைவதே திருவுருவ வழிபாடாகும்.

மனம் வாக்கு முதலானவற்றிற்கு எட்டாதவரும் எல்லைப்படுத்த முடியாதவரும் குணம் குறிகள் அற்றவருமாகிய இறைவனை எல்லைப்படுத்தி குணம் குறிகளுக்கு உட்படுத்தி கட்புலனுக்கு தெரியும் படி அமைக்கப்படுவதே திருவுருவம் ஆகும்.

இறைவன் பல்வகைத் திருமேனிகளுக்கு ஊடாக ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கின்றான். பரம்பொருள் ஆன்மாக்களைப் பக்குவப்படுத்து வதற்காகவும் தன் மீளா அடியவர்களை மீட்பதற் காகவும் அருவமாகிய இறைவன் இலிங்கமூர்த்தம் முதலாய சிஷ்ய பாவமூர்த்தி ஈறாக அறுபத்து நான்கு மூர்த்தங் கொண்டு அருள்பாலிக்கின்றான்.

ஆலயங்களில் திருவுருவங்கள் சிற்ப சாஸ்திர சிவாகம விதிப்படி அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. நாம் வணங்கும் திருவுருவங்கள் பல்வகையின.

விநாயகர், சுப்பிரமணியர், சிவன், பார்வதி, பைரவர் எனப் பல்வகைத் திருவுருவங்கள் வழிபடப்படினும் இறைவன் ஒருவனே. பிரம்மா விஷ்ணு உருத்திரன் இலக்குமி சரஸ்வதி போன்ற அனைத்தும் அத்தகைய வடிவங்களே. இதனையே திருமந்திரம் '**ஒன்றவன் தானே**' என்றும் '**ஒருவனே தேவன்**' என்றும் சான்று பகர்கிறது.

"**ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி**" என்று வேத வாக்கியமும்

"**யாதொரு தெய்வங் கொண்டீர்**
**அத்தெய்வமாகி யாங்கே மாதொரு**
**பாகனார் தாம் வருவார்**" எனச் சிவஞான சித்தியாரும் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்து கின்றன.

பல்வேறு மூர்த்திகளுக்கு பல்வேறுபட்ட நாமங் களில் வடிவங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அனைத்திலும் உறையும் இறை ஒன்றே. இதனை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயத்தில் "**உன் விருப்பப்படி எந்தத் தெய்வத்தையாயினும் மனப்பூர்வமாய் வழிபடுவா யாகில் "நானே" நீ வழிபடும் தெய்வமாகி உன் விருப்பங்களை நிறைவேற்றி பக்தியையும் பலப் படுத்துவேன்**" என்றவாறு கூறுகின்றார்.

பரம்பொருளினால் அருளப்பட்ட வேதத்தினில் "**பரமாத்மா ஒருவரே! அவரே பல்வேறு திருநாமங் களுடன் வெவ்வேறு திருவடிவங்களில் வெவ்வேறு நாமங்களில் யார் யார் எப்படி எப்படி வணங்கு கிறாரோ அப்படியே காட்சியளிக்கின்றார்**" எனக் கூறப்படுகின்றது. சுக்கில யசுர்வேதமும் இக் கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. இதனாலேயே நாம் பல்வேறு திருவுருவங்களை அமைத்து வழிபடுகின்றோம்.

மேலும் கடவுள் பற்றிய 'ஒன்றவன்தானே" எனும் கோட்பாட்டை பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது.

**பொங்கு பல சமயமெனும் நதிகள் எல்லாம்**
**புகுந்து கலந்திட நிறைவாய் பொங்கி**
**ஓங்கும் கங்கு கரை காணாத கடலே**
**எங்கும் கண்ணாக் காண்கின்ற**
**கதியே! அன்பர்**
**தாங்க நிழல் பரப்பி மியற் சோடைஎல்லாம்**
**தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்**
**செங்குமுத மலர வருமதியே எல்லாம்**
**செய்யவல்ல கடவுளே தேவதேவே!**

கடவுள் ஒருவரே. அவரே எல்லாமாக இருக்கிறார். அணுவில் அணுவாகப் பெரிதில் பெரிதாகத் திகழ் பவனும் அவனே! எனும் "**தத்வமஸி**" கருத்தையே சாமவேதம் வலுவாகச் சொல்கின்றது.

இறைவன் உருவமற்றவன். அவனை மனத்தில் நினைத்தற்காகவும் மனம், மொழி, மெய்யினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குதற்காகவும் உருவநிலையில் வைத்து வழிபடுகின்றோம்.

பரம்பொருள் ஒன்றே. முகம்மதியர்கள் அவரை அல்லா என்றும் தீவிர கிறிஸ்தவர்கள் அவரையே ஜெஹோவா என்றும் வைஷ்ணவர்கள் மகாவிஷ்ணு என்றும் பௌத்தர்கள் அவரையே புத்தர் என்றும் பலவாறாக வழிபடுகின்றனர்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் அவரையே விநாயகர் என்றும் சிவன் என்றும் முருகன் என்றும் போற்றி வழிபடுகின்றனர்.

நாடியவர் யாவர்க்கும் ஆயுள் ஆரோக்கியத் தையும் சகல விதமான சௌபாக்கியங்களையும் சுகபோகங்களையும் ஆனந்தத்தையும் அளிக்க வல்ல பரம்பொருள் ஒன்றே! அப்பரம் பொருளையே பலவிதமான பெயர்களாலும் உருவங்களினாலும் வழிபடுகின்றோம். இவ் உண்மையை யாம் யாவரும் உணர வேண்டும் என்கிறார் பகவான் சத்தியசாயி

**"மெய்ப்பொருள் ஒன்றே அறிஞர்கள் அதனை பல பெயர்களால் அழைக்கின்றார்கள்"** எனும் வேத வாக்கு இறைவன் ஒருவனே எனும் கோட்பாட்டை மேலும் வலியுறுத்துவதாக அமைகிறது.

இவ் உண்மையை யாம் யாவரும் உணர்ந்து மதம் எனும் பெயரால் மதங்கொண்டு உழலாது யாவர்க்கும் ஒருவனாகிய இறைவனை, நாட்டில் சுபீட்சமும் சாந்தி சமாதானமும் நிலவ பிரார்த்திக்க வேண்டும்.

**"மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்"**.

# சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுபசுக மீவாய்
வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!

**பலன் :** எல்லா நன்மைகளும் பெருகி, நவக்கிரஹங்களின் அருளைப் பெறலாம்!

# சனி

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

**பலன் :** கடன்கள் நீங்கி செல்வம் செழிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலும் இசைக்கலையும்

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
**செல்வி தயாளினி நவநீதகிருஷ்ணன்**
*B.A. (Hon) M.A (India)*

இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது, தன்வயப்படுத்துவது என்பது பொருளாகும். மரம், செடி, கொடி எனும் ஓரறிவு உயிர்முதல் மக்கள் எனும் ஆறறிவு உயிர்கள் ஈறாக எல்லா உயிர் களையும் இசை தன்வயப்படுத்துகின்றது. இவ் விசைக் கலையானது கோயிலை மையமாகக் கொண்டு வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே கோயிலும் இசையும் பற்றி நோக்கலாம்.

இசையை உலகுக்குத் தந்தவர்களாகக் கடவுளரே கருதப்படுகின்றனர். அன்னை கலைவாணியே கல்வித் தெய்வமாகவும் கலைத்தெய்வமாகவும் கொள்ளப்படுகின்றாள். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் இத்தெய்வம் முன்னிரு கைகளாலும் வீணையைத் தாங்கியவளாகக் காணப்படுகின்றாள்.

மேலும் இசைஞானியாகிய நாரதமுனிவர் தேவலோகத்து இசையை பூலோகத்துக்கு எடுத்து வந்து மாந்தர்க்குப் போதித்தார் எனவும், "கந்தவர் களே தேவலோகத்து இசைக் கலைஞர்கள்" இவர் களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்ட இசைபற்றிக் கூறும் நூலே காந்தர்வ வேதமாகும். இதிலிருந்து கலைகள் அனைத்தும் சமயத்தொடர்புடையவை என்பதும் புலனாகின்றது.

"**கலைஞானம் கல்லாமே கற்பித்தானை கலைபயிலும் கருத்தன் காண்**" (அப்பர்) எனவும், "**சுவை மலிந்த தென்புலவர்**" (சுந்தரர்) எனவும் பாடியுள்ளமை

கலையும், சமயமும் இணைந்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. ஆதியில் சமயத் தொடர் புடைய கிரியைகளின் போது ஆடியும், பாடப்பட்டும் வந்த கலைகள் காலப்போக்கிலே கோயிற் கலை களாகி வளர்ச்சி பெறலாயின.

கலை வடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாய் இலங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளிலே கலைகளும் குறிப்பிடத் தக்கன. மலரினாலும், இலையினாலும், மனத்தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும், நடனத்தி னாலும் இறைவனை வழிபடும்முறை நன்கு போற்றப்பட்டது. ஒலியின் அடிப்படையில் தோன்றி விளங்கும் இசையானது, ஒலி வடிவாய் எங்கணும் வியாபித்துச் சதா ஒலித்துக் கொண்டிருக்கும் இறைவனோடு இணையும் தன்மையுடையது. கோயிலிலே குடி கொண்டிருக்கும் பரம்பொருளான இறைவன் கலைஞருக்கும், பக்தருக்கும், ஒப்புயர் வற்ற தனிப்பெரும் கலைவடிவமாகவும், கலைப் புரவலனாகவும், கலை ஞானியாகவும் கலையின் இருப்பிடமாகவும் காட்சியளிக்கின்றான்.

"ஏழிசையாய் இசைப்பயனாய்" "ஆரியம் தமிழோடிசையானவனாக இலங்கும் இறைவனை, ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை" எனவும் "ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் தமதுள்ள வினைகளே என்றவாறு சைவ நாயன்மாரும், "**பாடோமே எந்தை பெருமானைப்பாடி நின்றாடோமே யாயிரம் பேரானை**" என ஆழ்வார்களும் ஆடல், பாடல் மூலம் இறைவனை வழிபட்டு உய்யும் முறை யினை நன்கு வலியுறுத்திப் பாடியுள்ளமையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இராவணன் இசைத்த சாமகானம் நாத வடிவினனாகிய சிவலோகநாதனை மகிழ்வித்தது எனவே இறைவனுடைய அருளைப்பெற இசை சிறந்ததோர் சாதனமாகின்றது. இசையின் பயன் இறைவனை வழிபடலும், அதே சமயம் ஆத்மானு பவம் பெறுதலுமேயாகும்.

கோயில்களிலே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு. புராணம் என்பன பண்ணோடு ஓதப்படுகின்றன. அதேவேளையில் நாதஸ்வரம், யாழ், வீணை, தாளம், தவில் முதலிய இசைக்கருவிகளும் இணைந்து கொண்டால் அங்கு தோன்றுவது பேரின்ப ஒலியேயாகும். இசைக் கருவிகளும் கோயில்களில் இசைக் கலையைப் பெரிதும் வளர்த்துள்ளன. இவை பேணிப் பாதுகாக் கப்படும் இடம் கோயிலாகும். அதாவது திருவிழாக் காலத்தில் ஆலயத்திலிருந்து சுவாமி புறப்படும் போதும் பின்னர் திரும்பவும் ஆலயத்துள் புகும் போதும் நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கப்படும். சில கோயில்களில் கிரியைகளின் போது பயன் படுத்தப்படும் மற்றுமோர் தாள வாத்தியம் பஞ்ச முக வாத்தியம் எனப்படும். தஞ்சாவூர்ப் பகுதியில் உள்ள திருவாரூர்க் கோயிலிலும், திருத்துறைப் பூண்டிக் கோயிலிலும் இவ்வாத்தியம் இன்னமும் இசைக்கப்பட்டு வருகின்றது. கோயிலில் விசேட தினங்களிலும் விழாக்காலங்களிலும் சர்வ வாத்தியமும் இசைக்கப்படல் வேண்டுமென்று காமிகாகமம் கூறுகின்றது. இதனூடு இசைக்கருவிகளும் கோயில்களில் இசைக் கலையை வளர்த்தமை புலனாகின்றது.

தமிழகத்தை எடுத்துக்கொண்டால் பரிபாடல் முதலிய சங்கநூல்களில் கடவுளரை ஏத்திப் போற்றும் பழந்தமிழ் இசைப்பாடல்கள் பல காணப் படுகின்றன. சங்க காலத்தை அடுத்து வாழ்ந்த காரைக்கால் அம்மையார் திருவாலங் காட்டில் நடராஜப்பெருமான் ஆடிய திருநடன கண்டிற்றுப் பாடிய பாடலில் அக்கால இசைபற்றியும், இசைக் கருவிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**"துத்தம் கைக்கிளை விளரி தாரம்**
**உழை இளி ஓசைபண் கெழுமப்பாடி**
**சச்சரி கொக்கரை தக்கையோடு**
**தகுணிதம் துந்துபி தாளம் வீணை**
**மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்**
**தமருகம் (கரடிகை) குடமுழா மொந்தை வாசித்**
**தத்தனை விரைவினோ டாடும் எங்கள்**
**அப்பனிடம் திருவாலங்காடே"**
(திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்)

அடுத்து இசை வரலாற்றில் பல்லவர்காலம் தெய்வீக இசை தோற்றம் பெற்ற காலமாகத் திகழ்கிறது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தத்தம் சமயங் களைப் பரப்புவதற்கும், கோயில் தோறும் சென்று வழிபடுவதற்கும் பாடல்கள் பல இயற்றினர் இதனால் இசைக்கலை பக்தி இயக்கத்தோடு இயைந்து வளரத் தொடங்கியது.

**"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்**
**பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்"**
என்று சம்பந்தர் பாடியுள்ளார்.

**"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"** என அப்பரும் துதிசெய்துள்ளார்.

மேலும்,
"ஏழிசையாய் இயற்பயனாய்
என்னுடைய தோழனுமாய் ...." இருப்பவன் சிவபிரான் எனப்போற்றியுள்ளார் சுந்தரர்.

மேலும் இறைவனைச் சிக்கெனப் பிடிப்பதற்கு இசையே உதவுகிறது. இதனை சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட சிவபிரான் அசரீரியாக ஆணை யிட்டதன் மூலம் உணரலாம்.

**"அர்ச்சனை பாட்டே யாகும்**
**ஆதலால் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடு கென்றார்**
**தூமறை பாடும் வாயார்"**

இவ்வாணையை ஏற்றுச் சுந்தரர் வாழ்நாள் முழுவதும் இறைவனை இசைத்தமிழாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் பாடி மகிழ்வித்தார். தேவாரமுதலிகள் மட்டுமன்றி மாணிக்கவாசகரும் இசை வளர்ச்சிக்கு ருந்தொண்டாற்றியுள்ளார். திருவெம்பாவை அம்மானை, கோத்தும்பி தெள்ளேணம் குயிற்பாட்டு முதலியன எல்லாம் இசைக்குரிய பாடல்களே யாகும். அத்தோடு பல்லவர் கால மன்னர்களும் இசைவளர்ச்சியிற் பெரும் பங்கு கொண்டனர். மகேந்திரவர்மன் "இசைப்பாக்களே எனது செல்வ மும் வாழ்வும்" என்று தானியற்றிய "மத்தவியாஸப் பிரஹஸனம்" என்ற நாடகத்தில் நடிகர் கூற்றாகக் குறிப்பிட்டுள்ளான். இவன் வீணைமீட்டுவதில் பெரும் ஆற்றல் வாய்ந்தவனாகவும், பல்லாவரம் குகைக் கோயிற் கல்வெட்டில் இவன் தன்னை "சங்கீர்ண ஜாதி" என்றும் கூறியுள்ளான்.

மற்றும்,

**"கோல விழாவில் அரங்கேறிக் கொடியிடை**
**மாதர்கள்மைந்தரோடும்**
**பாலெனவே மொழிந் தேத்தும் ஆவூர்"**

என்ற சம்பந்தர் தேவார அடிகளிலிருந்து ஆண் களும், பெண்களும் அத்தகைய கோயில்களில் கலந்து பாடினர் என்ற குறிப்பு பெறப்படுகின்றது.

தேவார காலத்துக்குப் பின்னர் சிறிதுகாலம் பண்களைப் பற்றிய தெளிவு இல்லாமற் போய் விட்டது. இந்நிலையில்தான் முதலாம் இராஜராஜ சோழன் தேவாரத்திருப்பதிகங்களை நம்பியாண்டார் நம்பியின் துணையுடன் திருமுறைகளைத் தொகுப் பித்தான். திருஞானசம்பந்தரோடு உடனிருந்து இசையமுதை அளித்து வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவரின் மரபில் வந்த மதங்க சூளாமணி எனும் அம்மையாரின் உதவியுடன் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண் வகுப்பித்தான். பின்னர் பண்ணிசை பயில்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தமிழகமெங்கும் பண்ணிசை யைப் பரவச் செய்தான்.

சோழர்கள் பல கோயில்களிலும் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். அதற்கென மானியங்களை வழங்கினர். இதனைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது. ஆகவே தொடர்ந்து தேவாரப் பண்களாகிய இசைச் செல்வம் காக்கப்பட்டு வந்தது.

மேலும் தஞ்சைப் பெரிய கோயிலில் பாடல் மகளிரும், ஆடல் மகளிரும் இருந்தனர் எனவும் இசையமைத்துப் பாடும் பாணர்கள் இசைக் கலையை வளர்த்தனர் எனவும், சமயச் சார்பான நாடகங்கள் நடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் இறைவன் உருவம் "தேவாரத் தேவர்" எனவும், திருப்பதிகம் ஓதி வழிபாடு செய்தற்குரிய பூசையிடம் "தேவாரச் சுற்றுக்கல்லூரி" எனவும் இசைத்தொண்டு செய்பவர் "தேவார நாயகம்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்து இராஜேந்திரசோழன் தான் கட்டிய கங்கை கொண்ட சோழேச்சரத்தில் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது என்பதையும், இதற் கென கோயிலினுள் அமைக்கப்பட்ட மண்டபம் "தேவார மண்டபம்" எனப்பெயர் பெற்றது எனவும் கூறப்பட்டுள்ளமை மூலமாக சோழர்காலத்திலே கோயிலை ஆதாரமாக வைத்து இசைக்கலை வளர்ந்துள்ளமையை அறியலாம்.

நாயக்கர் மன்னர் காலத்தில் கீர்த்தனை எனும் இசைப்பாவடிவம் தமிழகத்தில் வந்து நுழைந்தது. கீர்த்தனை என்பது இறைவனுடைய கீர்த்திகளைப்பாட எழுந்த இசைப்பாவடிவமாகும். இவ்வாறாக இசைக்கலையானது கோயிலை மைய மாகக் கொண்டு வளர்ந்துள்ளமையை நோக்கக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கும் கோயில்களில் இசைக்லைமரபானது பேணப்படு கின்றமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதாவது பண்வழுவாது தேவாரங்கள் பாடப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாடுவதற்கென பண்ணிசை தெரிந்தோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சில ஆலயங்களில் இசையை வளர்ப்பதற்காகவும், தமிழ் வேதத்தின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும் இசைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள் நடத்தப்படுகின்றன. இன்றும் கதாப் பிரசங்கம் என்ற நிகழ்ச்சியும் கோயில்களில் இடம் பெற்று வருகின்றது. இதன்மூலமாக அடியார் வரலாறுகளும், இராமாயண பாரத இதிகாசச் சிறப்பு போன்றனவும் மக்களுக்கு எடுத்துக் கூறப்படு கின்றன.

கோயில்களோடு ஒட்டிய அம்சங்களிலே இலங்கைக்கே தனிச்சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம் புராணபடனமாகும். இங்கு நடைபெற்றுவரும் புராணபடன மரபு இந்திய மக்க ளாலும் பாராட்டப்படுகின்றது. இதன் மூலமாக சமய அறிவு மட்டுமன்றி, எழுத வாசிக்கத் தெரியாத மக்கள் கூட இலக்கண, இலக்கிய சமய அறிவைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவற்றின் மூலமாக இசைக் கலையானது காலங்காலமாக கோயிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

## “நல்லூரானே!”

“செந்தமிழ் தேனே திருமுருகா
எந்தமிழ் புகழ் மணக்க நல்லூர்
வந்தமைந்த வடிவழகா கந்தா
எந்தநேரமும் மக்கள் வெள்ளமென
சந்ததமும் மணியோசை எழுப்பும்
கந்தனே கதிர்வேலா வாவா.”

“கையில் வேல் கொண்டு
கருணை மழை பொழிபவனே
மெய்யில் கலந்து மக்கள்
மேன்மை அடைய செய்பவனே
உய்யும் வழி காட்டிய
உத்தம குகனே வாவா.”

“சண்முகப் பொய்கை வந்தவனே
சங்கரி மைந்தன் குருவே
சஷ்டியில் வந்து மனித
சங்காரம் செய்த சுப்பிரமணியா
தண்டாயுத பாணி கார்த்திகேயா
தங்க வேலவனே வாவா.”

“குன்று தோறும் வாழும்
குமரனே குகனே கார்த்திகேயா
வென்று வேலால் வினை களைபவனே
வேலனென்று பெயர் பெற்ற
கந்தனே கதிர்காம காவலனே
நல்லூரானே நலம்தர வாவா.”

*சி.என். துரைராஜா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால செல்நெறியில் அருகிவரும் மனித விழுமியங்கள்

திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எப்படியும் வாழலாம் என்றின்றி இப்படித்தான் வாழவேண்டும் எனக் குறிப்பிடுவதனையே விழுமியம் எனலாம். ஆகவே, மனித வாழ்வை மேம்படுத்தும் பண்புகள் அனைத்தும் விழுமியங்கள் ஆகும். எல்லாப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்புமிக்கது. ஆறறிவும் நிறையப் பெற்றவர்கள் மானிடர்கள். இந்த ஆறாம் அறிவானது சிந்தித்து துணிந்து செயலாற்றும் பகுத்தறிவு, நன்று - தீது, நீதி - அநீதி எனப் பகுத்தறியும் ஆற்றல் படைத்த இந்த மனிதன் மனிதனாக வாழ இந்து சமய விழுமியங்கள் துணை நிற்கின்றன.

சமயம் என்பதற்குப் பல்வேறு விதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. மனிதன் தன் கீழான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு நற்சிந்தனைகளில் ஆழ்ந்து வாழ எடுத்துக் கொள்ளும் பிரயத்தனமே சமயம் எனலாம். ஆகவே மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் சமயம் அவசியம். அதுதான் சுவாமி விவேகானந்தர் "சமயத்தை சமுதாயத்திலிருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமே" என்கிறார். டாக்டர் ராதாகிருஷ்ணன் "சமயம் என்பது ஒரு வாழ்க்கை வழி" என்கிறார். இவ் வகையில் சிறப்புற்று விளங்கும் இந்து சமயத்தின் பால் நிறைவான பல விழுமியக் கருத்துக்கள் காலம் காலமாகப் பகிரப்பட்டு வந்துள்ளன. உண்மையில் மனிதப் பண்புகள், மனித விழுமியங்கள், மனித மேம்பாடுகள் என்பவற்றை அனுசரிக்கும் போது அங்கு ஆத்மீகம் மிளிர்கின்றது. பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல், சேவை செய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர் நலம் பேணுதல், இன்னாசெய்யாமை, நல்லொழுக்கம், சட்டங்களை மதித்தல், சூழலை மாசடையாது பேணுதல், நடுவுநிலைமை போன்ற இவையாவும் மனித விழுமியங்கள். மனித வாழ்வினை மேம்படுத்தும் இப்பண்புகள் அனைத்தும் ஒரு இந்துவானவன் கடைப்பிடிக்க வேண்டியவை.

இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள் சுருதி, யுக்தி, அனுபவம் எனும் முத்திறத்தாலும் சமய வாழ்வில் மனித விழுமியங்களை செம்மையாகக் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் இன்று நவீன உலகத்திற்கும், மதமாற்றத்திற்கும் இடையில் வாழ்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தினரை நல்ல விழுமியப் பண்புள்ளவர்களாக உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள் கடைப்பிடித்து வந்த மனித விழுமியங்களை மழுங்கவிடாது இளம் சமுதாயத்தினரிடம் ஒப்படைப்பது கல்விமான்களின் கடமையாகும்.

ஒரு இந்துவிற்கு உயர்வாழ்க்கைத்தரம் எப்போது ஏற்படுகின்றது என நோக்கும் போது நல்ல இந்து சமய விழுமியங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதால் மனித வாழ்க்கைத் தரம் சீரும், செம்மையும் பெறுகின்றது. ஆனால் இன்று பொருளாதார ரீதியிலோ, சமூக ரீதியிலோ மனிதர்களின் வாழ்க்கைத்தரம் கணிக்கப்படுகின்ற நிலைமையைத் தான் பொதுவாகக் காண்கின்றோம். இவ்வாறான போலி வேடங்களைக் களைவதற்கு யாவரும் முன்வரவேண்டும். "உள்ளுவதெல்லாம் உயர்வல்ல" என்று வள்ளுவர் கூறும் போது அவர் கருத்திற் கொண்டது, உயர்வான எண்ணங்களையே. உயர்வான எண்ணங்கள் எப்போதும் மனித விழுமியங்கள் சார்ந்தனவாகவும் அவற்றைத் தழுவியதாகவும் அமையும். உதாரணமாக பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மாகாந்தி போன்றவர்களை எடுத்து நோக்கினால், அவர்கள் மாந்தர்களுள் மாணிக்கங்களாக, மகாத்மாக்களாக, மக்களுள் மிக உயர்ந்தவர்களாக போற்றப்படுகின்றார்கள். இவர்கள் இவ்வாறு போற்றப்பட்டதற்குக் காரணத்தை ஆராய்ந்தால் அவர்கள் தமக்கென வாழாது பிறர்க்குரியனராக வாழ்ந்தனர். எல்லோரும் வாழவேண்டும், இன்புற்றிருக்கவேண்டும், நல்லோர்கள் ஆகவேண்டும், நலனோம்பி வாழவேண்டும் என்றே சதாகாலமும் சிந்தித்தார்கள், பேசினார்கள், அவற்றை அடைவதற்காகச் செயற்பட்டார்கள். அதனால் அவர்களுடைய வாழ்வு கலங்கரை விளக்கமாக அமைந்தது.

மனித வாழ்க்கைத்தர உயர்வு என்பதில் நாம் மூன்று நிலைகளை எடுத்துநோக்கலாம். முதலாவது நிலை எத்துணைச் சிறியதொரு தீமையையும் எவர்க்கும் செய்யாதிருத்தல் நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் தீமையைச் செய்யாதிருத்தல். இரண்டாவது நிலை, பிறருக்கு நன்மை நினைப்பது இன்சொல் பேசுவது. நன்மை செய்வது. மூன்றாவது நிலை பிறர் நல்வாழ்வு வாழ்ந்து மகிழ்ச்சி எய்தும் போது நாமும் அம்மகிழ்ச்சியில் பங்கு கொண்டு மகிழ்வெய்தும் உயர்நிலை. இவையே அம்மூன்று நிலைகளுமாகும். இன்றைய சமுதாயத்தில் பொதுவாகத் தன் நன்மைக்காக பிறருக்குத் தீமை செய்யாது விடுகிறார்கள். பிறருக்கு பலவழிகளில் நன்மையும் செய்கிறார்கள். ஆனால் பிறரின் நல்வாழ்வைக் கண்டு பொறாமை கொள்ளாது சகித்துக் கொள்வதும் மகிழ்ச்சி கொள்வதும் மிக அரிதான காரியமாக உள்ளது. ஆனால் யான் பெற்ற இன்பம் - அதிலும் கூடுதலான இன்பம் எல்லோருக்கும் கிட்டவேண்டும் என எண்ணுவது அவ்வாறான இன்பங்களை மற்றையோர் பெற்று அனுபவிக்கும் போது அக்காட்சிகளைக் கண்டு பூரிப்பு அடைவது ஆகிய உயர்ந்த நிலையை அடைவோமானால் அதைவிட வாழ்க்கைத்தர உயர்வு வேறெதுவும் இருக்க முடியாது.

சத்தியம் எனும் விழுமியம் எல்லா விழுமியங்களிற்கும் அடிப்படையானது, ஆதாரமானது. அதனால் இது மிக உயர்ந்த விழுமியமாகப் போற்றப்படுகின்றது. சத்தியம் நித்தியமானது. மாறுந்தன்மை அற்றது, காலதேச வர்த்தமானங்களையெல்லாம் கடந்து நிற்பது. எவனொருவன் சத்தியத்தை உபாசித்து வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றானோ அவன் மனிதருள் மாணிக்கமாகி விடுகின்றான். பண்டையகாலத்து அரிச்சந்திரன் முதல் மகாத்மாகாந்தி வரை சத்தியத்தை ஓம்பியவர்கள் எனப் படித்திருக்கின்றோம். அவர்களின் வாழ்க்கையும் வரலாறும் எமக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளன. ஆயினும், அத்தகைய ஒளி விலக்குகனையும், வழிகாட்டல்களையும் பின்பற்றி எமது வாழ்க்கைப் படகுகளை இருட்டில் நின்று தத்தளிக்காது கரையேற்ற முயல்பவர்கள் எத்தனை பேர்? கேள்விக்குறிதான். இவ்வுலகில் சத்தியம் என்பதை அறியவும் உணரவும் சத்தியத்தை வாழ்க்கையில் பின்பற்றவும் இவ்வுலகில் மனிதனுக்கு மட்டும் தான் முடியும். உயிரற்ற படைப்புக்களுக்கு இவ் ஆற்றல் இல்லை. இதனை நாம் நன்கு உணரவேண்டும். சரி எது? பிழை எது? உண்மை எது? பொய் எது? நல்லது எது? கெட்டது எது? என்று சிந்தனைகள், பேச்சுக்கள், செயல்கள் ஆகியவற்றை இனம் கண்டு தரம் பிரித்து ஒவ்வொரு கணமும் மனிதனுக்குக் கூறிக் கொண்டு மனச்சாட்சி இருக்கின்றது.

இத்தனை வாய்ப்புப் பெற்றிருந்தும் மனிதர்களுள் எத்தனை பேர் தத்தம் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து மனச்சாட்சி கூறுவதைக் கேட்டு ஒழுகுகின்றார்கள். "மனச்சாட்சி ஒருபுறம், ஐந்து புலன்கள் மறுபுறம். இவற்றிற்கு இடையில் மனிதன். இந்நிலை மாறவேண்டும். சத்தியத்தின் மூலம் மனிதவாழ்வினை செம்மையும், சீரும், செழுமையும், இனிமையும் நிறைந்ததாக ஆக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனது கடமையாகும்.

மனிதரிடையே எண்ணம், சொல், செயல் ஆகியவற்றிற்கிடையே ஒருமைப்பாடு இருத்தல் அவசியம். ஒன்றை நினைத்து, இன்னொன்றைப் பேசி, பிறிதொன்றைச் செய்வது என்ற நிலைப்பாடு மனிதர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இன்று உலகில் காணப்படும் துன்பங்கள் துயரங்களுக்கெல்லாம் இத்தகைய பாசாங்குகள், கபடத் தன்மைகள், ஏமாற்றுக்கள் என்பன வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதரப்பினரிடம் இடம்பெற்றிருத்தலே காரண மாகும். மனித தர்மத்திற்கும், மனித விழுமியங் களுக்கும் உடன்பாடற்ற இவைகள் அறவே தவிர்க்கப்பட வேண்டியவை. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றிற்கிடையே ஒருமைப்பாடு இருக்கும் பட்சத்தில் திரிகரண சுத்தி எனும் மூவகைத் தூய்மையும் ஏற்படுகின்றது. மூவகைத் தூய்மை யாளர்களே மனித விழுமியங்களைப் பேணுபவர்.

மனித வாழ்வை மேம்படுத்தும் விழுமியங் களுள் அஹிம்சை என்பதும் முக்கியமானதாகும். அஹிம்மை என்றால் மற்றோர்க்குத் தீங்கு செய்யாது இருப்பது மட்டுமன்றி அவர்களுக்கு நன்மையும் செய்தல். பிறருக்கு இன்னா செய்யாமை மாத்திரம் போதாது, பிறர்மனம் புண்படக் கூடியவாறு இன்னாத பேச்சுக்களைப் பிரயோகித்தலையும் தடுத்தல் வேண்டும் குறிப்பாக தகாதவார்த்தைகளைப் பயன் படுத்தல், பிறரை ஆத்திரமூட்டுதல், போகவிட்டுப் புறங்கூறல், பொய்யுரைத்தல், சூழுரைத்தல், தூற்றுதல், இகழ்தல், நிந்தித்தல் போன்றவை பேச்சினால் இழைக்கின்ற இன் சொல்லாகும். தீயினால் ஏற்பட்ட புண்கள் காலப்போக்கில் ஆறிவிடும். ஆனால் வாயினால் சுட்டபுண் என்றுமே ஆறாது. பெரும்பாலான பிரச்சினைகள் சண்டை, சச்சரவுகள், நாவைக் காப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ள முடியும். இனிய அன்பும், ஆதரவும் நிறைந்த வார்த்தைகளையே பணிவுடனும், பண்புடனும் பேசுவது என்ற உறுதியை நாம் கொண்டிருந்தால் வேற அறங்களே தேவையில்லை.

மனஅடக்கம் எனும் விழுமியமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதன் தனது எண்ணங் களைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம், அவற்றைச் சரிவரக் கண்காணித்து நிருவகிப்பதன் மூலம், நன்முறை யில் நெறிப்படுத்துவதன் மூலம் செம்மையான எண்ணங்களை உருவாக்கலாம். கெட்ட எண்ணங் களைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும். மனிதன் பலம் உள்ளவனாக இருப்பதும், பலவீனம் ஆக இருப்பதும் பொதுவாகக் காணப்படும் நிலைதான். இந் நிலைகளுக்கெல்லாம் மனிதன் தான் காரணம். அதிலும் மனிதனின் மனம் தான் முக்கிய காரணம் எனலாம் கண், வாய், மூக்கு, செவி, உடல் என்பனவும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவும் மனிதனின் கருவிகரணங்கள் மாத்திரமே. அவை மனிதனுக்கு உதவும் சாதனங்களே தவிர. மனிதனை ஆளுகின்ற எசமான்களாவது ஆகாது. அவற்றை அந்தந்த இடங்களில் வைத்து உரிய முறையில் கட்டுப்படுத்திப் பரிபாலனம் செய்ய வேண்டியது மனிதனின் பொறுப்பு. மனக்கட்டுப்பாடு தரும் பெரும் விளைச்சல்தான் மனஅமைதி, மனச் சாந்தி, மனத்தூய்மை ஆகும். மன அமைதிபெற்ற மனிதன் தானும் நல்லபடி வாழ்கிறான், எடுத்த கருமங்களில் வெற்றி அடைகின்றான். அவ்வாறே ஏனையோரையும் வாழவிடுகின்றான். அதனால் வாழ்கிறான், எல்லோருடைய அன்பையும், ஆதர வையும், நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொள்கின்றான். இதனால் சமூகத்தில் உயர்ந்து நிற்கின்றான். இந்த மனக்கட்டுப்பாடு எனும் விழுமியம் இளம் சமுதாயத்தினருக்கு மிகவும் அவசியம். சக்தியும், ஆற்றலும் நிறைந்தது மனிதனின் இளமைப் பருவம். வேகமும், வேட்கை யும் அலைமோதும் காலமும் அதுவே. மிக அவதானமாக இருக்க வேண்டிய காலப்பருவம். இளமைப் பருவம் கட்டுப்பாட்டுடன் கூடியிருந்து விட்டால் மனிதனின் முன்னேற்றம், உயர்வு, மகிழ்ச்சி என்பன உறுதியாகிவிடும். வாழ்வு முழுவதும் இன்பமயமாக இருக்கும்.

எனவே வாழ்வு சுவையுள்ளதாக - இன்பம் நிறைந்ததாக வாழ்நாட்பூராவும் அமைவற்கு, இளமையில் கட்டுப்பாடு தேவை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். அதிலும், சுயகட்டுப்பாடு இளமையில் வளர்ந்து வருமானால் அதற்கு ஈடு இணையாக வேறெதுவும் இருக்க மாட்டாது. பயத்தினால், புற அழுத்தங்களினால் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடு போலிக்கட்டுப்பாடாக அமைந்து விடுகின்றது. ஆசிரியர், பெற்றோரின் தண்டனைகளுக்கு அஞ்சிய கட்டுப்பாடுகள் போலிக் கட்டுப்பாடாக அமைந்துவிடும் அவர்களுக்கு முன் ஒழுங்காகவும், அவர்கள் இல்லாத விடத்து வேறுவிதமாகவும் நடந்துவிடுகின்றது. எனவேதான் சுயகட்டுப்பாடு வலியுறுத்தப்படுகின்றது. கொட்டி விட்ட பால் எவ்வாறு திரும்பவும் பெற்றுக் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதோ அப்படியே இழந்துவிட்ட ஒழுக்கத்தையும் மீளப் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதை ஒவ்வொரு இளைஞரும், யுவதிகளும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

சிந்தனை, பேச்சு, செயல் என்பவற்றில் நடுவு நிலை எனும் மனித விழுமியத்தைப் பேணுதலும் இன்றியமையாதது. நல்ல கல்வியைக் கற்பதனால் எய்தப்படுகின்ற பயன் நடுவுநிலைமை எனும் நற்பண்பினைப் பெறுதலும் அவ்வாறு ஒழுகுதலும் ஆகும். ஆனால் கல்வி கற்றும் நடுவு நிலைமையில் நிற்காதவர்கள் கல்லாதவர்களே. சமூகத்தில் வாழுகின்ற மக்களில் பெரும்பாலானோர் இன்று நடுவுநிலையில் இருந்து தவறிவிட்டார்கள். சமூக நீதியைக் கைவிட்டு விட்டார்கள். தன்கொரு நீதி, பிறர்க்கொரு நியாயம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. எவரையும் நம்ப முடிவதில்லை. பக்கம் சாரும் இயல்பு அதிகரித்து விட்டது. பொது வாழ்விலும் சரி, குடும்ப வாழ்விலும் சரி, ஊழல்களும் பாரபட்சங்களும் மலிந்துவிட்டன. உலகம் சமநிலையை இழந்து தத்தளிக்கின்றது. இதுவே எங்கும் பரவலாகக் காணப்படும் அமைதியின்மைக்கும் அத்துமீறிய அடாவடித் தனங்களுக்கும், சமூகச் சீர்கேடுகளுக்கும், துன்பங்கள் துயரங்களுக்கும் காரணம் ஆகும். "நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்தது" என்று உலகின் குழப்பத்தின் காரணத்தை எப்போதோ திருமூலர் கூறிவிட்டார். உலகம் நிமிர்ந்து சமநிலையில் நிற்பதற்குத் தேவையானது நடுவுநிற்றலாகும். நடுவு நிலைமையைப் பேண வேண்டுமாயின் இன, மத, சாதி, பால், நட்பு, குடும்பம் என்ற சக்திகளால் ஈர்க்கப்படாமலும் அவற்றின் செல்வாக்குக்கு உட்படாமலும் இருத்தல் அவசியம். அத்துடன் எந்தவிதத்திலும் பிறருக்குக் கடமைப்படுதலைத் தவிர்க்க வேண்டும். இவ்வகையில் நடுவு நிலைமைப் பண்பினைப் பேணி வாழ்தல் மூலம் உலகினை வாழத்தகுந்த இடமாக மாற்றி அமைக்க முடியும்.

**"இன்று நாட்டில் அமைதியில்லை என்று கூறுகின்றோம்**
**உண்மையில் மனிதனின் அகத்தில் தான் அமைதியில்லை**
**மனிதனிடம் மன அமைதி இல்லாதபோது உலகம் முழுவதும்**
**அமைதியில்லை என்று கூறுகின்றான்"**

- பகவான் சத்திய சாயி பாபா.

# ராகு

அரவெனும் இராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி!

**பலன் :** விரோதிகள் அழிந்து எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்!

# கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி!

**பலன் :** எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனம் ஆடினார்

பொ. சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை.



**தலம் - சிதம்பரம்** **பண் - கொல்லி**

திருச்சிற்றம்பலம்

**குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.**

திருச்சிற்றம்பலம்

- அப்பர்

| | |
|---|---|
| **குனித்த** | **- வளைந்த** |
| **பனித்த சடை** | **- கங்கைநீராற் குளிர்ந்த சடை** |
| **இனித்த** | **- இனிதாந் தன்மை.** |

## சிற்பக்கலை

கவிஞனின் கற்பனையில் தோன்றியது 'அருவம்' என்னுஞ் சொல். அந்த அருவத்திற்கு அவன் கவி புனைவது 'சொல் வடிவம்'. சிற்பியின் உள்ளத்தில் உருவாகியதும் 'அருவம்' அந்தச் சிற்பி கல் உளியால் செதுக்கியது 'கல்வடிவம்' இந்த நுண்ணிய சிற்பக் கலையானது மாமன்னர்களின் பேராதரவில் பெரிதும் வளர்ந்தது. ஆகவே எம் முன்னோர் கல்லிலே காவியம் கண்டனர். அழகின் பரம்பலை, அதன் வடிவத்தை, அந்தக் கருத்தின் ஆழத்தை, அதன் பொருளை, கவர்ச்சியின் தோற்றத்தை, மகிழ்ச்சியின் உறைவிடத்தை, பண்பாட்டின் சிகரத்தை, மலர்ந்த நாகரிகத்தின் இருப்பிடத்தை, கல்லிலும், செம்பிலும், ஓவியமாகவும், சிற்பக்கலையின் உச்ச வடிவில் காண்கிறோம், களிப்புறுகிறோம், பெருமைப்படுகிறோம். நீக்கமற நிறைந்து நிற்கும் நிமலனை சிலையாகக் காண்கிறோம். அவனது அழகுத் திருமேனியைப் பாரிலுள்ளோர் பலரும், பரந்து பட்டு நின்று வழிபட ஓவியமாக, சிலையாக வடித்துத் தந்த கலை ஞானியைக் கைகூப்பித் தொழுகிறோம். கலைகளில் சிற்பக் கலையானது, காண்பாரைத் தன்பால் ஈர்க்கும் காந்தக் கம்பிபோல் ஆனது. கல்லிலே கதை சொல்லும் தமிழர் பண்பாட்டை, பாரம்பரியத்தை இந்தியப் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள ஆலயங்களில் பரக்கக் காணலாம்.

## ஓவியக்கலை

ஓவியக்கலையானது, சிற்பக்கலையோடு இணைந்து ஆலயங்களை அலங்கரிக்கின்றது. திருவலஞ்சுழியிலுள்ள சிவஸ்தல மண்டபத்தில், நாயக்கர் கால ஓவியங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. முதலில் பதினாறு திருக்கைகளில் பல்வேறு படைக்கலங்களைப் பெற்றுள்ள நடராஜப்பெருமானின் ஓவியம் உளது. இப்பெருமானின் இடதுகாலின் கீழ் காணப்படும் ஐந்தலை நாகத்தின் வால், சிவனது திருமேனியைச் சுற்றித் திருவாசியைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. நடராஜரது இடப்புறத்தில் உமையும், நான்முகனும் காணப்படுகின்றனர். இறைவனது நடனத்திற் கேற்பத் திருமால் மிருதங்கங் கொட்டுகிறார். மற்றொரு தேவ கணத்தார் ஐந்து முகங்களையுடைய தோற்கருவி ஒன்றினை இசைக்கிறார். இந்த ஓவியங்களின் மேற்பகுதியில் முனிவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தருவர் ஆகியோர் வியப்பு மேலிட நடராஜப் பெருமானை நோக்கியவாறு உளர். திருக்குற்றா லத்தின் சித்திர சபையின் உள்ளே ஆடல் வல்லானின் திருவுருவம் சிவகாமியுடன் தேவர்கள் தொழுது நிற்க அழகாக சித்திரமாக, வண்ண ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

**நிருத்தம் நிருத்தியம்**

இறைவன் ஆனந்த நடனம் ஆடினார். சிவ பெருமான் தாம் இயற்றிய மகத்தான நர்த்தனத்தை நினைவுகூர்ந்து தமது கணங்களை அழைத்து, அந்த நர்த்தனத்தை பரதமுனிக்குக் கற்பிக்கச் செய்தார். முன்னதாக அவர் பார்வதியைக்கொண்டு, அம்முனிவர்க்கு லாசியத்தைக் கற்பிக்கச் செய்திருந்தார். தண்டு முனிவரிடம் இருந்து இருஷிகள் தாண்டவத் தைக் கற்று மானிடர்கட்குச் சொல்லிக் கொடுத் தார்கள். பார்வதிதேவியார் பாணனுடைய மகள் குமாரி உஷைக்கு லாசியத்தைக் கற்பித்தாள். உஷை அதை துவாரகையிலுள்ள இடைச்சியர் கட்குக் கற்பிக்க, அவர்கள் மூலம் பரதக்கலை பாரெங்கும் பரவியது.

பரத நாட்டியக்கலைக்கு இடைக்காலச் சோழர், முதன்மையான ஆதரவு நல்கியதால் பரத நாட்டியத்திலுள்ள கரணங்களை விளக்கும் சிற்பங்கள் உருவாக்கம்பெற்றன. நடராஜர் சிற்பங் களும் படிமங்களும் இக்காலத்திலிருந்து தான் அதிக அளவில் வார்க்கப் பெற்றது. இது நாட்டியக் கலைக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருத வேண்டும். திருக்கோவில்களில் ஆடல் மகளிர் அதிகமாக அரச ஆதரவுடன் நியமனம் பெற்றதும் இக்காலத்தில்தான்.

**நடராஜ வடிவம்**

நடராஜப்பெருமானின் திருமுடியில் அபிஷேகம் செய்தால் அந்நீர் மூக்கு நுனி வழியாக தூக்கிய திருவடிவிரல் வழி, வழிந்து கீழே கொட்டுமானால், அத்திருவுருவமே சிறந்த இலக்கண வடிவமைப்பாகும். தில்லையில் உள்ள ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவுருவமே இந்த இலக்கண வடிவமைப்புக்குச் சிறந்த உதாரணமாகும். சிவ பெருமான் ஆதியும், அந்தமும் அற்றவன். நித்திய மான சிவபரம்பொருளே, ஸ்ரீ நடராஜமூர்த்தம். இப்பெருமானே ஸ்ரீ பஞ்சாட்சரம். சிவபெருமான் திருவைந்தெழுத்தைத் திருமேனியாகக் கொண்ட வன். நடராஜப்பெருமானின் தோற்றம் எப்பொழுதும் அசைவையே குறிக்கும். இந்த நடனக்கோலம் நிதம், நிதம் ஆனந்தத்தையே தரும். நடராஜ மூர்த்தமானது சிறப்பாகவும், அளவிட முடியாத கலை அம்சங்களை உள்ளடக்கியதாகவும், நிறைந்த தத்துவங்களைத் தன்னகத்தே கொண் டுள்ளது. சகல சிவமூர்த்தங்கட்கும் சிவலிங்க வடிவே மூலவடிவாகும். நாம் செய்யும் நிருத்தங் கட்கு நிறையப் பொருளுண்டு. ஆனால் அளவிலா விளையாட்டு உடையவனும், உலகப்பொருள்கள் அனைத்தும் தன்னுருவமான எம்பெருமான் நிருத்தம் செய்யப்புகுந்தால் ஆயிரம் ஆயிரம் கருத்துக்கள் தாமாகச்சென்று, அந்த நடனத்தை சரண்புகுமன்றோ? அப்பெருமானின் நிருத்தத்தில் அரிய பொருள்களை அறிந்து ஆன்றோர் விளக்கந் தந்துள்ளனர். நாம் நடராஜப் பெருமானை ஆடல் வல்லான் எனப்போற்றுகிறோம். அவனின் 108 கரணங்கள் புராணங்களிலும், நாட்டிய நூல்களிலும் திருக்கோவில் வரலாற்றுச் சிற்பங்களிலும் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. தாண்டவஞ் செய்யும் சிவனுக்கு பல கைகள் உள்ளனவாக அருளாளர்கள் பாடுவர். சிற்பிகளும் அவற்றை மனதில் இருத்தி சிலை வடிப்பர். இவற்றின் மூலம் ஆகாயமே இறைவனுக்கு உடலாகவும் திசைகளே கைகளாகவும் கொள்ளுதல்தாகும்.

கலைவிளக்கந் தரும் வகையில் இறைவன் ஆடிய ஏழு வகைத் தாண்டவங்களும் இசைநாதச் சிறப்புடன் போற்றப்படுகிறது. தாண்டவங்களுள் குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் ஆகியன ஏழிசைகளினின்றும் தோன்றி யவை எனக் கருதி இவற்றிற்கு கலை நோக்கிலே மெய்ப்பொருளியல் விளக்கந் தருவர். நடராஜப் பெருமானின் 108 கரணங்களை அதன் சிறப்பை, அவற்றின் தத்துவத்தை, அந்தத் திருவுருவத் தைத் திருமூலரின் திருமந்திரத்திலும், மந்திர சாஸ்திரங்களிலும் யந்திரங்கள், பூசை முறைகள், நாமாவளிகள் மூலம் தொகுக்கப் பெற்றுள்ளதை ஒருவாறு அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக இயக்கம்**

நடராசப் பெருமானின் ஆடல், அசைவினால் உயிர்கள் உலகில் தோன்றி வாழ்ந்து மறைவது தொடர் நிகழ்வாக நிகழ்கிறது. இறைவன் தன் அடியார்கள் நிமித்தம் ஆடும் ஆடல்களே தாண்டவங்கள் அல்லது நிருத்தம் எனப்படுகிறது. இவ்வுலகமும் அனைத்து அண்டகோளங்களும் இவற்றினூடே பொலியும் அணுக்களும் இயக்க முற ஒரு பேராற்றல் முனைந்து செயற்படுவதை மனித குலம் உணரமுடிகிறது. ஒரு யந்திரம் இயங்கும் போது அது பலனைத் தருகிறது. அது போலவே இறைவனும், அவனால் இயங்கும் உயிரினங்களும் பயன் தருகின்றன. இந்தப் பேராற்றல் அல்லது உந்துசக்தி அநாதி காலமாக இருந்து வருகிறது. பரம்பொருளின் ஆடலே இந்தப் பேராற்றல் இயக்கம். இந்த உலக இயக்கம் என்று தொடங்கியது என்பதை எவரும் அறியார். இந்த உலக இயக்கம், தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இந்த உலக இயக்கம் சிறிது தவறினாலும் அண்டகோளங்கள் அனைத்தும் துகள், துகளாக சிதறிப்போய் விடும். எமது கற்பனைக்கும், அறிவிற்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது நடராஜப்பெருமானின் நடனம் ஆகும். இந்த நடராஜ தத்துவத்தை உலகோர் வியக்க, மகிழ்வுற சிற்பக்கலை வல்லார், எமது சிந்தனைக்கும் அரிய திருவுருவமாகத் தந்துள்ளனர்.

**ஐந்தொழில்**

சிவபெருமான் உயிர்கள் மாட்டுச் செய்வது பஞ்சகிருத்தியம் எனப்படும் ஐந்து செயல்களாகும். இந்த ஐந்து செயலகட்கும் ஐந்து தாண்டவங்களைப் புரிகிறார். இவற்றைத் தவிர, இந்த ஐந்து செயல்கட்கான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவற்றை ஒன்று சேரச் செய்வது ஆனந்த தாண்டவம் எனப்படும். ஐந்து தாண்டவங்களுடன் ஆனந்த தாண்டவம் சேர, ஆறு தாண்டவங்கள் ஆகும். ஏழாவது தாண்டவமானது உயிர்கள் செய்கின்ற நல்வினை, தீவினை ஒன்றுசேரச் செய்யும் காத்தல் தாண்டவமாகும்.

**ஏழு தாண்டவங்கள்**

1. ஆனந்த தாண்டவம்
2. சந்தியா தாண்டவம்
3. உமா தாண்டவம்
4. கௌரி தாண்டவம்
5. காளிகா தாண்டவம்
6. திரிபுர தாண்டவம்
7. சங்கார தாண்டவம்

**திருவுருவத் தத்துவம்**

நடராஜப் பெருமான் ஆனந்த மாநடனம் புரிகையில் அவரது ஊன்றிய வலதுகால் முயலகன் என்னும் அசுரன் மீது பதிந்து இருக்கும். முயலகன் ஆன்மாவின் அறியாமைக்கு அடையாளம். எம்மில் குடிகொண்டிருக்கும் ஆணவம் அகன்றதும், வினைகள் தீர்ந்ததும், ஆன்மாவானது விடுதலை பெறும், பேரின்பம் அடையும். இறைவனின் ஊன்றிய திருவடி இந்த மறைப்பைக் குறிக்கும். சிவபெருமானது தூக்கிய திருவடி குஞ்சிதபாதம், அருளலுக்கு அடையாளமாக வீசி எடுத்து நிற்கும். இந்த நிழலில் ஆன்மா என்றென்றும் தங்கி இன்புறும். இதுவே முத்தி ஆகும். கங்கைகொண்ட சோழபுரக் கோபுரத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் நடராஜத் திருவுருவத்திலே தூக்கிய திருவடியின் கீழ், காரைக்காலம்மையாரின் திருவுருவம் அமைந்து உள்ளது.

ஆடல் வல்லானின் நான்கு கைகளுள் வலப்புறப் பின்கை பிரணவ ஒலியை வெளிப் படுத்தும், ஓர் உடுக்கை (படைப்பின் அறிகுறி)யாக ஏந்தி நிற்கும். வலப்புற முன்கை (உள்ளங்கை) அபய முத்திரையைக் காட்டி நிற்கும். உயிர்கள் தன்பால் அஞ்சாமல், அடைக்கலம் பெறுதற்காக! இடப்புறப் பின்கை அனல் ஏந்தி நிற்பது அழித்தலைக் குறிக்கும். இடப்புற முன்கை மார்பை ஒட்டி குறுக்காக் வீசிக் கைவிரல் ஒன்றால் திருவடியைச் சுட்டி நிற்கும். உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, நடராஜத் திருவுருவின் பின், ஒரு வட்ட வடிவமான திருவாசியும் அதன் விளிம்பில் 51 தீச்சுடர்களும் அமைந்திருக்கும். திருவாசியின் உட்பொருள் ஓங்காரம். இந்தப் பிரபஞ்சமே இறைவனின் ஆடரங்கு. 51 சுடர்களும் 51 எழுத்துக்கள் என்றும் இந்த எழுத்துக்கள் தாம் பேச்சுக்குக் காரணம் என்பர். இந்தத் தாண்டவம் படைப்பிற்கு முன்னும் இருந்தது. பிரளயத்திற்கு பின்னும் இருப்பது நுணுகிய தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமூலர்**

கூத்தப்பெருமானின் அக, புற மார்க்கங் களைக் கண்டு அகமகிழ்ந்து, அனுபவித்தவர் திருமூலர். திருமூலர் தமது திருமந்திரம் வாயிலாக கூத்தப்பெருமானின் திருக்கூத்தினை

1. சிவானந்தக் கூத்து
2. சுந்தரக் கூத்து
3. பொற்பதிக் கூத்து
4. பொற்றிலைக் கூத்து
5. அற்புதக் கூத்து

என ஐவகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

**வேதங்க ளாட மிகுவா கமமாடக்**
**கீதங்க ளாட கிளரண்ட மேழாடப்**
**தங்க ளாட புவன முழுதாட**
**நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே.**

- திருமூலர்

**ஆனந்த தாண்டவம்**

ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியன பஞ்ச கிருத்திய தாண்டவம் என்பதை ஏற்கனவே கண்டோம். ஆனந்த தாண்டவம் நடராஜப் பெருமானால் அந்திவேளையில் ஆடியது. தில்லையில் கனக சபையின் கண்ணே ஆடிய இந்நடனம் மிகச் சிறந்த தாண்டவம் ஆகும். கலைகளைக் கற்றறிந்தவரின் நோக்கில் இப்பெரு நடனம் மிகவும் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாகும். நாட்டிய நூலில் கூறப்படும் புயங்கத்திராசிதம் என்னுங் கரணமே ஆனந்த மாநடனமாகும். இறைவன் தனது உலகப் படைப்பைக் கண்டு பெருமகிழ் வுடன் ஆனந்த நிருத்தம் செய்கிறான். சிவபெரு மான் தனது திருக்கையில் ஏந்திய உடுக்கை 'டுமடுமுத' என உலகப் படைப்புக்கான நாதத்தைத் தோற்றுவிக்கிறது. இடது கையில் படைப்புக்குத் தடங்கல் செய்யும் தீயசக்திகளை அழிக்கும் அக்கினியினை ஏந்தி உள்ளான். உலகம் தோன்றுவதையும் உயிரினங்கள் உயிர் பெறுதற்கு அறிகுறியாக அசைவுகள், பார்வை தெரியவரும் பரம்பொருளின் முதன்முதலான ஒளிவடிவான பிரணவம் 'ஓம்' என்னும் நாதம் தோன்றும். இந்த நாதத்தால் ஆனந்தத்தால் தோன்றும் சைதன்யம் வெளிப்படும். அதாவது நாமும், தலைவனும் ஒன்றெனக் காணுதல்.

பிரம்மாவின் ஓர் இரவில் பிரகிருதி செயலற்றுச் சடமாய்க் கிடக்கின்றது. அது சிவனுடைய சங்கற்பமின்றித் தனது ஆடலைத் தொடங்க முடியாது. இறைவன் ஆனந்தக் களிப்பினால் எழுந்து ஆடும்போது உயிரற்ற சடப்பொருள்களை எல்லாம் விழித்தெழச் செய்யும் ஒலித்திரைகளைச் செலுத்துகிறான். உடனே அதோ இயற்கையும் உயிர்ப்புப் பெற்று, அவனுடைய விபூதியை வெளிப் படுத்தும் வகையில் அவனைச் சுற்றி ஆடுகிறது. நாதாந்த நடனம். ஆடிக்கொண்டே இறைவன் இயற்கையின் பல்வேறு தோற்றங் களைத் தாங்குகிறான். கால அடைவிலே அவன் ஆடிக் கொண்டே அந்த இயற்கையின் நாம ரூபங்க ளைத் தீயினால் அழித்து அவற்றிற்கு ஓய்வு தருகிறான்.

உண்மையில் ஆடல்வல்லான் தில்லையில் ஆடிய திருக் கூத்து அறிவியல் ரீதியாக ஒப்பிடுகையில் உலக இயக்கம் பொருத்தமாகவே அமைகிறது. ஆடல்வல்லானுக்கு எனத் தனிச் சபை உருவாக்கம் பெற்றது மாமன்னன் முதலாம் இராசராசன் காலத்திலேயே! மாமன்னன் முதலாம் இராசராசன் காலம் முதல் நடராஜப்பெருமானின் செப்புப் படிமங்கள் உன்னத வளர்ச்சி பெற்று உலகப்புகழ் அடைந்தன. திருவாலங்காட்டில் கண்டெடுக்கப் பெற்ற செப்புத் திருவுருவம் உலகிலேயே காணுதற்கரிய கலைப்பொக்கிஷ மாகும். சோழர் காலக் கலைக் கோலத்தை நாம் எல்லாம் காணக் கொடுத்து வைத்தவர்கள் ஆவோம். அது நாம் செய்த தவம் ஆகும். கலாயோகி டாக்டர் ஆனந் தக்குமாரசாமி, வங்கக் கவிஞர் தாகூர் போன்ற கலை வல்லார் இந்த ஆடல் வல்லானின் எடுப்பான தோற்றங்கண்டு தமது மனதைப் பறிகொடுத்தனராம்.

**சந்தியா தாண்டவம்**

சந்தியா தாண்டவம் இறைவனின் காத்தல் தொழிலுக்குரிய பிரதோஷ தாண்டவமாகும். இந்தத் தாண்டவம் கைலாய மலையில் நிகழ்ந்தது. குளிர்ந்த ரம்மியமான மாலை வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் புடை சூழ்ந்திருக்க, பார்வதிதேவியாரை இரத்தின சிம்மாசனத்திலிருத்தி, அன்னை காண, அன்னையின் அகம் குளிர, சரஸ்வதி வீணை வாசிக்க, இந்திரன் புல்லாங்குழல் இசைக்க, பிரம்மன் தாளம் இட, மகாலக்குமி பாட, மகா விஷ்ணு மிருதங்கம் கொட்ட, சூலபாணி மகிழ்ச்சி ததும்ப நடனம் ஆடினார். திருப்பரங்குன்றம் குகைக்கோயிலிலும், திருமழபாடி, தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலும் இந்த தாண்டவ மூர்த்தியின் புடைப்புச் சிற்பம் உளது. கலாயோகி டாக்டர் ஆனந்தக்குமாரசாமியின் அழகான ஆங்கில மொழிபெயர்ப்பு :-

## Evening Dance in the Himalays

"Placing the Mother of the three worlds upon a Golden throne studded with precious gems. Shulapani dances on the heights of Kailasa, and all gods gather round him. Saraswathi plays on the veena, Indra on the flute, Bramha holds the time marking cymbals, Lakshmi begins a song, Vishnu plays a drum and all the gods stand round about all the beings dwelling in the three worlds assemble there to witness the celestial dance and hear the music of the divine choir at the hour of twilight".

***- Dr. Ananda Coomaraswamy***

**உமா தாண்டவம்**

அனைத்தையும் சிவபெருமான் தன்னுள் அடக்கிக்கொள்ளும் நேரம். அந்த நேரத்தில் இறைவனும் இறைவியும் சுடுகாட்டில் சேர்ந்து நடனம் ஆடினர். திருவெண்ணீறு அணிந்து, சடையில் சந்திர கலை அசைந்து ஆட, வீரபைரவன் என்னும் பெயரில் பரம்பொருளும் வீரபைரவி என்னும் பெயரில் பரமேஸ்வரியும் நிருத்தம் செய்கின்றனர். உயிரினங்கள் ஒவ்வொன்றும் அனைத்து உடல் களையும் விட்டு நீங்கி இறைவன், இறைவியுடன் இரண்டறக் கலக்கின்றன. தீச்சுவாலைகளாக இருக்கும் சிதையிலிருந்து தீப்பொறிகளாக, ஒளிக் கதிர்களாக அவர்களுள் புகுந்து விடுகின்றன. மலைகள் சரிய, சப்த சமுத்திரங்களும் பொங்கி யெழ, நிலவுலகு தடுமாறி அசைய ஈஸ்வரனும் ஈஸ்வரியினுடைய நிருத்தம் வீரம் செறிந்ததாக இருந்தது.

**கௌரி தாண்டவம்**

திருப்புத்தூர் சிற்சபையில் ஆடியது இந்தத் தாண்டவம். இதுவும் காத்தல் தாண்டவம் ஆகும். சாந்தமான தோற்றம், நான்கு கைகள், செந்நிறம், புன்னகை பூத்த திருமுகம், கபாலம், கொக்கிறகு, ஊமத்தம் பூ, எருக்கலம் பூ, பிறைவதி இவற்றை அணிந்த சடாமுடி, பரந்த சடை, பாம்பு வளை அணிந்து முயலகன் மேல் வலது காலை ஊன்றி, இடது காலை வளைத்து, வலது கையில் அபயம், உடுக்கை இவற்றைத் தாங்கி இடது கையில் தீ, அகல் வியாளம் (புலி) இவற்றை ஏந்தி, இடப்பக்கத்தில் கௌரி தேவி யுடன், வலப்பக்கத்தில் நந்தியுடனும், வரித்துப் பரந்து மகுடமாகச் சுற்றப்பட்டதுமான சடாமுடியை இடப்பாகம் சாய்த்து நின்று நிருத்தம் செய்வது கௌரி தாண்டவமாகும்.

**காளிகா தாண்டவம்**

படைத்தல் தொழிலுக்குரிய இந்தத் தாண்டவம், திருநெல்வேலி தாமிர சபையில் நிகழ்ந்தது. அஞ்ஞானத்தை நீக்கிப் புத்தொளி யைத் தரவல்லது. இத்தாண்டவத்தை காளிகா தாண்டவம் அல்லது முனி தாண்டவம் என்பர். வலது காலை மேலே உயரத் தூக்கிய நிலை. தாருகாவனத்தில் ஒரு ரிஷிக் கூட்டம், இவர்கள் இறைவனை மதிக்கவில்லை. சிவபெருமான் இவர்கள் மனதை மாற்ற விரும்பி விஷ்ணுவை ஓர் அழகிய அணங்காக வடிவம் தாங்கப் பணித்து, மனையாளாக அவளை அமர்த்தி ஆதி சேடனைத் துணைக்கொண்டு பிச்சாடனர் வடிவந் தாங்கி, காட்டிற்கு எழுந்தருளினார். இறைவன் வனத்தில் இருந்த இருடிகள் ஒருவித உணர்வால், யாகாக்கினியை எழுப்பி வந்தவர்களை அழிக்க முயன்றனர். ஓம குண்டத்திலிருந்து ஒரு பயங்கர மான வரிப்புலி தோன்ற சிவன் அதைக்கொன்று அதன் தோலை உரித்து, ஆடையாக அரையில் அணிந்தார். இதன் பின்பே அந்த அற்புதமான நடனத்தை ஆரம்பித்தார். அந்நிலையில் ஒரு நாகம் தோன்றவே, சிவபெருமான் அதை எடுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கழுத்தில் மாலையாக அணிந்தார். அடுத்து குள்ளன் உருவில் முயலகன் தோன்றினான். பரம்பொருள் முயலகனைத் தனது பாதத்தின் கீழ் அமர்த்திக் கொண்டார். இதன்பின் இருடிகள் ஆற்றாமையால் தமது அகந்தை, அறியாமை நீங்கி சிவபெருமானை - அவரது பேராற்றலை உணர்ந்து மதித்தனர். ஆதிசேடன் இந்த நிகழ்வைக் காணப் பெரிதும் விரும்பினார். அந்நிலையில் பரம்பொருள் இந்த நடனத்தை தில்லையில் காண்பாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவுக்கள் வேண்டு தலுக்கு இணங்கவும், பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களின் விருப்பத்திற்கிணங்கவும் இந்த நடனம் இசைக்கருவிகளுடன் இடம்பெற்றது.

**திரிபுர தாண்டவம்**

இத்தாண்டவம் மறைத்தலைக் குறிக்கும். திருக்குற்றாலம் சித்திர சபையில் நிகழ்ந்தது. திரிபுர அசுரர்களின் பெரும்துன்பம் தாங்காமல், திரிபுரம் எரிய வேண்டும் எனத் தேவர்கள் வேண்ட, எரிமுகப் பேரம்பினை எய்யுமாறு சிவனைக் கேட்டதும், உமையவள் ஒரு பக்கமாகக்கொண்டு, இறைவன் அத்திரிபுரத்தை சிரித்தே எரித்து, வெற்றிக் களிப்பாற் கைகொட்டி நின்று, ஆடிய கொடுகொட்டி என்ற ஆடலாகும். இந்தத் தாண்டவத்தை 'கொட்டிச் சேதம்' என்றும் சங்க நூல்கள் கூறும். இதை வென்றிக்கூத்து என்றுஞ் சொல்வர். வென்றிக் காலத்தைப் போர்காலம் எனலாம்.

**"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்**
**செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்**
**செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்**
**பாடகம் பதையாது, சூடகம் துளங்காது**
**மேகலை ஒலியாது, மென்முலை அசையாது**
**வார்குழை ஆடாது, மணிக்குழல் அவிழாது**
**உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய**
**இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்"**

- சிலப்பதிகாரம்
(சாக்கையர் கூத்து)

**பொருள்**

சிவன் இதை ஆடுகையில் திருநிலைப் பெற்று இருக்கின்ற சிவந்த பாதங்களிலே சிலம்புகள் ஒலிமுழங்கவும் சிவந்த கையிடத்தே விளங்கும் பறை முழங்கவும் கண் ஆயிரக் கணக் கான திருக்குறிப்புகளை உணர்த்துவனவுமாக உளது. செஞ்சடையானது சென்று எட்டுத் திக்கு களிலும் அலையும் நிலையில் உமையானவள் தன் கணவனுடன் தானும் இணைந்து ஆடாமல், அசைவின்றி நின்றாள். பாடகம் என்ற காலணி பதையாமலும், சூடகம் என்ற கை அணி அசையா மலும் இடையில் உள்ள மேகலை ஒலியாமலும், மென்மையான முலைகள் அசையாமலும், நீண்ட குழையாகிய காதணிகள் ஆடாமல், மணி போன்ற கருங்குழல் அவிழாமல் இருந்ததாம். இந்த கொடுகொட்டி ஆடலின்போது சிவனுடன் ஒத்து இயங்க வேண்டிய இறைவி, எதற்காக அச்சமும் வியப்பும் கொண்டு ஒதுங்கிய வண்ணம் அசைவிலாது இருந்தாள்.!

சிவன் திரிபுரங்களை எரித்து உமையவளின் உதவியுடன் ஆடிய ஆடல்கள் கொடுகொட்டி, பாண்டரங்கம் (கூத்து), கபாலம் என்பன. கலித்தொகையில் கடவுள் வாழ்த்தில் இறைவனது ஆடலுக்கு ஏற்பத் தாளம் இடும் பொறுப்பேற்ற உமையவள் சிலப்பதிகாரத்தில் நடுகற்காதையில் அசைவற்று நிற்பதேன்?

**"படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ**
**கொடுகொட்டி யாடுங்காற் கோடுயரகல் குறிக்**
**கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ"**

- கலித்தொகை
(கடவுள் வாழ்த்து)

**பொருள்**

நின்கையில் ஒலிக்கின்ற பறை பலவாச்சியங்களையும், ஒலியா நிற்கக் கட்புலனாய்ப் பல வடிவங்களையும், மீண்டும் நின்னிடத்தே ஒடுக்கிக் கொண்டு கொடிதாகிய கொட்டியென்னுங் கூத்தை நீ ஆடுகின்ற காலத்துப் பக்கம் உயர்ந்த அகன்ற குறியினையுடைய கொடியை ஒத்த இடையினை உடையாள் தாளம் முடிந்து விடுங் காலத்தினை தன் இடையே கொண்ட சீரைத் தருவாள்? தரமாட்டாள். இவ்வண்ணம் சிவன் ஆடும்போது அம்மை சீரும், தூக்கும் பாணியும் ஆகிய தாளவகை பக்கத்தில் நின்று செய்கிறாள். கலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையிற் போர்க்காலம் ஆயின் அம்மை உடனிராள் என்றும், பெண் உடனிருக்க போர் புரிவது அக்கால மரபன்று, என்று கண்ட அம்மை, சீர்பெற ஆடுதலில் இது வென்றிக்கூத்து என்பது தெளிவு.

**சங்கார தாண்டவம்**

சிவபெருமானின் ஏழுவகைத் தாண்டவங்களுள் சங்கார தாண்டவமும் ஒன்று. இத்தாண்டவம் அழித்தல் தொழிலைக் குறிக்கும். இறைவன் சுடுகாட்டில் இருண்ட நள்ளிரவில், பூத கணங்களோடு செய்யும் நிருத்தம் இதுவாகும். இதனை ஊழிக் கூத்து, மகா சங்கார தாண்டவம் என இருவகையாக ஆய்வாளர் கருதுவர். ஊழிக்கூத்து என்பது ஊழிக்காலத்தில் சிவன் ஆடுவது. மகா சங்கார தாண்டவம் என்பது தன்னைத் தவிர எல்லாம் அழியும் பேரூழிக் காலத்து உலகமே கடலலையாகக் காணப்படும் போது, காண்பார்கள் யாரும் இன்றித் தனியாக சிவபெருமான் நின்று ஆடுவது பேரூழிக் கூத்து எனப்படும். இத்தாண்டவத்தில் இறைவியும் இறைவனுடன் இணைந்து கொள்வதாக இலக்கியங்கள் இயம்புகின்றன. பேய்கள் உலாவும் மயானத்தில், தாழ்ந்த சடைகள், எட்டுத் திசையும் பரவ, அங்கங் குளிர்ந்து, சிவன் திருவாலங்காட்டில் ஆடுவதைக் காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகத்தில் காணலாம்.

திருச்சிற்றம்பலம்

**கொங்கை திரங்கி நரம் பெழுந்து**
**குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்**
**பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர்**
**நீள்கணைக் காலோர் பெண்பேய்**
**தங்கி யலறி யுலறி காட்டிற்**
**றாள்சடை யெட்டுத் திசையும் வீசி**
**யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க**
**ளப்பனிடந் திரு வாலங்காடே.**

**திருச்சிற்றம்பலம்**

- காரைக்காலம்மையார்

அளவற்ற பிறவி எடுத்த ஆன்மாக்கள், வினைகள் புரிந்து பிறந்து, இறந்து, மீண்டும் பிறந்து தொடர் நிகழ்வால் அல்லலுற்று, அலமந்து தவிப்பதை மீட்கவும். அவற்றிற்கு ஓய்வு தருவதற்குமாக இறைவன் இந்த சங்கார தாண்டவம் புரிகிறான். சங்கார தாண்டவச் சிற்பங்களை திருச்செங்காட்டங்குடி, காஞ்சிபுரம் போன்ற இடங்களில் காணலாம்.

**ஊர்த்தவ தாண்டவம்**

சிவபெருமான் புரியும் ஐந்து செயல்களில் அருளலுக்கு உரிய தாண்டவம் ஊர்த்தவ தாண்டவம் ஆகும். ஊர்த்தவ தாண்டவத்தில் அப்பன் அண்டமுற நிமிர்ந்து ஆடுவது போல, திருவாலங்காட்டில் உள்ள இரத்தின சபையில் ஆடற்கரசன் எண்றோள் வீசி ஊர்த்தவ தாண்டவம் ஆடுகிறார். 'உத' என்றால் மேல் இடக்கை, வலக்கால் மேலே தூக்கிய நிலை. இடது கால் முயலகனில் ஊன்றிய நிலை. இயற்கை மற்றும் புருடன் என்னும் இவ்விரண்டினிடையே தோன்றிய பிணக்கே இத்தாண்டவத்தின் உட்பொருளாகும். தாண்டவத்தை இறைவன் தோற்றுவித்தது போலவே நளினமும் மென்மையும் கொண்ட 'லாஸ்யம்' என்னும் நடன முறையைத் தோற்றுவித்தவள் அம்பிகை. இறைவன் இறைவியிடையே தத்தம் திறமையைப் பற்றிக் கலகம் தோன்றிற்று. தேவ வம்சத்தவரான கந்தர்வர், இயக்கர், கின்னரர், கிம்புருடர் அனைவரும், இத்தாண்டவத்தைக் கண்கொள்ளாக் காட்சியாகக் கண்டு களிக்கச் சிவனும், பார்வதியும் நடனஞ் செய்தனர். ஏற்றத் தாழ்வு இல்லா நிருத்தமாக இருந்தது. தாண்டவத்தின் இடையே சிவபெருமான் வலது காலை உடலோடு ஒட்டி உயர்த்தித் தலைமேல் வைத்துக்கொண்டு துருவ நிலையில் (அசையா நிலையில்) தாண்டவம் செய்து, மெல்ல மெல்ல விலம்பிதத்திற்கு லயை மாற்றித் தாண்டவம் ஆடினார். உமையோ அவ்வாறு காலை உயர்த்த மனமின்றி (பெண்மை காரணமாக) தன் தோல்வியை ஒப்புக்கொண்டாள். திருவாலங்காட்டில் ஆடிய ஊர்த்தவ தாண்டவம் மிகச் சிறப்பானதொன்றாகும். உமையம்மையின் கூறாகத் தோன்றிய காளி முனைந்து ஆடுகையில் சினந்தெழுந்த சிவன் தன் ஒரு காலை உயரத்தூக்கி, ஊர்த்தவ தாண்டவம் ஆடுகையில் குழை ஒன்று (குண்டலம்) நழுவி வீழ அதைப் பிறர் அறியாதவாறு தன் திருவடியால் எடுத்து ஆடியதே நடனச் சிறப்பாகும். ஊர்த்தவ தாண்டவத்தைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுபேறு பெற்றவர்கள் கார்க்கோடனும் முஞ்சி கேச முனிவரும் ஆவர். ஊர்த்தவ தாண்டவச் சிற்பங்களை காஞ்சிபுர ஸ்ரீ கைலாசநாதர் திருக் கோவிலிலும் திருச்செங்காட்டங்குடி தஞ்சைக் கலைக்கூடம் (17ம் நூற்றாண்டு) சிதம்பரத்திலும் காணலாம்.

இதுகாறும் நடனம் ஆடினார் என்னும் விடயமாக சிற்பக் கலை, ஓவியக்கலை, நிருத்தம், நிருத்தியம், நடராஜ வடிவம், உலக இயக்கம், ஐந்தொழில், ஏழு தாண்டவங்கள், திருவுருவத் தத்துவம், திருமூலர் சிவானந்தக்கூத்து, ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், Evening Dance உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம், சங்கார தாண்டவம், ஊர்த்தவ தாண்டவம் சம்பந்தமாக தொகுத்து விரித்துரைத்தோம்.

திருச்சிற்றம்பலம்

**தலம் - சிதம்பரம் பண் - காந்தாரபஞ்சமம்**

**ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்!**
**அந்தணர் பிரியாத சிற்றம்பலம்**
**நாடினாய் இடமா!**
**நறுங்கொன்றை நயந்தவனே!**
**பாடினாய் மறையோடு பல்கீதமும்!**
**பல்சடைப் பனிகால் கதிர் வெண்திங்கள்**
**சூடினாய்! - அருளாய் சுருங்க**
**எம தொல்வினையே!**

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர்

## உசாத்துணை நூல்கள்


1. நடராசப் பெருமான் - திரு. S. நாராயணசாமி M.A.(Phil) (His), M.Ed., Dip.in (Sanskrit)
2. சிலப்பதிகாரம்
3. திருமந்திரம்
4. கலித்தொகை
5. இந்துக் கலைக் களஞ்சியம்
6. பரதநாட்டிய சாஸ்திரம் - கலைமாமணி எஸ்.என்.ஸ்ரீராமதேசிகன் (தமிழாக்கம்)
7. நிருத்தியம் - மீரா மங்களேஸ்வரன்
8. அபிநய தர்ப்பணம் - டாக்டர் உ.வே.சாமிநாதஐயர்
9. சிற்பக்கலை - செ.வைத்தியலிங்கன்
10. சிவானந்த நடனம் - டாக்டர் ஆனந்தக்குமாரசாமி
11. தமிழர் முடிவியல் - பாகம் 1 லயஞானவாருதி திரு.சி.மகேந்திரன்
12. The Dance of Shiva by Dr.Anandakumarasamy
13. தமிழக சிற்ப ஓவியக்கலைகள் by டாக்டர் ஏ.ஏகாம்பரநாதன் எம்.ஏ.(தொல்லியல்) ஏம்.ஏ.(வரலாறு) பிஎச்.டி,டிப்.மானிடவியல்.
14. அப்பர், சம்பந்தர் தேவாரங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்விற்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பு விருத்தி பற்றிய ஒரு சிந்தனை

கலாநிதி கலைவாணி இராமநாதன் M.A, Ph.D.
இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

சமயம் என்பது வழிபாடு மட்டும் சார்ந்ததல்ல. சமயம் என்பது வாழ்வியல் - வாழும் முறை. வாழ்வு என்றால் ஒருவன் இவ்வுலகில் தனது இருப்பினை நிலைபெறச் செய்வதற்கு மேற் கொள்ளும் முயற்சிகள், தொழிற்பாடுகளாகும். 'நான் வாழ்கிறேன்' என்றால் உண்பது, உடுப்பது, தொழிலாற்றுவது, உறங்குவது, சந்ததிவிருத்தி என்பது மட்டுமானால் இவை எல்லோருக்கும் பொதுவானவையாகும். விலங்குகட்கும் மனிதர் கட்கும் கூட இவை பொருந்தும். இது ஒருவரது அன்றாட வாழ்க்கை - நியதி இயற்கையான வாழ்வுமுறை எனலாம். மனிதனை விலங்கு நிலையில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதே சமயவாழ்வுடன் கூடிய பண்பாடு ஆகும். பண்பாடு என்பது நாகரிகமும் கலாசாரமும் இணைந்த ஒரு மனித வாழ்வின் செயற்பாடுகளாகின்றன.

மனிதனும் ஒரு சமூகவிலங்கு (Social animal) என்றே சமூகவியல் ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. ஆனால் மனிதனோ பேசத் தெரிந்த மிருகம். புராதன காலத்திலே விலங்குகள் போல ஆடையின்றி - நாணமின்றி - அச்சமின்றி - அறிவுமின்றி - நாகரிகம் பண்பாடுகளின்றி வாழ்ந்த ஆதிமனிதனை நடையுடை பாவனையால் - அன்பால் - பண்பினால் - அறிவால் - முழுமனித னாக மானிட நிலைக்கு உயர்த்தி சமயவழி வந்த பண்பாடுகளும் நாகரிகத்துடனும் கூடிய வாழ்விய லாகும். இன்றைய உலகில் இந்து சமயப்பண்பாடு. பௌத்தம் கூறும் பண்பாடு, இஸ்லாமியப் பண்பாடு, கிறிஸ்தவமதப் பண்பாடு என்றவாறு இவ்வுலகில் மனிதன் தன்னை நாகரிகமடைந்த அறிவுசால் மனிதனாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டான். அவனது சமயம் சார்ந்த பண்பாடுகள் அரச மரபுகளூடாகவும் வளர்த்தெடுக்கப்பட்டன.

சமயங்களே இந்த உலகிலே குறிப்பாகக் கீழைநாடுகளில் மனிதவாழ்வியல் மேம்பாடடைய பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன. இதிகாச புராணகாலமாகிய கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் சுமார் கி.பி 14ஆம் நூற்றாண்டு வரை இந்திய நாட்டிலே இந்து சமயமே ஆட்சிக்கட்டிலிலிருந்தது. மொகலாயப் படைஎடுப்பின் பின்னரே இந்து அரசுகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. சுமார் 14-15 நூற்றாண்டுகளாக இந்துக்களது வாழ்வியற் பண்பாடுகள் தென்னாசிய தென்கிழக்காசிய நாடுகளிலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தின. மேலும் அரசியல் சூழலுடன் இயற்கைச் சூழலும் சமய வாழ்வியல் மேம்பாடுற பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன.

மனிதன் வாழும் உலகமும் அதன் சுற்றுச் சூழலும் உடனுறையும் உறவுகளின் சமுதாய நடைமுறைகளும் கூட ஒருவனது சமயம் சார்ந்த வாழ்க்கை முறைகளைத் தீர்மானிக்கின்றன எனலாம். முதலில் தனிமனிதன் குடும்பம் சுற்றம் சூழல் கிராமம் நகரம் சமூகம் என விரிவடைந்து முன்னேறிக் கொண்டே போகின்றது. சூழலால் மனிதனும் மனிதனால் சூழலும் இணையத் தொடங்கி இயற்கை சார்ந்த வாழ்வியல் பரிணமித்தது காலப்போக்கிலே சூழல் மாற்றத்தால் மனித வாழ்வும் மனிதனது செயற்பாடுகளால் சூழலும் மாற்றமடைகின்றன. ஆரம்பத்தில் சூழல் மாற்றங்கட் கேற்ப மனிதனும் தன்னை அவற்றுடன் இணைத்து சூரியர், சந்திரர், அக்கினி என்றின்னோரன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இயற்கையை வழிபாடு செய்து அவற்றுடன் இணைத்து இசைவாக்கமடையச் செய்து வாழ்ந்தான். இயற்கையுடன் மனித அறிவு முரண்பட்டதும் பல இயற்கைச் சவால்களைச் சந்தித்தான்.

இயற்கையும் மனித அறிவும் மோதும் போது இயற்கைச் சூழலிடமிருந்தே அதற்கான கற்றல் முறைகளையும் படிப்பினையும் பெற்றான். ஆரம்பத் திலே அவை அறிவாக ஆற்றலாக கலகமாக சிக்கல் நிறைந்த பிரச்சினைகளாகவும் மாறின. அத்தகைய மோதலின் விளைவே ஞானமாக விஞ்ஞானமாக மெய்ஞானமாகவும் முன்னேற்றம் கண்டது. எனவே இயற்கைச் சூழலிலே மனிதனுக் குக் கல்வி நிலையங்களாக கற்றல் உபகரணங் களாக தொழிற் கருவிகளாகவும் உருவாகின. இயற்கையை மனிதன் தனது செயற்பாடுகள், விஞ்ஞான பரிசோதனைகளால் காயப்படுத்தி சிதை வுறச் செய்தபோது அது புயலாகப் பூகம்பமாக எரிமலையாக சுனாமியாக எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் சூழல் மாசடைதல், வளி மாசடைதல், நீர் மாசடைதல் எனப் பல மோசமான விளைவுகளையும் இன்று சந்தித்துள்ளது.

இயற்கையைப் போற்றினால் இயற்கையால் வாழ்வாய், இயற்கையை அழித்தால் இயற்கை யால் அழிவாய் என்ற மெய்ஞானிகள் சிந்தனை எவ்வளவு பெரிய உண்மையை அன்றே உணர வைத்தனர். இயற்கைச் சூழல் சார்ந்த வாழ்வியல் அறிவுபூர்வமான ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றி யமையாதது என்பதனை உபநிடதங்களும், கீதையும். தேவாரத் திருமுறைகளும் சூழலுக்கும் சமய வாழ்விற்குமுள்ள தொடர்புவிருத்தியைச் சுட்டிக் காட்டி அறிவுறுத்தின. மோதல்கள் பிரச்சி னைகள் துன்பங்கள் என்பவற்றால் களைத்துத் தோற்றுப்போன மனிதனும் சரி இவற்றுடன் போராடி வெற்றி அடைந்தவனும் சரி இருவருமே இறுதியில் தன்னைப்பற்றியும் தனது அமைதி, ஆரோக்கியம் பற்றியும், துயரங்களிலிருந்து விடுபடுதல், வாழ்க்கைப் போராட்டங்களுக்கு முகம்கொடுத்தல் என்பன போன்ற நடவடிக்கைகளால் தனது மனதையும் அறிவையும் தூண்டிவிட்டு தனிமையை நாடி சிந்தனைவயப்பட்டு உளவளத் திறனை விருத்தி செய்து சிக்கல்கட்குத் தீர்வு காணப் புறப்படுகின்றான்.

இதுவே மனித வாழ்க்கைப் பயணத்திலே ஆத்மஞான வேட்கையாக சுபீட்சமான உலகை காணும் ஆர்வமாக அக்கறையாக வெளிப்பட்டு ஆழமான சிந்தனையாளன் ஒருவன் விஞ்ஞானி யாகவும் ஒருவன் மெய்ஞானியாகவும் ஒருவன் இசைஞானியாகவும் ஒருவன் கலைஞானியாக ஒருவன் தத்துவஞானியாக சமூக விஞ்ஞானியாக எனப் பல்வேறு துறைகளில் பிரகாசமடைகின்றனர். இவ்வாறாக மக்களின் கல்வியறிவும் உழைப்பும் மட்டுமன்றி சூழல் தொடர்பு விருத்தியும் சமய வாழ்வுக்கு ஒருபகுதியாக மனித முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்கின்றதெனலாம்.

மேலும் சமயவாழ்வு என்றால் என்ன? என்ற சிந்தனை எழும் போது சமயம் என்பது நம்பிக்கையா? எதனை நம்புவது? ஏன் நம்பவேண்டும்? என்ற வினாக்கள் அறிவியல் உலகில் ஏராளமான குழப்பங்களைத் தோற்றுவித்தன. நம்பிக்கையின் முதற்படியாக புராதனகால மக்கள் இயற்கைச் சூழலைத்தான் முழுமையாக நம்பி வாழ்ந்தனர். ஐம்பூதங்களும், முச்சுடர்களும் மரம், செடி, கொடிகள், கற்கள், நதிகள், மலைகள், விலங்குகள், பறவைகள் எனத் தான் வாழும் சூழலில் தனக்கு உதவியாக அமைந்த அத்தனை இயற்கை வளங்களையும் அன்புடன் பராமரித்து போற்றிப் பாதுகாத்து வளர்த்து அவற்றின் உதவியால் தானும் முன்னேறி செல்வந்தனானான். இவ்வாறாக நன்றியுடன் பராமரித்துப் போற்றுவதலானது நாளடைவில் வழிபாடாக பரிணமித்தது.

வழிபாட்டிற்கு இலக்கு அல்லது அடையாளம் ஒன்று தேவைப்பட்டபோது இயற்கையின் அம்சமான கல்லை, மண்ணை, மலையோ, நதியோ ஏதோ ஒன்றினை குறியீடாகக் கொண்டு வழிபாடாற் றத் தொடங்கினான். அத்தகைய செயற்பாடுகள் நாளடைவில் அவரவர் வசதிக்கேற்ப யாகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி, சடங்குகள், கிரியைகள், விரதங்கள், விழாக்கள் எனப் பல்கிப் பெருகின. தமக்கு நல்ல வைகள் நடக்கின்ற போதெல்லாம் இறையருள் என வணங்கி சந்தோசமிகுதியால் ஆடல், பாடல், விழாக்களை நடத்துதல் என இவைகள் கல்வியும், அறிவும் பொருளாதார வசதியும் பெருகப் பெருக சிறிய நிகழ்வுகள் யாவும் வளர்ந்து கற்கள் கடவுளாகவும், கோயிலாகவும், பிற வாகனமாகவும் மாறும் போது பொருளாதார புகழ் அந்தஸ்துப் போட்டிகளில் கலைகள், கட்டிடங்கள், சிற்பம், ஓவியங்கள் என மனிதன் தனது வாழ்வியல் நிகழ்வுகளை ஆலயக் கலை களாக்கி ஆண்டவ னாக்கி வழிபடும் நிலைக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டான். இவ்வாறு சமயவாழ்வு பெரிதும் ஆக்கிரமித்துக் கொண்டது.

இவ்வாறாக வளர்ச்சிகண்ட தெய்வங்கள், வழிபாடுகள், கிரியைகள் யாவும் மரபுகளாக சம்பிர தாயங்களாக தொன்மங்களாகத் தொல்பொருட் களாக மனித வாழ்விலே தொடர்ச்சியாக நிலை பெற்றன. மேலும் சமுதாயத்தையே மாற்றிய மைத்த பெரியோர், சான்றோர், ஞானியர், போர்வீரர், ஆட்சியாளர் என்போர்கட்கும் நினைவுத்தூபிகள், மண்டபங்கள், வீரக்கல் முதலியன அமைத்துச் சிறப்பித்தும் வழிபாட்டு நெறிகளுள் ஒன்றானது. இத்தகைய வழிபாட்டு முறைகள், மரபுகள் ஒழுங்குபடுத்தும் முறைமைகள் பிற்காலம் உயர் நெறியாளர்களால் தோற்றுவிக்கப்பட்டு அவை ஒழுங்கமைக்கப்பட்டபோது இலக்கியங்கள், ஆவணங்கள், தொல்லியற் சின்னங்கள் சாத்திரங்கள், சம்பிரதாயங்களாக வலுப்பெற்றன. சூழலுடன் வாழ்வு தொடர்புபடும் போது சமயச் சின்னங்களும் தொடர்பு விருத்தியில் முக்கியபங்கு வகித்தன.

அதனால் அத்தகைய அடையாளங்கள் அந்தந்த நாட்டிற்கும் இன, மத, மொழி வாழ்க்கைச் சூழல் விருத்திகட்கேற்ப ஒவ்வோர் பெயரால் அழைக்கப்பட்டன. இவ்வாறு வரலாற்றுக் காலத் திற்கு முன்பிருந்த நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் இந்துசமய மரபுகளாகத் தொன்மங்க ளாகவும் காலப்போக்கில் அறிவு வளர்ச்சியினை வகுத்து அவற்றைக் கடைப்பிடிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள், குழப்பங்கள், தவறுகளைக் குறை களை நிவர்த்தி செய்வதற்காகத் தோன்றிய பெரியவர்கள், சான்றோர், ஞானியர், நாயன்மார் சித்தர்கள் என்றின்னோரன்னவராகவும் ஐரோப்பிய நாடுகளில் யூதர்களை அடுத்து கிறிஸ்துவால் கிறிஸ்தவர்களும் அரபு நாடுகளில் அல்லாவால் இஸ்லாமியர்களும் சீனா, இலங்கை போன்ற நாடுகளில் பௌத்த கோட்பாடுகளாலும் மக்கள் வாழ்வு மாற்றமடைந்து ஏற்றமடைந்து வளர்ச்சி கண்டது.

அத்தகையதொரு தொன்மையான வரலாற்றுச் சூழலில் சிவனைவழிபட்ட மக்கள் சைவர் எனவும் சைவசமயம் என்பதும் சைவமக்கள் வழிபடு நெறியானது. 'நெறி நின்றார் நீடு வாழ்வார்' என பிற்கால அறிஞரும் போற்றினர். இத்தகைய சைவ நெறி வேதாகமங்கள், தேவாரத் திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்களால் மேலும் பலப்படுத்தப் பட்ட நிறுவனமானது இன்றைய காலகட்டங்களிலும் சைவ நெறியானது சமுதாய சூழல் தொடர்பு விருத்தியில் சமூகசேவை மையங்களாகவும் வளர்ந்தது. இத்தகைய தொடர்பு விருத்தி மையங் களில் சைவாலயங்கள், சைவப் பாடசாலைகள், சைவ சமய நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் முக்கியம் பெற்றன.

இவை தனியே பூசை வழிபாடுகள், குரு பூசைகள், பெரியார் தினங்களைக் கொண்டாடுவ துடன் நின்றுவிடாது இத்தகைய நிறுவனங்கள் தொண்டர்களைத் திரட்டி சூழல்மாசுபடாத வகையில் நந்தவனங்கள், நன்னீர் கிணறுகள் என்பனவற்றை புதுப்பித்து நல்ல சூழலை சுத்த மான காற்றினை ஏதுவாக்குவதுடன் முதியோர் இல்லங்கள், வலுவிழந்தோர் நிறுவனங்கள், சிறுவர் காப்பகங்கள், நலன்புரி நிலையங்கள் இவற்றிலும் தமது சேவைகளை விரிவுபடுத்தி சமயவாழ்வியல் என்பது அன்புநெறி அறநெறி எனப் போற்றப் படுவதனை மீண்டும் நிலைபெறச் செய்யும் வகையில் தொடர்பு விருத்திகள் வசதிகள் செய்யப்பட வேண்டுவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகளின் நம்பிக்கை நட்சத்திரம்

த. ந. பஞ்சாட்சரம்
நீர்வேலி.



புராதன கிரேக்கம்; அதென்ஸ் நகர இராச்சியம்; அங்கு பலர்போற்றிய ஞானிகளில் ஒருவர்; அவரே மேதைடையோனி ஜியஸ். அவர் ஒருமுறை சீலமிகு மனிதன் ஒருவனைத் தேடும் பணியில் பகலவன் ஒளி கூடப் போதாதென்ற உணர்வில் சுவாலித்தெரியும் தீப்பந்தம் ஒன்றினையும் ஏந்தியபடி வீதிகளில் ஏதோ ஒன்றினைத் தேடுபவர் போல அலைந்து திரிந்தவேளை பல சிறிய, பெரிய, படித்த, படிக்காத சில முட்டாள்கள் அவரை நோக்கி அவ்வாறு அலைவதேனோ என வினவ, "பகலவன் பிரகாசத்தில் கூட ஒரு நல்லவனை காணமுடியவில்லையே எனவேதான் ஒரு தீப்பந்தத்தின் ஒளியையும்கூட நாடினேன்" எனக் கூறி பலரையும் திகைப்புடன் சிந்திக்க வைத்தாராமென ஒரு கதையுண்டு.

அறிஞர் டையோனிஜியஸ் அன்று எங்கள் வணக்கத்துக்குரிய சிவத்திரு ஸ்ரீமத் அருணாசலம் செல்லத்துரை சுவாமிகளை கண்டிருந்திருப்பாரேயானால் "மனிதா, உன்போன்ற ஒருவனையே தேடி அலைகின்றேன்" எனக் கூறி அன்னாரைக் கட்டித்தழுவியிருப்பார் என நாம் துணிவுடன் நினைப்பின் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஸ்ரீமத் அருணாசலம் செல்லத்துரை சுவாமிகள் அவ்வாறு அமைந்தவோர் 'கனதியான பாத்திரம்; கர்மயோகி'! அத்தகைய பேற்றினை உடைய சுவாமிகளை எமது ஞான பரம்பரையுதித்த ஸ்ரீலஸ்ரீ சிவயோக சுவாமிகளின் அருட்பார்வை, எங்கும் தேடித் திரியாமல், தம்பால் கவர்ந்திழுத்தமையில் வியப்பேயில்லை. அது எப்பவோ முடிந்த நியமம்! முக்காலமுணர்ந்த தவத்திரு சிவயோகசுவாமிகளின் நம்பிக்கை நட்சத்திரமாய் ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் சிறப்புற ஆற்றிய சிவப்பணிகளை ஒலிம்பிக் சாதனைகட்கும் மேலான சாதனையெனக் கூறின், அது மிகையாகாது! குருவருளும் தெய்வத் திருவருளும் வணக்கத்திற்குரிய சுவாமியாருக்கு என்றுமேயிருந்த அற்புதத்தை அறிவார் அறிவாரே!

அத்தகைய சிறப்பிற்குரிய முத்தான மனிதன் யாழ்ப்பாணம் நீர்வேலி கிராமத்தைச் சார்ந்த ஸ்ரீமான் சின்னத்தம்பி அருணாசலம் அவர்கட்கும் தென்மராட்சி சரசாலையூர் 'விசுவர் வளவை' சேர்ந்த 'நல்லபிள்ளை' என செல்லமாக அழைக்கப்பட்ட ஸ்ரீமான் கந்தையா - கதிராசிப்பிள்ளை அம்மையார் தம்பதியினரின் புத்திரி அவர்கட்கும் தலைமகனாய் வைகாசி முதல் திங்கள் 31.05.1914 அன்று அவதரித்தார். சிறு பராயத்திலிருந்தே சுவாமிகள் ஏனைய சிறார்கள் போலல்லாது சாந்த சீலனாய் பலரையும் கவர்ந்த சிறப்பு அவர்க்கேயுரியதாய் அமைந்திருந்தது. சமயகுரவர்நால்வர் போன்று : நெடிய தோற்றம், ஞானத் திருவுருவம், தெய்வீக சாந்தம் தவழும் வதனம், அன்பு சொரியும் புன் சிரிப்பு' கற்றறிந்த பெரியோர், சமூகத் தலைவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் போற்ற உரிய கல்வியைத் தமிழ் ஆங்கில மொழி மூலம் பெற்றுப் பயிற்றப்பட்ட ஆசானாய்த் தேறி நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பள்ளிகளில் ஆசானாய், ஆசாற்காசானாய், பள்ளி முதல்வராய், கர்ம யோகியாய் மெய்ஞ்ஞான முதிர்ச்சியுடன் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் ஸ்ரீலஸ்ரீ சிவயோகசுவாமிகளின் அடியவனாய் விளங்கினார். சிவதொண்டன் நிலைய மூலவேராய் கண்ணை இமை காப்பது போன்று, நிலைய முதல்வராயமைந்து சகல பணிகளையும் சேவைகளையும் ஆற்றிய ஞானசூரியனாய் விளங்கினார். மேலும் சுவாமிகளின் பல்திறமைந்த ஆளுமையை சொற்களால் வடிக்கும் திறன் எனக்கில்லை; எவருக்குமில்லை எனக் கூறின் அது மிகையாகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக நாவற்குளி மகா வித்தியாலயத்தின் கீர்த்திமிகு முதல்வராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்றதும் தம்மை முழுமையாகத் தம் குரு மணியின் சிவத்தொண்டிற்கே அர்ப்பணித்து சிவயோக சுவாமிகளின் திருஉளப்படி செங்கலடி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய சிவதொண்டன் நிலையப் பணிகளுக்கே பலர் வியக்க பெரும் பணியாற்றி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தார். இப் புனிதரின் திருவுளப்போக்கினை, சிந்தனைகளை எம்மால் முழுமையாக அறிய முயல்வது வைக்கோல் பட்டடையில் ஊசியைத் தேடும் முயற்சியாகவே அமைந்து விடலாம். அது எம் சக்திக்கு அப்பாற் பட்ட ஆய்வு எனலாம்.

அரச திணைக்களங்களோ ஏனைய சமய சமூகங்களோ இயங்கமுடியாத ஒழுங்கு வகையில் 'சிவத்தொண்டன்' நிலைய பெரும் பணிகள் உரிய காலத்தில் உரிய நேரத்தில் நடந்தேறிய சிறப்பு களுக்கெல்லாம் சுவாமிகளின் ஆளுமையே மூல காரணமாகும். சத்தமின்றி சந்தடியின்றி வீண் ஆரவாரம் எதுவுமின்றி நிலையப் பணிகள் நடந்து கொண்டேயிருந்தன.

நிலையத்தில் நடைபெறும் விசேட பூசைகள், புராணப் படிப்புக்கள், பலவகை சமயப் பிரசுர வெளியீடுகள், யாகங்கள், மாகேசுர வைபவங்கள் யாவுமே சுவாமிகளின் அமைதியான அருளுடன் கூடிய வழிகாட்டலில் சிவநெறித் தொண்டர்களால் சிறப்பாகவே நடைபெற்றன. இன்னும் அவ்வழியில் சகல பணிகளும் தெய்வ அருளுடனும் குரு வருளுடனும் நடந்தே வருகின்றன.

தவத்திரு சுவாமிகள் என்றும் காட்சிக் கெளியனாய் சும்மாயிருப்பவர் போல் இருந்தாலும் பெரும் சுமையை தாங்கியே பணியாற்றிய பெரும் பேற்றிற்குரியவராய், பார்ப்போர், கேட்போர் அனைவரையும் பரவசமடையச் செய்த பேரருளாளர். பிற்பகல் வேளைகளில் சிவத்தொண்டன் நிலைய வெளி விறாந்தையில் தென்பாக மூலையில் சுவாமி கள் யோகநிலையில் அமர்ந்திருந்து வருவோரைத் தம் அமைதியான அழகுநிலா குளிர்முகத்தினால், அருட்பார்வையால், வரவேற்பதும் உரையாடுவதும் எம் உள்ளத்தில் என்றுமே பசுமையாகவிருக்கும்.

சுவாமிகள் தம் வாலிபப் பருவத்திலிருந்து தம் வயோதிபநிலை வரையும் பல்வேறு தளர்விலும், இடரிலும் தம் பல பல பணிகள் மத்தியிலும் இலங்கை, இந்தியா வரை மேற்கொண்ட யாத்திரைகள் பல வாகும். அவற்றுள் இலங்கையின் புகழ்வாய்ந்த புனித தலங்களுடன் இந்தியாவில் தெற்கே சிதம் பரமிருந்து வடக்கே இமயம் வரை திருவண்ணா மலை ரமணாச்சிரம், தக்னேஸ்வரம் ஆகிய அருள் நிலையங்களும் சிலவாகும். ஆண்டுதோறும் மார்கழி திருவெம்பா காலத்தில் சுவாமிகள் சிதம்பர தரிசனத்தை தவறுவதேயில்லை.

சுவாமிகள் ஒருமுறை 'தேன் இனிமையானது' எனப் பலர் கூறினாலும் 'தேனைச் சுவைத்தவ னுக்கே அதன் அருமை தெரியும்' என கூறிய கூற்றின் கருத்தாழம், தத்துவம், ஆழ்ந்து சிந்திக்க வல்லது. அவை யாவும் எம் போன்ற சாதாரணர் களுக்குச் சிந்தனைக்குரிய விருந்தாகும். எல்லா வற்றிற்கும் மேலாகக் காலப்போக்கில் சுவாமி களின் தோற்றம், முகபாவனை, புன்னகையெல்லாம் சிவயோக சுவாமிகளின் பிம்பமாயிருந்தமையை பலர் பார்த்து வியந்ததும் உண்டு.

செல்வன் சிவதொண்டன்; சிவயோக முனி யடியான்; சுவாமி செல்லத்துரைச் செம்மல்; என்றும் எம் உளம் உறையும் சீராளன் பொற்பாதம் எங்கள் மனத்திருத்திக் கரம் கூப்பி வணங்குவோமாக!

**'ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்**
**நடுங்குவதில்லை நமனுமங்கில்லை;**
**இடும்பையுமில்லை இராப்பகல் இல்லை;**
**படும் பயன் இல்லை பற்றுவிட்டார்க்கே'**

இது திருமூலர் திருமந்திரம்' சுவாமிகளின் தெய்வீக ஆளுமைக்குச் சான்றாயமைகிறது!

சுருங்கக் கூறின்:

அ) சுவாமிகள் கருவிலேயே திருவானவர்.
ஆ) நல்லோர் வழி நாடி ஞானகுரு அடியொற்றி அரும்பணிக்கே ஆளானவர்.
இ) தம் ஞான குருவிற்கும் எமக்கும் நம்பிக்கை நட்சத்திரமாய் பாலமாய் விளங்கியவர்.
ஈ) என்றும், எதிலும், மூச்சிலும், பேச்சிலும் செயலிலும் கடைந்தெடுத்த சிவத்தொண்டுப் பேற்றினர்.

இவ்வரிய மாணிக்கப் பிறவி விய வருடம் சித்திரைத் திங்கள் - 12.04.2006 அன்று மாலை மெய்ப்பொருள் தன்னை விழித்துக் கண்டு விண்ணகம் விரைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

சைவசமயத்தவர்கள் ஒருவரை வாழ்த்து வதற்கு மங்கலச் சொற் களைப் பயன்படுத்துவர். வாயால் வாழ்த்துவதாயினும் எழுத்து வடிவில் பாவால் வாழ்த்துவ தாயினும் மங்கலச் சொற்பிர யோகத்தில் மிகவும் அக்கறை கொள்வர். அபச குனமான அமங்கல வார்த்தைப் பிரயோகங்கள் வாழ்த்துதலில் இடம்பெறக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொள்வர். பொதுவாக தமிழர் மரபில் வாழ்த்துதல் பற்றிய எண்ணக்கரு மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சிலப்பதி காரத்தைப் படைத்த இளங்கோ அடிகள் கண்ணகி யின் தோழிகள் கண்ணகியின் திருமணவீட்டில் வாழ்த்தப் பயன்படுத்திய சொற்கள் பின்னால் வந்த விளைவுக்கு வித்தாகியது போலும் என்கிறார். அனுபவமில்லாத கண்ணகியின் தோழிகளாகிய கன்னிப் பெண்கள் கண்ணகி கோவலனது திருமண ஞான்று "காதலர் ஒருவரை ஒருவர் பிரியாமல் களவுக்கை நெகிழாமல் தீதின்றி வாழ்வீராக" என வாழ்த்திய சொற்பிரயோகம் தவறானது. பிரியாமல், தீதின்றி என்ற சொற்களை வாழ்த்தில் பயன்படுத்தியது வாழ்வில் பலித்ததோ என இளங்கோ அடிகளும் தமிழ் அறிஞர்களும் குறிப்பிட்டுக் கூறுவது சிந்திக்க வேண்டியது வாழ்த்துதல் வாழ்த்துப்பா இயற்றல் வாழ்த்து மடல் எழுதல் அனைத்திலும் நாம் கவனமாக இருத்தல் வேண்டும்.

சைவத்தமிழரின் திருமண வைபவங்களில் மணமக்களை வாழ்த்துதல் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறும். திருமண வைபவத்தில் தாலிகட்டிய பின் திருமுறை பாடி வாழ்த்துகின்ற சைவத் தமிழர் மரபு அருகி வருகிறது.

தென்நாட்டில் சைவத்தமிழர் திருமண வைபவங்கள் சிலவற்றில் எல்லோரும் எழுந்து நின்று மணமக்களை வாழ்த்துவதற்கு திருஞான சம்பந்தர் சுவாமிகள் பாடிய "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' எனத் தொடங்கும் திருமுறையைப் பாடி பூக்களைத் தூவி வாழ்த்தும் வழக்கமுண்டு. குறிப்பாக பேரூர் பகுதியில் இம்மரபு இன்றும் புனிதமாகப் பேணப்படுகிறது.

திருமண வாழ்த்தில் பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் மரபில் பதினாறு எதனைக்குறிக்கும் எனப் பலர் இன்று அறிவதில்லை. எம்முன்னோர் பதினாறு பேறுகளை மங்கலகரமான வாழ்த்தில் பயன்படுத்துவர். பதினாறும் பெற்று என்ற சொல்லுக்கு சிலர் விளங்காது தவறாகப் பொருள் கொள்வதுமுண்டு. காரணம் "பெற்று" என்ற சொல்லைக் கொண்டு அச் சொல் மக்கட் பேற்றையே குறிப்பதாக கருதுபவர்களுமுண்டு. இவ்வுலகில் இல்லற வாழ்வில் இனிதே வாழ்பவர் கள் வாழ்வாங்கு வாழ்வதற்குப் பெறத்தக்க பேறுகள் பதினாறு என அடிப்படைத் தேவைகளை வகுத்து அவற்றை நிறைவாகப் பெற வாழ்த்துதல் சைவத் தமிழர் மரபாகும்.

**"துதிவாணி வீரம் விசையம்**
**சந்தானம் துணிவுதனம்**
**அதிதானியம் சௌபாக்கியம்**
**போகம் அறிவு அழகு**
**புதிதாம் பெருமை அறங்குலம்**
**நோவு அகல் பூண்வயது**
**பதினாறு பேறும் தருவாய்**
**மதுரைப் பராபரனே"**

என காளமேகப்புலவர் இறைவனிடம் வேண்டும் பாடல் பதினாறு பேறுகளை விளக்குகிறது.

துதி - புகழ், வாணி - கல்வி, வீரம் - மனவுறுதி, விசயம் - வெற்றி, சந்தானம் - மக்கட்பேறு, துணிவு - தைரியம், தனம் - செல்வம், அதிதானியம் - மிக்க தானியங்கள், சௌபாக்கியம் - சிறந்தசுகம், போகம் - நுகர்ச்சி, அறிவு - ஞானம், அழகு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு (கடாட்சம்), புதிதாம் பெருமை - புதிது புதிதாக விளையும் சிறப்பு, அறங்குலம் - அறப் பண்புடைய குடிப்பிறப்பு, நோவகல் - நோயின்மை, பூண்வயது - நீண்ட ஆயுள் ஆகிய பதினாறு பேறுகளையும் காளமேகப்புலவர் மேலே எடுத்து ரைத்துள்ளார்.

மனித வாழ்வில் நாம் முன் செய்த வினைப் பயனே எம்மை ஆற்றுப்படுத்துகிறது என்பது எம் நம்பிக்கை. எதுவாயினும் ஒருவரை வாழ்த்தும் போது நிறைவான வாழ்வு மலர வாழ்த்துதல், வழிபாடு செய்தல் மக்கட் பண்பாகும்.

அபிராமிப்பட்டர் எல்லாம் வல்ல அன்னை பராசக்தியை பதினாறு பேறுகளையும் வழங்கும் தாயாகப் போற்றிப் பாடினார்.

**"கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்**
**கபடு வாராத நட்பும்**
**கன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணியிலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு**
**துன்பமில்லாத வாழ்வும்**
**துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**
**அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே**
**ஆதிக்கடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி**
**அருள்வாமி அபிராமியே".**

வாழ்நாள் முழுவதும் எம்மை வாழவைக்கும் இறைவனை வாழ்த்துதலும், வாழ்வுக்குரிய வரங்களை அருளுமாறு கேட்டலும் எம் வழக்கமாகும். பிறரை வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே என்ற உட்பொருளை அனைவரும் உணரவேண்டும்.

## சர்வசித்து வருஷம் ஆவணி மாதம்
## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவ
## விசேட தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18.08.07 | சனி | கொடியேற்றம் | பகல் | 10.00 | மணி | (01ம் திருவிழா) |
| 27.08.07 | திங்கள் | மஞ்சம் | மாலை | 05.00 | மணி | (10ம் திருவிழா) |
| 03.09.07 | திங்கள் | கார்த்திகை | மாலை | 05.00 | மணி | (17ம் திருவிழா) |
| 06.09.07 | வியாழன் | சந்தானகோபாலர் | காலை | 07.00 | மணி | (20ம் திருவிழா) |
| 06.09.07 | வியாழன் | கைலாசவாகனம் | மாலை | 05.00 | மணி | (20ம் திருவிழா) |
| 07.09.07 | வெள்ளி | கஜவல்லி மஹாவல்லி | காலை | 07.00 | மணி | (21ம் திருவிழா) |
| 07.09.07 | வெள்ளி | வேல் விமானம் | மாலை | 05.00 | மணி | (21ம் திருவிழா) |
| 08.09.07 | சனி | தெண்டாயுதபாணி | காலை | 07.00 | மணி | (22ம் திருவிழா) |
| 08.09.07 | சனி | ஒருமுகத்திருவிழா | மாலை | 05.00 | மணி | (22ம் திருவிழா) |
| 09.09.07 | ஞாயிறு | சப்பறம் | மாலை | 05.00 | மணி | (23ம் திருவிழா) |
| 10.09.07 | திங்கள் | தேர் | காலை | 07.00 | மணி | (24ம் திருவிழா) |
| 11.09.07 | செவ்வாய் | தீர்த்தம் | காலை | 07.00 | மணி | (25ம் திருவிழா) |
| 12.09.07 | புதன் | பூங்காவனம் | மாலை | 05.00 | மணி | (26ம் திருவிழா) |
| 13.09.07 | வியாழன் | வைரவர் உற்சவம் | மாலை | 05.00 | மணி | (27ம் திருவிழா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகப் பெருமானின் திரு அவதாரத் தோற்றங்கள்

கணேசன் சைவசிகாமணி
முகாமை உதவியாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.**


அருள்முருகன்

நாம் வாழ்ந்து வரும் யுகம் கலியுகம். (கலி-இடர்) கலியுகம் என்பது தீமைகளுக்கு ஆக்கம் அளிக்கும் யுகம் உறுதியைக் குலைத்து உண்மையை மறைத்து தன்னறிவுக்கு மதிப்புக் கொடுத்து பழமைகள் யாவும் முதியவர்களுக்கே உரியவை என்று ஒதுக்குங்காலம். மும்மலங்களின் சேட்டையினால் மூடமான உயிர்கள் மட்டுப்படுத்தப் படாத ஆசையும், கட்டுக் கடங்காத இச்சையும் கொண்டு எல்லா அண்டங்களையும் அடக்கியாளவும் எல்லா சுகபோகங்களையும் தனக்கே உரிமை யாக்கிக் கொள்ளவும், தன் இன்பம் கருதி தகாதன செய்யும் காலம் இது. இறையுணர்வுகள் குன்றி இன்றைய விஞ்ஞான உலகத்தில் இறை வழிபாடுகள் மூட நம்பிக்கை என்று சொல்லும் காலம். இத்தகைய காலத்திலும் இறையுணர்ச்சி குன்றா வண்ணம் எல்லாரிடத்தும் எல்லா வகையிலும் பாதுகாத்து வருபவன் முருகப் பெருமான். இவன் கலியுகத்திலும் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றான். இதனால் இவனை கலியுக வரதன் என்பர். பாம்பன் குமர குருதாச சுவாமிகள், முருகப் பெருமான் எல்லா யுகங்களி லுமே அடியவர்களுக்கு வரங்களைத் தரும் இயல்புடையவன். அதனிலும் கொடியதாகிய கலியுகத்திலுங்கூடப் பேரருள் சுரந்து வேண்டும் வரங்களை விரைந்து கொடுக்கும் பெருமாட்சி யுடையவன் என்னும் கருத்தமைய முருகன் 'கலியுகத்தும் வரதனாம் கந்தன்' என்றே கூறுதல் வேண்டும் என்று கூறியருளினார். திருமுருகப் பெருமானின் பெருமைக்கு அளவும் எல்லையும் இல்லை. முருகப் பெருமான் எல்லாம் அறிந்தவன்; எல்லாவிடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவன்.

முருகப் பெருமான், உலகங்கள் அனைத்துக் குமே ஒப்புயர்வற்ற பெருந் தலைவன். ஆயினும் நமது தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு தனிச் சிறப்பான உரிய தெய்வமாவான். முருகன் என்னும் சொல் அழகு, இளமை என்னும் பொருள்களைக் குறிக்கின்றது. அழகு முதலிய பண்புகள் யாருக்குச் சொந்தமானவை? அனைவருக்கும் பொது. அங்ஙனமே நற்பண்புகளும் அனைத்துக்கும் பொது. நற்பண்புகள் அனைத்துக்கும் உறைவிடமான முருகப் பெருமான் அனைவருக்கும் பொதுவானவன்.

அன்புள்ள இடத்தில் இன்பம் உண்டு. இன்பமும் அன்பும் காரணகாரியத் தொடர்புடையன. நமது பெரியோர்கள் இறைவனை 'இன்பமே என்னுடைய அன்பே' என்று இணைத்துக்காட்டி இறைவன் இன்ப அன்பு வடிவன் என்பதை நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அவனை அடையும் வழி அன்பு ஒன்றே என்று சொல்லியிருக்கின் றார்கள்.

குன்றமெறிந்தோன், குரைகடலில் சூர் தடித் தவன், சூர்மார்பும் குன்றும் துளைத்தவன், ஆடும் பரிவேல் அணி சேவல் கொண்டவன், மயில் வாகனன், முக்கண்ணின் மைந்தன், உமையம்மை புதல்வன், ஐங்கரன் தம்பி, மாயோன் மருகன், வள்ளி தெய்வயானை மணவாளன் என்றெல்லாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களால் பாடித் துதிக்கப்படும் முருகப் பெருமானை நாவாரப்பாடி மனமாரத் துதிக்க வேண்டும். பக்தர்களுக்காக முருகுப் பெருமான் உறைகின்ற இடங்களில் முக்கியமாக நல்லூர், செல்வச் சந்நிதி, கதிர்காமம், மாவிட்டபுரம், தென்னிந்தியாவில் அறுபடை வீடுகளையும் குறிப்பிடலாம். அவன் பெருமைகளை விபரித்து, அங்கெல்லாம் சென்றால் முருகப் பெருமான் பல்வேறு திருநாமங்களுக்கு பல உருவத் திருமேனி கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றான் என்பதை காணலாம். இவ் ஒவ்வொரு அருள் தோற்றத்திற்கும் தெய்வீக அர்த்தங்கள் உண்டு எனப் புராணங்கள் கூறுகின்றன.

**சரவணபவன்**

சூரபத்மனின் தொல்லைகள் குறித்து தேவர்கள் முறையிட்டதைக் கேட்ட சிவபெருமான் ஆறுவித தீப்பொறிகளைத் தமது நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்படுத்தினார். இப் பொறிகள் வாயுதேவனிடமும், அக்கினி பகவானிடமும் சென்றடைய அவர்களால் வெம்மை தாங்க முடியாமல் கங்கையில் விடப் பட்டன. கங்கை அந்த ஆறு தீப்பொறிகளையும் **சரவணப் பொய்கையில்** சேர்த்தாள். அவ் ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறி ஆறு தாமரை மலர்களில் சங்கம மாயின. இந்த ஆறு குழந்தைகளுக்கும் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் திருமுலைப்பால் கொடுத்து வளர்த்து வந்தனர். திருமுருகன் சரவணப் பொய்கையில் தோன்றியவன் (பவன்-தோன்றுதல்) என்ற காரணத்தால் **சரவணபவன்** என்றும் ஆறு தீப் பொறிகளையும் கங்கை சுமந்து சென்றமையால் **காங்கேயன்** என்றும், கார்த் திகைப் பெண்கள் திருமுலைப்பால் கொடுத்ததினால் **கார்த்திகேயன்** என்றும் திரு நாமங்கள் உண்டாயிற்று.







சரவணபவன்



கார்த்திகேயன்

**சோமஸ்கந்தன்**

இங்ஙனம் ஒருநாள் இடபவாகனத்தில் சிவபெருமான் உமையம்மையாருடன் முருகப் பெருமானைக் காணச் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளினார். சிவபெருமானின் ஆணையின் வண்ணம் உமாதேவியார் இடபவாகனத்திலிருந்து இறங்கிச் சென்று ஆறு திருவுருவங்களையும் இருகையாலும் வாரியணைத்து ஓருருவாக்கினார். தம் திரு முலைப்பாலை பொற்கிண்ணத்தில் எடுத்து ஊட்டி முருகப் பெருமானை சிவபெருமானிடம் கையளித்தார். சிவபெருமான் முருகப்பெருமானை ஏற்று தம்பக்கத்தில் உமையாளுடன் அமர்த்தி **சோமஸ்கந்த மூர்த்தியாக** திகழ்ந்தார். பின் இடபவாகனத்தில் திருக்கயிலாயம் அடைந்தார்கள்.







சோமஸ்கந்தமூர்த்தி



**கந்தன்**

ஒரு நாள் நாரதமுனிவர் ஒரு மாங்கனியை திருக்கைலாயம் சென்று சிவபெருமானிடம் கொடுத்தார். அம் மாங்கனியைக் கண்ட முருகப் பெருமானும் விநாயகக் கடவுளும் அந்த மாங்கனியை தங்களுக்கு தருமாறு வேண்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள். அதை இருவருக்கும் பகிர்ந்துகொடுக்காத சிவன் உலகுக்கு ஓர் அரிய தத்துவத்தை எடுத்துக்காட்ட நினைத்தார். குழந்தைகளே! யார் அகில உலகத்தையும் முதலில் சுற்றி வருகிறாரோ அவருக்கே இந்த மாங்கனி உரியது என்று கூறினார். உடனே முருகப் பெருமான் மந்திர சக்தியை மயிலாக்கி உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார். ஆனால் விநாயகப் பெருமான் தாய் தந்தையரை வலம் வந்து 'தந்தையே சகல பிர பஞ்சங்களும், அண்டசராசரங்களும் தங்களுக்கே அடக்கம், நான் தங்களை வலம் வந்து விட்டேன். அப்படியானால் அண்டங்கள் அனைத்தும் வலம் வந்ததாகத்தானே பொருள்' என்று கூறி மாங்கனியைப் பெற்றுக் கொண்டார். உலகை வலம் வந்த முருகன் மாங்கனி விநாயகர் கையில் இருப்பதைக் கண்டார். தந்தையே இது நியாய மல்ல, இனி இங்கு ஒரு கணமும் நான் இருக்க மாட்டேன் என்று கூறி, தான் அணிந்திருந்த அணி கலன்களையும், ஆயுதங்க ளையும் அங்கே அகற்றி விட்டு தண்டம் ஏந்தி மயில் மீதேறி கைலையை விட்ட கன்று பழனிமலையை அடைந்தார். அங்கு தண்டா யுதம் ஏந்தி துறவுக் கோலத்தில் தலை மொட் டையாக உருத்திராட்சம் அணிந்து கோவணத்துடன் நின்று **தண்டாயுதபாணி யாகத்** திகழ்ந்தார். கந்து என்றால் கோல் அல்லது தண்டாயுதத்தைக் குறிக்கும். கோல் ஏந்தி துறவுக் கோலத்தில் காணப்படும் திருவுருவே **கந்தன்** என்ற திருநாமத்தைப் பெறலாயிற்று.



**தண்டாயுதபாணி (கந்தன்)**

**ஞானசக்தீதரன்**

பராசக்தி, சூரபத்மன் உள்ளிட்ட அசுரர்களை அழிப் பதற்காக தனது அம்சமாக வேலை உருவாக்கி முருகப் பெருமானிடம் கொடுத்தாள். இவ்வேல் சக்திவேல், ஞான வேல் என்று அழைப்பதுண்டு ஆதலினால் அதனை ஞான சக்தி எனவும் வழங்குவர். ஞானசக்தியாகிய வேலை, முருகப்பெருமான் தனது வலக்கையில் ஏந்தியிருக்கின்றமையால் **ஞானசக்தித்ரன்** எனத் திருநாமம் பெற்றான்.



**ஞானசக்திதரன்**

**ஆறுமுகன்**

இவர் அக்கினியைத் தவிர வேறு யாருமில்லை. நெற்றிக் கண்ணி லிருந்து தோன்றிய வன். அவன் திரு அவதாரத்தைப் பற்றிச் சொல்லுமிடத்தில் தேவர்கள் வேண்டு கோளின் படி பரமேஸ் வரன் தனக்குள்ள ஐந்து முகத்துடன் பரா சக்தியின் ஒரு முகத் தையும் கொண்டு ஆறு முகமாக அவதரித்தார் என்பதாகும். இதிலிருந்து ஈசனே ஆறு முகனாகத் தோன்றினார்.



**ஆறுமுகன்**

**"ஈசனே அவன் ஆடலால் மதலையாயினன் காண்**
**ஆசிலா அவன் ஆறுமுகத்துண்மையால் அறிநீ**
**பேசில் ஆங்கவன் பரனொடு பேதகம் அல்லன்**
**தேசுலா வகன் மணியிடைக் கதிர்வருதிறம் போல்"**

என்று கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் குறிப்பிடுகிறார்.

அத்தகைய ஆறுமுகங்களையும் பன்னிரு கரங்களையும் கொண்டவனாய் வள்ளி தெய் வானை சமேதரராகவோ மயில் மீது அமர்ந்தோ காட்சி தருபவர் ஆறுமுகன். அவன் வைத்திருக்கும் பன்னிரு ஆயுதங்களில் வேலாயுதம் தவிர மற்றைய பதினொரு ஆயுதங்கள் ஏகாதசருத்திரர்கள். வேல் ஞானசக்தி, இருமனைவியர் - இச்சாசக்தி, கிரியாசக்தி, சேவல் கொடி - நாத தத்துவம் (ஒலிவடிவம்), மயில் - விந்து வடிவம் (ஒளிவடிவம்) குறிக்கின்றது.

நக்கீரர் ஆறுமுகனின் ஆறுதிருமுகங்களையும் பன்னிரண்டு திருக்கைகளையும் உலக நலன் கருதிப் பற்பல செயல்களையும் புரிதலைப் பின்வருமாறு விரிவாக விளக்கியுள்ளார்.

- ஒரு முகம் இருள் சூழ்ந்த உலகம் குற்றமின்றி விளங்கும் படியாக ஒளிக்கதிர்களை வீசுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒருமுகம் தன்னைப் பாடித் துதிக்கும் பக்தர்கள் மகிழும்படி அன்பையும் கருணையையும் பொழிகின்றது.
- ஒருமுகம் வேதங்கள், மந்திரங்களின்படி நெறி பிறழாமல் நடக்கும் யாகங்களைக் காக்கின்றது.
- ஒருமுகம் நூல்களாலும் குருமார்களாலும் விரித்துரைக்க முடியாத கருத்துக்களை தெளிவாக விளக்கிக் கூறுகின்றது.
- ஒருமுகம் தன்னை எதிர்க்கும் பகைவர்களை அழிக்க சக்தி தந்து அருள்புரிகின்றது
- ஒருமுகம் இளமையும், அழகும், அருளும் கொண்ட தேவியருடன் அமர்ந்து, புன்னகை புரிகின்றது.

பன்னிரண்டு திருக்கைகளை நோக்குங்கால்

1 ஆவது கை, சூரியனின் வெம்மையால் உயிர்களுக்குத் தீங்கு நேராதபடி பாதுகாக்கின்றது.
2 ஆவது கை, இடுப்பில் கம்பீரமாக வைக்கப் பெற்றுள்ளது.
3 ஆவது கை பிணிமுகம் என்னும் யானை ஊர்த்தியைச் செலுத்தும் அங்குசத்தை ஏந்துகின்றது
4 ஆவது கை செந்நிற ஆடையை அணிந்துள்ள துடையில்மேற் இருக்கின்றது.
5 ஆவது கை வேள்விகளுக்கு அசுரர்களால் கேடு ஏதும் நேராதபடி கேடயம் ஏந்தி வலமாகச் சுழற்றுகின்றது.
6 ஆவது கை வேல் ஏந்தி நிற்கின்றது.
7 ஆவது கை முனிவர்களுக்குத் தத்துவங்களைக் கூறியுணர்த்தி, மோன முத்திரை காட்டி மார்போடு விளங்குகின்றது.
8 ஆவது கை மார்பின் மாலையுடன் அழகு பெற்றுத் திகழ்கின்றது.
9 ஆவது கை வேள்விக்கு முத்திரை கொடுக்கின்றது.
10 ஆவது கை இனிய ஓசையுடைய மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்கின்றது.
11 ஆவது கை உலகுயிர்களை வாழ்விக்க மேகத்தினின்று மழையைப் பொழிவிக்கின்றது.
12 ஆவது கை தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்டுகின்றது.

பிற தெய்வங்களுக்கு இல்லாத வகையில் முருகப் பெருமான் ஆறுமுகங்கள் உடையவனாக விளங்குகின்றமை அவனது தனிப்பெரும் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. வழக்கமாகவுள்ள நான்கு திசைகள் மட்டுமன்றி மேல் கீழ் என்று எங்கும் பரவியுள்ளவன் முருகன் என்ற தத்துவத்திற்கு ஆறுமுகங்கள் உண்டாயின. அதனால் **ஆறுமுகன்** என்று திருநாமம் வழங்கப் பட்டது. இவரை **சண்முகன்** என்றும் அழைப்பர்.

**சேனாதிபதி**

அசுரனுடைய ஆற்றலுக்கு அஞ்சிய தேவர்கள் சிவபெருமானிடம் வந்து அசுரனின் வலிமையைச் சொல்லி முறையிட்டார்கள். திருச்செவி ஏற்ற சிவபெருமான் முருகப்பெருமானை அழைத்து மைந்தா! சூரபத்மன் தேவருலகத்தை அழித்து தேவர்களுக்குத் துன்பம் கொடுத்து வருகின்றான். சூரபத்மனையும் அசுரகுலத்தையும் அழித்து, தேவர்கள் உய்வு பெறவும், தர்மம் நிலைபெறவும் செய்யக் கடவாய் என்றார்.



சேனாதிபதி

அப்படியே முருகப் பெருமானும் தந்தை சொல் கேட்டு வீரபாகு தேவரை அழைத்து சூரபத்மனிடம் தூது அனுப்பி தேவர்களை சிறையிலிருந்து விடுவிக்கும்படி கூறுக என்றார். சூரபத்மனும் ஆணவச் செருக்கால் அதைக் கேட்காமல் முருகப் பெருமானிடம் போரிட ஆயத்தமானான். முருகப் பெருமானும் வீரவாகு தேவரும் பூத கணப்படை, கயிலைப்படை ஆகிய சேனைகளுக்கு தலைமை தாங்கி போருக்காக மண்ணுலகில் கிரவுஞ்ச மலையருகில் சேர்ந்தனர்.

முருகப்பெருமான் சேனைகளுக்கு பதியாக (தலைவனாக) விளங்கியமையால் **சேனாதிபதி, சேனானி** என்ற திருநாமங்கள் பெற்றான்.

**கிரவுஞ்ச பேதனர், தாரகாந்தன்**

நாரத முனிவர் முருகப் பெருமானைக் கண்டு வணங்கி கிரவுஞ்ச மலையைக் காட்டி கிரவுஞ்சன் என்ற அசுரன் அகத்தியரின் சாபத்தால் கிரவுஞ்ச மலையாகி விட்டான்.


தாரகாசூரன் யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு மாயமலை. உள்ளே செல்பவர்களை மாயையால் திசைதெரியாது தடுமாறச் செய்து, இருட்டுக் குகையில் அடைத்துக் கொள்ளும் தன்மையுடையது. இந்த மலையைச் சார்ந்த மாயாபுரியில் சூரபத்மன் தம்பி தாரகாசூரன் ஆட்சி புரிகின்றான். யானை முகத்தவன். மகா விஷ்ணுவைப் போரிட்டு வென்றவன். மகா விஷ்ணு விட்ட சக்கராயுதத்தை தன் மார்பில் ஆபரணமாக ஏந்தினான் என்று கிரவுஞ்சன் என்ற அசுரனைப் பற்றியும் தாரகாசூரனைப் பற்றியும் முருகப் பெருமானிடம் கூறினார். முருகப்பெருமான் வீர வாகுதேவரை அழைத்து மாயபுரியில் இருக்கும் அசுரர்களையெல்லாம் அழித்து தாரகா சூரனையும் வென்று வருமாறு கட்டளை யிட்டார். வீரவாகு தேவர் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி பூதப்படை, கயிலைப் படை வீரர்களுடன் மாயமாபுரி சென்று போரிட்டார். அசுரர் கள் பலர் மாண்டார் கள். அசுரர்கள் மாண் டிருப்பதைக் கண்ட தாரகாசூரன் கோபத் தால் தண்டத்தை எடுத்து பூதப்படைகள் மீது வீசினான். பூதப்படை வீரர்கள் பலரும் மாண்டனர். கயிலைப் படைவீரர்கள் தாரகாசூரன் மீது ஆயிரக்கணக்கில் அம்புகளை எய்தனர். வீரகேசரி என்பவனும் கோபத் தோடு தாரகாசூரன் மீது பல அம்புகளை எய்தி னான். தாரகாசூரன் தண்டத்தை வீரகேசரி மீது வீசினான். வீர கேசரி மயக்க முற்றுச் சாய்ந்தான்.



தாரகாந்தன்

வீரகேசரி மயக்க முற்றுச் சாய்ந்ததைக் கண்ட வீரவாகுதேவர் சினத்துடன் தாரகா சூரன் மீது ஆயிரக் கணக்கில் கணைகளை எய்து அவன் உடலெங்கும் புண்ணாக்கி விட்டார். தாரகாசூரன் வீரவாகு தேவருடன் எதிர்த்து போர் செய்ய முடியாமல் தன் தேரை விட்டு இறங்கி ஓடி கிரவுஞ்ச மலையில் உட்புகுந்து ஒளித்தான். வீரவாகு தேவரும் அவர்தம் துணைவர்களும் தாரகா சூரனைத் தேடிச் சென்ற போது கிரவுஞ்ச மலையின் குகையில் சிக்கி இருளில் வழிதெரியாது திகைத்து மயக்க முற்றனர். இதனை அறிந்த முருகப் பெருமான் ஞானசக்தி வேலை ஏவி அக் கிரவுஞ்ச மலையை பிளந்து வீரவாகு தேவர் முதலியோரை விடுவித்து தாரகா சூரனையும் கொன்றார்.



கிரவுஞ்ச பேதனர்

கிரவுஞ்ச மலையை பிளந்து அழித்த முருகப் பெருமானின் திருவுருவமே **கிரவுஞ்ச பேதனர்** எனப்படுகின்றார். கிரவுஞ்சம் - அன்றிற் பறவை போன்ற வடிவாகிய மாயமலை, பேதனர் - பிளந்தவர்.

தாரகாசூரனைக் கொன்று அழித்தருளினமை யால் **தாரகாந்தகர், தாரகாரி, தாரகாந்தன்** எனப் பல திருநாமங்கள் உண்டாயிற்று.

**விஸ்வரூபன்**

சூரபத்மனுக்கும் முருகப் பெருமானுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் சூரபத்மன் பல, மாய உருவெடுத்து முரு கப் பெருமானுடன் எதிர்த்துப் போரிட் டான். முருகப் பெரு மான் ஞானசக்தி வேலை ஏவி அவ னது மாய உருமாற் றங்களையும் அழித் தார். முருகப்பெரு மான் சூர பத்மனைப் பார்த்து உன்னு டைய மாய வடிவங் கள் அனைத்தை யும் அழித்து விட் டேன். நீ எமது உண்மை வடிவத் தைப் பார்ப்பாயாக என்று சூரனுக்கு உரைத்து தனது விசுவரூபத்தில் காட்சி அளித்தார். எல்லா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங்களும், மூவுலகங்களும் கோடி கோடி ஆன்மாக்களும் அவர் வடிவத்துள் அடக்கம் இருப்பதையும், மும்மூர்த்திகளையும் அவ் வடிவத்தில் சூரபத்மன் கண்டான்.

மயில் மீதமர்ந்து போரிடும் சிவபாலன் சிறுவன் என்று எண்ணினேன். மால், அயன், தமக்கும், ஏனைய தேவர்களுக்கும் மூலகாரணமான மூர்த்தியே! இந்த முருகப் பெருமானை பரமன் என்று எண்ணி ஊனுருக, உள்ளம் உருகிட முருகப்பெருமானின் விஸ்வரூபத்தை கண்டு வியந்து நின்றான். பிரமா, விஷ்ணு மற்றும் தேவர்களும் முருகப்பெருமானின் விஸ்வரூபத்தைக் கண்டு போற்றி துதிசெய்து அவரது பேரருளை எண்ணி மகிழ்ந்தார்கள். இதனாலே முருகப் பெருமானுக்கு **விஸ்வரூபன்** என்ற திருநாமம் உண்டாயிற்று.

### சூரசங்காரன்

முருகப்பெருமான் விஸ்வ ரூபம் நீங்கி பழைய நிலையை அடைந்ததும் சூரபத்மன் இவை எல்லாம் முருகனின் மாய விளையாட்டு என்று எண்ணி போரிட்டான்.




சூரபத்மன் முருகப் பெருமானுடன் போர் செய்ய முடியாமல் கடலின் நடுவில் பெரிய மாமரமாகி நின்றான். முருகப் பெருமானின் வேற்படை மாமரத்தை வெட்டியது. அழியாவரம் பெற்ற சூரபத்மன் பழைய வடிவம் பெற்றான். மீண்டும் வேற்படை சூரபத்மனை இருபிளவாக்கி அவனை கடலில் தள்ளியது. அவ் இரு பிளவுகளும் மயிலாகவும் சேவலாகவும் மாறியது. மயிலும் சேவலும் முருகப் பெருமானை எதிர்த்து வந்தன. முருகப்பெருமான் திருவருள் நிறைந்த ஞான நோக்கினால் சேவலும் மயிலுமாக வந்த சூரபத்மன் ஞானத்தைப் பெற்றான். சேவல் கொடியாகவும், மயில் தமக்கு வாகனமாகவும் இருக்குமாறு அருள் பாலித்தார்.





முருகப்பெருமான் சூரபத்மனை சம்காரம் செய்தமையால் **சூரசங்காரன்** என பெயர் பெற்றான். சூரபத்மனுடன் போரிடுவதற்காக மயிலாகவும், சேவலாகவும் மாறிய இந்திரனையம், அக்கினி தேவனையும் தங்களது பழைய உருவகத்துக்கே மாறிடுமாறு அருள் புரிந்தார். அவர் களும் தங்கள் சுயரூபத்துக்கே மாறி விட்டனர்.



### தேவசேனாதிபதி

சூரசங்காரம் செய்து தேவர்களை சிறைமீட்டு மும்மூர்த்திகளின் குறைகளைப் போக்கிய முருகப் பெருமானுக்கு தேவேந்திரன் நன்றியைப் புலப்படுத்த விரும்பி தன் மகள் தெய்வயானையாகிய தேவசேனாதேவியை திருப்பரங்குன்றத்தில் தேவர்கள் சூழ, சிவபெருமான் உமையுடன் எழுந்தருள, சிறப்பாக திருமணத்தை நடத்தி வைத்தார். அங்கு முருகப்பெருமான் தேவசேனா தேவியுடன் எழுந்தருளி தேவர்களுக்கு தலைவனாக **தேவ சேனாதிபதியாக** திருநாமம் பெற்று திருவருள் புரிந்து வருகின்றார். இவர் **தெய்வயானை காந்தன், தெய்வயானை காதலன்** என்ற திருநாமங்கள் கொண்டும் அழைக்கப்படுகின்றார்.



தேவசேனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வள்ளி கல்யாண சுந்தரர்**

முருகப்பெருமான் தெய்வயானையாளுக்கு கணவனாயினும் முருகப் பெருமானை வள்ளி கணவன் என்றே பெரும் பாலும் புகழ்ந்து போற்று வார்கள். முருகப் பெருமானுக்கு இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூவகைச் சக்திகளில் இச்சா சக்தியே வள்ளியம்மை என வழங்கப்படுகின்றது.



வள்ளி கல்யாண சுந்தரர்

காதலுக்கு முருகப் பெருமானுடன் ஒத்திசைந்து போவதில் வள்ளியம்மையார் சிறந்தவள் குறவர் குலமகள் ஆகிய வள்ளி நாயகியை முருகப் பெருமான் நயந்து வலிந்து வந்து மணந்து கொண்டவன். இங்ஙனம் வள்ளியம்மையை மணந்து கொண்ட இனிய எழில் நிலையிலுள்ள முருகப்பெருமானே **வள்ளி கல்யாணசுந்தரர்** ஆவார். இவரை **குறவன், வள்ளி மணவாளன்** என்ற திருநாமங்கள் கொண்டு அழைப்பர்.

**வள்ளி தெய்வயானை சமேதர்**

கற்பு, களவு என்னும் தமிழ் மக்களின் திருமண முறைகளில் தெய்வயானையம்மையாரின் திருமணம் கற்புத் திருமணம் ஆகும். இவள் அறக்கற்புடையாளும், செயலாற்றும் திறம் மிக்கவளும், புகழ் விரும்பாது பெரிதும் அடக்கமாக இருப்பதும் இவளின் இயல்பு ஆகும்.

இவள் செந்நிறம் உடையவள். கருங்குவளை மலரைக் கையில் ஏந்தி முருகப் பெருமானின் இடப் பாகத்தில் விளங்குகின்றாள்.



வள்ளி தெய்வயானை சமேதர்

வள்ளி நாயகியாரின் திருமணம் களவுத் திருமணம் என்பர். முருகப்பெருமான் போகியாய் இருந்து உலக உயிர்களுக்கு போகத்தைப் புரிதல் இறைவன் தன்மை ஆதலின் உலகில் இல்லற வாழ்க்கை நடத்தற் பொருட்டு முருகப் பெருமான் வள்ளியம்மையாரோடு தன் ஒரு திருமுகத்தாற் பேசி மகிழ்ந்து நகையமர்ந்திருக்கின்றான். இவள் கருமை நிறம் வாய்ந்தவள். கையில் தாமரைமலர் ஏந்தி முருகப்பெருமானின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றாள். இந்தநிலையில் உள்ள முருகப்பெருமான் **வள்ளி தெய்வயானை சமேதரர்** என்று அழைக்கப்படுகின்றார்.

**பிரமசாஸ்தா**

திருக்கயிலை சென்று சிவபெருமானை வணங்கி வரும் தேவர்கள் கயிலைமலைச் சாரலிலுள்ள கந்த வெற்பையை அடைந்து முருகப் பெருமானையும் வணங்கி அருள் பெற்றுச் செல்வார்கள். பிரமன் மட்டும் முருகப் பெருமானை வணங்காமல் கைகட்டி நின்றாள். பிரமதேவன் மனத்திலுள்ள ஆணவத் தடிப்பையறிந்த முருகப் பெருமான் சிருட்டித் தொழில் செய்யும் உனக்கு வேதம் வருமா? வருமாயின் ஓரிரு வார்த்தை கூறுக என்றார். பிரமதேவன் ஓம் என்று தொடங்கினார் போதும் இதன் பொருள் யாது? என்று கேட்க பிரமதேவன் விழித்தார். இது கூடத் தெரியாத நீ சிருட்டிப்பது எப்படி? என்று நாலு தலைகளும் குலுங்கக் குட்டி சிறையில் அடைத்துத் தாமே சிருட்டித் தொழிலைத் செய்தனர்.



பிரமசாஸ்தா

முருகப் பெருமான் வள்ளி நாயகியோடு கூடி நின்று படைப்புத் தொழிலை தானே செய்தமையால் **பிரமசாஸ்தா** என்ற திருநாமம் உண்டாயிற்று.

**சுவாமிநாதன்**

இதனையறிந்த திருமால் பிரமனை விடுவிக்க எண்ணிச் சிவபெருமானிடம் சென்று விண்ணப்பித்துக் கொண்டார். சிவபெருமானும் நந்திதேவரை முருகப் பெருமானிடம் அனுப்பி, பிரமனை சிறையிலிருந்து விடுக எனப் பணித்தார். நந்தி தேவர், முருகப் பெருமான் உடன் படாமையைக் கண்டு திரும்பிச் சென்று சிவபெருமானிடம் தெரிவித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் உடனே இடபத்தில் ஏறிக் கயிலை மலைச் சாரலிலுள்ள கந்த வெற்பையை அடைந்தார். அங்கு முருகப் பெருமானை வணங்கி பிரமதேவனை சிறையிலிருந்து விடுக என்றார். முருகப் பெருமானும் தந்தை சொல் கேட்டு பிரம தேவனை சிறையிலிருந்து விடுவித்தார். சிவபெருமானும் மைந்த! பிரணவப் பொருள் உனக்குத் தெரியுமோ? தெரிந்தால் சொல்க என்று வினாவினார். முருகப் பெருமானும் பிரணவத்தின் பொருளை முறைப்படி கேட்டால் உரைப்பேன் எனக் கூறினார். சிவபெருமான் அதற்கு இசைய முருகப்பெருமான் சிவபெருமானின் திருச்செவியில் பிரணவத்தின் பொருளை ஓதியருளினார். முருகப்பெருமான் தந்தை சுவாமிக்கு உபதேசம் செய்தமையால் **சுவாமி நாதன், தகப்பன் சுவாமி** என்ற திருநாமம் உண்டாயிற்று.



சுவாமிநாதன்

**ஓம்கார ஸ்வரூபன்**

முருகப் பெருமான் தந்தை சுவாமிக்கு பிரணவப் பொருளை ஓதியருளியதாவது! :
"ஓம் பூ; ஓம் புவ; ஓம் ஸுவ; ஓம்மஹ;
ஓம் ஜன; ஓம் தப; ஓம் சத்யம்;
என்ற வேத மந்திரங்கள் கூறும் பூமி, புவர்லோகம், சுவர்லோகம், மகலோகம், சனலோகம், தபலோகம், சத்தியலோகம் என்பன எல்லாம் ஓங்காரமே ஆகும்.

ஓம் என்ற பிரணவ மந்திரமே எல்லா மந்திரங்களுக்கும் மேலானது

மந்திரங்கள் யாவும் ஓம் என்ற பிரணவத்தை முதலாகக் கொண்டே இயங்கப்பெறும்.

பஞ்சமகா பூதங்களும், ஆன்மாவும், மனித யாதிகளும், சகல ஜீவராசிகளும், தாவர இனங்களும் ஓங்காரத்திலிருந்தே தோன்றி விளங்குகின்றன.

ரிக் யசுர் சாம அதர்வண வேதங்களும் மற்ற உப வேதங்களும் ஓங்காரத்திலிருந்தே தோன்றின.



அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் ஆகிய ஐந்தும் கூடிப் பிறந்ததே ஓங்காரமாகும்.

இவை ஐந்திற்கும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசன், சதாசிவ ஆகியவர்களே அதி தேவதைகள் ஆவர். சரஸ்வதி, இலட்சுமி, ருத்திரி, மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோர் இவர்களின் பஞ்ச சக்திகளாகவும் உள்ளனர்.



திருக்கைலாயம்

பரமசிவனே அதி தேவதைகளாகவும், பராசக்தி பஞ்சசக்திகளாகவும் விளங்குகின்றவர்களாவர்.

இத்தனைக்கும் பிரணவப் பொருளாய், பிரணவ சொரூபியாய், பிரணவாதிபராய் விளங்கின்றவர், திருக்கைலாயத்தில் பேரொளியாய், அகண்ட பரிபூரணமாய், எங்கும் தானாய், ஞானசோதியாய் விளங்குகின்ற பரமசிவன் தாங்களே ஆகும்.

திருக்கைலாயம் பரலோகம், பராபரம், நாதாந்தம், தற்பரம், சிற்பரம் என்ற பெயர்களால் அழைக்கப்படும்.

ஆகவே ஓங்காரத்தை நினைப்பவன் ஆதி முதற் கடவுள் பரமசிவனையே நினைத்தவனாகின்றான். இதனால் ஓம் என்ற பிரணவ மந்திரம் சிவ மந்திரம் என்று கூறுவார்கள்.



ஓங்கார பிரணவப் பொருளாக விளங்கக் கூடியவர்கள் பரமசிவன் தாங்களும், அன்னையாகிய பராசக்தியும் எனது சகோதரன் விநாயகக் கடவுளும் யானுமே ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பராசக்தி, நெருப்பில் சூடு கலந்திருப்பது போல பரமசிவத்தோடு பிரியா நிற்கும்

சிவம் சக்தியை கூடினால் பிரபஞ்சம் தோன்றும்.

சக்தி சிவத்தை கூடினால் பிரஞ்சம் மொடுங்கும் என்பதாகும்.

ஓம் என்ற பிரணவம் ஆறு வகையாகவும் ஏழு வகையாகவும் கொள்ளலாம். அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம், சக்தி என்னும் இவையே ஆறுவகைகளாகும். இவற்றுடனே சாந்தம் என்னும் ஒன்று சேர்ந்து ஏழுவகையாகும். ஆறுமுகப் பெருமானிடத்தில் வேல் - சக்தியைக் குறிக்கின்றது. மற்றைய ஆறும் ஆறுமுகங்களாக வுள்ளன. ஆகையால் முருகப் பெருமான் ஆகியயானும், **ஓங்கார வடிவினன், ஓங்கார ஸ்வரூபன்** ஆவேன். எனவே **பிரணவ ஸ்வரூபி**யானயாமே பரமசிவமாகவும், பரமசிவனே யாமுமாகவும் இருக்கின்றார்கள் என்பதாகும்.





ஓங்கார ஸ்வரூபன்

இவ்வாறு முருகப்பெருமான் **ஓங்காரப் பிரணவத்தின் உண்மைப்** பொருள் எவையோ அவையெல்லாவற்றையும் சிவபெருமானுக்கு மொழிந்து அருளினார்.

### சிவகுரு

சிவபெருமான் முருகக் கடவுள் கூறியதைக் கேட்டு தமக்குத் தாமே மகனாக விளங்கிய சிவபெருமான் தமக்குத் தாமே ஆசாரியராக இருந்து தாமாகிய தத்துவப் பொருளைத் தாமே சொல்லத் தாமே கேட்டுக் கூத்தாடினார்.



சிவகுரு

லோக குருவாகிய சிவபெருமானுக்கு குருவாகவும் வீற்றிருந்து பிரணவத்தின் பொருளை உபதேசித்ததினால் முருகப் பெருமான் பரமேஸ்வரனுடைய குருவாயினார். இதனால் **சிவகுரு** என்ற திருநாமம் உண்டாயிற்று. முருகப் பெருமான் உலகம் உய்யவும் உலக மக்களுக்கு அறிவப்படுத்தவும் பிரணவத்தின் பொருளை அகத்தியருக்கும் உபதேசித் தருளினார்.

### சுப்பிரமண்யன்

அழகும் இளமையும் இறைமையும் மிக்க நிலையில் முருகப் பெருமான் பாலசுப்பிரமண்யன் எனப்படுவார். வேதங்களுக்குத் தலைவன், சிறந்த தேவன், ஆனந்தமயமானவன், சுத்த பிரம்மத்தினின்று தோன்றியவன் என்ற காரணத்தினால் சுப்பிரமண்யன் என்பர். இவரை அன்புடன் வழிபட்டு வந்தால் இளமை, அழகு முதலிய நலன்களையும் பெற்று வாழலாம்.




சுப்பிரமண்யன்



பாலசுப்பிரமண்யன்

### கோழிக் கொடியோன்

கோழிக்கு சேவல் என்பது பெயர். சேவல் அதிகாலையில் இருள் நீங்க ஒளியை விரும்பி கூவுவதை நாம் அவதானிக்கின்றோம். சேவல் ஒளியை விரும்புதல் இருளைப் போக்கி அறிவாகிய ஒளியைப் பரப்புதலையும், கூவுதல் என்பது ஓங்கார மந்திரத்தை ஒலிவடிவாய் உலகுக்கு உணர்த்துவ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேயாகும். கோழி நாத தத்துவம் (ஒலிவடிவம்) என்பர். கோழி முருகப் பெருமானுக்கு கொடியாக விளங்குவதால் முருகப் பெருமானை **கோழிக் கொடியோன்** என்று அழைக்கப்பட்டான்.

**மயில்வாகனன்**

மாங்கனியைப் பெறுவதற்காக ஏற்பட்ட போட்டியின் போது மந்திர சக்தியை மயிலாக கொண்டு உலகை முருகப் பெருமான் வலம் வந்தார். இம் மயில் **மந்திரமயில்.**


மந்திரமயில்

சூரபத்மனுடன் போரிட்ட போது இந்திரன் மயில் வடிவம் கொண்டு முருகப் பெருமானைத் தாங்கியதால் அது **இந்திர மயில்.**


இந்திரமயில்

சூரபத்மனுடன் போரிட்டு அவனை மயிலாக்கி தமக்கு வாகனமாகக் கொண்டது **சூரமயில்** ஆகும்.


சூரமயில்

முருகப் பெருமான் மயிலை வாகனமாகக் கொண்டதால் **மயில்வாகனன், சிகிவாகனன், மஞ்ஞையூர்தி** என்ற திருநாமங்கள் உண்டாயிற்று.

மயில் தன் அழகால் யாவரையும் மயக்க வல்லது. எனவே அதனை 'மாயை' என்பர். சுத்த மாயை என்ற விந்து தத்துவமே முருகப் பெருமானுக்கு மயிலாக விளங்குகின்றது. இது கண்கவரும் ஒளியுடைய தாய்ப், பலவகை நிறங்களைக் கொண்டு திகழ்தல் காணலாம். மயில் தோகை விரித்தாடும் காட்சி ஓங்கார வடிவம் போன்றிருக்கும். அத்தகைய மயிலின் மீது அமர்ந்து எழுந்தருளிக் காட்சி தரும் பேற்றையே அருணகிரிநாதர்


மயிலின் ஓங்கார வடிவம்

**"ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே**
**முருகன் உருவம் கண்டு தூங்கார் "**

என அருளிச் செய்து போற்றியுள்ளார்.

**முருகப் பெருமானின் வழிபாட்டின் சிறப்பு**

எந்தக் காரியங்களும் விக்கினமில்லாமல் நடைபெற கணபதியையும், உடம்பு ஆரோக்கியமாக இருக்க சூரிய நாராயண மூர்த்தியையும், வாழ்க்கையில் பாதுகாப்புக்கு மகாவிஷ்ணுவையும், உடல் வலிமையுடன் இருப்பதற்கு அம்பிகையையும், ஞானத்தைப் பெறுவதற்கு சிவபெருமானையும் பூஜிக்க வேண்டும்.



முருகப்பெருமானை, பூஜிப்பதால் இந்த ஐவரையும் பூஜித்த பலன் அடையமுடிகின்றது. அருணகிரிநாதரும் தன் திருப்புகழில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

**"ஐந்து பூதமும் ஆறு சமயமும்**
**மந்திர வேதபுராண கலைகளும்**
**ஐம்பதோர் விதமான லீலைகளும் - வெகுருப**
**அண்டராதி சராசரமும் உயர்**
**புண்டரீகனும் மேக நிறவனும்**
**அந்தி போலுருவானும் நிலமொடு - வெயில் காயில்**
**சந்திரர் சூரியர் தானும் அஜபையும்**
**விந்து நாதமும் ஏக வடிவமும்**
**தன் ஸ்வருபமாக உணர்வது சிவயோகம் ".**

இவை எல்லாம் தாண்டி ஏக வடிவமாக நிற்பவன் முருகப்பெருமான்.

ஆண்டியாய் நின்ற கந்தசுவாமியிடம் சிவன் கூறியதாவது: 'மைந்தா! நானும் சக்தியும் நீயன்றோ' என்னைக் குறித்துச் செய்யப்படும் வழிபாடும் உன் அன்னையைக் குறித்து செய்யப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் வழிபாடும், உனக்கேயாகும். உன்னை பூஜித்தால் எங்கள் இருவரையும் பூஜித்த பலன் கிடைக்கும் என்றார்.

பரமசிவன் உமையம்மைக்குக் கூறியதாவது: நம் குமாரனே எல்லா தேவ வடிவாகவும், எல்லா உலக வடிவாகவும், எல்லா உயிர்களின் வடிவாகவும் விளங்குகின்றான். ஒரு விளக்கிலிருந்து மற்றொரு விளக்கு ஏற்றப்படுவது போல, ஜோதி வடிவாகிய நம்மிடமிருந்து சுடர்வடிவாக அவன் தோன்றினான் என்பதாகும்.




சிவசண்முக மெஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்னும் சாதாரணப் பழமொழிக்கு பின்வருமாறு பொருள் விளக்கம் கொடுத்துள்ளார்.

சட்டியில் (சஷ்டியில்) இருந்தால் (விரதம் இருந்து வழிபட்டால்) அகப்பையில் (அகமாகிய வயிற்றின் கண் உள்ள கருப்பையில்) வரும் (மகப் பேறு வாய்க்கும்) என்பது அவர்கள் சொல்லிய விளக்கமாகும்.

எனவே இவையாவும் முருகதத்துவ நூல்களின் மூலம் முருகப்பெருமானின் வழிபாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

எனவே முருகனை நாம் வழிபடுவதால் மற்றைய தெய்வங்களை வழிபட்ட பலனை அடைய முடியும். தேவர்களைக்காக்க அவதரித்த முருகப்பெருமான் தன்னை மெய் அன்போடு வழிபட வருகின்ற அன்பர்களுக்கெல்லாம் பல திருவுருவங்களில் அருள்புரிந்து வருகின்றான். முருகப் பெருமானை நான், எனது என்ற அகங்காரங்களைப் போக்கி, தீய எண்ணங்கள் பேராசைகள் என்பவற்றை நீக்கி, மனம் சுத்தமாக வைத்து, சிவ சின்னங்கள் தரித்து, இறைவனை நினைத்து பக்திப் பாடல்கள் பாடி, விரதமிருந்து ஓம் முருகா, ஓம் சரவண பவ என்ற மந்திரங்களை மனதால் சொல்லி, தியானம் இருந்து, அன்பால் உருகி உங்கள் குறைகளை எல்லாம் முருகப் பெருமானிடம் எடுத்துக் கூறி, அவன் திருவடிகளில் பணிந்து நித்தம் தொழுது வந்தால், நோய் பிணி நெருங்கா. வந்த நோயும் தீரும், அடங்காத பேய்களும், துஸ்டப் பிசாசுகளும் துர்தேவதைகளும் விலகும், மரண பயம் இருக்காது, யமதர்மனும் பக்தர்களைக் கண்டு விலகுவான். தீங்குகள் செய்வோர் அழிவார்கள், எதிரிகள் பயம் நீங்கும். சகல செல்வமும் சேரும், நல்லன வெல்லாம் நிறை வேறும், எல்லோரும் இன்பசுகமாக நீண்டகாலம் வாழ்ந்து இறைவனடி சேரலாம்.



**முருகா என உனை ஓதும்**
**தவத்தினர் மூதுலகில்**
**அருகாத செல்வம் அடைவார்**
**வியாதி அடைந்து நையார்**
**ஒரு காலமும் துன்பம் எய்தார்**
**பரகதி உற்றிடுவார்**
**பெருகாலன் நாடு புகார்**
**சமராபுரி புண்ணியனே.**



**ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்**
**கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்**
**ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க**
**மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 இல் யாழ் விருது பெறும் உயர்திரு. வே.பொ.பாலசிங்கம் அவர்கள்



சைவசமய வளர்ச்சியிலும் அறப் பணிகளிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர்களில் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் யாழ் விருது வழங்கிக் கௌரவிப்பதென்ற சைவசமய விவகாரக் குழுவினது ஏகமனதான தீர்மானத்திற்கமைவாக 2007ஆம் ஆண்டுக்கான யாழ் விருதுடன் கூடிய கௌரவத்தினைப் பெறுபவர் நம் எல்லோருக்கும் நன்கு அறிமுகமான யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் தற்போதைய வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளருமாகிய திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்களே.

இலங்கையிலுள்ள மாநகரசபைகளில் இரண்டாவது இடத்தினை முன்னொரு காலத்தில் வகித்து வந்த யாழ்ப்பாண மாநகரசபை வலுவான தொரு உன்னத நிலையில் இயங்கிக் கொண்டிருந்த சமயம் அச்சபையின் மாநகர ஆணையாளராக 15.05.1990 இல் பதவியேற்ற திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்கள் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் நல்ல நிலையில் மாநகரசபையை நிர்வகித்து வந்தவர்.

இவரது நிர்வாக காலத்தில் உள்நாட்டு யுத்தம் உச்சக் கட்டத்திலிருந்தது. தமது சாதுரியமான போக்கு, அடக்கமான நடவடிக்கை, எவ்விடத்திலும் பொறுமை காத்தல், மலர்ந்த முகம், மகிழ்வான பேச்சு, எதிரிகளையும் கவரும் சுபாவம், வெள்ளை உள்ளம் போன்ற தமது நற்பண்புகளினால் நெருக்கடியான பல சந்தர்ப்பங்களில் மாநகர சபையையும், அதன் பணியாளர்களையும் காத்த பெருமகன் அவர்.

இவரது நிர்வாக காலத்திலேயே சைவசமய விவகாரக்குழு தோற்றம் பெற்றது. இக்குழுவின் காப்பாளராக ஆரம்பம் முதல் 2001 ஆம் ஆண்டு வரை சிறப்பாகவும், எமக்கு உந்துசக்தியாகவும் பணியாற்றி வந்தார். விவகாரக் குழுவினது ஆக்க பூர்வமான ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் எல்லையற்ற ஆதரவும், பரிபூரணமான ஒத்துழைப்பும் வழங்கி வரலானார்.

உயர்ந்த உருவமும், உள்ளமும் கொண்ட திரு.பாலசிங்கம் அவர்களது நிர்வாக காலத்திலேயே அதாவது 1993 ஆம் ஆண்டிலேயே முதலாவது நல்லைக் குமரன் மலர் வெளியிடப்பட்டது. சைவ சமய விவகாரக்குழுவின் ஆரம்பகால தலைவராகச் செயற்பட்டு வந்த வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனுடன் ஒன்றிணைந்து மலர் வெளிவரவும் குழுவின் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதற்கும் பக்கத்துணையாக இருந்தமையை எம்மால் எக்காலமும் மறக்க முடியாது.

நல்லூர் பண்டாரமாளிகை வளவிலமைந்துள்ள ஆதி நரசிங்க வைரவர் ஆலயத்தினைப் புனரமைத்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாநகர சபையின் ஒவ்வொரு பகுதியினரும் பூசை செய்து வர கால்கோளிட்டவர் திரு.பாலசிங்கம் அவர்கள். அவர் ஆரம்பித்த அறப்பணி தற்போதும் சிறப்பாக இடம்பெற்று வருவது அவரது அறப்பணிக்கு தக்கதொரு சான்றாகும். சாயி பஜனையை அலுவலகத்திற்கு அறிமுகம் செய்த பெருமையும் இவரையே சாரும்.

அலுவலகத்திற்கு வரும் வழியில் தினமும் நல்லைக் கந்தனைத் தரிசித்து அங்கிருக்கும் வறியவர்களுக்கு தர்மம் வழங்கிய பின்னரே தமது அலுவலகப் பணியை தொடங்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 பேருக்கு நல்லூர் முருகனின் வாயிலில் உணவுப் பார்சல்களை வழங்கி ஏழைகளின் பசியைப் போக்கியவர்.

போராட்ட காலத்தில் மின்சாரம் இல்லாது யாழ் நகர் இருளில் மூழ்கியிருந்த வேளையில் தெருவிளக்கு அமைத்து ஊருக்கு வெளிச்சம் வழங்கிய உத்தமர். திணைக்களத் தலைவர் களுடன் கைகோர்த்து யாழ் நகர மக்களை நோய் நொடியின்றிப் பாதுகாத்து, அவர்கள் நலமே வாழ நந்நீரை வழங்கி இலகுவாகப் போக்குவரத்துச் செய்ய வீதிகளைச் செப்பனிட்டு, வரிவிலக்களித்து அவர் ஆற்றிய சேவை அனைவராலும் மனங் கொள்ளத்தக்கது.

தெய்வ சிந்தனையும் கடவுள் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்ற திரு.பாலசிங்கம் அவர்கள் பகவானின் அடியவனாதலினால் எவர் ஒருவருக்கும் தீங்கிழைக்காது மாநகர ஆணையா ளராக சிறப்பாகப் பணியாற்றி வந்தமையால் உயர் பதவிகள் பலவற்றைப் பெற்றார் என்றால் அது மிகையாகாது. உள்ளூராட்சி ஆணையாளராக, பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக, தற்போது பொதுநிர்வாக அமைச்சின் செயலாளராக அவர் பதவி வகித்தாலும் அவரது பெயர் மாநகர சபையில் இன்றும் ஒலித்துக் கொண்டிருப்பதற்கு அவரது அன்பான சுபாவமும், இன்முகத்தோடு அனைவரையும் வரவேற்கும் பண்பும் எல்லையற்ற சகிப்புத்தன்மையுமே முக்கிய காரணமாகும்.

மாநகரசபைக்கு மட்டுமன்றி எம் இனத்தவருக்கும் பல வழிகளிலும் இவரது சேவை தடையின்றித் தொடரும் விதத்தில் திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்கள் பூரண ஆரோக்கியத்தோடு நீண்டகாலம் வாழவேண்டுமென நல்லைக்கந்தனின் தாள்பணிந்து இறைஞ்சுவோமாக.

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

**இ.இரத்தினசிங்கம்**
செயலாளர்

# நல்லைக்குமரன் மலர் ஆய்வு செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் 1993 | - திரு.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் 1994 | - பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் 1995 | - பேராசிரியர் குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் 1996 | - சிவஸ்ரீ சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் 1997 | - கலாநிதி எஸ். சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் 1998 | - திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் 1999 | - பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் 2000 | - கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் 2001 | - திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் 2002 | - கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் 2003 | - கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் 2004 | - திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் 2005 | - பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| | | - ஈஸ்வரநாதபிள்ளை குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் 2006 | - ஆய்வு செய்யப்படவில்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2006ம் ஆண்டு முடிவுற்றவேளை ...

இ. இரத்தினசிங்கம்
செயலாளர்

யாழ்ப்பாணம் மாநகரசபையானது தனது வழமையான சேவைகளுடன் நல்லைக் கந்தனின் 2006ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செவ்வனே மேற்கொண்டு வந்தது. 30.07.2006 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான முருகனின் உற்சவம் ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெற்ற போதிலும் 11.08.2006 அன்று ஏற்பட்ட திடீர் யுத்தத் தினாலும், தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டம் போன்றவற்றினாலும் மிகுந்த பதட்டத்தின் மத்தி யில் சோபை இழந்து மிக அடக்கமாக முடிவுற்றது.

2006ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் மலரின் அச்சிடும் வேலைகள் முடிவுற்று வெளியீட்டு விழாவிற்கான திகதி நிர்ணயம் செய்து பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாட்டு நிலைமை காரணமாக பின்போடாது வெளியீட்டு விழாவினை எவ்வாறாயினும் நடாத்தி முடிக்க வேண்டுமென்ற பலரது ஆலோசனைக்கு அமைவாக 20.08.2006 அன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் மிக எளிமையாக நடாத்தி முடித்தோம்.

வழமைபோன்று 30.12.2006 அன்று யாழ் மாவட்டம் முழுவதிலுமுள்ள 05 கல்வி வலயங்களை உள்ளடக்கி 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் பரீட்சையை நடாத்திய வேளை, எதிர்பாராத விதமாக தென்மராட்சியில் திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக அங்கு பரீட்சை தடைப்பட்டது. தென்மராட்சி மாணவர்களுக்கான பரீட்சையை 13.01.2007 அன்று நடாத்தியதனால் வழமைப் பிரகாரம் மகா சிவராத்திரி தினத்தன்று பரீட்சைக்கான பரிசளிப்பு விழாவினை நடாத்த முடியாது போய்விட்டது. எவ்வாறாயினும் 25.05.2007ஆம் திகதியன்று பரிசளிப்பு விழாவினை நாவலர் கலாசார மண்டபத்தில் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளரு மாகிய திரு.மு.செ.சரவணபவ அவர்களது தலைமையில் வெகு சிறப்பாக நடாத்தி முடித்தோம்.

எமது குழுவினால் வருடந்தோறும் நடாத்தப் படுகின்ற சமய அறிவுப் பரீட்சை மாணவர்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்றிருப்பதனால் 2006ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிவுகள் இங்கே பிரசுரமாகின்றன.

2006ஆம் ஆண்டில் கல்விசார் நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளத் தகுதியான மாணவர்கள் 29 பேரை கல்லூரி அதிபர்களின் ஒத்துழைப்புடன் தெரிவுசெய்து தலா ரூபா 1000/- வீதம் வழங்கியுள் ளமை எமது குழுவினது பணிகளில் முதன்மை யானதாகும்.

சைவசமய விவகாரக் குழுவினது பணிகள் மென்மேலும் வளர்ச்சி பெற்று ஒழுக்கமும் அமைதியும் பேணும் சமுதாயம் ஒன்று உருவாகி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டுமென நல்லைக் கந்தனின் தாள் பணிந்து இறைஞ்சு கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு
## சமய அறிவுப் போட்டி 2006 - பரீட்சை முடிவுகள்

**பாலர் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | : | கார்த்திகா சிவப்பிரகாசம் | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை |
| இரண்டாம் இடம் | : | கோகுலன் சத்தியசீலன் | யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம் |
| மூன்றாம் இடம் | : | டினோஜா ஜெயக்குமாரன் | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| விசேட சித்தி | : | 131 | |

**கீழ்ப் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | : | மகேந்திரராஜா ரம்மியா | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| இரண்டாம் இடம் | : | மகேந்திரன் மாதங்கி | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| மூன்றாம் இடம் | : | லக்சிப்பிரியா பாலச்சந்திரன் | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| விசேட சித்தி | : | 38 | |

**மத்திய பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | : | முத்துராசா மிதுலா | யா/இணுவில் மத்திய கல்லூரி |
| இரண்டாம் இடம் | : | பிரியங்கா செல்வம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| மூன்றாம் இடம் | : | லக்சணா கமலநாதன் | யா/மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை |
| விசேட சித்தி | : | 72 | |

**மேற்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | : | திரோஜி கிருஸ்ணகுமார் | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| இரண்டாம் இடம் | : | கீர்த்தனா நித்தியானந்தம் | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| மூன்றாம் இடம் | : | சூரியதாட்சாயினி சூரியகுமாரன் | யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி |
| விசேட சித்தி | : | 15 | |

**அதிமேற் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | : | மதுரா சச்சிதானந்தம் | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| இரண்டாம் இடம் | : | ராதிகா இராஜசிங்கம் | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| மூன்றாம் இடம் | : | நிஷா இராஜகோபால் | யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி |
| விசேட சித்தி | : | 15 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் – 2007

## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு


## எங்கள் உளங் கனிந்த நன்றிகள்

2007ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" பதினைந்தாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மற்றும் சைவப் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களை தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இவ் விளம்பரங்களைப் பெற்றுந்தந்துதவிய ஓய்வுபெற்ற சிறாப்பர் திரு.த.கனகசபை அவர்களுக்கும்,

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன்தாள் இறைஞ்சுகின்றோம்.

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழு-2006



இருப்போர் – இடமிருந்து வலம்

திரு. ந. விஜயசுந்தரம், (பதிப்பாசிரியர்) திரு. இ. இரத்தினசிங்கம், (செயலாளர்) உயர்திரு சீ.வீ.கே. சிவஞானம், (தலைவர்) திரு. து. சோமசுந்தரம், (பொருளாளர்) திரு. த. கனகசபை, (விளம்பர அனுசரணையாளர்)

நிற்போர் – இடமிருந்து வலம் நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. நா. இரகுமார், திரு. ஞா. மோகனசுந்தரம், திரு. சோ. கணேசநாதன், திரு. பு. ஆறுமுகதாசன், திரு. து. இராஜன், திரு. கு. விஜயகுமார், செல்வி. கு. சிவநந்தினி, திரு. பா. சிவஞானவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு - 2007



**முன்வரிசை இடமிருந்து வலம்:-**

செல்வி த.தாரணி திரு த.கனகசபை (விளம்பர அனுசரணையாளர்) திரு து.சோமசுந்தரம் (பொருளாளர்) திரு மு.செ.சரவணபவ (தலைவர்) திரு இ.இரத்தினசிங்கம் (செயலாளர்) திரு ந.விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்) செல்வி கு.சிவநந்தினி

**பின்வரிசை இடமிருந்து வலம்:-**

திரு.நா.இரகுமார் (நி.ச.உறுப்பினர்) திரு.சோ.கணேசநாதன் (நி.ச.உறுப்பினர்) திரு.சி.சிவராஜேஸ்வரன் (நி.ச.உறுப்பினர்) திரு.ச.லோகசிவம் (நி.ச.உறுப்பினர்) திரு.பு.ஆறுமுகதாசன் (நி.ச.உறுப்பினர்) திரு.து.இராஜன் (நி.ச.உறுப்பினர்) திரு.கு.விஜயகுமார் (நி.ச.உறுப்பினர்) திரு.ஞா.மோகனசுந்தரம் (நி.ச.உறுப்பினர்) திரு.ப.சிவஞானவேல் (நி.ச.உறுப்பினர்) திரு.சி.கிருஷ்ணமூர்த்தி (நி.ச.உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா முருகா வந்தெம்மைக் காத்தருள்வாய் நாளுண்டோ பொழுதுண்டோ தனை வணங்க
நேரமுண்டோ நித்தம் கேட்பதெல்லாம் நாம், சண்முகனே! ஆள வேண்டும் நம் நிலத்தை
நமதாக்கித் தந்திடுவாய்!



ஆறுமுகப் பெருமான் ஒளி வீசும் தங்க நகைகள் அணிந்து ரதபவனி
வருகின்றார். நவநாகரீக மங்கையரே! நீங்களும் ஒளி வீசும் 22 கரட் தங்க
நகைகளை அணிந்து முருகனை தரிசிக்கக் கூடாதா –நாடுங்கள்

# பாலகிருஸ்ணா ஆபரணமாளிகை

விதம் விதமான டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைச் செய்து கொள்ள வசதியாக
நல்லூரான் முன்னாலேயே !!

# Balakrishna Jewel House

**616, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**



நல்லை நாயகனே! நல்ல வழிகாட்டி நம்மை நீ ஆண்டிடா
எல்லை இல்லா அருளை நீ தந்திடுவாய்
உன் திருப்பாதம் பற்றுவதற்கு

# ஈஸ்வரன் ரேடிங்கோ

லுமாலா, ஹீரோ துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

**விற்பனையில் முன்னணியில் நிற்பவர்கள்**

ஹீரோ துவிச்சக்கர வண்டிகள்
ஹீரோ துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள்
நேரடியாக இறக்குமதி செய்பவர்கள்

# ESWARAN TRADERS

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2813, 021 222 3590, 021 222 3048

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லையிலே குடிகொண்ட வேல் முருகா நாடி வந்தோர் குறை
தீர்ப்பாய் வேல்முருகா நெஞ்சுருகி வணங்குகின்றோம் உன் திருப்பாதம்

எல்லாம் உங்கள் தேவைகளுக்கு

விளைவு சூடம், அபிஷேகச் சாமான்கள், புதுமனை அத்திவாரப் பொருட்கள் நாள் சரக்குகள், குங்குமப் பூ
விவாக முகூர்த்தப் பொருட்கள், அஷ்ட பந்தன மருந்துத் திரவியங்கள், பச்சைச் சந்தனம். மைசூர் சந்தனம்
ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள்.

வைத்தியர்களுக்குத் தேவையான

சூரணம், தைலம், எண்ணெய் வகைகள், லேகியம், செந்தூரம்
குளிசை வகைகள், பஸ்பம் எப்போதும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

## மருந்துச்சரக்கு வியாபாரம்

4, பலாலி வீதி,
3ம் ஒழுங்கை,
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

5 (76), மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இ. 222 2912


அழகான கோவிலப்பா நல்லை எம் பதியினிலே
ஆவணி மாதமதில் விழாக்கோலம் கொண்டிடுவான்

நங்கையரே! நங்கையரே! நீங்கள் விரும்புவது
அழகான பலவர்ண புதிய ஆடைகளல்லவா அலக்கழியத் தேவையில்லை
கடைகளெல்லாம் ஏறி இறங்கத் தேவையில்லை
ஒரே இடத்தில் ஒரே பார்வையில் விரும்பிய ஆடைகளைப் பெற்று
மன நிறைவோடு திரும்பலாம். நேரே வாருங்கள்

# கோபிகா ஆடையகம்

5/4 (30), நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

✆ 021 222 2377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா சரணம்! சண்முகா சரணம் என ஓடோடி வந்தோம் சஞ்சலம் தீர்த்திடுவாய்
நல்லையெம்பதி முருகா ஆறுதல் தந்தெம்மை காத்திடுவாய்! கலியுகவரதா.



# சீமாட்டி

122, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தரமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்

*Wholesale & Retail*

*Dealers in Textiles*

*Specialist in Wedding Sarees*

15, நவீன சந்தை மங்கை சில்க்
யாழ்ப்பாணம்

## MANGAI SILKS

15, நவீன சந்தை மங்கை சில்க்
சுன்னாகம்
T.P: 222 2196

நாதமணி கேட்கையிலே நாமெழுந்து முருகனை வணங்கிடவே நல்லதெல்லாம்
தந்திடுவான் ஆறுமுகமாகி தேரேறி வந்து

பட்டுப்புடவை, ரெடிமேட் ஆடைகள், பேபி சூட், சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்



தையல் வேலைகளுக்கு ஏற்ற பொருட்கள், எல்லா சைஸ்களிலும் பொலித்தீன்
மேசை விரிப்பு, குறோசறி பாக் சைஸ்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

# அங்கலின் ரெக்ஸ்ரைல்

43, 48 நவீனசந்தை.
யாழ்ப்பாணம்.

கிளை:- 55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 0777031382, 021 222 3145
Fax 021 222 3145



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதம் குமரன் திருவிளையாடல் மலர்கின்றது முருகனைப் பூஷிக்கும் மலர்
“நல்லைக்குமரன்” மலரல்லவோ! தமிழ்கூறும் உலகெலாம் அருள் பரப்பும் மலரல்லவோ!!



தங்கம் என்றால் தங்கம் தான்! மங்கயரைக் கவரும்
டிசைன்களில் 22 கரட்டில் தங்கமே தங்கமென
நகைகள் செய்யும் ஸ்தாபனம்

# சாரங்கா நகைமாடம்

157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226972

தலைமை ஸ்தாபனம்

# அருள் முருகன் நகையகம்

96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



எந்த நாளும் நல்லூரானை வலம்வந்து வணங்கினால்
துன்பம் எல்லாம் நீங்கிவிடும் அக்கால ஞானிகள் அருந்தவம் செய்த இடம்
அதனாலல்லவோ முருகனின் அதிசயம் மெத்த உண்டு

# காப்புறுதி

நீங்கள் காப்புறுதி செய்து விட்டீர்களா? ஏன் சுணக்கம் நீங்கள் ஒவ்வொருவரும் காப்புறுதி செய்ய
வேண்டும் அது உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் பேருதவியாக இருக்கும்
அத்துடன் “ஆரோக்யா ” வையும்
சேர்த்துக் கொண்டால் அரச தனியார் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து
சிகிச்சை பெறும் நாட்களுக்கு கட்டணம் பெற்றுக் கொள்ளலாம்
புதிய புதிய காப்புறுதித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

**மினி முத்து – திவிலின – யசஇசுற– ஜீவக – வீட்டுக்காப்புறுதி**
**பென்ஷன் காப்புறுதி**

இன்னும் பல பல தொடர்பு கொள்ளுங்கள்

த. கனகசபை
7 குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
*T.p:- 222 6369*

அமைப்பாளர்
இலங்கை காப்புறுதிக்
கூட்டுத்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளும் பொழுதும் முருக நாமம் வந்தனை செய்து வணங்கிடுவோம்
என்றும் எம்மை காத்தருள் தெய்வம் நல்லூர் முருகனல்லவோ!
நங்கையரோ விரும்புவது நாகரீக மாற்றம். அதற்கேற்றவாறு
நடை உடைகளிலும் மாற்றம்
விற்னையாளரோ நங்கையரின் விருப்பத்திற்கு அதீத மாற்றம்
ஆடை தயாரிப்பாளர்களும் நங்கையரின் விருப்பத்திற்கு மாற்றம்
ஆமாம் அதுதான் நாம் பலவர்ண கண்கவர் ஆடைகளை நிறைத்து வைத்துள்ளோம்
நங்கையரே உங்களுக்காக

வாருங்கள்! பாருங்கள்! தெரியுங்கள்!
நாடுங்கள் திருப்தியுடன் செல்வீர்

# ஐஸ்வர்யா சேலைச் சோலை

57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2503



நல்லூர் முருகா ! நாளும் பொழுதும் உனை வேண்டி நயமுடன் புது வாழ்வு தந்தாயப்பா
நன்றெலாம் நயந்திட உன் திருப்பாதம் வணங்கி இறைஞ்சுகின்றேன் சுகமெலாம் தந்திடுவாய்!

யாழ் நகரில் ஐஸ்கிறீம் உலகில் ராஜாவாக விளங்குவது
தன்னிகரில்லா சிறப்போடு மக்களை கவர்ந்திழுக்கும் ஸ்தாபனம்

# ராஜா கிறீம் ஹவுஸ்

ராஜா ஸ்பெஷல் ஐஸ்கிறீம், சொக்லட் கிறிப்ஸ், வனிலா ஐஸ்கிறீம்,
ஜெலி ஐஸ்கிறீம், புரூட்சலட் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம், சொக்லட் ஐஸ்கிறீம்
கட்லட், மட்டன் றோல், பற்றீஸ், மஸ்கட், கேக் வகைகள், மைசூர் பாகு, மிக்சர், குளிர்பானம்
யாவற்றையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ்ந்திட

# RAJA CREAM HOUSE

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

36, Kasthuriar Road,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமடா சாமி நாம் பட்ட துன்பங்கள் புத்துயிர் தந்து புது வாழ்வு காண
நல்லருள் புரிய தேரேறி வந்திடுவாய்

மங்கள நிகழ்வுகள் அதிநவீன கனடாதயாரிப்பு கணனி மூலம் சிறந்த வீடியோகமராவின்
துணைகொண்டு வீடியோப்படம் பிடித்திடவும், அதிநவீன புகைப் படக்கருவிகள் மூலம்
வர்ணக் கலவையாக கலர்கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடித்திடவும்,
திருமணம் பூப்புனித நீராட்டுவிழா என்பவற்றின் வர்ணக் கறுப்பு வெள்ளை படங்கள் மூலம்
சிறந்த முறையில் அல்பம் தயாரித்திடவும்



# அரவிந்



## வீடியோ & போட்டோ

**LOCAL, IDD, FAX,** தொலைத் தொடர்புசேவை

இல. 309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

T.P 222 2190
077 7162339

வாழ்பவரும் ஆள்பவரும் தொழுது நிற்கும் வேல்முருகா! வேண்டுவது
நாமெல்லாம் தீர்வைத் தான் அது நிம்மதியை தந்து வாழ வையுமப்பா



நங்கையரின் நாகரீக மாற்றம் நங்கையரின் ஆசைக்கோர் மாற்றம்
உற்பத்தியாளரின் புதுப் பொலிவு நங்கையரின் ஆசைக்கோர் திருப்தி
வேண்டிய ரகம், வர்ணம், டிசைன், சல்வார் என்ன, பஞ்சாபி என்ன,
எது வேண்டுமானாலும் தேடி வருவது எந்த இடம் அது தான்

# லலிதா ரெக்ஸ்

5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

இல 3, சந்தை வீதி,
வவுனியா.

தொ. பே. 024 21773

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் முருகனின் பார்வை எம் கண்களில் பட்டால் அழகல்லவா தெரிகிறது
எரிக்கணேசில் கண்ணாடி எடுத்தால் சர்வமும் அழகாக பிரகாசமாக தோன்றும்

# எரிக்கணேஸ்

விழிதான் முக்கியம் அதன் மீது விழிப்பாய் இருங்கள்

**40 வயதை அடைந்தவர்கள் எழுத வாசிக்க கஷ்டப்பட்டால் இளைஞர் யுவதிகள் தலைவலியால் கஷ்டப்பட்டால் நிச்சயம் கண்தான் குறைபாடு. இலவச கண் பரிசோதனை முகப்பொலிவுக்கு, சங்குப்பல்கட்ட, மிதப்புபல் கட்ட, பல்லுக்கு கிளிப் போட்டுக்கொள்ள நாடுங்கள்**

# Eric Ganesh

| 80, கே.கே.எஸ். வீதி, சுண்ணாகம். | 546, 556, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 2456 | 91, கே.கே. எஸ். வீதி, கொக்குவில். |
|---|---|---|



சரணம் சரணம் சண்முகா சரணம்; சஞ்சலம் தீர்த்திடும்
நல்லைக் குமரா - நீ ஆறுதல் தந்தெம்மை காத்திட வரணும்!



# NEW RAGAMS

*Padduцholai*

**ஆகா என்ன ராகம் காதுக்கு**
**இனிமையாக இருக்குதே! இல்லை**
**இல்லை அது மனதுக்கு இனிமை தரும் ராகம்ஸ் பட்டுச்சோலை**

அங்கே தான் நாகரீக நங்கையரின் விரும்பிய
தெரிவுக்காக நாடிச் செல்கிறார்கள் ஒருமுறை மட்டும் விஜயம் செய்து பாருங்கள்

**முகூர்த்தப் பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள்**

**புதிய புதிய ரகம் நிறைந்த இடம்**

# நியூ ராகம்ஸ்

இல 7, 8, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

✆ 222 7179


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் குமரா! உன் பாதமே தஞ்சம் என தூக்கிலாடி வந்தோம்
கருணையுடன் அருளமுதம் தந்திடுவீர் முருகா

Kit

# விஜேய் றெக்கோடிங் சென்ரர்

திரைப்படங்கள், பக்திப் பாடல்கள், கர்நாடக சங்கீத பாடல்கள்
மற்றும் சகலவிதமான பாடல் ஒலிப்பதிவுகள்

CD, VCD, Mp3, DVD, பதிவுகள் VHS, VCD, DVD பதிவுகளும் வீடியோ படப்பிரதிகளை
வாடகைக்கு பெற்றிடவும் நாடுங்கள்

"இன்னிசை உலாவரும் இன்ப இசைச்சோலை"

# VIJEI GIFT Emporium

Fancy Goods, Presentation items, Stationers, Electrical items,
Wishing cards,

*539, 521, Point Pedro Road* *Jaffna*

நாளும் பொழுதும் உனைவேண்டி புதுவாழ்வு தந்தாயப்பா உன்திருப்பாதம்
வணங்கி இறைஞ்சுகின்றோம் சுகமெல்லாம் தந்திடப்பா!



உள்நாடு வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு
பொதிகளை , V.D.O கசட்டுக்கள் ஆவணங்கள் எதுவானாலும் துரித கதியில்
உரியவர் கைகளில் சென்றடையவும்.

WESTERN UNION Money Transfer

உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் பணத்தை
"WESTERN UNION"
மூலம் ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்

FedEx Express

எமது சேவையை பெற்றவர்கள் மீண்டும் மீண்டும்
தொடருகிறார்கள். புதியவர்கள் இடத்தை தேடுகிறார்கள். அவர்களுக்கு இதோ!

# திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax: 021 222 7301

259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7835
Fax: 021 222 7836

E. Mail:- thirumurugan@lycosmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவணி மாதத்தில் கோவிலெல்லாம் பக்தி மயம்
இத் தரையில் உளோர் மெத்தகளி கூர்வர்
தித்திக்குமோர் சேதி மட்டும் இத்தீவில் எம் தேவை
வித்தகனே முருகா அமைதிதானப்பா!

# லிங்கன்

## கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது ஐஸ்கிறீம்

சுவைத்துப் பாருங்கள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- மஸ்கட்
- அங்கர் பட்டர்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் கேக் வகைகள்
- மிக்சர்
- லட்டு
- ஸ்பெசல் பீடா

அத்தனையும் ஒரே இடத்தில்

# Lingan

## cream house

119, Kasthuriyar Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடியாம் ! காவடியாம் பாற்காவடியாம் முருகா ! முருகா என்று கூவியழைத்து
தூக்கில் ஏறி காவடியாம் அரோகரா! அரோகரா என்று அண்ணலார் பாற்குடமாக
போரப்பா ஒழியாதோ வீர வேலை வீசப்பா !

38 ஆண்டுகளாக உங்கள் நன் மதிப்பைப் பெற்ற

# காவடி மார்க் கற்புரம்



என்றும் நின்று நிலைக்கும் ஜோதி மயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்

கற்பூரம் என்று கேட்காதீர்கள்

## காவடி

என்று கேட்டு வாங்குங்கள்

SINCE 1967

**தயாரிப்பாளர்கள்**

Ms Sons Group Of Companies
672/ 3, Galle Road.
Off Mayura Mw, Ratmalana,
Phone 636818

ஏக விநியோகஸ்தர்கள்:
பிரபா ரேடிங் கம்பனி
31 கபேஸ் லேன், கொழும்பு – 11
329426 422750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பு ஓர் சிறந்த செல்வம்

வாடிக்கையாளர்களே சேமிப்பு மூலம் செல்வந்தராகி குடும்பத்தில் மகிழ்வுடன் வாழ உடன் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகளை ஆரம்பியுங்கள்.
உயர்ந்த வட்டி வீதம் வழங்குவதுடன் கூடிய அனுகூலங்களையும் வழங்கி வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுகின்றது.

NSB
நெகிழ்வான நிலையான சிறப்பு சேமிப்பு

**நிலையான வைப்பு வட்டி வீதம்**

| | | | |
|---|---|---|---|
| 03 மாதங்கள் - 16% | 06 மாதங்கள் - 15.5% | 12 மாதங்கள் - 15% | 24 மாதங்கள் - 16% |

**உடனடிப் பணத்தேவையை நிறைவு செய்ய**
**தங்கநகை அடகுசேவை**
**தேசிய சேமிப்பு வங்கி உங்கள் குடும்ப வங்கி**

## தேசிய சேமிப்பு வங்கி – யாழ்ப்பாணக் கிளை.





சங்கிலியன் ஆண்ட நல்லைநகர் கோட்டையிலே தரணியெல்லாம் அருள்சுரந்து
தனியாட்சி புரிபவனே பகைமை ஒழிந்து தமிழாட்சி அரங்கேற்ற தங்கரதம்
வீற்றிருந்து அருளாட்சி தாருமையா!

## பெயருக்கேற்ற வியாபாரம் வியாபாரத்திற்கேற்ற பெயர்

இதோ யாழ் நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள் அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பல வர்ண பற்பல காகிதாதிகள் மாணவ மாணவிகளுக்குத் தேவையான புதிய டிசைன்களில் பைகள் கவர்ச்சி தரும் அப்பியாசக் கொப்பிகள் அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்

**கணனி உபகரணங்கள், பொலித்தீன் றோல் வகைகள்**
**மொத்த சில்லறை விற்பனையாளர்கள்**

# பேப்பர் ஹவுஸ்

| | |
|---|---|
| 300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| T.P:- 222 2783 | T.P:-222 2783 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தா கடம்பா பச்சை மயில் வாகனனே உந்தனை நெஞ்சிருத்தி
உளமார பணிந்தோம் வழமான வாழ்வதனை எமக்கு தாராயோ!

**அழகு சாதனப் பொருட்கள்,**
**நவநாகரீக நங்கையருக்கு ஏற்ற லேஸ்**
**பாக் வகைகள்**

**எவர் சில்வர் பிளாஸ்ரிக்,**
**தையல் நூல் வகைகள்,**
**அலுமினியப் பாத்திரங்கள்,**

**சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள்,**
*ஆகா அதுமட்டுமா சிறுவர்களுக்கு அதி நவீன விளையாட்டுப் பொருட்கள்*
*மொத்தமாக, சில்லறையாக நியாய விலையில் பெற்றுக் கொள்ள*

நாளைய ஆசைக்கு புதிய புதிய டிசைன்களில் கவர்ச்சியான அழகு சாதன
பொருட்களை வருவித்து விநியோகிப்பதில் முன்னணி வகிக்கின்றோம்.

# கௌரி அழகு மாடம்

**361, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே 222 3227**



எண்ணி எண்ணி நான் செய் கருமம் எல்லாம் முருகன் துணையன்றோ!
அவன் தாழ் பணிந்தெழ நல்லருள் கிடைக்குதப்பா!

**கட்டிடப் பிரியர்களே!**

**றோபியலாக்** | **எமல்சன் பெயின்ற்** | **எனாமில் பெயின்ற்**

**வகைகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

உங்கள் தோட்டப் பயிர்களை வளர்த்தெடுத்துப் பாதுகாப்பதற்கு இதோ பூச்சி
கொல்லிகளை நாம் விநியோகிக்கிறோம். மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**விவசாயிகளே** மேற்கூறிய இரண்டிற்கும் வடமாகாண ஏக விநயோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்
அத்துடன் நாம் (SHOW WALLACE) கம்பனியின் யாழ் ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்

# சிவா பிறதர்ஸ்

**141, ஆட்டுப்பட்டித்தெரு,**
**கொழும்பு – 13**
*T.P:- 0112 394664*

**205, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
*T.P:- 021 2225497*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் பருவத்தினருக்காக அன்புடன்....

## 18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு

பதினெட்டு (18) தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட இருபாலாருக்குமென விசேடமாக உருவாக்கப்பட்டுள்ள 18+ இளைஞர் மேமிப்புக் கணக்கு சிறந்த பல பயன்களைப் பெற்றுத்தருகிறது. சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு வழங்கும் வட்டி வீதத்தைவிட 0.5% அதிக வட்டி வழங்கப்படுவது இச் மேமிப்புக்கணக்கின் முக்கிய அம்சமாகும்.

### இதில் அடங்கியுள்ள ஏனைய பயன்கள்

- ரூ. 500, 000 வரை காப்பீட்டுக் கவசம்
- திருமணப் பரிசாக ஒரு தங்கப்பவுண்
- முதற் குழந்தைக்கு சேமிப்புக் கணக்கு
- உயர் கல்விக்காகப் புலமைப்பரிசில்
- கடன் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் தகைமை
- விசா இலெக்ட்ரோன் அட்டையைப் பெறவசதி
- கடன் பெற்றுக்கொள்ள வசதிகள்.

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரை அல்லது தலைமை அலுவலகத்தின் ATM முகாமைத்துவப் பிரிவினரை தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு தொலைபேசி இல. 0112541937

★ ஒரு தங்கப்பவுணுக்கு ஆகக் கூடிய தொகை

★ குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை

★ கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை கொடுக்கல் வாங்கல்களுக் கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்

★ அடகு வைக்கப்படும் பொருட்களுக்கு அதி கூடிய பாதுகாப்பு

★ நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் ஏற்றுக் கொள்ளத் தக்க தர மதிப்பீடு தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும் மதிப்பிடுதலும்

★ கணணி மயமாக்கப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாக பணத்தை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பு

★ தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் போதுசேமிப்க் கணக் கொண்றை ஆரம்பிக்கவும் பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்க் கொண்டு அடைவை மீட்டுக் கொள்வதற்குமான வாய்ப்பு



★ அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு


★ தொடர்ந்தும் தங்களது விருப்பத்திற்க் கேற்ப்ப வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம்

★ வியாபார நடவடிக்கைக்காக மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க வாய்ப்பு.

BOC

ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேல் முருகா! அடி பணிந்தோம் அருள் புரிவாய் என்று உன்னையே
சரணம் என்று ஓடோடி வந்தோம் காத்திடப்பா எம்மினம்
அமைதி பெற்று வாழ!

"கணேசன்" என்றாலே பழம் பெரும் புடவை அகம்தான், அங்கே நங்கையர் விரும்பும் கண்கவர் பட்டுப்புடவைகள்
பல வர்ண சேலைகள், சல்வார், ஆடவர் சிறுவர் சிறுமியருக்கேற்ற ரெடிமேட் ஆடைகள் நிறைந்திருக்கிறது.
ஒருமுறை விஜயம் செய்தால் பெருமையுடன் திரும்புவீர்கள்!

## வாருங்கள் பாருங்கள் தெரியுங்கள்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

## 201, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## *T.P: 222 2830*



பார்போற்றும் நல்லையில் குடி கொண்ட வேலவா
எம்மவர்க்கு விடிவதனை தந்திட சிரம் தாழ்த்தி. கரம் கூப்பி வேண்டுகிறோம்

**தரம் மிக்க பேப்பர் வகைகளையும் எசன்ஸ் வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்**

| | | |
|---|---|---|
| றோனியோ பேப்பர்<br>போஸ்டர் பேப்பர்<br>ரைப்பிங் சீற்<br>நியூஸ் பிறின்ட்<br>பாங் பேப்பர்<br>பரிசுப் பேப்பர்<br>பொக்ஸ் போட்<br>சிப் போட்<br>பிறிஸ்டல் போட் | ஐஸ் கிறீம்<br>குளிர்பானம்<br>கேக் வகைகள்<br>பிஸ்கற்<br>இனிப்பு,<br>டீபா ஆகியவை<br>தயாரிப்பதற்கு<br>வேண்டிய | ஊதுபத்தி<br>சாம்பிராணி<br>விளைவு கூடம்<br>வாசனைத்திரவியங்கள்<br>ஆயுள்வேத மருந்து வகைகள்<br>தயாரிக்கும் மூலிகை வகைகள்<br>குங்குமம், குங்குமப் பூ<br>எண்ணெய், நெய்<br>மற்றும் சாப்பாட்டு<br>இரசாயனப் பொருட்கள்<br>பிஸ்கற் சொக்லேட் ரொபி வகைகளுக்கும் |

மூலப் பொருட்களையும்

நாடவேண்டிய ஒரே இடம்



# பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்

**1094,( 298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

***T.P 2222386***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளும் பொழுதும் நினைப்பது முருகன் பாதம்
அழியா வரமது அமைதியை வேண்டுகின்றோம்
சரணடைந்தோம் காத்திடுவாய் நம் இன துயர் போக்கி!

எல்லாம் அமைவது கைராசியில்தான். எதற்கெடுத்தாலும் நல்ல ராசி வேண்டும் என்பார்கள். நல்ல காரியங்கள் செய்ய ராசி சுபமுகூர்த்த மணமகள் பட்டுப் புடவைகள் வாங்க நல்ல ராசியான கடை பார்க்க வேண்டும்.

இங்கே வாருங்கோ அதோ போட் தெரிகிறதே அங்கே

# ராசி சில்க்ஸ்

போனால் பல ராசியாக வேண்டிய பட்டு புடைவைகள் தெரிவு செய்யலாம். இங்கே மணமக்கள் ஆடைகள் ஏராளம். உங்கள் விருப்பிற்கேற்ப தெரிவு செய்து குதூகலத்துடன் புது வாழ்வை ஆரம்பிக்கலாம்.

**ராசி சில்க்ஸ்**
70 (71A) நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P 021- 222 5571

**நல்லி சில்க்ஸ்**
121 /1 மின்சார நிலைய வீதி,
T.P 021- 222 5573



அழகே ஒளியாய் நல்லூரில் வீற்றிருக்க செந்தமிழர் கவலையெல்லாம்
போக்கிட பச்சை மயிலேறி வந்து நீயிருக்க
வேண்டுவது நாம் அமைதிவாழ்வன்றோ!

நங்கையரே உங்களுக்கு என்ன விரும்பியது அழகான பற்பல நிறமுடைய மலர்களா?
அல்லது அழகான பற்பல நிறமுடைய பட்டுப்பிடவைகளா ஐயஹோ! எங்களுக்கு
எல்லாமே விருப்பம் அப்படியானால் நங்கையரே

**மலர் ஐ தேடி வாருங்கள் அங்கே உங்கள் விருப்பத்திற்கேற்ப**

**சிறுவர் ரெடிமேட் ஆடைகளா, சேட் சூட் துணிகளா,
பஞ்சாபிகளா, பட்டுப்பிடவைகளா?...**

எல்லாமே ஒரே இடத்தில் தெரிவு செய்து திருப்தியுடன் சொல்லலாம்

# மலர் புடவையகம்

67-A-18 பெரிய கடை, யாழ்ப்பாணம்.
T.P :2222791


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைமுருகன் அவன் திருவடி பணிந்தால் அகலுமப்பா சகல துன்பங்களும்
வாழ்நாள் முழுதும் வளமுடன் வாழ தினமும்

# அண்ணா ஜீவாகாரம்



கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற போசாக்கு நிறைந்த சத்துமா

**அண்ணாவின் மற்றைய தயாரிப்புக்கள்**

அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி, அண்ணா பத்தி, பச்சை அரிசிமா,
குரக்கன் மா, ஆட்டா மா, வறுத்த அரிசிமா, உழுத்தம்மா,
அண்ணா ரொபி வகைகள்

# அண்ணா கோப்பிக்கடை

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ. பே. 222 2380

தலைமையகம்:
தொ. பே. 021 222 3565





யோக சுவாமிகள் செல்லப்ப சுவாமிகள்
நல்லைக்கந்தன் அருள் பெற்றல்லவோ முத்தி பெற்றார்கள்

உலகளாவிய காலணி பெயர் பாட்டா
அதிலே விரும்பி
தெரிவு செய்வதற்கு தகுந்த ஒரே இடம்

# யாழ் ரேட் சென்ரர்

ஏஜென்சி – யாழ் காலணி அகம்

ஆஸ்பத்திரி வீதி,
இல. 11, நவீன சந்தை (வெளிப்புறம்).
T.P:- 2223152


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும் முருகா! என வந்தனை செய்யும் நம் மக்கள்
துன்பந்தான் மானிட வாழ்க்கையோ உரைத்திட தங்க ரதமேறி காட்சி தந்திடப்பா



ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் தயாரிப்புக்கள், இனிப்பு வகை உற்பத்தி
மூலப் பொருட்கள், சகலவிதமான வாசனைத்திரவியங்கள்,
சாப்பாட்டு இரசாயனப்பொருட்கள், றொபி மற்றும் பிஸ்கட் வகைகள்,
இன்னும் பற்பல உற்பத்திப்பொருட்கள்.

பெயர் பெற்ற உற்பத்திகளான "சமபோச" - "சமஹறன்" - "கண்ணா" மார்க் கற்பூரம்
ஆகியவற்றுக்கு வடமாகாண ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்.

# ஸ்ரீகாந் எசன்ஸ்

## அன் குறோசறி

161, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
T.P:- 021 222 2219

மீண்டும் ஒரு யுத்தம் தனை முண்டித் தள்ளுவாராகில் முருகா உன் வீர வேல் தான்
பகைமை அழித்திட வேண்டுவார் வேண்டிநிற்கும் அருளமுதாம் அதுவல்லோ



**கலைவாணிக்கு நிகர்**
**கலைவாணியே தான்.**

அழகுக்கு அழகு வேறெங்கும் இல்லை
அது கலைவாணியில்தான். 22 கரட்டில் விரும்பிய டிசைன்களில்
அழகாக நகைகளைச் செய்வதற்கு தேடி வரும் இடம்

# கலைவாணி

## நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். *T.P: 2227356*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை நாயகனே! நல்லை நாயகனே!! நல்ல வழிகாட்டி நம்மை நீ ஆண்டிடா

எல்லை இல்லா இன்பத்தில் என்னை நீ வைத்திடடா என் நினைவு எல்லாம்

உன் திருப்பாதம் பற்றுவதற்கு

# இ.ச. பேரம்பலம்

## சகக நிறுவனம்

மிதி வண்டி உதிரிப்பாக இறக்குமதியாளர்

லோட்டஸ் மிதிவண்டி ரயர்

ரியூப்களுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்

நீர் இறைக்கும் இயந்திரங்கள் கலர் பிலிம் றோல்

வீடியோ ஓடியோ கசற்கள்

மற்றும் பல்பொருள் விற்பனையாளர்

உங்கள் தேவைக்கு இன்றே நாடுங்கள்

**இ.ச. பேரம்பலம் சகக நிறுவனம்**

**50,52,54, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

**T.P: 222 2988, FAX 222 2986**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் கந்தன் அருள் பாலிக்க
நல்லைக் குமரன் மலர் வழமை போல் வெளிவருவதை
மனமார வாழ்த்துபவர்கள்



சகல விதமான மின்சார பரிசுப் பொருட்களையும்,
மின் சாதனங்களையும் பி.வி.சி பைப் வகைகளையும்,
நீர் தாங்கிகளையும், வீட்டுத் தளபாடங்களுக்கான அனைத்து
இலத்திரனியல் உபகரணங்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்

# சுந்தர்சன்

# SUNDHARSON

*Distributors Of Electrical Items And*
*Electrical Appliances,*
*Water Pumps, Sanitary Ware, Floor & Wall Tiles.*

**யாழ் வீதி, மானிப்பாய்.**

**தொ.பே : 214222 2751, 4591569**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எண்ணி எண்ணி நான் செய் கருமமெல்லாம்
நன்றே நலம்பெற அருள் தந்து காத்திடப்பா

# மைதிலி நகைமாடம்

நங்கையரின் ஒரே ஆசை தங்களை அழகு படுத்துவது அதற்கு தங்க ஆபரணங்கள் தான்
முன்னணி வகிக்கிறது அதற்கும் இதோ இருக்கிறது புதிய நகைமாடம் அதுதான்

புதிய இடம் கண்கவர் காட்சியகம்
விரும்பிய தெரிவுக்கு நங்கையர் நாடிவரும் இடம்

# Mythili Nakai Madam

89, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை
127, செட்டியார் தெரு,
கொழும்பு.

T.P 222 7902, 0777 6092154



நல்லையில் பதிகொண்டு நானிலத்தைக் காப்பவனே
நீண்டு செல்லும் துன்பமதை முடிவுறுத்த
தேரேறி வந்து உன் வீரவேலை வீசுமையா!

# சீவம் ரெக்ஸ்ரைல்

புதுமைப் பொலிவுடன் புதிய புடவையகம்,
அழகான காட்சியறை புதிய புதிய புடவைத்துசுகள்
நவ உலகத்திற்கேற்ப அழகிய ரெடிமேட் ஆடைகள், சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை
நங்கையரும் கூட விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம்

# Seevam Textile

14, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 2333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருகவே வருகவே பச்சை மயிலோனே! எட்ட நீ செல்வதேனோ சொல் முருகா! தமிழினத்தின் துன்பம் கண்டு நீ இரங்கலாகாதோ! வேண்டுவ தெல்லாம் நிம்மதி யன்றோ! நாம் கேட்பது

# யாழ்ப்பாண வணிக நிலையம்

சகலவிதமான பொருட்களையும் கொழும்பிலிருந்து
வரவழைத்து விநியோகிக்கின்றோம்.

⇨ பலசரக்குப் பொருட்கள் ⇨ தும்புத்தயாரிப்பு

⇨ அரிசிவகைகள் ⇨ நைலோன் கயிறுகள்

*இன்னும் பலவகையான பொருட்களை பெற்றுக்கொள்ள*

302 (108), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்

# கிருஸ்ணா தொலைபேசிச் சேவை

JAFFNA TRADERS
HOSPITAL ROAD JAFFNA

87, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P 021 - 2509, 021 - 2806, 021 - 2981 Fax 021 - 2509

## ஏசியன் பெயின்றஸ்

32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 222 7028

சாந்தியும் சமாதானமும் தளைத்திட முருகா
சஞ்சலம் துன்பங்கள் களைந்திட நீ தேரேறி காட்சி தந்திடப்பா

தொலைத் தொடர்பு சேவையில் அங்கீகாரம் பெற்ற முகவர்

*Dialog Gsm* **Kit**
*Dollar Card*



WESTERN UNION®
MONEY TRANSFER

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புக்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்

இன்னும் பல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

சகல தபால் அலுவலக சேவைகளையும்
துரித தபால் சேவை

# SRI MURUGAN

*Telecommunication & Agency Post Office*

**303, K.K.S Road, Jaffna.**

*T.P: 012 222 2670, 5392, Fax: 021 222 3214, 3435*
*E-mail Srimurugan@eureka.lk*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய்
# தடுப்புச் சங்கம்

## புற்று நோய் சார்பான எமது பணிகள்

நோயாளர்களை இனம்காணல். குறிப்பாக ஆரம்ப நிலையில் இனம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

இனம் காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்

ஆதரவற்ற நோயாளர்களுக்கும் இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்

சமூக நல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவு படுத்தல்

புற்று நோய் சார்பான சமூக சுகாதாரக்கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்

## எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

இந் நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இயக்குனர்கள் மத்தியில்
மேற்கொண்டு வரமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

**எம் பணி சிறக்க நிதி உதவியை வேண்டுகின்றோம்**
**புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து**
**செயற்பட அழைக்கின்றோம்.**
**நன்றி.**

## வடமாகாண
## புற்று நோய், எயிட்ஸ் நோய்
## தடுப்புச் சங்கம்

**124, 3ம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி நாமெடுக்கும் கருமமெல்லாம் முருகா வெற்றி தந்து எமை காத்தருள்
சரவணபவா! நெஞ்சிருத்தி உன் நாமம் கூறும் வேளை போர் ஓய்ந்து அமைதி
தந்து எமை காத்திடப்பா!



**ஓ ஹோ எதிர்பாருங்கள்**

**யாழ் நகர் மத்தியில் திறக்கப்பட இருக்கிறது ஒரு**

**சைவ உணவகம் அது தான்!**

# இந்து விகார்

**கொழும்பு சாந்தி விகாருக்கு இணை யாழ்ப்பாணத்தில் ஒரு இந்துவிகார்**

*372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

**அது மட்டுமா**

*சைவ பிரியர்களுக்கும் விரதமிருப்பவர்களுக்கும்*

*ஒரு வரப்பிரசாதமாக மிளிர்கிறது நகர மத்தியில் இன்னொரு*

*சைவ உணவகம்*

# ஸ்ரீ சரவணபவன்

ஹோட்டல் அனுபவம் பெற்ற நாம் சைவ
பிரியர்களுக்கு ஏற்றவாறு சிற்றூண்டி வகைகள் மதிய
உணவு பலகார வகைகள் தயார் செய்கிறோம்.
“ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்”

**195 (57) காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P : 2229959**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகென்றால் முருகன்! முருகன் என்றால் அழகு அவன் ஆறுமுகமாகி அஞ்சேல்
அஞ்சேல் என தங்க ரதமீது வந்திடுவான் எமை காத்திடுவான்
அழகுக்கு மற்றுமொரு இடம் வீடு வீட்டை தற்கால நாகரீகத்திற்கேற்ப அழகுபடுத்தினால்
உள்ளங்கவர் சந்தோஷமல்லவா!
அதற்கு நாடுங்கள்

# விமாகி

**நாகரீக உலகத்திலே நவநாகரீகமாக இல்லம் அமைத்திட - இந்தோநேசியா, தாய்லாந்து , சீனஏ இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட**

**தரைமாபிள், சுவர்மாபிள், கொமட் வகைகள், குளியலறை இணைப்புக்கள்**
**இன்னும் கிளாஸ், மாபிள், பீங்கான் கப்பன்சோசர் என்பவற்றை**
**மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.**

**தலைமையகம்**
**டாம் வீதி, கொழும்பு: 12**
***T.P:* 0112423030**

**27, மின்சார நிலைய வீதி**
**யாழ்ப்பாணம்**
***T.P:* 222 6738**

கோமாதா, குலமாதா! உலகமாதா!! அகில உலகமும் போற்றப்படுகின்ற, வளர்க்கின்ற
பயன்பெறுகின்ற பிராணி என்றால் அது பசுவே தான் அதை போற்ற வேண்டும் வணங்க வேண்டும்



**கோமாதாவாகிய நாமும் ஒருதெய்வமல்லவா!**
**கோமாதாவாகிய நாம் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் யோசிக்க வேண்டும்?**
**என்ன செய்வது என்று ஏங்குவோர் எத்தனை பெற்றோர்**
**பெற்றோர்களே நீங்கள் ஒவ்வொருவரும் எம்மை வீட்டில் வளர்ப்பீர்களானால்**
**வீடே ஒருலட்சுமி கடாட்சமாக மாறுமல்லவா!**
**அத்துடன் குழந்தைகளுக்கு பால் இல்லையே என்று பதற்றப் படவும் தேவையில்லை**
**மக்களாகிய உங்களுக்கு நாம் செய்யும் சேவை அளப்பரியது**



**இப்படிப்பட்ட எம்மை அறிவில்லாமல் சிலர் கொன்று புசிக்கின்றார்களே!**
**இது நியாயமா? இது நீதியா? இது தகுமா?**

**"வேணியின் வேணவா பசுவதை நிறுத்தல்"**

# வேணி களஞ்சியம்

**165, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P:- 222 2661, 222 2046**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் இடங்களில் அபிஷேக கந்தனாய் அர்ச்சனை கந்தனாய் அன்னக்கந்தனாய்
குடி கொண்டாய் மக்கள் அமைதி பெற அருளாட்சி தந்திடப்பா முருகா!

# யாழ் ரெக்ஸ்

புதிய பெயர், புதிய ஸ்தாபனம், புதுமைப் பொலிவு. சும்மா பெயர் மட்டுமல்ல
அது பெயர் பெற்ற ஒரு புடவை ஸ்தாபனம்.
மணமக்களுக்கேற்ற புதிய புதிய பட்டுப்புடவைகள். அது மட்டுமா.
பஞ்சாபி, சேட், சூட் துணிகள், குழந்தைகளுக்கேற்ற ரெடிமேட் ஆடைகள்.
கவர்ச்சியான இடம் ஆடை எடுப்பவர்கள் தேடி வரும் இடம்

# JAL TEX

16, நவீன சந்தை, யாழ். தொ.பேசி : 021 2229475



முருகா முருகா என்று கோபுர வாசல் தன்னில் வந்தனை செய்திடுவோம்.
நீயல்லாமல் வேறு யாரப்பா நம் இனத்தைக் காப்பதற்கு!
சரணம் சரணம்.

புதிய இடம்
புதுமைப்பொலிவு
அழகான காட்சிக்கூடம்

# ராஜேஸ்வரி

உங்களுக்கு வேண்டிய புதுவகையான ஆடைகள் | கண்கவர் பஞ்சாபிகள்

சிறுவர் பெரியவர்களுக்கு றெடிமேட் உடைகள் என்பவற்றை வாங்கி மகிழ்ச்சிஅடையுங்கள்

# இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

புதிய இடமல்லவா லாபகரமான
விற்பனை. ஒரு முறை விஜயம் செய்தால்
இராஜேஸ்வரியின் பெருமிதம் தெரியும்
வாருங்கள் பாருங்கள்

T.P: 222 6953

105 , மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபடை வீடுறையும் ஆறுமுக வேலவனே கூறும் அடியார்க்கு
வினை தீர்த்தருள தேரேறி காட்சி தந்திடுவாய்

# மகத்தான முறையில் மீண்டும் வந்துள்ளது
# HNB வழங்கும் பத்தும் விமன 2007

இலங்கையின் அதிபிரபல்யமான வைப்புச் சீட்டிழுப்பு இப்பொழுது முற்றிலும் புதிய வடிவத்தில் மீண்டும் வந்துள்ளது. பத்தும் விமன 2007 மகோன்னத பரிசுகளுடன் அறிமுகமாகிறது. வெற்றியீட்டுவதற்கு ஏராளம் வாய்ப்புக்கள். பெரும் பரிசுகளும் அதிக வெற்றி வாய்ப்புக்களும் கொண்ட பத்தும் விமன உங்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

HNB HNB




**இரு வாரங்களுக்கு ஒரு தடவை**
சுசுக்கி ஸ்விவ்ட் கார் ஒன்றை வெல்லுங்கள்

**மாதாந்த கிளைச் சீட்டிழுப்பில்**
தங்க நாணயங்களும் கைக்கடிகாரங்களும்

**டீ.வி.கேம் ஷோவில்**
இன்னும் ஏராளம் பரிசுகள்

**வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில்**
ரூ.15 மில்லியன் பெறுமதியான ஆடம்பர வீடு அல்லது பணம் ரூ.9 மில்லியன் பெறுமதியான டொயோட்டா கெம்றி கார்

**வருட இறுதி ப்ரிமியம் சீட்டிழுப்பில்**
ரூ.20 மில்லியன் பெறுதியான நவீன மேர்சிடீஸ் பென்ஸ் கார்

**பரிசுகள்**

தொ. பே. இல:
021-2222787
021-2223463
021-2228410

HNB
*Hatton National Bank Ltd.,*
No. 212,214 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பக்ஸ் இல:
021-222319
4021-2228411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ மக்கள் வங்கியின் அனுகூலங்கள்!

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு முதலாவது அன்பளிப்பாக
வழங்குங்கள் மக்கள் வங்கியின்

**இசுறு உதான அன்பளிப்புச் சீட்டு**

இச்சீட்டினைக் குழந்தையின் **"இசுறு உதான"** கணக்கில் வைப்பிலிடுவதன் மூலம் குழந்தையுடன் சேர்ந்து சேமிப்புத்தொகையும் அதிகரித்த வட்டியுடன் வளர்ந்து செல்லும்

குழந்தை பாடசாலை செல்லத் தொடங்கியதும் இத்தொகை பாரிய அனுகூலங்களைத் தரும் "சிசு உதான" கணக்கிற்கு மாற்றப்படும். சேமிப்புத் தொகை அதிகரிக்க, அதிகரிக்க பரிசுப் பொருட்களின் பெறுமதியும் அதிகரித்துச் செல்வதுடன் புலமைப் பரிசில்களும் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

இளமைப் பராயத்தினை அடைந்ததும் உயர் கல்வியினைத் தொடரவும் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் ஆரம்பியுங்கள்!

**Yes Account எனப்படும் இளவயதினர் கணக்கினை**

இது மட்டுமா?

அதிர்ஷ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான

**வனிதா வாசனா கணக்கு**

அனைத்துத் தரப்பினருக்குமான

**ஜனஜய கணக்கு**

முதுமைப் பருவத்தில் கூடுதல் வட்டியினையும் பல வரப்பிரசாதங்களையும் வழங்கும்

**பரிணத கணக்கு**

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையினை நாடுங்கள்!

**மழலைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை அனைவருக்கும் தோள் கொடுப்பான் மக்கள் வங்கி.**




மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் குமரா! கந்தா!! நமை காப்பவனே நாலிரு திசை மக்களுக்கும்
நீ காவலனல்லோ மக்கள் சஞ்சலம் நீங்க பன்னிருகை வேலப்பா
எமை காக்க தங்க ரதம் வீற்றிருந்து வாப்பா!

**39 வருட சேவையில் ....**

# பரிமளா ஸ்ரோர்ஸ்

**மகப்பேற்றுத் தாய்மாருக்கும், மழலைகளின் வளர்ச்சிக்கும், பூப்பெய்திய மங்கையருக்கும்**
**கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும், விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும்**
**வீராங்கனைகளுக்கும், குடும்பத்தின் அங்கத்தவர்கள் அனைவருக்கும்**
**அருமருந்தாகத் திகழ்வது**

# V.S.P. ஸ்பெஷல் லஞ் ஓயில்

## பரிமளா ஸ்ரோர்ஸ்

**26, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P 2222785**



எண்ணமெலாம் நிறைந்துவிட்ட எங்களருள் முருகா
மன்னனாணை கொண்டு எமை அழிக்கவந்த
மாந்தர் தமை வேல்கொண்டு அகற்றிவிட்டு
திண்ணமுடன் நாம் கேட்கும் அமைதியை தந்திடப்பா!

# ஜீ.எஸ்.லிங்கநாதன்

**சும்மா பெயர் மட்டுமல்ல அது பெயர் பெற்ற ஒருபிடவை ஸ்தாபனம்**
**மணமகள் பட்டுப் பிடவைகளுக்கு பெயர் பெற்ற இடம்**
**அது மட்டுமா பஞ்சாபி சேட் சூட் துணிகள், குழந்தைகளுக்கேற்ப**
**ரெடி மேட் ஆடைகள். கவர்ச்சியான இடம் விஜயம் செய்து பாருங்கள்**

# ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ

# G. S. LINGANATHAN & CO.

13, 14, **பெரியகடை, யாழ்ப்பாணம்.**
T.P:- **222 3139**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலை நாலரைக்கு முருகன் மணியோசை ஓடோடி வந்து
முருகனுக்கு பக்திமாலை சூடி அல்லலுறும் மக்களை தேரேறி வந்து
காத்திட அடியேன் வேண்டுவது அதுவல்லோ!

மின்னுவதெல்லாம் பொன்னல்ல. மின்னுவதோ மின்னுவதாகவே இருக்க வேண்டும்
அது தான் தங்க நகை. மனம் கவரும் கண்கவர் டிசைன்களுடன்
அமைக்கப்பட்ட ஆபரணங்கள் வாங்குவதற்கு
நங்கையர் நாடி வரும் இடம்:

22 கரட்டில்

# நதியா நகை மாடம்

இல :- 149 -02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

✆ 021 2223479

# கவுசன் நகைமாடம்

123, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



தந்தைக்கு உபதேசித்த அழகு முருகா! இளங்குமரா! நாடியோர்க்கு
அருள் சுரக்கும் சரவணபவ!! தங்கரதமேறி அமைதிதந்திட வேலேந்தி வந்திடுவாய்

# ரூபா பன்முக வர்த்தக ஸ்தாபனம்

யாழ் ஸ்ரான்லி வீதியில் ஒருசுப்பர் மார்க்கட் போன்று வேண்டிய விரும்பிய
பொருட்களை தேர்ந்தெடுக்க ஒரு அழகான ஒரு ஸ்தாபனம்

*SMITHKLINE BEECHAM MILKWEEDS Ltd.*
*GAMMA PHARMACEUTICAL (Pvt) Ltd.*
*DELMAGE FORSYTH CO Ltd.*
*CEYLON BUSKERS Ltd.*

# RUPA VERSATILE TRADERS

*104, Stanly Road, Jaffna.*

*T.P: 222 2479*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளும் பொழுதும் உன் நினைவு முருகா!
நலமுடன் வாழ தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!

கண் வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை
சரிவரப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# எஸ். எம். பெர்னாண்டோ

அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளுக்கு
பெயர் பெற்ற இடம்

# S.M. FERNANDO

520, 580, Hospital Road, Jaffna.
**T.P 222 3254**



ஆதியில் தமிழர் ஆண்ட தொல் நகரம்
அதில் குடிகொண்ட நல்லைக் கந்தன்
தந்திடுவான் தழிழன்னை அரசோச்சும் காலமதை!



# VEL MURUGAN
## TRADERS

தற்காலிக நவநாகரீக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட்
வகைகளும், சுண்ணாம்பு, கட்டடப் பொருட்களும் விற்பனையாளர்

# வேல் முருகன்
## வாணிப நிலையம்

**56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
*T.P: 2229437*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை குறிப்பறிந்து சாலப் பொருத்தமென! ஞானப் பழமவனின்! வீதிப் பெருவிழாவின்!
சூழல் சுகாதார சுற்று பெரியோரால் காலம் தினம் தோறும் கலை நயத்துடனே நல்லைக்குமரன்
தனை நாளும் பொழுதும் படித்திடவே நல்லையருள் வேண்டும் நாயகனே!



சுத்தத்தின் செல்வன் என்று மக்களால் மகுடம் சூடப்பெற்று
அன்றும்! இன்றும்! என்றென்றும்! தனக்கே உரிய தத்துவத்தில்
என்றும் மங்காத சைவ உணவகம்

# மலாயன் கபே

பெண்களுக்கு பிரத்தியேக இடம்

36,38, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 2373
FAX:- 222 2373

முருகா! என்று ஓடிவந்து உன்திருப்பாதம் கண்ணுற்றால்
சகல துன்பங்களும் கலைந்திடுமப்பா!

மக்கள் சேவையே மகேசன் சேவையென பெருமிதத்துடன் நடாத்தும் ஒரு

## சூப்பர் மார்க்கற்

யுனிலிவர் - லங்கா மில்க் பூட் - உபாலி பூட் பவறேஜஸ் - டெல்மேஜ் நெஷல்ஸ்

ஆகிய கொம்பனிகளால் உற்பத்தி செய்யப்படும் அத்தனை பொருட்களையும் சில்லறையாகவோ
மொத்தமாகவோ பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அவைமட்டுமா! ஒரு குடும்ப தேவை எதுவோ அவை அத்தனையும் பெறக்கூடிய இடம்

# குகன் களஞ்சியம்

180 (380). ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 222 2767



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சமணி நாதம் எழுப்ப, பக்தர் கூட்டம் பஜனை சங்கு நாதம்
ஓசை எழுப்ப, அங்கமெலாம் மெய்சிலிர்க்க, "அரோகரா"
என பக்தர்கள் ஆர்ப்பரிக்க, சிங்கார வேலவனே தங்கரதமேறி வரம் தாருமப்பா!

நவநாகரீக
நங்கையர்களே!

# சிவகணேசன் ரெக்ஸ்ரைல்

யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சங்கமம் விரும்பிய விலையில்
வேண்டிய விருப்பத்திற்கு கண்ணைக்கவரும் பல வர்ணப் பட்டு பிடவைகள்
நாகரீக நங்கையரும் மணப் பெண்களும் தேடி வரும் இடம்
சுபமூர்த்தப் பட்டுப் பிடவைகளின் தெரிவிடம்

**41, பெரியகடை,**
**யாழ்ப்பாணம்.**

**✆ 021 222 2063**

முருகா! நாளும் பொழுதும் உனை நெஞ்சிருத்தி வணங்குகின்றேன்
சுகமெலாம் தந்து காத்திடுவாய்!



நல்லைக்குமரன் மலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்!
யாழ்நகர் வந்ததும் பளிச்சென்று தெரிவது

# சிறி ராஜன் பான்சி ஹவுஸ்

❀ பலவிதமான அன்பளிப்புப் பொருட்கள் ❀ பாடசாலை உபகரணங்கள்
❀ பலவித மாணவர் புத்தகப் பைகள்
❀ அழகு சாதனப் பொருட்கள் ❀ வாசனைப் பொருட்களையும்

**தரமான நியாய விலையில் பெற்றுக்கொள்ள .........**

65, 66, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசமெல்லாம் யுத்தமேகம்; நாமோ முருகன் திருவடியில்!
அடைந்தோம் சரணமப்பா; தந்திடுவாய் நிதம் நிம்மதியே!

புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
ஜெனரேற்றர் வகைகள், சோலர் வகைகள் என்பனவற்றிற்கு நாடவேண்டிய இடம்

# அருள் விநாயகர்
# மோட்டோர்ஸ்

இல 103, 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

## அருள்விநாயகர் மோட்டோர்ஸ்

262, கண்டி வீதி, சாவகச்சேரி.

T.P:- 021 2225558



தமிழ் தெய்வம் முருகன் செந்தமிழ் காக்கும் முருகன்
தமிழே முருகன்! முருகனே தமிழ்!

# பூபாலசிங்கம்
# புத்தகசாலை

- வாராந்த - மாதாந்த சஞ்சிகைகள்
- பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான சகல நூல்களும்
- பிறந்ததின வாழ்த்து மடல்கள்
- திருமண வாழ்த்து மடல்கள்
- காகிதாதிகள், அலுவலக பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றிற்கும்

யாழ், கொழும்பு சகல புதினப்பத்திரிகைகளுக்கும் யாழ் நகரில்
கலையகமாக மிளிரும் ஸ்தாபனம்

340, செட்டியார் தெரு,
கொழும்பு.
011 2422321

4, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம்)
யாழ்ப்பாணம்.
T.P:- 222 6693


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூரரான்திரு வடியை நாளும் துதித்திட்டால்
எல்லா செல்வங்களும்கை கூடும்

MATHI
COLOURS
Printers



சகல விதமான பிறிண்டிங் வேலைகளுக்கு

# மதி கலர்ஸ்
## பிறிண்டர்ஸ்





15/ 2, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி:-021 2229285, 077 7222524, 077 7222259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் நகரினில் நல்லூர் சூழலில் சிறியோர் முதல்
பெரியோர்வரை நாவிற்கு சுவையூட்டி மகிழ்ந்திட

# றியோ

சகல விதமான களியாட்ட வைபவங்களிற்கு ஐஸ்கிறீம்,
சுவீட் வகைகள் யாவற்றையும் பெற்று
சுவைத்து மகிழ்ந்திட சிறந்த இடம்



# Rio
## Ice Cream





**448A,Point pedro Road, Nallur.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2007



தேரடிச்சித்தர் செல்லப்பர் சுவாமிகள்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமைப்பு:- மதி கலர்ஸ் நல்லூர், 021 2229285, 077 7222524.